ஆய்வு

தொகுதி 2 ★ 2001 ★ இதழ் 1 & 2

சமூக விஞ்ஞான மன்றம்
Social Science Forum

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம ஆசிரியர்
எம். எஸ். எம். அனஸ்

நிர்வாக ஆசிரியர்
எம். அல்பிரட்

துணை ஆசிரியர்
எம். பி. சைபுதீன்

ஆலோசனைக்குழு
பேராசிரியர் அ. சிவராஜா
பேராசிரியர் எம். எஸ். மூக்கையா
பேராசிரியர் எம். சின்னத்தம்பி
கலாநிதி எம். ஏ. நுஃமான்
ஜோன் நைஜல்

ஆசிரியர் குழு
பேராசிரியர் கனகரட்ணம்
எம். ஐ. அமீன்
கலாநிதி துரை மனோகரன்
வீ. அமீர்தீன்
எஸ். சிவராஜசிங்கம்
வீ. சிவயோகலிங்கம்

ஆய்வு பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரையாளர்களின் அமைப்பினூடாக வெளிவரும் சமூக விஞ்ஞான ஆய்விதழாகும். இவ்விதழ் வருடம் இருமுறை (ஜனவரி, ஜூலை) வெளிவரும்.

பிரசுரத்திற்கு ஏற்கப்படும் கட்டுரைகள், பிரதம ஆசிரியராலும் பல்கலைக்கழக முதுநிலை ஆய்வாளர்களாலும் அல்லது ஏனைய ஆய்வாளர்களாலும் படிக்கப்பட்டு பிரசுரத் தகுதி தீர்மானிக்கப்படும். முன்னர் பிரசுரிக்கப்படாத கட்டுரைகளே பிரசுரத்திற்கெனக் கருத்திற் கொள்ளப்படும்.

கட்டுரைகள் அச்செழுத்துக்களில் 20லிருந்து 30 பக்கங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். நூல் விமர்சனங்கள், ஏனைய கண்ணோட்டக் குறிப்புக்கள் 5 பக்கங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

கட்டுரையின் முகப்புப் பக்கத்தில் கட்டுரைத் தலைப்பு, ஆசிரியர் பெயர், பட்டம், பதவி, தபால் விலாசம், தொழில் புரியும் நிறுவனம் முதலிய விவரங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தரப்பட வேண்டும். கட்டுரையின் முதற்பக்கத்தில் கட்டுரையின் தலைப்பு மாத்திரம் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

100 சொற்களுக்கு மேற்படாத வகையில் கட்டுரைச் சுருக்கம் இணைக்கப்பட வேண்டும். இக் கட்டுரைச் சுருக்கம் ஆங்கில மொழியிலும் தரப்பட வேண்டும்.

அச்செழுத்திற் பொறிக்கப்பட்ட கட்டுரையின் இரு பிரதிகள் பிரதம ஆசிரியருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அடிக்குறிப்புக்கள், உசாத்துணை நூல்களின் பட்டியல்கள் கட்டுரையின் இறுதியில் தரப்பட வேண்டும்.

உசாத்துணை முறை : நூல் எனின், Quine, W. V. (1995) Philosophy of Logic, New Delhi : Prentice - Hall of India (Ltd). சஞ்சிகை எனின், Myers, S. (1977) "Determinants of Corporate Borrowing". *Jurnal of Financial Economics* , 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SOCIAL SCIENCE JOURNAL

ஆய்வு

தொகுதி 2 2001 இதழ் 1 & 2

பிரதம ஆசிரியர்
எம். எஸ். எம். அனஸ்

நிர்வாக ஆசிரியர்
எம். அல்பிரட்

ஆய்வு
சமூக விஞ்ஞான ஆய்விதழ்

72, பல்கலைக்கழக வீட்டுத் தொகுதி,
மீவத்துற, பேராதனை,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கருத்து

இரண்டாம் மூன்றாம் இதழ்கள் இணைந்ததாக *ஆய்வு* வெளி வருகிறது. உயர்கல்வி, பல்கலைக்கழக பட்டப்படிப்பு மாணவ மாணவி-யினருக்கான பாடநெறியினை பெருமளவில் கருத்திற்கொண்டதாக ஆய்வின் கட்டுரைகள் அமைந்துள்ளன. ஆயினும், பொது வாசகர்-களின் ஆழமான வாசிப்பிற்கும் *ஆய்வு* உதவும்.

விரிவான அறிவைப் பெறுவது, உடனடியான புதிதான விடயங்-களை அறிமுகப்படுத்துவது, எண்ணக்கருக்களைப் பகுப்பாய்வு செய்வது, கருத்தாக்கங்களையும் சிந்தனைகளையும் அலசுவது என்று பல்வேறு வகைகளில் ஆய்வு இதழ்கள் உயர்கல்வி, பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு மாணவர்களுக்குச் சிறந்த துணையாகச் செயல்படுகிறன. எனினும், எமது கல்வி மரபில் இவற்றுக்குத் தரப்படும் முக்கியத்துவம் மிகக் குறைவானது. தமிழில் ஆய்வு நோக்கிலான இதழ்கள் வெளி-வராமைக்கு இதுவும் ஒரு காரணம்.

கல்வி வளர்ச்சியில் ஆர்வமுள்ள தனிநபர்களோ நிறுவனங்-களோ இவ்வகைச் சஞ்சிகைகளுக்கு உதவி வழங்கி ஊக்குவிக்க முன்வருவதன் மூலம் இப்பிரச்சினையை ஓரளவாவது தீர்க்க முடியும்.

தற்போதைய கல்வி முறைகளும், பரீட்சையை நோக்காகக் கொண்டியங்கும் ஏனைய உப நிறுவனங்களும் கல்வியை விரிவாக, ஆழமாகக் கற்பது என்பதற்கு ஆதரவாக இல்லை. குறைந்த பட்சம் படிக்க வேண்டிய நூல்கள், கட்டுரைகள், இதழ்கள் எவை என்று வலியுறுத்தப்படாத கல்வி மரபு வளர்ச்சி பெற்றுள்ள நிலைமையில் *ஆய்வு* போன்ற இதழ்களை வெளியிடுவது மிகவும் சிரமமான பணி என்பதை இவ்விரண்டாவது வெளியீட்டாலும் *ஆய்வு* வலியுறுத்த விரும்புகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

பக்கம்

நவீன தகவல் – தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் : அபிவிருத்திச் செய்முறையில் அவை வகிக்கும் பங்கு பற்றிய பரிசீலனை 1

மா. செ. மூக்கையா

தமிழில் பிறமொழி நாவல்கள் : மராட்டிய நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 41

செ. யோகராசா

விளம்பரப்படுத்தலின் கட்டுப்பாடுகளும் ஒழுங்குவிதிகளும் 55

T.V. தர்மதாஸன்

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை (1948 – 2000) 65

அம்பலவாணர் சிவராஜா

ஆசியாவின் இயற்கை வளங்களும் சுற்றாடல் மாசாக்கமும் 75

மொழிபெயர்ப்பு :

ஏ. நஸீர் அகமட்

சஞ்சீவி சிவகுமார்

கிரயக் கணக்கீட்டில் மேந்தலைப் பகுப்பாய்வு 100

எம். அல்பிறட்

தப்ஸிர் கலையின் தோற்றமும் வளர்ச்சியும் 121

எம். ஐ. எம். அமீன்

போட்ரன்ட் ரஸல் வரை 20ம் நூற்றாண்டின் ஐரோப்பிய மெய்யியல் : ஒரு சுருக்க விபரம் 142

எம். எஸ். எம். அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன தகவல் - தொடர்பாடல் தொழில்நுட்பங்கள்

அபிவிருத்திச் செய்முறையில் அவை வகிக்கும் பங்கு பற்றிய பரிசீலனை

மா. செ. மூக்கையா

சமூகங்களில் ஏற்படும் மாற்றங்களுக்குப் பொறுப்பான காரணிகளிடையே தொடர்பாடல் வசதிகளில் ஏற்படும் புரட்சிகரமான விளைவுகளே முக்கியமாக இருந்து வந்துள்ளமைக்கு வரலாறு சான்று பகருகின்றது. ஹூட்டன்பேர்க் (Guternberg) நகரில் தான், முதன்முதலாக பைபிள் அச்சிடப்பட்டது. அக்காலம் முதலாக கருத்துக்களை பரவச் செய்வதில் ஏற்பட்ட மறுமலர்ச்சி மனித இனத்தின் அறிவு வளர்ச்சிக்கான ஒரு பாரிய திருப்பு முனையாகும். அதுவரை காலம் கருத்துக்களை மனித ஊழியத்தின் மூலமே நூல்களாகப் பிரதி செய்து பயன்படுத்திய தொழில்நுட்பம் பல நூற்றாண்டுக் காலமாக நிலவி வந்தது. ஹூட்டன்பேர்க் புரட்சியின் பின்னர் அச்சிடப்பட்ட நூல்கள், கையேடுகள், வாயிலாக அறிவினை பகிர்ந்து கொள்ளும் தொழில்நுட்பம் பிரசித்தம் பெற்றதாயிற்று. ஆனால், அண்மைக் காலம் முதலாக தந்தி, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, பெக்ஸ், என்பன சமூக பொருளாதார மாற்றங்களுக்கு பெரும் சக்தி வாய்ந்த தொழில்நுட்பங்களாக செயற்பட்டு வருகின்றன. நவீன தொழில்நுட்பங்கள் இன்று புதிய புரட்சியினை ஏற்படுத்தியதன் விளைவாக உலகின் எப்பாகத்திற்கும் தகவல்களை ஒரிரு வினாடிக்குள் எடுத்தும் செல்லும் வளர்ச்சி உருவாக்கியுள்ளது.

இன்று வளர்ந்துள்ள தொடர்பாடல் வசதிகள் காரணமாக புதிய சமூகங்களை இயங்கு முறை வெளியில் (cyber space) இணைத்துவிட முடிகிறது. அதன் மூலம் பொதுநலன்களை கருத்திற் கொண்டு தனிப்பட்ட-வர்களை கருத்துகளுடனும், தகவல்களுடனும், இணைத்து பயனடைய முடிகிறது. இத்தகைய தொழில்நுட்பங்களின் வளர்ச்சியின் விளைவாக மின்னனுசார் (Electronic) வர்த்தகத்தின் விருத்தியினை உலகம் பயன்படுத்தி வருகின்றது. உற்பத்தியாளர்-விற்பனையாளர் விற்பனையாளர்-நுகர்வோர் ஆகியோர் இடையே இருவழிசார் தொடர்புகள் ஏற்படுவதால் உலகளாவிய ரீதியில் முச்சாரரும் உச்ச நன்மையினை பெற முடிகிறது.[1]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர், தொடர்பு கொள்ள நினைத்தும் பார்க்க முடியாதிருந்த தூரப்பகுதிகளுடனும் கூட இப்போது கொடுக்கல் வாங்கல்களை விரைவாக மின்னனுசார் ஊடகம் மூலம் தீர்த்துக்கொள்ள முடிகிறது. புதிய தொழில்நுட்பம் உற்பத்தியாளர்களுக்கு உலகளாவிய வகையில் புதிய சந்தைகளை உருவாக்கித் தரவல்லது. இதனால் உற்பத்தி நிறுவனங்களிடையே போட்டி கடுமையாக ஏற்படுத்துவதுடன் பலவீனமான நிறுவனங்களை முன்னரை விட விரைவாக மூடவேண்டிய நிலைமைகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறாக ஏற்படுகின்ற உலகளாவியதான சந்தைகள், திறமையின் அடிப்படையில் நன்மைகளையும் இலாபங்களையும் அனுபவிக்க வாய்ப்புக்களை அளிக்கின்றன. அதனால் பரந்தளவில் ஏற்படுகின்ற உலகளாவிய வகையிலான சந்தையில், தமது உற்பத்திகளை விற்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தி நிறுவனங்கள், திறமையாக செயற்பட ஊக்குவிக்கப்படுகின்றன.

இப்போது ஏற்பட்டுள்ள புதிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை.

1. மின் அஞ்சல் (E-Mail),
2. கலமுறை தொலைபேசி (Cellular phone),
3. தொலை மாநாடு (Tele-Conferencing),

இவற்றின் வளர்ச்சி காரணமாக ஒரே இடத்தில் இருசாரரும் இருக்கவேண்டிய நிர்பந்தம் இல்லாமல் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடிகின்றது. தொலைபேசியுடன் இணைக்கப்பட்டுள்ள கணினி தொடர்பு வழிகள் கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகளில் பெருமளவில் பயன்பட்டு வருகின்றன. அதே வேளையில் சில அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் அவற்றின் பயன்பாடு அறிமுகமாகி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். மின் அஞ்சல் மிகவும் மலிவானது. பின்ணிணைப்பு 1 ஒப்புமையான செலவினங்களை காட்டுகின்றது. பெரும்பாலன அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தொழில்நுட்பங்கள் விரைவாக வளர்ந்து வந்த போதிலும் பல வரையறைகளுக்கு உட்பட்டே காணப்படுகின்றன. புதிய நுட்ப பயன்பாடு தாமதமாவதற்கு பின்வருவன முக்கிய காரணமாக உள்ளன.

1. தாழ்வருமானம்,
2. மனித மூலதனப் பற்றாக்குறை,
3. பலவீனமான போட்டி முறைகள்,
4. வழிப்படுத்தும் சட்டதிட்டங்களில் காணப்படும் குறைபாடுகள்,
5. அந் நாடுகளில் நிலவும் சில சமூக கலாசாரங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் பெரும்பாலானோர் தாம் அறிந்தவற்றிலும் தம்மிடம் உள்ளவற்றிலுமே நம்பிக்கையும் திருப்தியும் அடைகின்றனர். இதனால் பாரம்பரிய சமூகங்களில் நவீன சிந்தனைகளும் கூட சில பாரம்பரிய வழிகளினூடாகவே ஊடுறுவ வேண்டியுள்ளது.

உதாரணமாக எத்தியோப்பியா, நமீபியா, போன்ற நாடுகளிலும் இந்தியாவின் சில கிராமிய உள்ளூர் பகுதிகளிலும் கூட இப்போது எயிட்ஸ் போன்ற நோய்களை தடை செய்வது பற்றிய தகவல்களை பரவச் செய்ய வானொலி, தொலைக்காட்சி, கையேடுகள், போன்ற சாதனங்களை விட தெரு நாடகங்களே கூடிய பாதிப்பினைக் கொண்டனவாக இருப்பதனை காண முடிகிறது.[2] இலங்கையிலும் கூட சமாதானத்தைப் பற்றிய பிரச்சாரங்களுக்கு தெரு நாடகங்களை நிறுவனங்கள் பயன்படுத்துகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கட்டுரையில் இரண்டு பிரதான கருத்துக்கள் வற்புறுத்திக் கூறப்படவுள்ளன.

அ) பாரம்பரிய தொடர்பாடல் முறைகள் தொடர்ந்தும் முக்கியமாக உள்ளன. அதே வேளையில் நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் என்பன மூலமே குறைந்த செலவில் அறிவினை பரந்தளவில் பரவச்செய்ய முடியும். (பின்னிணைப்பு 1) அத்துடன் நாடுகளிடையேயும், நாடுகளுக்குள்ளேயும், கைத்தொழில் நாடுகளுக்கும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் இடையேயும், காணப்படும் அறிவு வளர்ச்சியில் காணப்படுகின்ற இடைவெளிகளையும் குறைக்க முடியும்.

ஆ) விருத்தியடைந்து வரும் நாடுகளின் சந்தையில் ஏற்படும் போட்டிகள் மூலம் தனியார் துறையினரை தூண்டுவிப்பதன் மூலம் தொடர்பாடல் வசதிகளுக்கான உள்ளமைப்புக்களையும் (Infra Structure) சேவைகளையும் வழங்கச் செய்ய முடியும். அத்துடன் புதிய தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டையும் விஸ்தரிக்கலாம். அதே வேளையில் அரசாங்கங்கள் தகுதி வாய்ந்த சட்டங்கள் மூலம் சந்தையில் தனியார் துறையினர் தனியுரிமை மூலம் நுகர்வோரை சுரண்டுதலையும், வறுமையான மக்கள் பிரிவினருக்கு மானயங்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்கும் நவீன தொழில்நுட்பங்களின் நன்மைகளை பெற்றுக்கொள்ள வழிசெய்தலை உறுதி செய்ய வேண்டும்.

புதிய தொழில்நுட்பங்களின் தோற்றத்திற்கான சூழல்கள்

இன்று தொடர்பாடல் சேவைகள் பலதேவைகளுக்காக முக்கியமாகின்றன. அவற்றில் ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. வியாபார தொடர்புகள்,

ஆ. தகவல் பரிமாற்றங்கள்,

இ. நாடுகளில் உள்ள நிறுவனங்களிடையேயான செயற்பாடுகளை இணைத்தல்,

ஈ. தனிப்பட்டோரது தொடர்பு தேவைகள்,

ஆகியவை முக்கியமாகின்றன. நகரங்கள், கிராமங்கள், நாடுகளில் வாழும் நண்பர்கள் உறவினர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் பயணங்களை உலகளாவிய வகையில் மேற்கொள்ளும் போது தொடர்பு கொள்ளவும் தொடர்பாடல் சேவைகள் தேவைப்படுகின்றன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களில் ஏற்பட்டுள்ள அவ் வளர்ச்சி காரணமாக பல மட்டங்களிலும் நிலவும் தொடர்பாடலுக்கான தேவைகள் இன்று பெரும் உந்துதலுக்காளாகியுள்ளன. இவையாவற்றினதும் விளைவாகவே இன்று உலகில் தகவல் புரட்சி தோன்றியுள்ளது எனலாம்.

தகவல் தொடர்பாடல் புரட்சிக்கு 3 பிரதான அடிப்படை சக்திகள் பொறுப்பாகின்றன.

1. கணினி பயன்பாட்டின் வியாபிப்பு
2. தகவல்களை எடுத்துச் செல்லும் செலவினங்களில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி
3. கணினியினதும் தொலைத்தொடர்பாடலினதும் ஒருங்கிணையும் போக்குகள்

கடந்த இரண்டு தசாப்தங்களில் கணினி பயன்பாட்டின் சக்தி மீதான முதலீட்டினை ஒப்புமையாக பார்க்கும் போது அது ஒரு டொலரிலிருந்து 10,000 ஆக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் கணினிகளின் செயற்படும் வேகம் அவற்றில் பயன்படுத்தப்படும் நுண்சில்லுகளின் (Micro Chips) டிரான்சிஸ்டர் அடர்த்தி என்பனவும் அதிகரித்துள்ளன. மறுபுறத்தில் அத்துறையில் ஏற்படும் புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்கள் காரணமாகவும், பேரளவு உற்பத்தி காரணமாக ஏற்படும் பொருளாதார சிக்கனங்கள் காரணமாகவும், இவற்றின் உற்பத்திச் செலவுகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றன.

ஒலிபரப்பிற்கான (Voice Transmission) செலவினங்கள் 20 வருடங்களுக்கு முன்பிருந்த தனை விட 10,000 மடங்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இதற்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. இழை ஒளியியல் (Fibre Optic) பயன்பாடு,

ஆ. குறைந்த செலவுடனான மின்னணுசார் பொருட்களின் பயன்பாடு,

இ. கம்பியில்லா தொழில்நுட்பங்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளமை,

என்பன முக்கிய காரணங்களாகும். செம்புகம்பியினை விட மெல்லிதான ஒரு இழைஒளி (Fibre Optic) மூலம் ஆயிரக்கணக்கான தொலைபேசி உரையாடல்களை எடுத்துச்செல்ல முடியும். இதனால் உரையாடலின் போது ஏற்படும் செலவினங்கள் பெருமளவுக்கு குறைந்துள்ளன. மின்னணுசார் பொருட்களின் (Electronics) விலைகள் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளதால் இப்போது தொலைபேசி கட்டணங்கள் மிக மலிவுற்றுள்ளது மாத்திரமன்றி நம்பகரமான தொலைபேசி பரிமாற்ற நிலையங்களும் உருவாகியுள்ளன. கம்பியில்லா தொழில்நுட்பங்கள் வளர்ச்சியுற்றுள்ளதால், தொலைபேசி தொடர்புகளை குறைந்த நிரந்தர செலவுகளுடன் வழங்க முடிகிறது. இவ்வாறான தொழில்நுட்பங்கள் காரணமாக தொலைபேசி சேவை மிகக்குறைந்த செலவில் இப்போது தனிப்பட்ட பயன்பாட்டாளருக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ளது.

கணினித் தொழில்நுட்பம் காரணமாக இலக்கமுறையிலான (Digital) தொழில்நுட்ப முறையும் தொலைதொடர்புடன் இணைந்துள்ளது. இதன் காரணமாக தகவல் தொழில்துறை இப்போது

1. குரல் (Voice),
2. உரைமூலங்கள் (Text),
3. தோற்றம் (image),
4. ஒளித்தோற்றம் (Video),
5. தரவுகள் (Data)

என்பவற்றையும் கையாளமுடிகிறது. இவ்வாறாக புதிய தொழில் நுட்பங்கள் வளர்ந்துள்ளதால் விருத்தி பெறும் நாடுகளும் கூட அவற்றைப் பெற்று தனியார் துறை முதலீடுகளையும் புதிய தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி தமது மக்களுடன் தேவைகள் ஏற்படும் போது விரைவாக தொடர்பு கொள்ளமுடிகிறது. அதே நேரத்தில் இவற்றை சில கட்டுபாடுகளுக்கு உட்படுத்த வேண்டிய தேவைகளையும் எதிர் நோக்க வேண்டியுள்ளது.

உலக தொழில்நுட்ப சந்தையின் பிரதான உற்பத்திகளில் பின்வருவன முக்கியமாகின்றன.

அ. தனியார் கணினிகள்,

ஆ. பணி நிலையக் கணினி (Office computer),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பல்பயனர் கணினித் தொகுதி (Multi user computer system),

ஈ. தரவு தொடர்பாடல் சாதனங்கள்,

உ. பொதி மென்பொருள் (Package software),

1985ஆம் ஆண்டிற்கும் 1995ஆம் ஆண்டிற்கும் இடையில் இவ் உற்பத்திகளின் அளவு வருடாந்தம் 12.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. உலகின் மொத்த உன்னாட்டு உற்பத்தியின் அதிகரிப்பின் அளவோடு ஒப்பிடுகையில் இது ஐந்து மடங்கு அதிகமான அதிகரிப்பாகும். பொருளாதார கூட்டுறவுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவன (OECD) நாடுகளிலேயே தகவல் தொழில்நுட்பங்களுக்கான உற்பத்தியில் 90 சதவீதம் இடம் பெறுகிறது.[3] அதே வேளையில் நவீன தொடர்பாடல் துறை ஏனைய நாடுகளிலும் விரைவாக விஸ்தரிக்கப்பெற்று வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உற்பத்திச் செலவுகள் குறைந்து செல்கின்றன. ஆயினும் இன்னும் பல நாடுகளில் பொதுமக்களுக்கு தொலை தொடர்பு சேவைகளுக்கான கட்டணங்கள் குறைந்த விலையில் கிடைப்பதில்லை. அதற்கு ஒரு வகையில் நடைமுறையில் இருக்கும் தேசீய தனியுரிமைகள் காரணமாகின்றன. அத்துடன் இத்தகைய சேவைகளுக்கு சர்வதேச இணைப்பை வழங்கும் சர்வதேச வர்த்தக குழுத்தொகுதிகளுடன் ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்களுக்காக வழங்க வேண்டிய கொடுப்பனவுகளும் காரணமாகின்றன. இருந்த போதிலும் தொழில்நுட்பங்களில் ஏற்படும் மாற்றங்கள் தொழிலில் போட்டியினை அறிமுகப்படுத்துகின்றன. இதனால் இறுதியில் பெரும்பாலான நாடுகளில் பெரும்பாலான மக்களுக்கு அவர்களால் தாங்கக் கூடிய கட்டணங்களில் சேவைகள் கிடைக்கக் கூடியாதயிருக்கும் என நம்பப்படுகின்றது. இலங்கையில் உள்ள பிரதான நகரங்களுக்கிடையேயான தொலைபேசி கட்டணங்கள், மின்அஞ்சல் கட்டணங்கள், பெக்ஸ் கட்டணங்களின் விலைகளில் வீழ்ச்சியினைக் காணக்கூடியதாகவுள்ளது. இப்போது இலங்கையில் சில வெளிநாடுகளுடன் தொலைபேசி கட்டணங்கள் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுடன் குறிப்பிடத்தக்க அளவுக்கு குறைக்கப்பட்டுள்ளன. இதற்கு இந்நாடுகளிடையே ஏற்பாட்டுள்ள பொதுவான உயர் தொழில்நுட்பங்களின் அறிமுகமே காரணமாகும். அத்துடன் காலங்கடந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் தனியுரிமை அமைப்புக்கள் தமது விலைகளில் கட்டுப்பாடுகளை இழந்து விடுகின்றன. பயன்பாட்டாளர்கள் இப்போது நிரந்தர இணைப்புக்கள், கம்பியில்லாத கலமுறை தொலைபேசி (செல்லூலர்)கள், மின்அஞ்சல்கள், பெக்ஸ் போன்ற பலவகையான தொடர்பாடல் வசதிகளை தெரிவு செய்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்களைப் பெற்றுவருகின்றனர். தொலைபேசி அமைப்புகளின் வலைப்பின்னல் அமைப்புக்கள் எந்தளவுக்கு பெரியதாக அமைகின்றனவோ அந்தளவுக்கு பயன்பாட்டாளர்கள் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய வாய்ப்புக்களைப் பெறுகின்றனர். அதனால் மேலும் கூடியளவினர் இச்சேவைகளை வழங்கும் தொழில்களில் ஈடுபடவும் சந்தர்ப்பங்கள் உருவாகின்றன.

தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்

மக்கள் மத்தியில் அறிவை பரவச் செய்வதற்கு புதிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் பெருமளவில் உள்ளன. புதிய கம்பியில்லா தொலைத் தொடர்பு தொழில்நுட்பங்களுக்கு தேவையான நிரந்தர முதலீடுகளின் அளவு சம்பிரதாயமான தொழில்நுட்பங்களுக்கு தேவைப்படுவதனை விட மிகக் குறைவாகும். அத்துடன் பரவலாக மக்கள் வாழும் பகுதிகளிலும், சார்பற்றதான தரைத்தோற்றம் கொண்ட பகுதி-களிலும், கடுமையான காலநிலை கொண்ட பகுதிகளிலும் கூட புதியதகவல் தொடர்பு சாதனங்களை பராமரிக்கும் செலவினங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. அதனால் அப்பகுதிகளில் இவற்றினை பயன்படுத்துதல் சாத்தியமாகின்றன.

அபிவிருத்தி அடைந்து வரும் சில நாடுகள் புதிய தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்பங்களின் பயன்பாடுகளை தேவையென உணர்ந்து ஏற்றுக் கொண்டுள்ளன. அவை தமது வளர்ச்சிக்காக அவற்றினை பயன்படுத்துவதில் சில சந்தைப்பொருளாதார நாடுகளின் அளவுக்கு வளர்ந்துள்ளன. அந்நாடுகளில் ஏற்கனவே இருந்த பாரம்பரிய வலைப்-பின்னல் அமைப்புக்களை புரட்சிகரமாக முழுமையான இலக்கமுறை (Digi-tal) வலை அமைப்புக்களாக மாற்றிக் கொண்டன. இதன் மூலம் பாரம்பரியமான ஒத்திசை (Analog) வலைப்பின்னல் அமைப்புக்களையே இன்னும் தமது முதுகெலும்பாக பல கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகள் கொண்டிருக்கையில் இவை அவற்றினை இத்துறையில் மிஞ்சியனவாக காணப்படுகின்றன. 1993ஆம் ஆண்டளவில் பொருளாதார கூட்டுறவுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவன நாடுகளில் (OEDC) 65 வீதமானவையே இலக்கமுறையான (Digital) வலைப்பின்னல் தொடர்பு அமைப்புக்களை பெற்றிருந்தன. ஜேர்மனியில் 39 வீதமும், யப்பானில் 72 வீதமும், இலக்கமுறை (டிஜிடல்) யிலான தொடர்பாடல் முறைகளாக காணப்பட்டன. அதே நேரத்தில் பத்திற்கு மேற்பட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் 100 சதவீதம் இலக்கமுறை தொலைபேசி வசதிகள் ஏற்பட்டுள்ளன.

கம்பியில்லா தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மூலம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நுகர்வாளர்கள் நிச்சயமாக நன்மையடைய முடியும். நிரந்தர தொலைபேசியினை பெற முடியாதவர்கள் அதற்கு பதிலாக கலமுறை (செல்லூலர்) தொலைபேசியினை பெற்று பயனடைய முடியும். தாழ்வருமானம், மத்திய வருமானம் கொண்ட சிலநாடுகளில் நிரந்தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி இணைப்புக்களுடன் ஒப்பிடுகையில் கலமுறையான (செல்லூலர்) தொலைபேசியின் எண்ணிக்கை கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகளைப் போன்று அதிகளவில் காணப்படுகின்றது. சம்பிரதாயமான தொலைபேசிகள், கலமுறை (செல்லூலர்) தொலைபேசிகள் என்பனவற்றில் அடர்த்தி குறைவாக உள்ள அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களிலும் கூட அண்மைக் காலங்களில் செல்லூலர் தொலைபேசி தொழல்நுட்பங்கள் மீது மிக விரைவாக முதலீடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பிலிப்பைன்சில் 100 பேருக்கு 2.6 பிரதான தொலைபேசி தொடர்புகளே காணப்படுகின்றன. ஆனால் கலமுறை (செல்லூலர்) தொலைபேசிகள் 52 வரையில் பயன்பாட்டில் உள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகளான யப்பான், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் 100 பேருக்கு 50 பிரதான தொலைபேசி தொடர்புகள் உள்ளன.[4] ஆனால் சம்பிரதாய தொலைபேசி தொடர்புகளுடன் ஒப்பிடுகையில் செல்லூலர் தொலைபேசிகளின் விகிதாசாரம் குறைவாகவே உள்ளது.

புதிய தொழில்நுட்பங்களை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கல்வி, நிதி, சூழல், வறுமையான மக்களுக்கு வருமானத்தை வழங்குவதற்காக ஏற்படுத்தப்படும் நடவடிக்கைகள், போன்ற பலதரப்பட்ட நடவடிக்கைகளிலும் பயன்படுத்த முடியும்.

வாழும் வரை கற்பதற்கு புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல்

அறிவானது மிகவும் சிக்கலான முறைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. அது மிக விரைவாக காலத்திற்கு ஏற்றவகையில் புதுப்பிக்கப்பட்டும் வருகின்றது . அதற்காக பெறப்படும் தகவல்கள் முறையாக விளக்கப்படுத்தல் வேண்டும். எனவே மக்கள் இன்று ஒழுங்கு முறையானதும், அமைப்புக்குட்பட்டதுமான கல்வியினை வாழ்நாள் முழுவதுமே கற்க வேண்டியவராக உள்ளனர். அவ்வாறான வாழ்நாள் முழுவதிற்குமான கல்வி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே அவசியமாகின்றது. ஏனெனில், அங்கே பெரும்பாலானவர்கள் தமது இளம்பிராயத்தில் கல்வி கற்க தவறிவிட்டனர். தற்போது கிடைக்கக் கூடியதாயுள்ள நவீன தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பாடசாலைகளுக்கு வெளியே அல்லது தொழில் புரியும் இடங்களில் தமக்கு ஏற்ற வகையில் கற்க முடியும். பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் கூட கற்பிப்பதற்கு தேவையான தகவல்களையும் வளங்களையும் மின்அஞ்சல், இணையம் என்பவற்றின் மூலமாக பகிர்ந்து கொள்ளுதல் மூலம் அவர்களுக்கு பற்றாக்குறையாக உள்ள வளங்களினால் ஏற்படும் சுமைகளை குறைத்துக் கொள்ளவும் முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீட்டு வாய்ப்புகளினால் ஏற்படக் கூடிய அனுகூலங்கள்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் முதலீடு செய்வதற்கு தேவையான உள்ளார்ந்த வளங்களை கொண்டவர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் போதியளவு முதலீடு செய்வதில்லை. இதற்கு முதலீட்டினை முறையாக பயன்படுத்தி கொடுக்கல், வாங்கல்கள் செய்வது பற்றிய தகவல்களை வழங்கக் கூடிய சாதனங்கள் பற்றாக்குறையாக இருப்பதே காரணமாகும். இப்போது சீனாவில் பண்ணையாளர்கள், குடும்பப்பெண்கள், அரச உயரதிகாரிகள், சிற்றுாண்டிச்சாலை ஊழியர்கள், போன்ற பலதரத்தில் காணப்படும் 100 மில்லியன் மக்கள் குறிப்பாக சாங்கை சென்சென் போன்ற நகரங்களில் செயற்படும் பங்கு சந்தைகளில் முதலீடு செய்கின்றனர்.[5] தொழில் நிறுவனங்கள், சந்தை நிலவரங்கள், வாய்ப்புகள் பற்றிய தகவல்களை செயலூக்கமிக்க பல முதலீட்டாளர்கள் பெற ஆர்வமாயிருக்கின்றனர். மிக அண்மைக் காலம் வரையிலான தகவல்களை எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்கு சம்பிரதாயமான புதினப்பத்திரிகைகள் தரும் பங்கு சந்தை பற்றி சரியானதும் நுணுக்கமானதுமான தகவல்கள் திருப்தியளிப்பனவாக இல்லை. எனவே விசை தொடர்புகள் (hot lines) இப்போது உடனுக்குடன் அவ்வாறான வசதிகளை வழங்குகின்றன.

அத்துடன் அங்கே வரிசைப்படுத்தப்பட்ட 800 பங்கு நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஒரு கடும் விசை தொடர்புடனான (hot line) தொலைபேசி வசதியுடன் செயற்படுகின்றன. வங்கிகள் வழங்கும் கடன் அட்டைகளை (Credit card) பயன்படுத்தி முதலீட்டாளர்கள் பங்குகளை பங்குச் சந்தை தரகு அலுவலகங்களில் அவ்வப்போது கொள்வனவு செய்யவும், கலமுறை (செல்லுாலர்) தொலைபேசி மூலமாக சாவிவிசை (Key pad) யினை பயன்படுத்தி கொள்வனவு செய்யவும் வசதிகள் வளர்ந்துள்ளன. சீனாவில் இப்போது மின்னணுசார் (Electronic) வியாபாரத்தின் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யும் வசதிகள் அதன் 30 நகரங்களில் விருத்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.[6]

வறியவர்களுக்கு கூடிய வருமானத்தினை அளிக்கும் உயர் தொடர்பு தொழில்நுட்பங்கள்

வறுமையான மக்களை பிழைப்பூதிய நிலையில் வாழும் நிலையிலிருந்து மீட்பதற்கும் புதிய தொழில்நுட்பங்கள் உதவி செய்ய முடியும் என்றும் நம்பப்படுகிறது. வியட்நாமில் சிறிய வியாபாரங்களுக்கு இவ்வாறான கடன் வழங்கும் ஏற்பாடுகள் உள்ளன. சிறிய சமூகம் ஒன்றில் உள்ள பெண்களுக்கு, வியாபாரத்திற்கு நிதியுதவி வழங்குபவர்கள் வியட்நாமில் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டு செயற்படுகின்றனர். கடன்கொடுப்பனவுகளும் மின்னஞ்சல் மூலம் நெறிப்படுத்தப்படுகின்றது. கடனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கவும் ஊக்குவிக்கப்படுகின்றது. பனாமா நாட்டுப் பெண்கள் மக்கள் இணைப்பு (People link) என்னும் அரசுசார நிறுவனத்தின் உதவியுடன் தமது கைப்பணி பொருட்களை இணையத்தின் (Internet) மூலம் உலக சந்தைக்கு அறிமுகம் செய்து தமது உற்பத்திகளை கொள்வனவு செய்ய வாடிக்கையாளர்களை பெற்றுள்ளனர். மேற்காபிரிக்காவில் தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி "நதிக்கரை பார்வையிழப்பு" (River Blindness) நோயினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நோயை ஒழித்தது மாத்திரமன்றி இலட்சக்கணக்கான மக்களை அப்பகுதியில் மீண்டும் பண்ணை நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்த சாதனைகளும் உள்ளன.

பல அரசுகளுக்கு தமது மக்களின் வறுமையால் துன்புறும் பிரிவினரைப் பற்றி குறிப்பாக அம்மக்கள் ஈடுபட்டுள்ள தொழில் நடவடிக்கைகள், அவர்களுடைய தேவைகள் என்பனபற்றிய தகவல்கள் போதியளவில் கிடைப்பதில்லை. இதனால் தமது மக்களின் வறுமையை நீக்கும் பொறுப்பினைக் கொண்ட அரசுகள் தமது கடமைகளை சரிவர செய்வதில் தாமதம், குறைபாடு என்பனவற்றை எதிர் நோக்குகின்றன. ஆனால் இப்போது வளர்ந்துள்ள புதிய தொழில்நுட்பங்கள் பின்வருவனவற்றை சாதிக்கும் ஆற்றலைக் கொண்டு காணப்படுகின்றன.

அ. அரசுகளுக்கும் நிறுவனங்களுக்கும் வறுமையானவர்களைப் பற்றிய தகவல்களை வழங்கும் தகுதி.

ஆ. வறுமையான மக்களுக்கு நிவாரணங்களை வழங்க திட்டங்களை வடிவமைக்கும் திறமை.

இ. அம்மக்களை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் பங்கு கொள்ள செய்வதற்கு தேவையான சக்தியினை வழங்குதல்.

செய்மதிகளையும் நவீன தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி கணினியின் மூலம் தேசப்படங்கள் (Maps) தயாரிக்க முடிகிறது. இத்தகைய படங்களைப் பயன்படுத்தி கிராமங்களில் வாழும் சிறிய பண்ணைக்காரர்களின் நிலவுடமையினை உறுதி செய்வதற்கு தேவையான நில உரிமைக்கான ஆவணங்களைத் தயாரிக்க முடிகிறது. இத்தகைய ஆவணங்களை பயன்படுத்தி கிராமிய பண்ணைக்காரர்களும், ஏனைய சிறு முயற்சியாளர்களும் கடன்களை பெற்று தொழில் செய்ய மூலதனத்தை பெற்றுக்கொள்ள முடிகிறது. ஆயினும் இவ்வாறன நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தும் போது அவை அவ்வவ் நாடுகளினதும் சமூகங்களினதும் நில ஒதுக்கீடு, நிலவுரிமை பாரம்பரியங்களை கவனத்தில் கொண்டதாக இருத்தல் அவசியம். அப்போதுதான் அவ்வாறன நிலவுடமை உரிமை ஆவணங்கள் அனைத்து சாராரினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அங்கீகாரத்தைப் பெற்றதாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறியவர்களுக்கு பயன்மிக்க தகவல்களை வழங்குதல்

வறுமையான மக்களுக்கும் பயன்தரக் கூடிய தகவல்களை தகவல் புரட்சி காரணமாக வழங்கக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. இதனால் அம்மக்கள் அவர்களது வாழ்க்கையைப் பாதிக்கும் தீர்மானங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்கான அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்கிறார்கள். இருந்த போதிலும் வறியவர்கள் தகவல்களை பெறும் வாய்ப்புக்களை சில சந்தர்ப்பங்களில் நாடுகளில் நிலவும் அரசியலும் சட்டங்களும் குறுக்கிட்டு தடைசெய்ய முடியும். அவ்வாறன தலையீடுகள் மூலம் அவர்களது கோரிக்கைகள் மழுங்கடிக்கப்படாத சூழ்நிலைகள் உறுதிசெய்யப்படுதல் வேண்டும். எழுதவாசிக்கத் தெரிந்த வறிய மக்களுக்கு மலிவாகவும் இலகுவாகவும் அச்சிட்டவற்றை பெற்றுக்கொள்வதற்கும் நூலகங்களை பயன்படுத்துவதற்குமான வாய்ப்புக்கள் நாடுகளில் இப்போது உள்ளன. இவர்களுடைய இன்றைய நிலையினை விருத்தியடைந்த நாடுகளில் முன்னர் வாழ்ந்திருந்த வறுமையான மக்களுடன் ஒப்பிடுகையில் இவர்களே இத்தகைய வாய்ப்புக்களை பெற்றவர்களாக உள்ளனர். ஏனெனில் இன்றைய விருத்தியடைந்த நாடுகளில் முன்னர் வறுமையான நிலையில் வாழ்ந்த மக்கள் பிரிவினருக்கு இவ்வாறு தகவல்களை அணுகும் வாய்ப்புகள் அப்போது இருக்கவில்லை.

உதாரணமாக பிலிப்பைன்சில் அன்னாசி பழ உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் டெலக்ஸ், பெக்ஸ், சாதனங்கள் மூலம் ஆராய்ச்சியாளர்களுடனும் சந்தை பிரதிநிதிகளுடனும் தொடர்புகொண்டு செயற்பட்டதனால் அவர்கள் இப்பயிர்ச்செய்கையில் இப்போது சிறப்பு உற்பத்தியாளர்களாகியுள்ளனர்.[7]

சந்தை தகவல்களும் சிறிய வியாபாரிகளுக்கான தகவல் பரிமாற்றமும்

சிறுதொழில் முயற்சியாளர்களும் ஒதுங்கிய தூரப் பகுதிகளில் வாழும் மக்களும் பொருட்களின் சந்தை விலை, தமது உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்கள் பற்றி போதிய தகவல்களைப் பெற்றிருப்பதில்லை. இது ஒரு பொதுவான குறைபாடாகும். அத்துடன் குறித்த துறையில் சாதனை புரிந்தவர்களுடைய அனுபவங்களை அறிந்து அத்தகைய சாதனைகளை தமது நடவடிக்கைகளை விருத்தி செய்து பயனடைய தகவல்கள் தேவைப்படுகின்றன. இவர்களுக்கு நிதிமுறைகள் பற்றிய தகவல்கள் அத்தியாவசியமானவை. இத்தகைய தகவல்களை பெறுவதில் உள்ள குறைபாடுகளை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் நிவர்த்தி செய்யும் வல்லமை பொருந்தியவை. இவ்வாறு பயனடைந்த சில சமூகங்கள் பல உள்ளன. அவற்றில் சில பின்வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இலங்கையில் பல கிராமங்களும் சிறு நகரங்களும் தொலைபேசி வசதிகளை இப்போது பெற்றுள்ளன. இதனால் சிறிய பண்ணை-யாளர்கள் அவர்களுடைய விவசாய உற்பத்திகளான பழங்கள், காய்கறிகள், முட்டை, என்பவற்றிற்கான மொத்தவிலை சில்லறை விலை என்பன கொழும்பில் தற்போது எவ்வாறு காணப்படுகின்றன என்பதனை தாமே நேரடியாகவும் உடனடியாகவும் பெற்றுக் கொள்கின்றனர். போதிய தொலைபேசி வசதியில்லாதபோது சந்தை விலையில் 50 முதல் 60 வீதத்தினையே பெற்ற நிலை மாறி இப்போது 80 முதல் 90 வீதத்தினைப் பெறக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

2. உருகுவேயில் ரொசாரியோ நகரில் மருந்து விற்பனையாளர் ஒருவர் முன்னர் தனது உடனடி அயலவர்களுக்கே மருந்துக்களை விற்பனை செய்து கொண்டிருந்தார். இப்போது தொலைபேசி மூலம் தூரப்பகுதி (25 முஅ முதல் 50 முஅ வரை) களில் உள்ள வாடிக்கையாளர்களும் தமது தேவையினை கூறுவதனைக் கேட்டு அவர்களுக்கும் மருந்து வகைகளை விற்பனை செய்வதன் மூலம் தனது விற்பனையினை அதிகரித்து கொள்ளமுடிகிறது.

3. ஐவொரிகரை நாட்டு பண்ணையாளர்கள் சர்வதேச சந்தைகளில் கொக்கோவிற்கான விற்பனை விலை பற்றிய தகவல்களை தொலைபேசி மூலம் இப்போது பெற்றுக்கொள்கின்றனர்.[8]

4. உகண்டாவில் கைத்தொழில் இயந்திர சாதனங்களுக்கான உதிரிப்பாகங்களையும், இயந்திரங்களையும் விற்பனை செய்பவர் தனது நிறுவனத்திற்கு புதிதாக தொலைபேசி தொடர்புகளை பெற்றுக்கொண்டதன் காரணமாக அவரது விற்பனை 35 வீதத்தால் அதிகரித்ததுடன் அதனால் 6 தொழிலாளர்களை மேலதிகமாக தொழிலுக்கமர்த்தியிருக்கிறார். அத்துடன் பொருட்களைக் கொண்டு செல்லும் 3 மென்ரக வாகனங்களையும் கொள்வனவு செய்திருக்கிறார்.

அரசும் ஆட்சியாளர்களும் பெறக்கூடிய பயன்கள்

கொள்கை வகுக்கும் நிறுவனங்களும் வழிகாட்டுவோர்களும் கூட புதிய தொழில் நுட்பங்கள் மூலம் ஆட்சி அமைப்புக்களை பயனடையச் செய்ய முடியும். உயர்மட்ட விவாதங்களின் போது கணினியினை கூட்டம் நடைபெறும் மண்டபங்களிலேயே இணைக்கச் செய்து அவர்கள் செய்யும் தீர்மானங்களின் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகளை எடுத்துக் காட்டி வழிகாட்ட முடியும். கென்யா நாட்டில் விவசாய அமைச்சின் விவாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்வுகளின் போது திட்டங்களை அதிகரிப்பதாலோ அல்லது குறைப்பதாலோ ஏற்படக்கூடிய விளைவுகளை கணினிகள் மூலம் அங்கேயே விளக்கிக் கூறியதால் விவாதங்கள் பயனுள்ள வகையில் காலதாமதமின்றியும், சரியாகவும் மேற்கொள்ளப்பட்டதாக அனுபவங்கள் கூறுகின்றன.

இதனால் மூலவளங்களும் சிறந்த பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன. மொராக்கோ நாட்டில் அமைச்சுகளிடையே இணைப்பை ஏற்படுத்தவும், வரி நிருவாகத்திற்கும் , கணக்குப் பரிசோதனை செய்வதற்கும், பொதுத்துறை முதலீடுகளை மேற்பார்வை செய்தல், செலவினங்களை நிருவாகித்தல், ஆகிய பல்வேறு தேவைகளுக்கும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.[9] இதனால் அரசின் வரவு செலவு திட்ட தயாரிப்புக்கான காலம் 50 சதவீதத்தால் குறைந்தது.

தகவல் தொடர்பாடல், தொழில் நுட்ப தொழில்களும், அவற்றின் அபிவிருத்தியும் இப்போது பல நாடுகளிலும் முக்கிய இடம்பெற்றுள்ளன. வங்கித் தொழில், சர்வதேச நிதித் தொழில் சுற்றுலாவும் பயணங்களும், பொருள்கள் விற்பனை, ஏற்றுமதிக்கான விற்பனை, ஆகிய நடவடிக்கைகளின் வெற்றி உலகளாவிய வகையில் பெறும் தகவல்களினதும் திறமையான மின்னணுசார் சாதனங்கள் மூலமான தகவல் பரிமாற்றங்களிலுமே பெரிதும் தங்கியுள்ளன. அத்துடன் நாடுகளின் பொருளாதார உள்ளமைப்புகளிலும் பிரதான பங்கினை வகிப்பனவாக புதிய தகவல் தொழில் நுட்பங்கள் இடம் பெறுகின்றன.

உதாரணமாக சிங்கப்பூர் துறைமுகத்தின் நடவடிக்கைகளைக் கூறலாம்.குறிப்பாக சுங்கத்துறை அனுமதி பற்றிப்பார்க்கலாம். இப்போது சுங்கத்துறையினருக்கும் இறக்குமதி செய்யும் நிறுவனத்திற்குமிடையே நடைபெறும் கணினி மூலமான நிருவாக ஏற்பாட்டு பரிமாற்றம் காரணமாக நிருவாகத்தில் பெருமளவுக்கு திறமை ஏற்பட்டுள்ளது. இது காலதாமதம். தொழிலாளர் வேதனங்கள் என்பவற்றில் பெரும் சிக்கனத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் வர்த்தகமும் சிறப்பாகவும் விரைவாகவும் நடைபெறவும் ஏதுவாகின்றது.[10]

புதிய சர்வதேச ரீதியிலான பொருளாதாரத்தில், போட்டியுடன் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் நன்மையடைய வேண்டுமாயின் அவற்றின் தேசீய நோக்கங்களிலும் முன்னுரிமைகளிலும் தகவல்களுக்கான உள்ளமைப்புக்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம் பெற வேண்டும். ஏற்கனவே பல நாடுகள் தமது தேசீய அபிவிருத்தி திட்டங்களில் தகவல் தொழில்நுட்பங்களுக்கு முக்கிய இடம் கொடுத்துள்ளன. மலேசியா நாடு தகவல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை பற்றி தெளிவாக விளக்கி அதனை தனது அபிவிருத்தி உபாயங்களில் இணைத்துக் கொண்டுள்ளமை இதற்கு சிறந்த உதாரணமாகும். அதற்கான நோக்கங்கள் பின்வருமாறு.[11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. புது தொழில்நுட்பங்கள் பற்றிய புரிந்துணர்வை மக்கள் மத்தியில் அதிகரிக்கச் செய்தல்.
2. தகவல் தொழில்நுட்பத்தை பரந்தளவில் பரவச் செய்து அவற்றினை பிரயோகத்திற்கு கொண்டு வருதல்
3. தகவல் தொழில்நுட்ப பயிற்சியினையும் அதற்கான வசதிகளையும் விஸ்தரித்தல்
4. தகவல்களை காகிதங்களில் எழுதி பரிமாற்றம் செய்யும் நடைமுறைகளை குறைந்த பட்சமாக்கி, மின்னணுசார் சாதனங்களின் பயன்பாட்டினை கூடியபட்சமாக்கும் நடவடிக்கைகளை அங்கீகரிக்கவும் பாதுகாக்கவும் ஏற்ற சட்ட திட்டங்களை ஏற்படுத்தி அமுலாக்கம் செய்தல்.

மலேசியாவை உலகளாவிய வகையில் தகவல்களின் பிரதான மையமாக்குவதே இத்தகைய நோக்கங்களின் இறுதி இலக்காகும்.

'2000 ஆண்டு' பிரச்சினைக்கான தீர்வு

தகவல் புரட்சியும் தொழில் நுட்ப முன்னேற்றங்களும் உலகிற்கு பெருமளவு நன்மைகளை அளித்துள்ளன. அதே நேரத்தில் அதே தொழில் நுட்பம் தானே ஒரு பெரும் பிரச்சினையையும் தன்னகத்தே தோற்றியுள்ளது. அதனால் தொழில் நுட்பத்தில் எடுத்துச் செல்லப்பட்டுள்ள உலகை பெரும் பாதிப்படையச் செய்யும் குறைபாடு உலகை அச்சுறுத்தலுக்கு ஆளாக்கியுள்ளது. 2000 (Y2K)ஆம் ஆண்டு பற்றிய பிரச்சனை பழைய கணினிகளில் ஆண்டுகளை குறிப்பிட பயன்படுத்திய முறையில் இருந்து தோன்றியதாகும். அவற்றில் 2000 வருடத்தை கடைசி இரண்டு இலக்கங்களால் குறிப்பிடப்படுகின்றது. இது கணினியின் நினைவாற்றலை சிக்கனப் படுத்துவதற்காக செய்யப்பட்டது. இல்லாவிட்டால் அது பெரும் விரயத்தை கொண்டதாயிருக்கும் எனவே கணினிகள் 2000 வருடத்தை ஜு00ஜி என்றே பதிவு செய்யக்கூடியதாகவுள்ளன. இதனால் அது ஜு1900ஜி என விளக்கப்படலாம் என்ற அச்சத்தினையும் உருவாக்கியது.[12]

இதனோடு தொடர்பான இன்னுமோர் பிரச்சினை ஜுலீப்ஜி வருடம் பற்றிய கணீப்பீடாகும். 2000 ஆம் வருடம் 366 நாட்களை கொண்டிருக்க வேண்டிய நிலையில் கணினிகளில் 365 நாட்களாகவே கணிப்பிடப்பட்டிருக்கும் ஆபத்தும் உண்டு. இவை திருத்தப்பட வேண்டியவை. இல்லாவிட்டால் செயல்நிரல் (Programme) குறைபாடுகள் காரணமாக கணினியில் பதிக்கப்பெற்றுள்ள சில்லுகளும் (Chips) அவற்றுடன் தொடர்பான ஏனைய சாதனங்களும் உலகளாவிய வகையில் தமது செயல்களில் தவறுகளை ஏற்படுத்தலாம் அல்லது எதிர்பாராத முறையில் செயற்படலாம் என்ற அச்சம் உருவாகியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூமிலேனியம் பஹ்ஜி எனக் கூறப்படும் மேற்கூறிய புத்தாயிரம் ஆண்டு கம்பியூட்டர் நோய் பரப்பி பல்வேறு துறைசார்ந்த அமைப்புக்களையும் பாதிப்புக்குள்ளாக்க முடியும். அவற்றில் தொடர்பாடல் சேவைகள், வங்கி, பொதுப்பயன்பாடுகள், சுகாதார சேவைகள், பாதுகாப்பு, ஆகிய முக்கிய துறைகளும் உள்ளடங்குகின்றன. இப்பிரச்சினை பொதுத் துறை, தனியார் துறை, சார்ந்த நடவடிக்கைகளை பல்வேறு மட்டங்களிலும் கலீரமாக பாதிக்கக்கூடியது என அஞ்சப்பட்டது. அதே நேரத்தில் Y2K பிரச்சினையின் காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக்களின் சரியான பரிமாணங்கள் முழுமையாக புரிந்து கொள்ளப்படவும் இல்லை.அதே வேளையில் அப்பிரச்சினைக்கு வழிகாண்பது பலகோடிக்கணக்கான டொலர்கள் செலவினைக் கொண்டிருக்கும் என அஞ்சப்பட்டது.

புதிய தொழில்நுட்பம் சார்ந்ததான சவால்கள் ஒரு புறத்தில் காணப்படுகின்றன. அதே வேளையில் பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலோ புதிய தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வு கூட இல்லாத குறை காணப்படுகிறது. சில நாடுகளில் Y2K பிரச்சினையைக் குறித்து தேசீய ரீதியில் தீர்வு காணுவதற்கான திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய நாடுகளிலோ இப் பிரச்சினைகள் பற்றி எதுவித ஏற்பாடுகளும் இன்னும் ஆரம்பிக்கவில்லை. 1998 ஆகஸ்ட் மாத அளவில் 137 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 29 நாடுகளிலேயே Y2K பிரச்சினை பற்றி தேசீய மட்டத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. விழிப்புணர்வின்மையும், புரிந்துணர்வு இல்லாமையும் காரணமாக தீர்வுகளை தேவையான நேரத்தில் அமுலாக்கம் செய்யப்படமுடியாது போகின்றது. அதனால் புதிய தொழில் நுட்ப செயற்பாடுகள் செயலிழப்பதுடன், கடுமையான பாதிப்புக்களுக்கும் உள்ளாகலாம்.

Y2K பிரச்சினை ஒரு தொழில் நுட்பம் சம்பந்தமான பிரச்சினைதான். அதே நேரத்தில், அதனை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என்பது வியாபாரங்களினதும், ஒழுக்குபடுத்துவதும் சம்பந்தமான பிரச்சினையாகும். எனவே தான் உலகவங்கி "அபிவிருத்திக்கான தகவல்" என்னும் நிகழ்ச்சியினை உருவாக்கியது. அதன் மூலம்,

1. பல்நோக்கம் கொண்ட அபிவிருத்தி வங்கிகள்,
2. பல்நோக்கம் கொண்ட அபிவிருத்தி முகவர் நிறுவனங்கள்,
3. சில தனியார் கூட்டுத்தாபனங்கள்,

ஆகியவற்றுடன் பங்குதாரராக இணைந்து இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபட்டது. இத்திட்டத்தின் மூலம் உலக வங்கி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முற்படும் நிறுவனங்களுக்கு தகவல்களை வழங்கி வந்தது. அத்துடன் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகளில் தேசீய ரீதியான திட்டங்களை மேற்கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவிகளையும் நிதி உதவிகளையும் கூட வழங்க திட்டங்களை உருவாக்கியிருந்தது. உலக வங்கி கடனுதவிகளையும் கூட வழங்கியது. இவை மாத்திரமன்றி புதிய தகவல் தொழில்நுட்பங்களில் ஒன்றான தொலை மாநாடுகள் (Tele conferencing) மூலம் இப்பிரச்சினை பற்றிய விழிப்புணர்வுகளை பரவச் செய்யவும் தேவையான நடவடிக்கைகளை உலகவங்கி மேற்கொண்டது. இவ்வாறான மாநாடுகள் முதலில் ஆபிரிக்க நாடுகளுக்காக நடத்தப்பட்டன. வாஷிங்டனிலிருந்து நடத்தப்பட்ட இம்மாநாடுகளை உலக வங்கியின் Y2K பிரச்சினை பற்றிய நிபுணர்களும் ஏனைய நிறுவனங்களைச் சார்ந்த இத்துறை சார்ந்த நிபுணர்களும் நடத்தினார்கள்.

Y2K பிரச்சினையை தீர்ப்பதற்கான முதல் தேவை அது பற்றிய விழிப்புணர்வு என்றாலும் தீர்வினை அடைவதற்கு நிதி, மனிதவளம், தொழில்நுட்பம், போன்ற பலதரப்பட்ட வளங்கள் தேவைப்பட்டன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பலவற்றில் இப்பிரச்சினை பற்றிய விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்துவதில் வெற்றிகண்ட போதிலும், தேவையான வளங்களை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதிலும், தகவல் அமைப்புக்களை திருத்தி அமைப்பதிலும், மாற்றியமைப்பதிலும் பல இடையூறுகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது.

சில எச்சரிக்கைகள்

எதிர்காலம் பற்றி நம்பிக்கையூட்டும் சில செய்திகளை தகவல் புரட்சி அளித்துள்ள போதிலும் வேறு சில விடயங்களில் அவதானமாக இருக்க வேண்டிய எச்சரிக்கைகளையும் அது விடுவித்துள்ளது. கைத்தொழில் புரட்சியை பொறுத்தமட்டில் அதன் நன்மைகள் முழுமையாக ஏற்பட வேண்டுமானால் அதற்காக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தொழில்நுட்பங்களில் ஏற்படும் மாற்றங்களை அவை முற்றாக தமது நடவடிக்கைகளில் இணைத்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக தொலை மாநாடுகளை நடத்துவதனால் பெருமளவு பயணங்கள் தேவைப்படாது போகும் நன்மையுண்டு. அதனால் பெருமளவு நேரமும், பணமும் சேமிக்கப்படும். ஆனால் நன்கு கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகளிலும் கூட தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் புதிய தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்களில் பெருமளவு முதலீடுகளை செய்த பின்னரும் அவற்றின் மூலம் இறுதியாக ஏற்படக்கூடிய பொருளாதார வளர்ச்சி பற்றி ஐயம் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். புதிய தொழில்நுட்பம் ஐதாகவே பயன்பாட்டில் உள்ள அபிவித்தியடைந்து வரும் நாடுகளிலோ இத்தகைய ஐயப்பாடு இன்னும் அதிகமாகவே காணப்படுகின்றது. புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பங்களின் பயன்களில் ஐயம் கொண்டுள்ளவர்கள், அவற்றில் உள்ள தகவல்கள் மேலதிகமாக நிரம்பும் போது அபாயங்கள் செல-வினங்கள் என்பன ஏற்படலாம் என்றும் பெருமளவில் ஏற்படும் தகவல்களின் பாய்ச்சல் காரணமாக அவற்றினை பிரித்தெடுத்தல், கிரகித்தல் ஆகிய செய்முறைகள் தாங்க முடியாத செலவினங்களை ஏற்படுத்தலாம் என்றும் விமர்சிக்கின்றனர். அதே வேளையில் புதிய தொழில் நுட்பத்தினை பெற்று பயன்படுத்துபவர்கள் அத்தகைய வசதிகளை பெறாதவர்களை விட திடீரென முன்னேறி விடலாம் என்றும் அதனால் நாடுகளிடையேயும், நாடுகளுக்குள்ளேயும், மக்களுடைய நல்வாழ்வு பொருத்து இடைவெளிகள் அதிகரித்து விடலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. அதுமத்திரமன்றி உலகப் பொருளாதாரத்தில் புதிய தொழில்நுட்பங்கள் காரணமாக பரந்தளவில் சந்தைகள் திறக்கப்படுவதாகவும், அதனால் சந்தை வலு, செறிவடைவதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் இவற்றின் நன்மைகளோ இறுதியில் தொழிலாக்கம் பெற்ற நாடுகளுக்கே வாய்ப்புக்களை அளிப்ப-தாகவும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் நன்மைகளை விகிதாசாரமாக பெறப்போவதில்லை என்றும் விமர்சிக்கப்படுகின்றது.

சில நாடுகளிலும், சமூகங்களிலும் நிலவும் வேறான மொழிப்பயன்பாடு காரணமாக புதிய தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பங்களை பயன்படுத்து-வதில் ஒரு சில பிரிவினர் பாதிக்கப்படலாம் அல்லது ஓதுக்கிவைக்கப்-படலாம் என்ற ஐயப்பாடும் நிலவுகிறது.

உதாரணமாக கணினியில் இணையம் பல மொழிகளிலும், மொழி-பெயர்ப்புடன் கிடைத்தாலும் ஆங்கிலமே உலகளாவிய வகையில் உலகம் தழுவிய வலையமைப்பை (www) ஆக்கிரமித்துள்ளது என்பதும் உண்மையே. இதனால் ஆங்கிலம் வாசிக்க முடியாதவர்கள் மற்றவர்களைப் போலன்றி வளர்ந்து செல்லும் அந்த அறிவுக் களஞ்சியத்திலிருந்து பயனடைவதற்கு தடைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது. தகவல் புரட்சி காரணமாக இறுதியில் ஏற்படக் கூடிய விளைவுகள் பரபரப்புடனான எதிர்பார்ப்புக்களின் அளவுக்கு ஏற்படாது போகலாம். இருந்த போதிலும் பொருளாதாரத்திலும், சமூகத்திலும், அது ஆழ்ந்த, சாதகமான விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்பது திண்ணம். நவீன தொடர்பாடல் வசதிகள் போதியளவு இல்லாததன் காரணமாக பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அபிவிருத்தி திட்டங்கள் தடையுற்றன. நாடுகளில் தொழில்நுட்ப பயன்-பாட்டின் காரணமாக இப்போது பல நன்மைகளை அறுவடை செய்துள்ளமை உண்மையேயாகும். இன்நாடுகள் புதிய தொழில்நுட்பங்களின் நன்மைகளை முழுமையாக அனுபவிக்க நீண்ட காலம் செல்லலாம். ஏனெனில் புதிய தொழில்நுட்பங்களின் நன்மைகள் முழுப் பொருளாதாரத்தினையும் ஊடுறுவ போதிய காலம் தேவைப்படுகிறது. இதனால் பழைய தொடர்பாடல் ஊட-கங்கள் இன்னும் சில காலத்திற்கு தொடந்திருக்கும் என்றே கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு சில காரணங்கள் உள்ளன.

1. வானொலி கூடியளவில் வறுமையான மக்களால் பயன்படுத்தப்படுகிறது. அதற்கு அதன் மலிவான விலை ஒரு காரணமாகும். அதற்கு சிறிதளவு மின் சக்தியே தேவைப்படுகிறது. அது மாத்திரமன்றி பல நாடுகளில் மின்சக்தி பற்றாக்குறையாகவும் வறுமையான மக்களால் அதன் விலை தாங்கமுடியாத அளவிலும் காணப்படுகின்றது.

2. தொலைக்காட்சி பலமானதும் செல்வாக்கு செலுத்துவதுமான ஊடகமாகிவிட்டது. எழுத்தறிவு வேறுபாடுகள் இதன் சாதனைளை தடைசெய்ய முடியாது. பேச்சும், உருவங்களும் காரணமாக தகவல்களை அனைத்து மக்களும் புரிந்து கொள்கின்றனர்.

3. புதினப்பத்திரிகைகளால் எழுத்தறிவில்லாதோருக்கு தகவல்களை அளிக்கமுடியாது. ஆயினும் அதுவே மலிவாக மக்களுக்கு அறிவினை வழங்கும் சாதனமாகவும் அபிப்பிராயங்களை உருவாக்குபவர்களது கருத்துக்களை பரவச் செய்யும் ஊடகமாயிருக்கிறது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வீட்டு மட்டங்களில் இப்போது வானொலி, தொலைக்காட்சி, புதினப்பத்திரிகை, என்பன வகித்துவரும் இடத்தை இணையம் என்றோ(ஒரு வேளை) ஒரு நாள் இடம்பெறுமேயானால் அதுவரை அவ்விடத்தை பாரம்பரிய சாதனங்களே பூர்த்தி செய்ய வேண்டி உள்ளது. அதனால் அன்நாடுகளின் அரசுகள் அச்சாதனங்களை மக்களுக்கு சரியான வகையில் கிடைக்கக் கூடியதாக வகை செய்தல் வேண்டும். அதற்காக அவற்றை வழங்குவோரிடையே போட்டியான சூழலை உருவாக்கி சுதந்திரமான முறையில் வினியோகிக்க வழிவகை செய்தல் அவசியமாகிறது. அத்துடன் அவற்றின் உள்ளடக்கம் தகுதிவாய்ந்தனவாயிருப்பதனை உறுதி செய்வனவாகவும் இருத்தல் வேண்டும்.

புதிய தொழில் நுட்பங்களை ஏற்றுக்கொள்வதில் தாமதம் சார்ந்த பிரச்சினைகள்

புதிய உலக பொருளாதாரத்திற்கு அதிகரித்த அளவில் உற்பத்தி திறனை தரக்கூடிய வகையில் தகவல்களைப் பயன்படுத்துவதற்கான ஊடகங்களை அமைத்தல் வேண்டும். அவை சமமற்ற முறையிலேயே உலகில் பரம்பிக்காணப்படுகின்றன. தலா கணினி பயன்பாடு தாழ்வருமான நாடுகளில் காணப்படுவதுடன் ஒப்பிடுகையில் உயர்வருமான நாடுகளில் 100 மடங்கு அதிகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி, தனியார் கணினி, இணையம் என்பன ஆயிரம் பேருக்கு உள்ள பயன்பாட்டின் அளவினை அட்டவணை 1 காட்டுகிறது. அவற்றை விட சில தெரிந்தெடுத்த நாடுகளில் தொலைபேசி, இணையம் என்பனவற்றின் பயன்பாடு பற்றிய தரவுகளை பின்னிணைப்பு 2 காட்டுகிறது.

அட்டவணை 1

உலகம் : தொலைத் தொடர்பு வசதிகள் – 1995

(ஆயிரம் பேருக்கு)

	தொலை பேசி	தனியார் கணினி டாளர்கள்	இணையம் பயன்பாட்
தாழ் வருமான பொருளாதாரங்கள்	*25.7*	*1.6*	*0.01*
தாழ் மத்திய வருமானம் கொண்ட பொருளாதாரங்கள்	*94.5*	*10.0*	*0.7*
உயர் மத்திய வருமானம் கொண்ட பொருளாதாரங்கள்	*130.1*	*24.2*	*3.5*
புதிதாக கைத்தொழிலாக்கம் பெற்ற பொருளாதாரங்கள்	*448.4*	*114.8*	*12.9*
உயர் வருமானம் கொண்ட பொருளாதாரங்கள்	*546.1*	*199.3*	*111.0*

மூலம் : உலக வங்கி, அபிவிருத்தி அறிக்கை 1998, p.63

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் புதிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் உள்ளார்ந்த வளங்கள் வளர்ச்சியடைய பின்வருவன இடையூறாக காணப்படுகின்றன.

அ. மனித முதலீடு பற்றாக்குறை

ஆ. குறைந்த கொள்வனவுத் திறன்

இ. தொழில்களில் போதிய போட்டியின்மை

ஈ. தொழில்கள் மீதான சட்டதிட்டங்களின் பற்றாக்குறை.

புதிய தொழில்நுட்பங்களைப் பொறுத்து அன்நாடுகளில் போதிய தொழிற்பயிற்சியின்மை குறிப்பிடத்தக்கதொரு குறைபாடாகும். அதுவும் பராமரிப்பு, திருத்தல் என்பன பொறுத்து போதிய பயிற்சி பெற்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. ஆபிரிக்காவில் இணையம் பயன்பாடுபற்றி அளவீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் கணினிசார் அடிப்படை அறிவு குறைந்த மட்டத்திலும் இணைய செயல் நிரல் சார் தொழில்பயிற்சி தாழ்ந்த நிலையிலும் காணப்பட்டமை அறியப்பட்டது. இணையம் பயன்பாடு மிக குறைந்த நிலையில் காணப்பட பிரதான காரணம் அவைதான் எனவும் அறியப்பட்டது அவ்வாறு தொழில் பயிற்சியில் தாழ்ந்த நிலை தொடர்ந்து நீடிப்பதற்கு அங்கே புதிய தொழில்நுட்பங்களை ஞானமுடன் கற்பிக்கக்கூடியவர்கள் போதியளவில் இல்லாமையே காரணமாகும். தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்று பயன்படுத்துவதில் வருமானமட்டங்கள் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன. அதே நேரத்தில் வருமான மட்டங்கள் கல்வியினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

நாடுகளிடையே தொலைபேசி பயன்பாட்டில் காணப்படும் வேறுபாடுகளில் 80 சதவீதமானது தலா வருமானத்தில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக ஏற்படுவதாகும். தென்னாசியாவிலும் உபசகாரா நாடுகளிலும் 100 பேருக்கு 1.5 தொலைபேசி தொடர்புகளே சராசரியாக காணப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் இது 66 ஆகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தொலைத்தொடர்பு வசதிகளுக்காக செய்யப்படும் முதலீடுகள் 1990ஆம் ஆண்டுகளின் ஆரம்பம் முதல் இரண்டு மடங்காக அதிகரித்து வருடாந்தம் அமெரிக்க டொலர் 60 பில்லியன் வரை காணப்பட்டது. அன்நாடுகளில் அதிகரித்து வரும் தொலைத்தொடர்பு வசதிகளுக்கான கேள்வியினை பூர்த்தி செய்ய இன்னும் அதிகளவிலான முதலீடு தேவைப்படுகின்றது.

பெரும்பாலான தாழ் வருமானம் கொண்ட நாடுகளில் தொலைத்தொடர்பு வசதிகளுக்கு போதிய கேள்வியில்லை என்பதனை விட அவற்றிற்கான கேள்விக்கேற்ற நிரம்பல் இல்லையென்பதே உண்மையாகும். அந்நாடுகளில் பலரிடம் தொலைபேசிகள் வாங்கும் கொள்வனவு திறன் இல்லை என்பது உண்மையானாலும் கூட இன்னும் சிலருக்கு அதற்கான தகுதிகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அப்படியிருந்தும் தொலைபேசி தொடர்பிற்காக அவர்கள் விண்ணப்பித்து பல மாதங்களாகியும் வேறு சில சந்தர்ப்பங்களில் சில வருடங்களாகியும் கிடைக்காது தாமதமாகின்றன. தொலைபேசி பயன்பாட்டின் அடர்த்தி குறைவாக உள்ள நாடுகளில் பயன்பாட்டில் உள்ள தொலைபேசிகளைவிட தொலைபேசிக்கான விண்ணப்பம் செய்திருப்பவர்களது எண்ணிக்கை அதிகமாகும்.

தொலைபேசி ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக இப்போது உலகில் விண்ணப்பித்து எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை 28 மில்லியன் ஆகும். அவர்கள் அனைவரும் அபிவிருத்தியடைந்து வரும் நாட்டினராவர்.[13] அவர்கள் சராசரியாக ஒருவருடம் காத்திருக்கின்றனர். வேறு சிலர் தமக்கு தொலைபேசி கிடைக்காது என்ற எண்ணத்தில் விண்ணப்பிப்பதே இல்லை என்ற செய்தியும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தொலைபேசிக்கும் மற்றும் நவீன தகவல் தொழில்நுட்பங்களுக்குமான நிரம்பலானது கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகளை விட அதிகளவில் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதற்கு காரணம் பின்வருமாறு :

அ. போதிய போட்டியின்மை

ஆ. போதிய சட்டதிட்டங்களின்மை

கடந்த 15 வருடங்களில் தொலைபேசி தொடர்பு வசதிகளும், இணையத்தொடர்புகளும் விரைவாக அதிகரித்துள்ளன. அவற்றின் எண்ணிக்கை புவியியல் பரம்பல் என்பன பற்றிய தரவுகள் பின்னிணைப்பு 3 இல் தரப்பட்டுள்ளன.

சந்தையில் போட்டியும் பொதுத்துறைக் கொள்கையும்

தொலைத்தொடர்புகள் நீண்டகாலமாகவே ஒரு இயற்கையான தனியுரிமை துறையாக அனுமானிக்கப்பட்டு வருகின்றது. அத்துறை திறமையாக இயங்க ஒரு உற்பத்தியாளர் மாத்திரம் செயற்பட வேண்டும், என்றும் அனுமானிக்கப்பட்டிருந்தது. அதற்கு ஒரு காரணம் இத்தொழிலில் உற்பத்தி அதிகரிக்கும் போது செலவுகள் வீழ்ச்சியடையும் என்பதாகும் . இத்தொழிலில் ஈடுபடும் பெரிய நிறுவனங்களின் உற்பத்திச் செலவு குறையும் போது அவை தமக்கு எதிரான போட்டி நிறுவனங்களை விட குறைந்த விலையை தாம் வழங்கும் சேவைகளுக்கு நிர்ணயிக்க முடியும். இதனால் இறுதியில் பெரிய நிறுவனங்களே தொழிலில் ஆதிக்கம் செலுத்துவனவாகிவிடும். எனவே தான் பெரும்பாலான நாடுகள் இவ்வாறு தனியுரிமை வளருவதனை தடுத்து நிறுத்த ஒரே அல்லது சிறந்த வழியாக அரசே தொலைபேசி சேவையினை எடுத்து நடத்த வேண்டும் என விரும்பின. இக்கருத்துக்களின் அடிப்படையில் பல அரசுகள் இத்துறையில் ஈடுபட்டன. அத்துடன் அரசுக்கு எதிராக போட்டி நிறுவனங்கள் தோன்றுவதனை பின்வரும் காரணங்கள் நிமித்தம் தடைசெய்தன :

1. வளங்களை இரட்டிப்பாக்குவதன் மூலம் வீண் விரயம் ஏற்படலாம்.

2. இலாபகரமாக சேவைகளை நடாத்தக்கூடிய பகுதிகளுக்கே சேவைகள் அளிக்கப்படலாம். உதாரணமாக நகரப்பகுதிகளில் தொலைபேசி பயன்பாடு அதிகம். அதனால் அப்பகுதிகளுக்கு கூடிய சேவைகள் வழங்கப்படும். எனவே பின் தங்கிய பகுதிகள் கவனிக்கப்படாது புறக்கணிக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு பரந்த முறையில் சேவைகளை நியாயமான கட்டணங்களுக்கு வழங்க முடியும் என்றும் காரணம் கூறப்பட்டது. ஆனால் இதற்கு மறுப்புக் கூறும் வகையில் அரசின் தனியுரிமை திறமையின்மைக்கு வழி கோலுகின்றது என்ற விமர்சனங்களும் உள்ளன. ஒரு தொலைபேசி தொடர்பினை ஏற்படுத்த தேவைப்படும் முதலீட்டை விட 3 அல்லது 4 மடங்கு முதலீடு அரசினது நிருவாகத்தில் தேவைப்படுகிறது என்பது அவ்வாறன குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும்.

தனியுரிமை கொண்ட அரசுகளினால் மிகவும் குறைந்த மீள் முதலீடே கடந்த காலங்களில் செய்யப்பட்டது. அது மாத்திரமன்றி, அவற்றினால் வழங்கப்பட்ட சேவைகளும் தரங்குறைந்தனவாகவே காணப்பட்டதாகவும் திறமையற்றதாக செயற்பட்டதாகவும் குறை கூறப்படுகின்றது. வறுமையான மக்கள் வாழும் கிராமிய பகுதிகளுக்கு தொலைபேசி சேவை சிறியளவிலேயே கிடைத்தது. சில பகுதிகளிலோ முற்றாகவே வழங்கப்படவில்லை.அரசு தனியுரிமையுடன் இத்தொழிலைச் செய்யலாம் என்பதற்கு சாதகமாகவும் பிரதானமாகவும் கூறப்பட்ட காரணம் தொலைபேசி தொடர்புகள் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் வழங்கப்பட முடியும் என்பதாகும். ஆனால் ஆரம்ப கால சிந்தனையுடன் ஒப்பிடுகையில் விளைவுகள் அவ்வாறு இருக்கவில்லை கூடியளவு மானியங்கள் வழங்கப்பட்ட உள்ளூர் தொலைபேசி அழைப்புகளின் பயன்பாடு காரணமாக மிகக்குறைந்த வருமானமே கிடைத்தது. அதனால் வசதிகளை விஸ்தரிக்க முடியவில்லை. மறுபுறத்தில் வியாபார நிறுவனங்கள் மலிவான கட்டணங்களால் கூடிய இலாபங்களை பெற்றன. தொலைபேசி வசதியற்ற சிறிய நிறுவனங்கள் நன்மைகளை பெற முடியாது நலிவுற்றன. தொலைபேசி தொடர்புகள் பற்றாக்குறையாக இருந்ததால் அவற்றிற்காக விண்ணப்பிப்பவர்களுக்கு அவற்றினை ஒதுக்கீடு செய்யும்போது ஊழல்கள் இடம் பெற்றன . வறுமையானவர்களை பாதுகாக்கவும் நுகர்வாளர்களை பாதுகாக்கவும் உருவாக்கப்பட்ட அரச தொலைபேசி சேவைகள் அவற்றை வழங்காதது ஒரு புறமிருக்க திறமையற்ற தொலைபேசி சேவை காரணமாக பொருளாதார வளர்ச்சியும் ஊக்குவிக்கப்படாது பாதிப்புக்குள்ளாயிற்று.

தொலைத் தொடர்பு தொழில்களில் புதிய போட்டிகள்

தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குபவர்களிடையே திறமையின்மை காணப்பட அந்நாடுகளில்

அ) இத்தொழில் மீது அரசாங்க கட்டுப்பாடுகள் போதியளவில் இல்லாமையும்,

ஆ) தேவையான அளவில் போட்டிகள் இல்லாமையுமே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான காரணங்களாக கூறப்படுகின்றன. பொதுத்துறையின் கீழ் தொலைத்தொடர்பு சேவைகள் தனியுரிமையாக செயற்பட்டபோது ஏற்பட்ட தோல்விகள் காரணமாக ஏறத்தாள 90 நாடுகளில் இப்போது தொலைத்தொடர்பு சேவைகள் தனியார் துறையினரிடம் விடப்பட்டுள்ளதோடு சந்தையில் இப்போது அவை போட்டியுடன் செயற்படுகின்றன.

சில நாடுகளில் அரசுகள் தொலைபேசி சேவைத்தொழில் அமைப்பில் சில மத்திய கட்டுபாடுகளை கொண்டுள்ள போதிலும் தனியார் துறையினரால் செல்லூலர் தொலைபேசி மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட பல சேவைகளை வழங்குவதற்கான வாய்ப்புக்களும் உருவாக்கியுள்ளன. எவ்வாறாயினும் அரச கொள்கைகள் இவற்றை கட்டுப்படுத்துவனவாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். தென்னாபிரிக்கா தவிர்ந்த உபசகாரா நாடுகளில் இவ்வாறான கட்டுப்பாடுகள் காரணமாக 25 வீதமான தொலைபேசி இணைப்புக்களே தனியார் துறையினரால் கையாளப்படுகிறது. உலக வர்த்தக நிறுவனம் 1994ஆம் ஆண்டு நடைபெற்ற உருகுவே சுற்று மகாநாட்டின் பின்னர் 1997 ஆம் ஆண்டளவில் ஏற்பாடு செய்த ஒப்பந்தத்தின் விளைவாக தொலைபேசித் தொழில் உலகளாவிய வகையில் தாராளமயமாக்கத்திற்கு உட்பட்டிருப்பதால் தொழிலில் போட்டிகள் ஏற்படுத்துவதன் மூலம் முன்னர் எப்போதையும் விடக் கூடிய நன்மைகளை அடையக் கூடியதாகியுள்ளது. உலக தொலைபேசி சேவையில் 40 வீதத்தினைக் கொண்ட 69 நாடுகள் இவ்வொப்பந்தத்தினை ஏற்றுக் கைச்சாத்திட்டன.[14]

1980ஆம் ஆண்டுகளின் பின்னர் உலகம் முழுவதிலும் தகவல் சார்ந்த உள்ளமைப்புகளுக்கு தேவையான நிரம்பல் பூர்த்தி செய்யப்பட்டது. அத்துடன் கட்டண முறைகள், நிதி வழங்கல் என்பன வழங்கப்பட்டு பயன்படுத்தப்படுவதோடு ஒழுங்கு, சட்டதிட்டங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன. இப்போது பழைய தொலைத்தொடர்பு முறைகள் விரைவாக ஒழிந்து வருகின்றன. அண்மைக்கால தொழில்நுட்ப முன்னேற்றங்கள் காரணமாக் பொதுமக்கள் பலதரப்பட்ட தொடர்பாடல் வசதிகளையும், ஊடக வசதிகளையும், மலிவாக பெற்று பயனடைய முடிகிறது. தகவல் சார் உள்ளமைப்பு தொழில்களின் சந்தைகளில் முழுமையான போட்டி நிலைமைகள் ஏற்படவில்லை என்பது உண்மைதான். இருந்த போதிலும் வளர்ச்சி பெற்றுள்ள தொழில்நுட்பங்களும் சந்தையின் அதிகரித்த கேள்வியும் இணைந்து தேசிய தனியுரிமை கொண்ட அத்துறை சார்ந்த தொழில் அமைப்புக்களுக்கு சாவுமணி அடித்துவிட்டதாக நம்பப்படுகின்றது. ஏற்கனவே குறிப்பிட்டபடி நிறுவனங்கள் கூடிய உற்பத்தி காரணமாக அவற்றை குறைந்த செலவில் வெளியிடக் கூடியதாக இருப்பதால் இவற்றில் தனியுரிமை இடம் பெறுகின்றது. அவை பொருளாதார சிக்கனத்தை (Economics of Scale) அடைகின்றன. அதே வேளையில் நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சிறியளவிலான நிறுவனங்களும் குறைந்த செலவினைக் கொண்டனவாக செயற்பட முடியும். அப்போது சந்தையில் பாதிப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தக் கூடிய வகையில் பல போட்டியாளர்கள் செயற்படுவார்கள். சிறிய சந்தைகளிலும் கூட உலகளாவிய வகையில் போட்டியான கட்டணங்களில் நான்கு செல்லுாலர் நிறுவனங்கள் வரையில் செயற்பட முடியும் என்பதற்கு இலங்கை ஒரு சிறந்த உதாரணமாக விளங்கியது. இலங்கை இப்போது உலகில் மிகவும் மலிவான செல்லுாலர் தொலைபேசி கட்டணங்களைக் கொண்ட ஒரு நாடாகவும் 1993ஆம் ஆண்டிற்கும் 1996ஆம் ஆண்டிற்கும் இடையே 56,000 செல்லுாலர் தொலைபேசி தொடர்புகளை பயன்பாட்டிற்கு கொண்டு வந்த நாடாகவும் முக்கியம் பெறுகிறது.

இப்போது அறிவு, தகவல் ஆகியவற்றை தேசீய மற்றும் சர்வதேச வலைப்பின்னல்களூடாக செறிவாக பெற்று அவற்றைப் பரவச்செய்யும் புதுவகையான சேவைகளுக்கான சந்தையை உருவாக்கும் போக்குகளும் உருவாகியுள்ளன.

பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் கூட புதிய தொழில்நுட்பங்களையும் தனியார் துறை முதலீடுகளையும் பயன்படுத்தி

அ) தமது மக்களிடையே தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இடைவெளிகளை குறைப்பதற்கும்

ஆ) போதிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும்,

இ) அதற்கு தேவையான செலவினங்களை தாங்கும் சக்தியினை பெற்றுக்கொள்வதற்கும்,

ஈ) அந்நாட்டு மக்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதற்கும்,

தீவீரமாக ஈடுபட்டு வருகின்றன. இத்தகைய நோக்கங்கள் ஈடேறவேண்டுமெனில் தொலைத்தொடர்புத்துறை நிறுவனங்களிடையே போட்டிகள் அத்தியாவசியமாகின்றன. தொலைத்தொடர்பு சந்தைகளில் போட்டியை உருவாக்குதல் நடைமுறை சாத்தியமானதானாலும் கடினமானதாகும். ஏனெனில் அரசாங்கங்கள் அடக்கி ஒடுக்கும் நடைமுறைகள் மூலமே தனியுரிமையினை பேணி வருகின்றன.

வெவ்வெறான தொலைபேசி சேவைகளுக்குமான கட்டண முறைகளில் ஒரு மீள் சமத்துவத்தினை ஏற்படுத்த பின்வரும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

அ) தொழில்நுட்பங்களில் தொடர்ந்து மாற்றங்களை ஏற்படுத்துதல்.

ஆ) போட்டிச்சூழல்களை ஏற்படுத்துதல்.

இ) கட்டண முறைகளை திருத்தி அமைத்தல்.

பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மானியங்கள் குறைக்கப்படுவதால் உள்நாட்டு தொலைபேசி அழைப்புகளுக்கான கட்டணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துச் செல்லுகின்றன. அதே வேளையில் சர்வதேச தொலைபேசி அழைப்புகளுக்கு கட்டணங்கள் குறைந்து செல்கின்றன. பாரம்பரிய கட்டண முறைகள் பயன்பாட்டாளருக்கும் தொலைபேசி சேவைகளை வழங்குபவர்களுக்கும் சரியான ஊக்குவிப்பினை வழங்கவில்லை. அனைவருக்கும் தொலைபேசி வசதிகளை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் உள்ளூர் அழைப்புக்களுக்கு மானியம் வழங்கப்பட்டதாகவும் அதனால் வெளியூர் அழைப்புகளுக்கு கூடிய கட்டணம் வசூலித்தல் நியாயம் எனவும் வாதிடப்பட்டது.

ஆனால் இதில் சில சமயங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன. எந்தளவிற்கு மானியம் வழங்கப்படுகின்றது என்பதும், உண்மையிலேயே மானியம் வழங்கப்படுகின்றதா என்பதும் வினாக்களாக உள்ளன. ஏனெனில் உள்ளூர் அழைப்புக்களும் சர்வதேச அழைப்புக்களும் அனேகமாக ஒரேவகையான தொலைபேசி சாதனங்களையே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு வகையான அழைப்புக்குமான கட்டணங்களை தீர்மானிப்பதில் பாரபட்சம் காணப்படுவதாக குறை கூறப்படுகிறது. பல்வேறு அவதானங்களின்படி சர்வதேச அழைப்புக்களுக்கு சம்பிரதாயமாகவே அவற்றிக்கான பங்கினை விட கூடிய கட்டணங்கள் அறவிடப்படுவதாகவும் உள்ளூர் அழைப்புக்களுக்கு குறைவாகவே அறவிடப்படுவதாகவும் கூறப்படுகின்றது. கடந்த கால அனுபவங்களின் படி சர்வதேச அழைப்புக்களுக்கான உயர் கட்டணங்கள் காரணமாக தொலைபேசிகளுக்கு மாதாந்த வாடகை குறைவாக அல்லது வாடகையே இன்றியும் காணப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது.[15]

இதனால் தொலைபேசி நிறுவனங்களும், தமது தொலைபேசி வலைப்பின்னலை விஸ்தரிக்க ஊக்குவிக்கப்படுவதில்லை. அத்துடன் வெளிநாட்டு அழைப்புக்களுக்கு கூடிய கட்டணம் அறவிடப்படுவதால் வாடிக்கையாளர் நட்டமடைகின்றனர். அவர்களுடைய வியாபார வாடிக்கையாளர்கள், உறவினர்கள், நண்பர்கள், தூரப்பகுதி நகரங்களில் வாழும் குடும்ப அங்கத்தவர்கள் யாவருமே பாதிக்கப்படுகின்றனர். ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள புதிய கட்டண முறைகள் பழைய கட்டண முறையினை அச்சுறுத்தும் வகையிலும் சர்வதேச கட்டண அமைப்பினை கடும் சவாலுக்கு உட்படுத்தியும் வருகிறது.

தொலைதொடர்பு வசதிகளை அணுகக்கூடிய நிலைமைகள் அதிகரித்த போதிலும் சில நாடுகளில் இன்னும் அவை வரையறைகளுக்குட்பட்டதாகவே காணப்படுகின்றன. உபசகாரா நாடுகளில் 5,300 பேருக்கு ஒரு தொலைபேசியே பயன்பாட்டில் உள்ளது. சிங்கப்பூரில் இரண்டு பேருக்கு ஒரு தொலைபேசி பயன்பாட்டில் உள்ளது. வறுமையான நாடுகளில் பலரும் தொலைபேசி சேவைக்காக பல மைல் தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக,

1. ஜமெய்க்காவில் உள்ள ஒருவர் 150 கி.மீற்றர் தூரத்தில் உள்ள கிராமத்தில் உள்ள தனது பெற்றாரோடு தொலைபேசியில் தொடர்பு கொள்ள பெற்றோரின் அயலாருக்கு பேசி அவர் ஒரு கிலோ மீற்றருக்கு செய்தி அனுப்பி வரச்செய்து பேச வேண்டிய சிரமம் உள்ளது.

2. ஜொகானஸ்பேர்க்கில் உள்ள ஒருவர் தனது பெற்றோர் வட-மாகாணத்தில் வாழ்வதாகவும் அவர்கள் தன்னுடன் தொலைபேசி தொடர்பு கொள்ள தமது கிராமத்திலிருந்து 5 கிலோ மீற்றர் பயணம் செய்ய வேண்டும் என கூறியுள்ளார். அவரது பெற்றோர் தமது வீட்டுக்கு தொலைபேசி தொடர்பினை பெறுவது பற்றி கனவு காணவும் முடியாத நிலையிலிருப்பதாகவும் கூறியுள்ளார்.

3. அல்பேனியாவிலும் சற்றே குறைய இதே நிலையே காணப்படு-கிறது. நகரை பிரித்திருக்கும் மதிலுக்கப்பால் இருந்தே மதிலின் இடைவெளியினூடக தூரப்பகுதிகளுடன் தொலைபேசியில் பேச காத்திருக்கவேண்டியுள்ளது. நண்பர்கள், வியாபாரிகள், அரச நிறுவனங்கள் ஆகியவர்களோடு தொடர்புகொள்ள , பழைய தொலைபேசி முறையில் மட்டும் கிடைக்கும் இவ்வசதி நிச்சய-மற்றது. நீண்டநேரம் காத்திருந்ததன் பின் கிடைக்கும் தொடர்பு இடையில் துண்டிக்கப்படாது என்பதற்கு உத்தரவாதமும் கிடையாது.

சம்பிரதாயமான மான்யங்கள் வழங்கும் அடிப்படையிலான சர்வதேச உள்ளூர் தொலைபேசி சேவைகள், சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கு-மான தொலைபேசி சேவைகளை வழங்க தவறிவிட்டன. அதற்கு அச்சேவை-களை வழங்கிய நிறுவனங்கள் குறித்த இலக்கினை குறியாகக் கொண்டு செயற்படாதது மாத்திரமன்றி அவற்றின் நிருவாகமும் ஊழல்மிக்கதாய் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அண்மைக்கால அனுபவங்களின்படி தனியார் மயமாக்கமும், போட்டியான சந்தையும் காரணமாக சில நாடுகளில் சேவைகள் பெருமளவுக்கு அதிகரித்துள்ளன. சிலி நாட்டில் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சந்தையின் அனைத்துப் பிரிவுகளிலும் போட்டிகள் அனுமதிக்கப்பட்டதால் ஒரு தசாப்த காலத்திற்குள் தொலைபேசிகளின் அடர்த்தி 3 மடங்காக அதிகரித்து இப்போது 100 பேருக்கு 15 தொலைபேசி தொடர்புகள் இணைக்கப்பட்டுள்ளன. அதே போன்று பிலிப்பைன்ஸ் நாட்டில் 1993 ஆம் ஆண்டோடு தனியார் துறை கொண்டிருந்த தனியுரிமை போட்டிக்கு திறந்து விடப்பட்டது . இதன் விளைவாக 1996 ஆம் ஆண்டு இறுதிப் பகுதிகளில் முன்னர் 785,000 தொலைபேசி இணைப்புக்கள் மாத்திரம் இருந்த நிலைமாறி 3.4 மில்லியனாக அதிகரித்துள்ளது. இத்தகைய போக்குகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய நாடுகளும் இப்போது பின்பற்றுகின்றன. உகண்டா நாடும் அவ்வாறே புதிய தேசிய தொலைத்தொடர்பு அமைப்புக்கு அனுமதியளித்ததைத் தொடர்ந்து ஆரம்பத்தில் இயங்கிய தொலைபேசி நிறுவனத்தை தனியார் துறைக்கு விற்று விடவும் தீர்மானித்தது.

போட்டிகள் காரணமாக தொலைபேசியினை பயன்படுத்துபவர்களுக்கு இப்போது செலவினங்கள் குறைந்து செல்கின்றன. கானா நாட்டில் இரண்டாவது செல்லுலர் தொலைபேசி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனம் தொலைபேசி தொடர்புகளை வழங்குவதற்கும், தொலைபேசி கட்டணங்களுக்கும், 30 முதல் 50 வீதம் வரை விலைகளை குறைந்துள்ளது. இதனால் முதலில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் தனது சேவையை மேலும் விரைவாக விஸ்தரிக்க திட்டங்களை தீட்ட நிர்பந்திக்கப்பட்டது. இவற்றையடுத்து மூன்றாவது நிறுவனம் அறிமுகமாகியதோடு முதலிரண்டு நிறுவனங்களும் தமது சேவைகளை மேலும் திறமையாக்குவதற்காக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டி நிர்பந்திக்கப்பட்டது.

தாராளமயமாக்கப்பட்ட சந்தைகளில் போட்டியின் தேவைகள்

ஏனைய தொழில்களில் போன்றே தொலைத்தொடர்பு சேவைத் தொழிலிலும் தனியார் துறையினரது பங்கேற்பும், போட்டியும் மிக அத்தியாவசியமான இரண்டு கூறுகளாகும். ஆனால் இதில் ஒன்றினைக் கூட ஏற்படுத்துவதென்பது இலகுவான காரியமல்ல. தனியார் மயமாக்கம், போட்டி, சட்டதிட்டங்கள் என்பனவற்றை அறிமுகம் செய்கின்ற நிரல் ஒழுங்கு முறைகளைப் பொறுத்து ஏற்படக்கூடிய விளைவுகள் பாதிப்புக்குள்ளாக முடியும்.

உதாரணமாக அரசினது தனியுரிமையினை தகுதியான சட்டதிட்டங்களின்றி தனியார் மயப்படுத்தினால் தனியார் தனியுரிமை உருவாக்கப்படக் கூடிய ஆபத்துண்டு. தனியுரிமையினை அனுபவிக்கும் தனியார் நிறுவனங்கள் சந்தையில் போட்டிகள் அறிமுகம் செய்யப்படுவதனை அடக்கி வைக்கப் பார்க்கும் ஆபத்துண்டு. இதனால் சிக்கன வாடகையானது பொதுத்துறையிலிருந்து தனியார் துறைக்கு மாற்றப்பட்டு விடும் . அதனால் திறமை ஏற்படாது. விலைகளும் குறையாது. சேவைகளும் பரந்தளவில் ஏற்படாது. கடந்த கால அனுபவங்களில் இருந்து தனியார் நிறுவனங்களை போட்டியில் ஈடுபடச்செய்வதால் அவை இறுதியில் அரச தனியுரிமை மீது அழுத்தங்களை ஏற்படுத்தி அவற்றினை திறமையாக செயற்பட தூண்ட முடியும் என்பதும் தெரிய வந்துள்ளது. இத்தகைய செய்முறைகளின் இறுதி விளைவாக தனியார் மயமாக்கத்திற்கான வழி வகுக்கப்படுகிறது.

இவற்றில் இருந்து மூன்று தத்துவங்களை இனங்கான முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது. தனியார் மயமாக்கம் என்பது அவற்றிற்கான சட்ட-திட்டங்களின் அமைப்பை முறையாக உருவாக்கிய பின்னரேயே ஏற்படுத்த வேண்டிய ஒன்றாகும். அதன் மூலம் போட்டி ஏற்படுவது உறுதிசெய்யப்-படுவதுடன் அனுமதிகள் வழங்கப்படுவதற்கான நிபந்தனைகளை மதித்து செயற்படுவதும் அவசியமாகும். தனியார் மயமாக்கத்தின் பின்னர் தனியுரிமை சக்திகள் புதிய தொழில்களின் வரவை தடைசெய்யாது பாதுகாப்பதனை அதற்காக உருவாக்கப்படும் சட்டதிட்டங்களே உறுதி செய்வனவாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் புதிதாக சேவைத் தொழில்களில் பிர-வேசிக்கும் தொழில்கள் ஏற்கனவே நிலவிய சேவைத் தொழில்களுக்கு உருவாக்கிய உள்ளமைப்புக்களை பயன்படுத்தும் உரிமையினை வழங்கு-தலும் அத்தியாவசியமாகும். அதுமாத்திரமன்றி சட்டதிட்டங்களை உருவாக்குவதாக கூறி, தொலைத்தொடர்பு சேவைகளில் தனியார் துறை பங்கு கொள்வதனை தாமதம் செய்யும் அளவுக்கு காலதாமதம் ஏற்படுத்தவும் கூடாது. சட்டதிட்டங்களை உருவாக்கும் வரையில் தனியார் துறையினர் காத்திருக்க வேண்டியதில்லை. சிலி, கானா, நியூசிலாந்து, ஆகிய நாடுகளில் அவற்றின் சட்டதிட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கு முன்னரே தனியார் மயமாக்கல் நடவடிக்கைகள் அறிமுகமாக்கப்பட்டு விட்டன.

இரண்டாவதாக முடிந்தளவிற்கு பெருமளவு போட்டிகளை அறிமுகப்-படுத்தப்பட்டதன் பின்னர் தனியார் மயமாக்கத்தினை ஏற்படுத்துதல் சிறப்பாகும். இதனை சாதிக்க வேண்டுமானால் புதிய தனியார் நிறுவனங்-களுக்கும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் வேண்டும் . அல்லது தொலைத் தொடர்புச் சேவையில் உள்ள தனியுரிமை ஒடுக்கப்படுதல் வேண்டும்.

மூன்றவதாக தொலைத்தொடர்பு தொகுதியின் ஏதோ ஒரு பகுதி-யினை மாத்திரம் முதலில் தனியார்மயமாக்கி போட்டியினை இலகுவாக அறிமுகம் செய்யலாம். உபசகாரா ஆபிரிக்க நாடுகளில் சர்வதேச தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குபவர்களிடையே போட்டியினை உருவாக்குவதன் மூலம் குறைந்த செலவில் தொலைபேசி சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டன. அதற்காக அந்நாடுகளில் நிறுவனங்களுக்கு அரசினால் உறுதி மொழிகள் வழங்கப்ப-டுகின்றன. கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகளில் உள்ள தொலைத்-தொடர்பு நிறுவனங்கள் விருத்தியடைந்து வரும் நாடுகளின் பொதுத்துறை சேவைகளை கொள்வனவு செய்வதில் முன்னனி வகிக்கின்றன. அவை தொடர்ந்து புதிய சேவைகளை வழங்குவதுடன் புதிய சேவைகளை இனங்கண்டு வழங்குவதில் ஆர்வத்துடனும் செயற்படுகின்றன. இன்நிறு-வனங்கள் தமது தாய்நாட்டுச் சந்தைகளுக்காக கண்டுபிடிக்கும் புதிய வகையான சேவைகளை பின்னர் இலகுவாகவும் மலிவாகவும் விருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அறிமுகப்படுத்துகின்றன. இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாடுகளுக்கு வாய்ப்பாக அமைகிறது. இவ்வாறன நன்மைகளை விருத்தி பெறும் நாடுகள் பெற்று நன்மையடைய வேண்டுமாயின் அவை தமது சந்தைகளில் சர்வதேச தொழில் நிறுவனங்கள் போட்டியிடக் கூடிய சூழல்களை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது. நாடுகளின் அரசுகள் தமக்கு அன்நாடுகளில் செயற்பட அனுமதி வழங்குவதனை ஊக்குவிக்கும் வகையில் சில நன்மைகளை ஒவ்வொரு நிறுவனமும் வழங்கி வருகின்றன. அதன் மூலம் தமக்கு அங்கே தொழில் புரிவதற்கான வாய்ப்புக்களை வெவ்வேறான வழிகளில் பெற்றுக் கொள்கின்றன.

போலந்து நாட்டில் பலவீனமான கட்டுப்பாட்டு விதிமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டன. அதனால் அன்நாட்டில் தாராளமயமாக்கத்தின் காரணமாக பெறவேண்டிய நன்மைகளை பெறமுடியாது போயிற்று. அங்கே 1990ஆம் ஆண்டு முதல் 200 தொலைத்தொடர்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட போதிலும் 1996ஆம் ஆண்டளவில் 12 புதிய தொடர்பு நிறுவனங்களே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு அனுமதிப்பத்திரம் வழங்கியும் தொழில்கள் ஆரம்பிக்கப்படாமைக்கு சில காரணங்கள் கூறப்பட்டன. அவையாவன :

1. அரச தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் வருமானத்தைப் பகிர்ந்து கொள்வதில் காணப்பட்ட சார்பற்ற விதிமுறைகள்.

2. தொலைத்தொடர்பு வலைப்பின்னல் அமைப்பினை அணுகுவதில் காணப்பட்ட வரையறைகள்.

3. அந்நிறுவனங்கள் சொந்தமாக ஒலிபரப்பும் (Transmission) வசதிகளை அமைப்பதன் மீது ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள்.

இதிலிருந்து பிரதான நிறுவனம் (ஏற்கனவே செயற்பட்ட பொதுத்துறை நிறுவனம்) போட்டிகள் நிலவுவதற்கு எதிரான நடைமுறைகளை பின்பற்றக்கூடாது என்பது தெரிய வருகிறது. அத்துடன் இது பிரதான கட்டுப்பாட்டு விதிமுறையின் ஒரு முக்கிய பண்பாகவும் இருக்க வேண்டும். மேலும் விலைகளை நிர்ணயிக்க அத்தியாவசியமாக தேவைப்படும் தொழில்நுட்ப, வர்த்தக தகவல்களின் பாய்ச்சலை தடுத்து நிறுத்தக் கூடாது. இத்தகைய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டாலும் கூட சந்தையில் போட்டி நிலவுவதனை உறுதி செய்ய தேவையான கட்டுபாட்டு விதிமுறைகளும் அவசியமாகும்.

ஐக்கிய அமெரிக்கா உலகில் பெரிதும் போட்டியான தொலைத்தொடர்பு தொழிலைக் கொண்டுள்ளது. இருந்த போதிலும் கூட போதியளவில் அங்கே போட்டியில்லை என்றே கூறப்படுகிறது. அப்படி போட்டி உருவாகுமேயானால் கட்டுபாட்டு விதிமுறைகளை அங்கே ஒதுக்கி விட முடியும். தொலைத்தொடர்பு துறையில் போட்டிகள் அதிகரித்து வருகின்ற போதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் முழுமையாக ஏற்படவில்லை என்றே கூறப்படுகிறது. இத்தொழிலின் பிரதான சில பிரிவுகளில் எதுவித போட்டியுமே இல்லை என்பதாலேயே இவ்வாறான குறைபாடு பற்றி கூடிய அக்கறை காட்டப்படுகிறது.

தொலைத்தொடர்பு சேவைத் தொழிலில் போதியளவு போட்டிகள் இல்லை என்பதனை பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் தொலைபேசி இணைப்பு வசதிகளில் நிலவும் குறைபாடுகளில் இருந்து இனங்காண முடியும். தந்திக்கம்பி இணைப்பு மூலம் தொலைத் தொடர்புகளை பாவனையாளர்களுக்கு வழங்குவதில் ஏற்படும் பற்றாக்குறைகள் "செல்லூலர்" தொலைபேசி வசதிகள் மூலம் ஒரளவே தீர்க்கப்படலாம் என்பதும் உண்மையாகும்.

தொலைபேசி சேவைகளை வழங்கும் நிறுவனங்களை கண்காணிக்கும் நோக்குடனேயே சட்ட ஒழுங்குகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். நிறுவனங்கள் தொலைத்தொடர்பு சேவைகளை பெருமளவிலும், சிக்கனமாகவும் வழங்கக் கூடிய பகுதிகளுக்கு அப்பால் உள்ள பகுதிகளில் வாழும் பயன்பாட்டாளர்களுக்கு தமது இலாபங்களை கருதி விலைகளை அதிகரிப்பதன் மூலமோ, அல்லது சேவைகளை விஸ்தரிக்காது விடுவதன் மூலமோ, பாதிப்படையச் செய்ய முடியும். எனவே அவற்றை கவனத்தில் கொண்ட வகையிலான சட்ட ஒழுங்குகள் எடுக்கப்பட்டு அவை பாவனையாளர்கள் பாதிப்படைவதனை தடைசெய்வதாகவும் அவர்களை பாதுகாப்பதாகவும் அமைதல் வேண்டும். தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குவதற்காக புதிய நிறுவனங்கள் சந்தைகளில் பிரவேசிக்க வேண்டுமானால் அதற்காக ஏற்கனவே நிருமாணிக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு வலைப்பின்னல் அமைப்புக்களை அவை அணுகக் கூடிய வசதிகளும் வாய்ப்புக்களும் உறுதி செய்யப்பட்டிருப்பது அத்தியாவசியமாகும். வாடிக்கையாளர்களை ஒருவருடன் ஒருவரை இணைக்கும் சேவையை மாத்திரம் வழங்கும் செல்லூலர் தொலைபேசி நிறுவனங்களால் சந்தையில் பெரும் பங்கினை வகிக்க கூடிய காலம் செல்லலாம். எனவே இவர்கள் வழங்கும் இவ்வாறன தொடர்பு சேவைகளுக்காக ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள வலைப்பின்னலை பயன்படுத்துவதற்காக வசூலிக்கப்படும் கட்டணங்கள் நியாயமானதாக இருக்க வேண்டும், மேலும் அச்சேவைகள் தரமிக்கனவையாக அமைவதோடு அவற்றினை உறுதிசெய்வதாக "ஒழுங்குபடுத்தும் சட்டமூலங்கள்" அமைவதனையும் உறுதி செய்ய வேண்டியுள்ளது. "நியாயமான விலை" யாது என்பதிலும் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

சந்தையில் தகவல்களுக்கான உள்ளமைப்புகளில் போட்டி நிலவுவதனை ஆதரிக்கும் கொள்கைகளை நடைமுறையில் கொண்டுள்ள கைத்தொழில் நாடுகளாக அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. அந்நாடுகளில் முக்கிய வலைப்பின்னல் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் நியாயமான விலை நிர்ணயிப்பதற்காக வெவ்வேறான அணுகுமுறைகளை நடைமுறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றுகின்றன. அதனால் அன்நிறுவனங்கள் சந்தையில் தாம் கொண்டுள்ள பலத்தை பயன்படுத்தி துர்பிரயோகம் செய்வதனை தடை-செய்யக்கூடியதாக உள்ளது.

நாடுகள் அடைந்துள்ள அபிவிருத்தி மட்டங்கள், அவற்றின் வேறுபட்ட தேவைகள் என்பனவற்றிற்கு ஏற்ப ஒழுங்கு கட்டுபாட்டு சட்டதிட்டங்கள் (Regulations) வேறுபடுகின்றன. ஆயினும் சிலி, கானா, போலந்து , நியுசிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, ஆகிய நாடுகளில் அவை பெற்ற வேறான வெற்றி, தோல்வி அனுபவங்களிலிருந்து பல உண்மைகளை தெரிந்து கொள்ள முடியும்.

போட்டியுடன் இயங்கும் தனிப்பட்ட தொலைபேசி நிறுவனங்களால் தமக்குள் ஒப்பந்தங்களை ஏற்படுத்த முடியாதிருக்கும். அப்போது ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கான சட்டதிட்டங்களை ஏற்படுத்தும் அதிகாரம் கொண்ட நிறுவனங்கள் சுதந்திரமாக செயற்பட்டு அவற்றினை ஒழுங்குகளுக்கு உட்பட்ட வகையில் செயற்பட வைக்க செய்ய முடியும். கௌத்தமாலாவில் நிறுவனங்களுக்கு இடையே சுமுகமாக விலை நிர்ணயத்தினை இவ்வாறன அதிகாரம் கொண்ட ஒரு நிறுவனம் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்-தக்கதாகும். அரச நிறுவனங்களையும் சட்டங்களுக்கு கீழ் கொண்டு வருவதுடன், புதிய தனியார் நிறுவனங்களுக்கு எதிரான நடவடிக்கை-களுக்கு எதிராக நீதிமன்றங்களுக்கு அவை சென்று நியாயம் கோரக் கூடியாதாகவும், ஒழுங்குபடுத்தும் சட்டதிட்டங்கள் நடைமுறையில் செயற்படவேண்டியது அத்தியாவசியமாகும்.

தொலைத்தொடர்பு வசதிகளும் வறியவர்களும்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பட்டிணங்கள், சிறிய நகரங்கள், கிராமபுறங்கள், என்பனவற்றில் தொலைத்தொடர்பு வசதிகள் குறைந்த அளவிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் உள்ள பெரும் நகரங்களில் காணப்படும் தொலைத்தொடர்பு வசதிகளுடன் ஒப்பிடுகையில் அவற்றில் இருபது (20%) வீதமான வசதிகளே சிறிய நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் காணப்படுகின்றன. ஆயினும் சில அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் முயற்சியாளர்கள் வறுமையான பகுதிகளுக்கும் போதிய சேவைகளை வழங்க முடியும் என்பதனை நிரூபித்-துள்ளார்கள். செனேல் நாட்டில் 1995 ஆம் ஆண்டில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தொலைபேசி, பெக்ஸ் வசதிகளுடனான தொலைத்தொடர்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இது 1991ஆம் ஆண்டில் காணப்-பட்டதனை விட நான்கு மடங்கு அதிகமாகும். வறுமையான கிராமப்பகுதி-களுக்கு இவ்வாறன சேவைகளை வழங்க அரசினது அணுசரனை அத்தியா-வசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய வறுமையான மக்கள் இத்தகைய சேவைகளுக்கு கட்டணங்கள் செலுத்த தயாராக இருப்பதனை அரசுகள் தூண்டுவிப்பதன் மூலம் அச்சமூகங்களுக்கு தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குவதற்கு நேரடியாக உதவி செய்ய முடியும். தென்னாபிரிக்காவில் பல்நோக்கு சமூக தகவல் மையங்கள் இவ்வாறாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளமையினை இதற்கு உதாரணமாகக் கூறலாம் . 1996ஆம் ஆண்டு அங்கே இத்தகைய சேவைகளை கிராமங்களுக்கு வழங்குவதற்காக, ஆரம்பத்தில் இரண்டு வருடங்களுக்கு ஏற்படும் செலவுகளை அரசே வழங்கியதோடு, களத்தில் உதவி புரிய தொழில் நுட்ப அலுவலர்களையும் வழங்கி உதவி செய்தது. 1997ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் போது அன்நிறுவனங்களில் 67 வீதமானவை ஒவ்வொன்றிலும் ஒரு தொலைபேசியினை கொண்டிருந்தன. 31 வீதமானவை கணினி வசதிகளையும் 8 வீதமானவை இணையம் (Internet) வசதிகளையும் கொண்டிருந்தன.

முன்னர் சம்பிரதாயமான அரச தனியுரிமை அமைப்பில் செயற்பட்டதனை விட சிறந்த முறையில் இப்போது தனியார் துறையினருடன் அரசு இணைந்து, குறைந்த வருமானம் கொண்ட பிரதேசங்களில் காணப்படும் சந்தைகளிலும் சேவைகளை வழங்க கூடியதாக செயற்பட முடிந்தமையினையும் காணக்கூடியதாக உள்ளது. முழுச்செலவினையும் ஆரம்பத்திலேயே செலுத்தி சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் செலவில் ஒருபகுதியினை மாத்திரம் செலுத்தி தொலைத்தொடர்பு சேவைகளை பெற்றுக்கொள்ள தயாராக உள்ளனர்.

வழக்கமான மானியம் வழங்கும் திட்டங்களை போலன்றி சந்தைகளுக்கு மானியங்களை வழங்கி ஊக்குவிக்கும் திட்ட பிரேரணைகள் கூடிய பலனளிக்கக் கூடியவை என்பதனை சிலி நாட்டில் கிராமிய தொலைபேசிகளுக்கு வழங்கிய மானியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. சிலி அரசாங்கம் அன்நாட்டின் தூரப்பகுதிகளுக்கும், சிறிய குடியிருப்புக்களுக்கும் தொலைபேசி சேவைகளை வழங்கும் திட்டங்களுக்கு(1994-1998) ஐந்தாண்டு காலத்திற்கு மானியங்களை வழங்கி ஊக்குவிக்கும் விசேட நிதி ஒதுக்கீட்டினை செய்திருந்தது. அத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தொகையில் 50 வீதமான 4.3 மில்லியன் டொலர்களை பயன்படுத்தி 1996ஆம் ஆண்டிலேயே அத்திட்டத்தில் 90 வீதமான நோக்கங்களை அடைந்து விட்டது. இதற்கு காரணம் திட்டப்பிரதேசங்களில் வாழ்ந்த 59 வீதமான மக்களை உள்ளடக்கிய 50 வீதமான திட்டப்பகுதிகளில் சேவைகளை வழங்க முன்வந்தவர்கள் மானியங்களை பெறாமலேயே சேவைகளை நிருமாணிப்பதில் ஈடுபட்டுவிட்டனர். இத்தகைய ஏற்பாட்டின் கீழ் சேவை வழங்குபவர்கள், பிரேரித்துள்ள திட்டங்கள் முழுமையடையும் பட்சத்தில், 97 வீதமான சிலி மக்கள் அடிப்படை தொலைபேசி வசதிகளை 1998 ஆம் ஆண்டளவில் பெற்று பயனடையக் கூடியவர்களாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலி நாட்டின் அனுபவங்களில் இருந்து தனியார் துறையினருடைய போட்டியான நடவடிக்கைகள் மூலம் கிராமிய தொலைத்தொடர்பு வசதிகளை பெருமளவுக்கு விரைவு படுத்த முடியும் என்பது தெரிய வருகிறது. சந்தை பொறிமுறையின் மூலம் அரசு குறைந்த செலவுடன் தான் எந்தெந்த திட்டங்களுக்கு எந்தெந்தளவு மானியங்களை வழங்க வேண்டும் என்பதனையும் தெரிந்து கொள்ள முடிந்தது. பரிசோதனைகளின்படி சந்தை பொறிமுறை காரணமாக சிறிய மானியங்கள் பெரும் தூண்டலை ஏற்படுத்த முடியும் என்பதனையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

அரசின் வரவு செலவு திட்டத்தில் 2 மில்லியன் டொலரே பொதுத்துறை நிதி ஒதுக்கீடாக இருந்த போது அதன் விளைவாக தனியார் துறையினரிடம் இருந்து 40 மில்லியன் டொலர் முதலீட்டினை பெற முடிந்தது. பொதுத்துறையினரினால் நேரடியாக கிராமிய பகுதிகளுக்கு தொலைபேசிகளை வழங்கிய போது ஏற்பட்ட செலவினங்களுடன் ஒப்பீடுகையில் இப்போது அதற்கான செலவினங்கள் 90 வீதமாக குறைவடைந்துள்ளது என்பது ஒரு பெரும் சாதனையாகும்.

தொலைபேசி சேவையினைப் பொறுத்து மாத்திரமன்றி பொது ஊடகங்கள் யாவற்றினையும் பொறுத்தும் கூட தனியுரிமை சக்தியின் முக்கியத்துவம் பற்றி அக்கறை கொள்ள வேண்டியுள்ளது. ஊடகங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று அவற்றின் இயல்புகள் காரணமாக வேறுபடுவதால் அவற்றினை ஒன்றுக்கு மற்றொன்று பிரதியீடு எனக் கருத முடியாது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான பயன்பாட்டாளரை சென்றடைகின்றது. சில நாடுகளில் அரசுகள் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களின் உரிமைகளிலும், வேறு சில பத்திரிகை நிறுவனங்களின் உரிமை பொறுத்தும், வேறு சில வானொலி நிலையங்கள் மீதான உரிமை பொறுத்தும் ஆர்வம் காட்டுகின்றன. அவ்வாறான ஊடகங்கள் மீது அரசின் உரிமைகள் கூடியளவில் காணப்படும் நாடுகளில் மக்கள் வெவ்வேறான கருத்து அபிப்பிராயங்களை பெற்றுக் கொள்ள முடியாது போகலாம். இதனால் அச்சமூகங்கள் துடிப்பு மிக்கனவாக இயங்க முடியாதனவாக போய்விடுகின்றன. அதேபோன்று இத்தகைய ஊடகங்கள் ஒருவரது கைகளில் முடங்கியதாக இருந்தாலும் குறிப்பாக அவர்கள் அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு அல்லது ஆதரவாளர்களாக இருப்பார்களேயானால் அரசின் ஊழல்கள் வெளிவராது போகலாம். அத்தகைய ஊடகங்கள் சில சமயங்களில் குறிப்பாக தேர்தல்களின் போது தமக்கு வேண்டிய வேட்பாளருக்கு சாதகமாக கருத்துக்களை திசை திருப்பும் பலத்தையும் கொண்டிருப்பது சனநாயகத்திற்கு பாதகமாக முடியும். எனவே தனியுரிமை என்பது பொருளாதார விளைவுகளை மாத்திரம் ஏற்படுத்துவனவாக கருத முடியாது. சரியான தகவல்களின் பாய்ச்சலை அவை தடைசெய்ய முடியும். அரசாங்கத்தின் முழுக்கட்டுப்பாட்டில் ஊடகங்கள் இயங்கும் போதும் இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்புக்கள் ஏற்படலாம். அரசாங்கங்கள் தாம் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்பதற்காக தகவல்கள் வெளியாவதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த முடியும்.

பல நாடுகளில் ஏனைய தொழில்களை விட ஊடகங்கள் மீதே அரசுக்கள் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. ஏனெனில் அரசாங்கங்கள் அவ்வாறன கட்டுப்பாடுகளை கொண்டிருப்பதற்கு காரணம் விலைகள் அல்லது கட்டணங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதன் மீதுள்ள ஆர்வத்தினை விட மேல் அதிகாரத்தை தக்க வைக்கும் நோக்கங்களை கொண்டிருப்பதே அதற்கு பிரதான காரணமெனலாம். அரசகட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களைத் தனியார் மயமாக்கத்திற்கு உட்படுத்தல் பொறுத்து அச்சப்படுவதற்குரிய இன்னுமோர் காரணமும் உண்டு. அது சேவைகள், தொழில்கள் பல்வகைப்படுவதனை தடைசெய்யலாம் என்ற அச்சமாகும். சேவைகளை வழங்க முன்வரும் தனியார் நிறுவனங்கள் கூடிய இலாபங்களை நோக்கமாகக் கொண்டு பெரிய சந்தைகளையே நாடிச்-சென்று, ஒத்த உற்பத்திகளை மாத்திரம் வழங்க விரும்பலாம் அதன் காரணமாக சிறப்புத்தன்மை மிக்க சேவைகள் வழங்குவது தவிர்க்கப்பட முடியும். இதனால் மக்களுக்கு கிடைக்கக் கூடிய சேவைகளில் பற்றாக்குறை ஏற்படலாம். இதன் காரணமாகவே ஆரம்பகாலங்களில் வானொலி, தொலைக்காட்சி என்பன பொதுத்துறை நிருவாகத்தின் கீழ் இயங்க வேண்டியதற்கான நியாயங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனால் இப்போதைய புதிய தகவல் தொடர்பாடல் தொழில்-நுட்பங்கள் அதிர்ஸ்டவசமாக இயல்பாகவே அவற்றின் சேவைகள் பல்வகைப்பட்டதாக இருப்பதற்கான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டுள்ளன. உதாரணமாக பாரம்பரியமாக ஒலிபரப்பு முறைகள் போலன்றி நவீன முறைகளால் செய்மதி தொலைக்காட்சி அல்லது வடத் (Cable) தொலைக்காட்சி சேவைகள் பல்வேறு நிலையங்களிலிருந்து சிக்கனமாக ஒலிபரப்பப்படமுடியும். உதாரணமாக தனியார் நிறுவனம் ஒன்று 3 செய்மதிகளை விண்வெளியில் இயங்கச் செய்து அதன் மூலம் ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, ஆசியா ஆகிய ஒவ்வொரு கண்டத்திற்கும் ஒவ்வொரு செய்மதியினை ஒளிபரப்புக்காக பயன்படுத்தியுள்ளது. இதனால் குறைந்த வருமானத்தையே கொண்ட நுகர்வாளருக்கும் உலக மட்டத்தில் தரமிக்க நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப முடிகிறது.

முடிவுரை

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு புதிய தகவல் தொடர்-பாடல் தொழில்நுட்பங்கள் மிகப் பெரியளவில் சேவையாற்றும் உள்ளார்ந்த ஆற்றல்களை கொண்டுள்ளன. பாரம்பரிய தொழில் நுட்பங்களால் பல தசாப்த முயற்சிகளின் பின்னரேயே சாதிக்கக்கூடிய வகையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடல் வசதிகளை இப்போது கம்பி தொடர்புகளின் அடிப்படையில் செயற்படாத நவீன தொழில்நுட்பங்கள் இலகுவாக வழங்கக் கூடிய-தாயுள்ளன.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகளும் கூட கனவிலும் கற்பனை செய்திராத அறிவு வளங்களை இப்போது உலகின் தூரப்பகுதிகளில் வாழும் சமூகத்தினரும் அணுகக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

தொடர்பாடல் துறையில் தற்போது பயன்பாட்டுக்கு வந்துள்ள நவீன கருவிகளின் உதவியுடன், இப்போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ள சம்பிரதாய தொடர்பாடல் வசதிகளையும் இணைத்து பின்வருவனவற்றை பயன்படுத்துவதன் மூலம் தொடர்பாடல் வசதிகளை வளப்படுத்த முடியும்.

அ. தனியார்மயமாக்கம்,

ஆ. சந்தையில் ஏற்படும் போட்டிகள்,

இ. ஒழுங்குகட்டுப்பாடுகள்,

ஈ. சட்டதிட்டங்கள்,

உ. தெரிந்தெடுக்கப்பட்ட சில பொதுத்துறை நடவடிக்கைகள்,

உலகளாவிய நவீன பொருளாதார அமைப்பில் விருத்தி பெற்று வரும் நாடுகள் போட்டியுடன் இயங்கவேண்டுமானால்

1. அந்நாடுகள் தகவலுக்கான உள்ளமைப்பு வசதிகளை திறமையாக பயன்படுத்துவதனையும்,
2. அவற்றினை அபிவிருத்தி செய்வதனையும்,

தமது முதன்மையான தேசீய குறிக்கோள்களாக கொண்டு செயற்பட வேண்டும். புதிய தொழில்நுட்பங்கள் வழங்குகின்ற வாய்ப்புக்களை அன்நாடுகள் பெற்றுக் கொள்வதுடன் அதன் மூலம் தனியார் துறை வழங்கும் தொலைத்தொடர்பு சேவைகளை விஸ்தரித்து, சமூகங்கள் யாவற்றிற்கும் அவற்றின் பயன்பாடு சென்றடைய வழிசமைத்தலின் மூலம் பெரும் நன்மை-களை ஏற்படுத்த முடியும்.

இவற்றை சிறந்த முறையில் செய்து முடிக்கும் பட்சத்தில் மேலே குறிப்பிட்ட உபாயங்கள் மூலம்,

1. கல்வி அமைப்பு முறைகள் உயர்வடைவதனையும்,
2. கொள்கைகள் உருவாக்கம், அவற்றினை நடைமுறைப்படுத்தல், என்பவற்றில் திறமை ஏற்படுவதனையும்
3. வர்த்தகத்திற்கான புதிய வாய்ப்புக்களை பாரிய அளவில் விருத்தியடையச் செய்யவும் முடியும்

என ஏனைய நாடுகளின் அனுபவங்கள் மூலம் அறிய முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புகள்

01. Bond, James, (1997) " *The Drivers of Information Revolution-Cost Computing Power and Convergence*" , In the Information revolution and the future of Telecommunications. Washington, D.C World Bank. p.18.

02. McIntyre, Peter, (1998) " *Puppeteers with Purpose*" Newyork, n y: unicef p.23.

03. Marnell, Robin, and Uta Wehn , (1988), *Knowledge Societies: Information Technology for sustainable development*, Newyork, N.Y. Oxford University press p.84.

04. Zijp, Wilem, (1994), I*mproving the Transfer and use of Agricultural Information*. A guide to Information Technology World Bank Discussion paper No.247 World Bank, Washington D.C.p.31

05. Smith Graig, (1977): *Stock Market Mania is sweeping China: Speculators Abound*" Wall street Journal, August 27 p.310

06. Ibid. p.281

07. Wellenius,Bjorn (1997), "*Extending Telecommunication Service to Rural Areas The Chilean Experience*" Viewpoint (February) Note No. 105 Internal newsletter, Industry and energy Department, world Bank, Washington. p.87

08. Ibid

09. Richard, Jean-francois, (1996),"*Connecting Developing Countries to the Information Technology Revolution*" SAIS Review 16 (Winter/ Spry) p.93-107

10. Schware et al, (1995), Information Technology and Natural trade Facilitation : Making the Most of Global Trade. World Bank Technical paper Nos:316 and 317. World Bank Washington. D.C p.38 and p.44

11. International Telecommunication Union database. (appeared in world Bank Development Report-1995 p.163)

12. Malaysia Country Management Unit of the world Bank, (1998), presented in Multimedia Development Corporation p.81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. Information support group and the Information for Development program at the World Bank.(Persented in World Bank Development Report 1995) p.163

14. Hope,Kerin, (1997), "*Albania has only 14 fixed wire telephones for every 100 inhabitants, Financial Times*, February 19. p.32

15. WorldSpace, (1998), "*World Space,: The Technology*", www.world space.com/text/technology.html.

பின்னிணைப்பு 1

42 பக்க ஆவணங்களை அனுப்பி வைக்க ஏற்படும் செலவும் நேரமும்.

நியூயோர்க்கில் இருந்து டோக்கியோவிற்கு	செலவு US$	நேரம்
விமான தாபலில்	7.40	5 நாட்கள்
கூரியர் சேவை	26.25	24 மணித்தியாலம்
பெக்ஸ்	28.83	31 நிமிடம்
இணையம், மின் அஞ்சல்	0.095	2 நிமிடம்
நியூயோர்க்கில் இருந்து லொஸ் ஏஞ்சல்ஸ்சுக்கு		
விமான தாபலில்	3.00	2.3 நாட்கள்
கூரியர் சேவை	15.50	24 மணித்தியாலம்
பெக்ஸ்	9.86	31 நிமிடம்
இணையம், மின் அஞ்சல்	0.095	2 நிமிடம்

மூலம் : North River Venture, 1995, Quoted in **world com 1996 Annual Report**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 2

உலக நாடுகள் – தொலைபேசி, இணையம் பயன்பாடு–1997
(தொகையும் 100 பேருக்கான இணைப்புக்களும்)

நாடுகள்	தொலைபேசி		இணையம்	
	மொத்தம் (மில்லியன்)	100 பேருக்கு	மொத்தம் (Host*10^3)	100 பேருக்கு
ஐக்கிய அமெரிக்கா	177	64.4	10,112	3.81
ஐக்கிய இராச்சியம்	30	50.4	591	1.00
சுவீடன்	06	67.6	233	2.61
இத்தாலி	25	44.0	150	0.26
பிரான்ஸ்	33	56.3	245	0.42
சுவிற்சலாந்து	05	65.4	129	1.86
அவுஸ்திரேலியா	06	51.9	514	2.81
சிங்கப்பூர்	0.5	51.3	29	1.00
இந்தியா	15.0	1.5	3.1	0.0
பிலிப்பைன்ஸ்	1..7	2.6	3.6	0.005
மலேசியா	3.7	18.3	4.2	0.020
ரூசியா	26.0	17.8	69.2	0.047
தாய்லாந்து	4.0	7.0	9.2	0.015
பிறேசில்	13.0	8.2	77.1	0.047
சீனா	55.0	4.5	20.0	0.002

மூலம்: International Telecommunication Union,
ITU. Challenges to the networks, Telecom and the Internets, 1997,
Geneva A- 17.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 3

உலகம் – தொலைபேசி இணையம் எண்ணிக்கை 1987–96

வருடம்	தொலைபேசி எண்ணிக்கை (மில்லியன்)	இணையம் தொடர்புகள் (மில்லியன்)
1987	*447*	*0.03*
1988	*469*	*0.08*
1989	*493*	*0.16*
1990	*519*	*0.38*
1991	*545*	*0.73*
1992	*573*	*1.3*
1993	*607*	*2.2*
1994	*647*	*4.9*
1995	*693*	*9.5*
1996	*741*	*16.1*

மூலம் : ITU, World Telecommunication Indicators Data base, Network wizards, (www.nw.com)

உலகம் – தொலைபேசி, இணையம் தொடர்புகள் 1996–1997

நாடுகள்	இணையம் (%)	தொலைபேசிகள் (%)
வடஅமெரிக்கா	*66.5*	*26.3*
ஐரோப்பா	*21.9*	*37.8*
இலத்தீன் அமெரிக்கா	*1.0*	*6.2*
ஆசியா	*6.3*	*26.3*
பசுபிக்	*3.7*	*1.6*
ஆபிரிக்கா	*0.6*	*1.8*
மொத்தம்	*100.0*	*100.0*

மூலம் : ITU, World Telecommunication Indicators Data base, Network wizards, RIPE (www.ripe.net)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka - Production of black tea in '000 metric tons

Elevation	1995	1996	1997	1998	1999
Low Grown Production	121.84	138.15	136.00	150.31	148.93
Private Sector Production	140.00	147.80	149.30	165.90	164.03
All Island Production	245.96	258.42	276.85	280.06	283.76
% of private sector production	56.9	57.2	53.9	59.2	57.8
% of low grown production	49.53	53.45	49.12	53.67	52.48
Southern Province (SP) Production	74.59	76.41	79.59	80.10	78.87
% of SP Prod/total low gr. Production	61.22	55.31	58.52	53.29	52.95

Source : Extracted from Tea Board and Forbes & Walker Monthly Bulletins

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் பிறமொழி நாவல்கள்

மராட்டிய நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

செ. யோகராசா

முன்னுரை

ஏறத்தாழ 125 ஆண்டுகள் கொண்ட தமிழ் நாவல் வரலாற்றில் அதன் ஆரம்பகாலந் தொடக்கம் இன்று வரை பிறமொழிகளிலிருந்து தமிழிற்கான நாவல் மொழிபெயர்ப்பு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. ஆயினும், இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் பற்றிய முழுமையான ஆய்வுகள் பெருமளவு நடைபெறவில்லை. தமிழ் ஆய்வுலகின் இத்தகைய ஆரோக்கிய-மற்ற சூழ்நிலையில் மராட்டிய நாவல் மொழி பெயர்ப்பு முயற்சிகள் தமிழ் நாவல் வளர்ச்சியில் ஏற்படுத்திய பாதிப்புக் குறித்து ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகின்றது. இவ்விதத்தில் இது முதன் முயற்சியாகின்றது.

மராட்டிய மொழிபெயர்ப்புக்கள் பெற்ற செல்வாக்கு

மராட்டிய மொழி இந்திய மாநிலமாக மகாராஷ்டிரத்திலே பேசப்படு-கின்ற மொழியாகும். சென்ற நூற்றாண்டின் மூன்றாம் நான்காம் தசாப்-தங்களில் ஏனைய இந்திய மொழிகளான வங்காளம், இந்தி என்பவற்றி-லிருந்து பெருமளவு நாவல்கள் தமிழிற்கு மொழிபெயர்க்கப்பட்டது போலவே மராட்டிய மொழியிலிருந்தும் அவை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அன்றைய காலப்பகுதியில் இந்திய மொழிகளில் வங்கமொழிக்கு அடுத்ததாக பரந்த வாசகர் வட்டத்தை தமிழ் நாவலுலகில் உருவாக்கியவை மராட்டிய மொழி நாவல்கள் என்றே கூற வேண்டும். பின்வரும் கூற்று இதற்குச் சான்று பகர்கின்றது:[1]

"பொதுவாக இளைஞர்களையும் 'ஆசா' இது நாஸீ என்பவர் எழுதிய மராட்டிய நாவல்; (ஆ-ர்) கவர்ந்துவிட்டாள்..... எடைக்குப் பிரதிகள் வந்ததுமே செலவாகிவிடுகின்றன என்று அறியும் போது தமிழர்கள் ஆசாவிற்கு எத்தனை குதூகல வரவேற்பு அளித்துள்ளனர் என்பது தெளிவாகின்றது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்தவாறு வாசகர்களை மட்டுமன்றி, தமிழக, ஈழ எழுத்தாளர்கள் பலரையும் மராட்டிய நாவல்கள் ஆகர்ஷித்திருந்தன.

மொழிபெயர்ப்பிற்கான தேவை

மேற்கூறிய விடயங்கள் பற்றி ஆராய்வதற்கு முன் இம் மராட்டிய நாவல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படுவதற்கான அவசியம் எதுவென்பதை முதலிற் கவனிக்க வேண்டும். அன்றைய காலச் சூழலில் இடம் பெற்ற இந்திய விடுதலைக்கான போராட்டங்களும் சுதேச உணர்ச்சி பரவியமையும் காந்தீயச் செல்வாக்கும் இந்திய மக்களுக்கிடையிலான சில பொதுவான பண்பாட்டு ஒருமைப்பாடும் எவ்வாறு பிற இந்திய மொழி நாவல்கள் மொழிபெயர்க்கப்படக் காரணங்களாயமைந்தனவோ அவ்வாறே மராட்டிய நாவல்கள் மொழிபெயர்க்கப்படவும் காரணங்களாய் அமைந்திருந்தன.

மேலும், ஏற்கனவே வங்க, இந்தி, மொழிபெயர்ப்பு நாவல்களை வெளியிட்டு வந்த நவயுகப் பிரசுராலயம், அல்யன்ஸ் கம்பெனி, கலைமகள் புத்தகாலயம் முதலியன இம்மராட்டிய மொழிபெயர்ப்புகளை வெளியிடு-வதிலும் ஆர்வம் காட்டின. அம்மொழிபெயர்ப்பு முயற்சிகள் வருமானம் தரத்தக்கவொரு தொழிலாகவும் அமைந்திருந்தன. "என்வாழ்வுக்கு வழிதேட வேண்டிய நிலையில் இந்தக் கையெழுத்துப் பிரதிகளைக் கையிலே வைத்திருந்தேன்"[2] என்று பிரபல மராட்டிய மொழிபெயர்ப்பாளரான கா.ஸ்ரீ.ஸ்ரீ. ஒரு தடவை கூறியமை இங்கு நினைவு கூரத்தக்கது.

மொழிபெயர்ப்பிற்குள்ளான நாவலாசிரியர்கள்

மராட்டிய மொழியின் பிரபல எழுத்தாளர்களாக காண்டேகர், நா.ஸீ. பட்கே, க. தி. மத்கூல்கர், கங்காதரகட்கில், அரவிந்த கோகலே, குல்கர்னி, மதுமங்கேஷ், கார்நிக், எஸ்.என். பெற்சே, சரத், சந்திர முக்தி போத், ஜயவந்த்தெலவி முதலிய பலரைக் குறிப்பிடலாம்.[3] எனினும், இவர்களுள் காண்டேகரின் வல நாவல்களும் பட்கே, மத்கூல்கர் முதலியோரின் இரண்டொரு நாவல்களுமே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. காண்-டேகரின் நாவல்கள் கா.ஸ்ரீ.ஸ்ரீ.யாலும் பட்கேயின் நாவல்கள் புனதாம்-பேகரினாலும், மத்கூல்கரின் நாவல்கள் ஹேமா ஆனந்த தீர்த்தனாலும் தமிழிற்கு வந்தன.

காண்டேகரது நாவல்களின் செல்வாக்கு

பட்கேயின் நாவல்களுள் "ஆசா" "12ம் நம்பர்பஸ்" முதலியனவும் மத்கூல்-கரின் நாவல்களுள் "பாழடைந்தகேரியல்" என்பதுவும் தவிர தமிழிலுள்ள ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மராட்டிய நாவல்களெல்லாம் காண்டேகரின் நாவல்களே ஆகும். இவற்றுள், கருகியமொட்டு, சுகம் எங்கே?, இரு துருவம், எரிநட்சத்திரம், புயலும் படகும், வெறும் கோயில், கிரௌஞ்சவதம், வெண்முகில், கூட்டுக்கு வெளியே, மனோரஞ்சிதம், யயாதி, அமுதக்கொடி என்பன குறிப்பிடத்தக்கன. இந்த நாவல்கள் அனைத்தும் கா.ஸ்ரீ.ஸ்ரீ.யால் மொழிபெயர்க்கப்பட்டு, கலைமகளில் தொடர்கதையாக அல்லது கலைமகள் வெளியீடுகளாக வந்தவையே. எனவே, மராட்டிய நாவல் மொழிபெயர்ப்புக்கள் பற்றிச் சுருங்கக் கூறுவதாயின் " காண்டேகர் - கா. ஸ்ரீ. ஸ்ரீ. கலைமகள்" எனக் கூறுவது தவறன்று.

தமிழிலே வெளிவந்த மராட்டிய நாவல்களுள் பெரும்பாலானவை மேற்கூறியது போல் காண்டேகரது நாவல்களாக அமைந்தமையாலும், பல்வேறு காரணங்களால் வாசகர்களையும் நாவலாசிரியர்களையும் அவை ஈர்த்துக் கொண்டமையாலும், தமிழில் மராட்டிய நாவல்களின் தாக்கம் பற்றிய இவ்ஆய்வு காண்டேகரது நாவல்கள் ஏற்படுத்திய தாக்கம் பற்றிய ஆய்வாகவே அமைகின்றது.

ஆய்வில் இறங்குவதற்கு முன் மற்றொரு விடயம் பற்றிக் கூறவேண்டும். தமிழ் நாட்டு வாசகர் மத்தியில் அன்று காண்டேகருக்கு ஏற்பட்ட செல்வாக்கு அண்மைக்காலம் வரை குறையவில்லை என்பதே அதுவாகும். பின்வரும் கூற்று இதனை உறுதிப்படுத்துகின்றது:-[4]

> *(தமிழ் நாட்டிலே) "காங்கிரஸ் ஆட்சி வீழ்ந்து தி.மு.க. அமைச்சு ஏற்பட்ட புதிதில் .... மராட்டிய எழுத்தாளர் சிலர் சென்னைக்கு வந்திருந்தனர். என்னைச் சந்தித்தனர். மகாஜனசபாவில் சென்னை எழுத்தாளருடன் கலந்து பேசினர். அந்தக் கூட்டத்தில்* ***நம் இளைஞர்கள் பலர் காண்டேகரின் பொன் மொழிகளைச் சரமாரியாகப் பொழிந்ததைக் கேட்ட அவர்கள் அதிர்ந்துபோயினர்......"*** (தடித்த எழுத்து ஆய்வாளரால் இடப்பட்டது)

மேற்கூறியவாறு தமிழ்நாட்டு வாசகர் மத்தியிலே காண்டேகரது நாவல்கட்கிருந்த செல்வாக்குக்கிணையாக, தமிழ் நாவலாசிரியர் மத்தியிலும் அவரது நாவல்கட்குப் பெருவரவேற்பும் செல்வாக்கும் இருந்தமையையும் குறிப்பிட வேண்டும். தமிழ் நாட்டு எழுத்தாளருள் கு.ப.ரா., புதுமைப்பித்தன், வ.ரா., க.நா.சு. தொடக்கம் அண்ணாதுரை, கி.வா.ஜ., தி.ஜ.ர., மு.வ., ந.பா., மணியன், குமாரி பிரேமலதா திலகவதி வரை, ஈழத்திலே வரதர், நா. பாலேஸ்வரி, இ. கமலநாதன் தொடக்கம் இளங்கீரன், கணேசலிங்கன் வரை பலரும் காண்டேகரது படைப்புக்களால் ஆகர்ஷிக்கப்பட்டிருந்தனர். இவ்வெழுத்தாளர் பல்வேறு தரத்தினர் என்பதும் வெவ்வேறு காரணங்களினால் காண்டேகரது நாவல்களில் ஈடுபாடு கொண்டடிருந்தனரென்பதும் தெளிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இம்மராட்டிய நாவல்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்ட மூன்றாம், நான்காம், ஐந்தாம் தசாப்தங்களில் தமிழ் நாட்டிலே நிலவிய நாவல் இலக்கியச் சூழல் பற்றியும் இச்சந்தர்ப்பத்திலே ஓரளவு குறிப்பிடுவது அவசியமாகும்.

நாவல் இலக்கியச் சூழல்

ஒரு புறத்தில், இக் காலகட்டத்திலேயே பரபரப்பு நாவல்கள் எனப்படுபவை மொழிபெயர்ப்பாகவும், தழுவல்களாகவும் பெருமளவிலே உற்பத்தியாகிக் கொண்டிருந்தன; புதிய எழுத்தாளர்களோவெனில், "காதலர்கள், கள்ளக் காதலர்கள், ஸ்திரிசோரங்கள், கொலைகள், களவுகள், துப்புத் துலக்கங்கள், தூக்கு மேழைகள், சித்திரவதைகள், சிருங்காரப் பயங்கரங்கள் பற்றி எழுதி வந்தனர்;[5]" வங்க மொழியில் இருந்து பங்கிம்சந்திரர், சரச் சந்திரர், தாகூர் முதலியோரது நாவல்களும், இந்தி மொழியில் இருந்து பிரேம் சந்தர் முதலியோரது நாவல்களும் மொழிபெயர்க்கப்பட்டு வந்தன. கல்கி, மு. வ., அகிலன், லக்ஸ்மி, நா. பார்த்தசாரதி, தி. ஜானகிராமன் முதலியோர் நாவலுலகில் நுழைய இன்னும் சில ஆண்டுகள் இருக்கின்றன.

சுருங்கக் கூறின், மேற்கூறியவற்றுள் பெரும்பாலானவையாகிய பரபரப்பு நாவல்கள் விறுவிறுப்பம் மர்மமும் சுவாரஸ்யமும் கொண்ட நாவல்களாகவும், வங்க நாவல்கள் மிகை உணர்ச்சிப் பாங்கும், சுவையான கதை கூறல் பண்பும் கொண்ட நாவல்களாகவும் விளங்கின. இத்தகைய சூழ்நிலையிலேயே மராட்டிய நாவல்கள் தமிழில் வரத்தொடங்குகின்றன.

மேற்குறித்த சூழ்நிலையிலே வரத்தொடங்கியவை பின்னர் வரவிருக்கும் நாவலாசிரியர்களுட் சிலரை உருவாக்குவதில் அல்லது அவர்கட்கு வழிகாட்டியாக அமைவதில் ஓரளவு பங்கு கொண்டிருந்தமை இயல்பானதாம். இவ்வாறே, வாசகரது ரசனைப் பாங்கிலும் பாதிப்பை நிகழ்த்துவதும் இயல்பானதாம். நடந்ததும் இதுவே.

காண்டேகரின் நாவல்களும் தமிழ்வாசகர்களும்

இனி இம் மராட்டிய நாவல்கள் தமிழ் வாசகர்களை அதிகம் கவர்ந்தமைக்கான காரணங்கள் பற்றிக் கவனிப்பதும் அவசியமாகின்றது. குறிப்பாக, காண்டேகரின் நாவல்கள் பொதுவாக உயர் மத்திய தரவர்க்கத்தினரான பேராசிரியர்கள், டாக்டர்கள், வழக்கறிஞர்கள், வசதியுள்ள கலைஞர்கள், திடீர்ப்பணக்காரர்களாகும் சராசரி மனிதர்கள் முதலியோரை பாத்திரங்களாகக் கொண்டமைந்தவை. எனவே இவ்வாறான நிலையிலுள்ள மத்தியதர வர்க்க வாசகர்களை ஈர்ப்பது இலகுவானதாகும். ஆயினும், இக் காரணத்தால் மட்டுமே அவை வாசகர்களை கவர்ந்து கொண்டன என்பதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானமாக இன்று நோக்கும்போது முக்கியமாக இந்நாவல்கள் இதன் வாசகர்கட்கு இலக்கிய பூர்வமான ஒருவகைத் தத்துவ ஒத்தடம் அளித்துள்ளமையை உணர முடிகின்றது. அடிப்படையில் இதுவே மத்திய தர வர்க்கத்தின் பல்தரப்பட்ட வாசகர்களையும் ஈர்க்கும் சக்தியாகியது. அதாவது ஒருவருக்கு துன்பம் வரும் சந்தர்ப்பங்களில், "மலைபோல் வரும் துன்பம் எல்லாம் பனிபோல் நீங்கிவிடும்" என்று ஆறுதல் தரும் அல்லது "துயரத்துக்கு நல்ல சிறந்த மருந்து ஏதாவது ஒரு கலையில் மனத்தை செலுத்துவதுதான்" என்று கூறி வழிகாட்டும்; காதலிலே தோல்வியுறும்போது "ஒரு கணமே காதலின்பம் அடைந்தது போதும் - இனி ஓயாது மரண மழை பெறினும் அதற்கு அஞ்சோம்" என்று தேறுதல் கூறும். இவ்வாறாகத்தானே சாதாரண மக்களது வழ்வின் சோகங்களை, ஏமாற்றங்களை, அங்கலாய்ப்புக்களை, உன்னதங்களையெல்லாம் அவ்வக்கணமே உணர்ந்து கொண்டு ஏற்றவாறு கொடுக்கும் ஒத்தடங்களும் கசப்பற்ற மருந்துகளும் விசிறி வீசுதலும் குறிப்பாகக் காண்டேகரது நாவல்களது தனித்துவம் ஆயிற்று. கோடி கோடி ஆசைகள் கொண்ட சாதாரண மக்களுக்கு அவர்களது அபிலாஷைகளுக்கேற்ற விதத்திலேயே (ஏற்கனவே கூறியதுபோல்) பாத்திரங்களும் அமையலாயிற்று. எனவே வாசகர்கட்கு இப்பாத்திரங்கள் மெத்தப்பிடித்தவர்களாகிவிட்டனர்; இலட்சிய புருஷர்களாகி விட்டனர்.

காண்டேகர் கையாண்ட உத்திகளும் இவற்றை அனுசரித்தே செயற்பட்டமை கவனிக்கத்தக்கது. எடுத்துக்காட்டாக காண்டேகர் பாத்திரங்களை வைத்து கதை எழுதுகின்ற போது அப்பாத்திரங்களுள் ஒன்று அவரை நேரிலேயே கதையிலே தான் - தேடி வருவதை குறிப்பிடலாம்.

இத்தகைய உத்திகளினால் இலக்கியத்துக்கும் வாழ்க்கைக்குமிடையிலே, நாவலுக்கும் நாவலாசிரியனுக்குமிடையிலே, நாவலாசிரியனுக்கும் வாசகனுக்கு மிடையிலே நெருங்கிய பிணைப்பொன்று தோற்றுவிக்கப்படுகின்றமையை அவதானிக்கலாம்.

மேலும் காண்டேகரின் நாவல்களினூடாக வாசகர் புதுவித ரசனையைப் பெற்று கொள்வராயினர். முற்கூறியது போன்று சமகாலத்திலே வெளிவந்த பரபரப்பு நாவல்கள் வாசகர்கட்கு பொழுதுபோக்கு தன்மையுடையனவாக அமைய வங்கநாவல்கள் சுவையான கதைப்போக்கோடு மிகையுணர்ச்சிபாங்கில் மத்தியதர வர்க்க மக்களின் வாழ்க்கை போக்குகள் கோடிட்டமையை இவை இலட்சிய வேட்கை ஏற்படுத்துவனவாக அமைந்தன எனலாம்.

ஆக, மேற்கூறிய காரணங்களால் காண்டேகரது நாவல்களால் தமிழ் வாசகர் ஈர்க்கப்பட்டமை வியப்புக்குரியதன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டேகரின் நாவல்களும் தமிழ் நாவல்களும்

தமிழ் நாவல் வளர்ச்சிப் போக்கிலே காண்டேகர் நாவல்கள் ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க பாதிப்புக்களையும் எடுத்துக்காட்ட வேண்டும். இவ்விதத்திலே காண்டேகரது நாவல்களால் முக்கியமாகக் "கருகிய மொட்டு" சிறப்பான கவனிப்புக்குரியது. அது ஏற்படுத்திய பாதிப்பு முக்கிய-மானது. குறிப்பாக, சில முக்கியமான விடயங்களிலே முற்போக்கான கருத்துக்களை தமிழ் நாவல் உலகிலே முதல்முதலாக முன்வைக்கிறது. இது அன்றைய பின்னணியில் விதந்துரைக்கப்பட வேண்டியது; இதற்கு அனு-சரணையாக பின்வரும் கூற்றினை அவதானிப்போம்.[6]

> *"கருகியமொட்டுக் கையெழுத்துப் பிரதியை படித்த நாராயணசாமி ஐயரவர்கள் அதைக் கலைமகளில் தொடர்பதையாக வெளியிட விரும்பினார்.* ***கலைமகளின் சுரத்தை அது பாதிக்கும் என்றும் கடுமையான விவாதத்திற்கும் இடமளிக்கும் என்றும்*** *கி.வா.ஜ. கருதவே அதுவும் சுகம் எங்கேயும் புத்தகமாக வெளிவந்தன"* (தடித்த எழுத்து ஆய்வாளரால் இடப்பட்டது)

இந்த "கடுமையான விவாதத்துக்கு இடமளிக்கும்" விடயந்தான் என்ன? கு.ப.ரா.வின் வார்த்தைகளிலே கூறினால்[7] "மிகவும் முக்கியமான பிரச்சனையாகிய தாம்பத்திய வேற்றுமையைக் கொஞ்சம் அபத்தமாக ஆராய்ச்சி செய்கிறது" என்பதுதான். ஆயினும் தமிழ் நாவல் வளர்ச்சிப் போக்கின் அன்றுள்ள இலக்கிய சூழலில் இவ்விடயம் அதாவது ஆண் பெண் உறவு என்பது நாவலின் உள்ளடக்கமாக அமைய தகுதியுள்ள இழிவான அற்பமான விடயமாகவே கருதப்பட்டது; கலைமகளின் சுரத்தை அது பாதிக்கும்" என்பதன் தாற்பாரியம் இதுவே.

"கலைமகளின் தரத்தைப் பாதிக்காத விதத்திலே" கலைமகள் வெளியீடாக வந்துவிட்ட கருகியமொட்டு அக்கால வாசகர்களிடையே மட்டுமன்றி நாவலாசிரியர்களிடத்திலும் பரபரப்பை ஏற்படுத்தியது. "கோதைத்தீவு" எழுதிய "வ.ரா."வும், "பொன்னகரம்" எழுதிய புதுமைப்-பித்தனும் இந்நாவலை வரவேற்றினர். ஆண் பெண் உறவு பற்றி உளவியல் அடிப்படையில் ஆழமாக எழுதிவந்த கு.ப.ரா. "இந்தப் பிரச்சனையைக் காண்டேகர் கையாண்டிருப்பதே போற்ற வேண்டிய விஷயம்" என்று மதிப்பிட்டிருந்தார்.[8] கருகிய மொட்டின் இரண்டொரு கருத்துக்களை ஒரு விதத்திலே கேலி செய்வது போல் "கருகாத மொட்டு" என்ற சிறுகதை-யொன்றினை க.நா.சு. பின்னர் எழுதினார்.

எவ்வாறாயினும், தமிழ் நாவலில் உலகில் "போசாப் பொருளாக"-விருந்த ஆண் பெண் உறவு அல்லது பாலியல் சார்ந்த பிரச்சனைகள்[9] பின்னர் நாவல் பொருளானதில் கருகிய மொட்டு முதலான நாவல்களூடாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டேகருக்கு முக்கிய இடமுள்ளது. இவ்விதத்தில் சிதம்பர ரகுநாதனின் "முதலிரவு" எஸ்.பொ.வின் "தீ", "சடங்கு" ஆகியன மேற்கூறிய தடத்தின் வழியாக உருவான வெவ்வேறு காலகட்டங்களில் உருவான படைப்புகளே. மறுபுறம் (கலைமகள் வாசகரான) அகிலன், (எ-டு: சித்திரப்பாவை), மு. வ. முதலானோரும் இன்னொரு புறம் (கு.ப.ராவின் வாரிசான) தி. ஜானகிராமனும் இத்தகைய விடயங்கள் பற்றி பேசமுற்பட்டமைக்கும் காண்டேகரது நாவல்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ தடமமைத்துள்ளன. (இங்கு குறிப்பிட்ட நாவலாசிரியர்கள் வெவ்வேறு நிலையினர் என்பதனை மறப்பதற்கில்லை.)

மேற்கூறியவாறான உள்ளடக்கம் "புரட்சிகரமான" தொன்றாக கருதப்படுகின்ற நிலை தமிழ் நாவலுலகிலே காணப்படுகின்றது. இவ்விதத்தில், மு.வ. நாவல்களை காண்டேகரது நாவல்களுடன் ஒப்பீட்டு ஆய்வு செய்த ஆய்வாளரொருவர் தெரிவிக்கும் கருத்து கவனத்திற்குரியது. அது பின்வருமாறு :[10]

> *"புரட்சிக் கருத்துக்களைக் கொண்டு மு.வ. வும் காண்டேகரது முறையில் நாவல்கள் படைப்பது தமிழில் வளர்ந்துவரும் புதிய மரபாகும். காண்டேகரது நூல்கள் தமிழுக்கும் முதன் முறையாக இம்முறையைக் கொணர்ந்தனவோ என்ற ஐயப்பாடும் தோன்றுகிறது......."*

மேலே ஆய்வாளர் தெரிவித்துள்ள கருத்து விவாதத்திற்குரியதொன்று. ஏனெனில், தமிழ் நாவலுலகில் புரட்சிகரமான கருத்துகள் ஏலவே இடம்பெற்றுள்ளன. (எ-டு:- மாதவையா எழுதிய முத்துமீனாட்சி என்ற நாவல்) ஆயின், மு.வ.வின் நாவல்களில் அத்தகைய பண்பு அமைவதற்கு காண்டேகர் வழிகாட்டியிருக்கலாம்; மு.வ.வின் நாவல்களூடாக அவை பரந்துபட்ட வாசகரை எட்டுவதற்கும் வாய்ப்பேற்பட்டிருக்கலாம் என்பதனை மறுப்பதற்கில்லை.

இன்னொரு விதத்திலும் தமிழ் நாவல் வளர்ச்சிப் போக்கிலே மராட்டிய நாவல்கள் பாதிப்பை ஏற்படுத்தின. அதாவது பரபரப்பு நாவல்கள் எனப்படுபவை பொழுது போக்கு நாவல்கள் அல்லது ஜனரஞ்சக நாவல்கள் என்பனவற்றை அறிமுகப்படுத்தியது போல, வங்காள நாவல்கள் எனப்படுபவை "மிகையுணர்ச்சி நாவல்கள்", "அற்புத வரலாற்று நாவல்கள்", "குடும்ப நாவல்கள்" என்பவற்றை அறிமுகப்படுத்தியது போல - இம் மராட்டிய நாவல்கள் "இலட்சிய நாவல்கள்" என்றொரு வகையினை தோற்றுவித்தன எனலாம். இத்தகைய இலட்சிய நாவலாசிரியர் வரிசையில் "மு.வ." முதன்மையானவர். அகிலன், நா.பா. ஆகியோர் அடுத்த நிலையில் இடம்பெறுபவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டேகரது நாவல்களின் கவர்ச்சிகர இயல்புகளுள் இன்னொன்று. காதல் பற்றிய அவரது கண்ணோட்டமாகும். பாத்திரங்கள் வாயிலாக அவர் கூறுவார்:[11] "நாம் முதற் காதலென்று கருதும் பொருள் உண்மையான காதலின்றும் வேறுபட்டது சௌந்தர்யமே முதற் காதலின் உயிர் ஆனால் வாழ்க்கையை மலர்விக்கும் சாந்தமான காதல் வெறும் எழிலினால் உதித்துவிடுவதில்லை. அந்த எழிலுடன் ஆற்றலும் நேர்மையும் கலக்க வேண்டும். இந்த முக்கூடல் ஒரே கணத்திலோ ஒரு நாழிகைப் பொழுதிலோ, ஒரு வருஷத்திலோ நேர்ந்துவிடாது. கருமையான வாழ்க்கை வழியில் பல்லாண்டுகளாக ஒருவர் கையை மற்றவர் கோர்த்துக்கொண்டே பிரயாணம் செய்து, தம் இன்முறுவலினால் ஒருவருக்கொருவர் தைரியமூட்டும் இயல்புடைய காதலர்களின் கண்களில்தான் இந்த முக்கூடலைக் காணமுடியும்". இக்கருத்துக்களை அடிநாதமாகக் கொண்டே காண்டேகரது பாத்திரங்கள் இயங்கின. மேற்கூறிய கருத்துக்களை அரைகுறையாக ஜீரணித்துக் கொண்டு காதல் நவீனங்கள் பலவற்றைப் படைத்த தமிழ் நாவலாசிரியர்களுள் இருவர் குறிப்பிடத்தக்கவர். ஒருவர்: அகிலன், மற்றவர்" "நா. பா" - சிறப்பாக காதல்தான் அவருடைய விஷயம்"[12] என்று காண்டேகர் பற்றி எழுதினார் விமர்சகர் ஒருவர். அகிலனும் இவ்வாறே, "காதல் இந்த நாட்டின் வேற்றுமைக்கு அருமருந்து; அன்புப் போர் புரிவதற்குக் கூர்மையான மலர்க்கணை அது"[13] என்று கூறுகின்றார்.

காதல் என்பது அகிலனது நாவல்களிலே மிகையுணர்ச்சிப்பாங்காக அமைந்துவிடுகிறது "நா.பா" வின் நாவல்களிலோவெனில் அது மேலும் தன்னை மலினப்படுத்திக் கொள்கிறது. இவரது நாவல்களில் பல இடங்களிலும் சிவந்த தாமரைப் பூப்பந்தங்கள் நளினமாக வளை ஒலிக்கும் கரங்கள், கவியின் தன்மை, நாட்டியக்காரியின் இங்கிதம், பதங்களின் பக்குவம்"[14] என்பனவே வெளிப்பட்டன. கதாநாயகனோ அல்லது கதாநாயகியோ கவிதைகள் மூலம் தம் காதல் வெளிப்படுத்திக் கொள்வர். காண்டேகரின் நாவல்களிலும் இடையிடையே கவிதைகள் வருவது வழக்கமாகும்.

தமிழ் நாவல் வரலாற்றில் தி.மு.க. எழுத்தாளர்களுக்கு சிலவிதங்களில் முக்கிய இடமுள்ளது. உயர்வர்க்கத்தினரின் சுரண்டல்களை அம்பலப்படுத்தியது தொடக்கம் ஏழைகளது அவல வாழ்வைச் சித்தரித்தமை வரையான உள்ளடக்கம் காரணமாக தமிழ் நாவல் வரலாற்றில் முக்கிய இடம் பிடித்தவர்கள் அவர்கள். வெளிப்பாட்டு ரீதியில் அடுக்குமொழி வசனங்களும் கதைகளும் உவமை உருவகங்களும் உருவகக் கதைகளும் அவர்களது படைப்புகளில் சிறப்பிடம் பெற்றிருந்தன. இத்தியாதி இயல்புகளால் அக்கால கட்ட வாசகர்கள் பெருமளவு கவரப்பட்டுள்ளனர். சுருங்கக் கூறின் தி.மு.க. எழுத்தாளர்களது படைப்புகளில் இத்தகைய பண்புகள் இடம்பெற்றதில் காண்டேகருக்கும் முக்கிய பங்குண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய உள்ளடக்கம் காரணமாக ஆரம்பநிலையில் மார்க்சிய எழுத்தாளர்களும் காண்டேகரது படைப்புகளால் (அத்துடன் தி.மு.க. எழுத்தாளர்களது படைப்புகளாலும்) ஆகர்ஷிக்கப்பட்டிருந்தனர். இவ்விதத்தில் ஈழத்து எழுத்தாளர்களுள் இளங்கீரனும் செ. கணேசலிங்கனும்[15] கவனத்திற்குரியவர்களாகின்றனர். இவர்களுக்கு முற்பட்டோருள் வரதர் குறிப்பிடத்தக்கவர். இவர் மறுமலர்ச்சி இதழிலே எழுதிய "வென்று விட்டாயடி ரத்னா" என்ற தொடருட்பட, "கயமைமயக்கம்" முதலான (கற்பு பற்றிப் பேசுகின்ற) சிறுகதைகளிலே காண்டேகரின் செல்வாக்குள்ளது. தானுட்பட மட்டக்களப்பின் ஆரம்பகால எழுத்தாளர்பலர் காண்டேகரின் எழுத்துக்களால் கவரப்பட்டதாக இ. கமலநாதன் குறிப்பிட்டுள்ளார்.[16]

உள்ளடக்கம் தவிர காண்டேகரது நாவல்களில் இடம்பெறும் பல்வேறு உத்திமுறைகளுங்கூட தமிழ்நாவலாசிரியர்களைக் கவர்ந்துள்ளன.

காண்டேகர் தமது நாவல்கள் சிலவற்றிலே பாத்திரங்கள் தாமே நேரில் சந்தித்து கதை கூறுவதான - உரையாடுவதான - உத்திமுறையைக் கையாண்டுள்ளவர். இவ்வுத்திமுறையின் பரந்துபட்ட வளர்ச்சியே மு.வ.வின் நாவல்களில் பாத்திரங்கள் தாமே தமது கதையைக் கூறுவதாக அமைகின்றமையாகும்.

மேலும், காண்டேகரது நாவல்களில் உவமை உருவகச் சித்திரங்களும், காட்சிச் சித்திரங்களும் இடம்பெறுவதையும் அவதானிக்க முடியும். இவற்றையும் மூ.வவின் நாவல்களில் காணமுடியும்.

காண்டேகரின் "தத்துவ ஒத்தடம்" மு.வ. நாவல்களில் நீண்ட போதனை வடிவில் வெளிப்படுகிறது. இவ்விருவரதும் நாவல்களிலும் இவ்வாறு இடம்பெறுபவை, பொன்மொழிகளாகவும் மணிமொழிகளாகவும் கருதப்பட்டு மனனம் செய்யப்பட்டும் மேற்கொள் காட்டப்பட்டும், தொகுக்கப்பட்டும் வருவது இலக்கிய ஆர்வலர்களறிந்த விடயமே.[17]

எனினும், தமிழ் நாவலாசிரியருள் காண்டேகரிலும் ஒரு படிமேலாக மணிமொழிகளை சிறிய இன்னொருவர் "நா.பா." ஆவார். இவரது பொன்விலங்கு தொடர்கதையாக வந்தபோது மணிமொழிகள் காரணமாக வாசகர் பெருகினர்.

நா.பா.வின் "பட்டுப்பூச்சி" என்ற குறுநாவல் முழுக்க முழுக்க காண்டேகரின் உத்தியையே பின்பற்றியது அதாவது, கருகிய மொட்டு போல் நாவல் பாத்திரங்களுள் நேரடியாக வந்து நாவலாசிரியருடன் உரையாடுகின்றன. (நா.பா.வைச் சந்திக்க வரும் பாத்திரங்கள் நா.பா.வை அளவுக்கு மீறி புகழவும் செய்கின்றன என்பதே இவருக்கும் காண்டேகருக்கும் வித்தியாசம்.)

இனி, இன்றைய தலைமுறை எழுத்தாளர் உருவாக்கத்திலும் காண்டேகரது பாதிப்புகளை இனங்காண முடிகின்றது. இவ்விதத்திலான ஆரோக்கியமான பாதிப்பினை ஒரு சிலரிடமே காணமுடியும். எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலகவதி இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகின்றார். ஓரிடத்தில் அவர் இவ்வாறு கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.[18]:

"நான் எழுத்துலகில் அடியெடுத்து வைக்க காண்டேகரின் இலக்கியாக்கம் ஒரு காரணம். சிறு வயதிலிருந்தே காண்டேகரின் நூல்கள் எனக்கு அறிமுகமாயின. காண்டேகரின் உவமைநயமும் சிந்தனைவளமும் புதிய அணுகுமுறைகளும் அவருடைய நாவல்களை மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டின. சொல்லவேண்டிய செய்தியை மிகச் சுருக்கமாக எளிமையாக உவமைகள் மூலம் புரிய வைத்து விடலாம் என்ற உத்தியை நான் கற்றுக்கொண்டது காண்டேகரின் எழுத்துக்களில்தான்"

எனினும், ஆரோக்கியமற்ற விதத்திலான பாதிப்பே அதிகமுள்ளது என்று கூறத்தோன்றுகின்றது. மணியன் தொடக்கம் குமாரி பிரேமலதா வரையில் எழுதும் தொடர்கதைகளில் ஆண் பெண் உறவு விடயம் விரசமாகவும் வியாபார நோக்கிற்குட்பட்டதாகவும் வெளிப்படுவது காண்டேகரிட்ட தடத்தின் விபரீதமான மாற்றத்தினாலாகும்.

பின்வருவது குமாரி பிரேமலதாவின் தொடர்கதையொன்றிலே இடம் பெறும் பகுதியாகும்[19]:

" காண்டேகரின் கருகிய மொட்டுப் புத்தகத்தை அவன் தேடி வைத்திருந்தான்.
அவள் அதை வாங்கிக் கொண்டபோது அட்டைப் படத்தைக் கவனித்தாள்.
என்ன கதை இது ?
கதையைச் சொன்னால் சுவாரசியம் போய்விடும்
அவ்வளவு சுவாரசியமான கதையா ?
வாழ்க்கையில் சுவாரசியமான விஷயங்களைப் பற்றிய கதை. படித்த பிறகு சொல்லு"

அது மட்டுமன்று நாற்பத்தைந்துகளிலே, காண்டேகர் [20],

"இளம் ஆண் பெண்கள் தம்காதல் வாழ்வில் உடலின்பத்தின் பகுதிக்கு அதிகப் பெருமை தரவேண்டும். ஒருவருக்கு ஒருவர் மகிழ்வூட்டவே நாம் கைகோத்திருக்கிறோம் என்பதை அவர்கள் எப்போதும் மறக்கலாகாது. வாழ்வுப் பயணத்தின் உண்மையான இன்பம் இத்தகைய கூட்டுறவில்தான் இருக்கின்றது."

என்று குறிப்பிட்டதையே, எழுபத்தைந்துகளிலே மணியன் இவ்வாறு எழுதுகிறார்:[21]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடல், பொருள், ஆவி மூன்றும் ஐக்கியப்பட்டு நிற்பது தாம்பத்தியம். இதில் உடலைத்தான் முதலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். குடும்ப வாழ்க்கை என்ற கீதம் சமூகமான உடல் வாழ்க்கையில் இருந்து தான் பிறக்கிறது. ஆதார சுருதி அதுதான். கணவனுடன் மனைவி உடலுறவு கொண்டு வாழ்வதில் அவள் காட்டும், மோகத்தை. முப்பது நாட்கள் அல்ல, முப்பது வருஷமாக வாழ்க்கை முழுவதற்கும் பசுமையாக வைத்திருக்கும்."

எனவே "உண்மைக்கதை" என்ற பெயரிலும் "நியூவேவ்" என்ற பெயரிலும் வியாபார நோக்கிலே கொச்சைத் தனமாக ஆண் பெண் உறவுகளைப் பற்றிச் சிலாகித்து எழுதும் இன்றுள்ள பல எழுத்தாளர்கட்கு, ஆரம்பத்தில் கூறியது போன்று கருகிய மொட்டுக் காண்டேகரும் ஒரு விதத்திலே ஆதர்ஸமாக - மானசீகக் குருவாக - இருக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

முடிவுரை

இறுதியாக இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நோக்கும்போது பின்வரும் விடயங்கள் முதன்மை பெறுகின்றன :

i. தமிழில் மராட்டிய நாவல்களின் பாதிப்பு அவை பெருமளவு மொழிபெயர்க்கப்பட்ட சென்ற நூற்றாண்டின் மூன்றாம் நான்காம் ஐந்தாம் தசாப்தங்களில், பொழுது போக்கு ரசனைநிலைக்குட்பட்ட வாசகரது ரசனைநிலையை அதிலிருந்து மீட்டெடுத்துள்ளன.

ii. தமிழில் சமூக நோக்குடைய இலட்சிய நாவல்களின் உருவாக்கத்திற்கு வழிசமைத்துள்ளன.

iii. சமூகநோக்குடைய தி.மு.க. எழுத்தாளருக்கும் மார்க்சிய எழுத்தாளருக்கும் மறைமுகமாக உத்வேகமளித்துள்ளன.

iv. தமிழ் நாவல் வரலாற்றில் அதுவரையும் "பேசாப் பொருளாக"-விருந்த ஆண் பெண் உறவுச் சிக்கல்கள் தமிழ்நாவல்களில் பேசப்பட தடமிட்டுள்ளன.

v. அதே வேளையில் சமூக நோக்குடைய இலட்சிய நாவல்களின் உருவாக்கம் தடம்மாறி காதல் திசை நோக்கிச் செல்லவும், அவ்விதத்தில் மிகையுணர்ச்சித் தொடர்கதைகள் உருவாகவும் வழிகாட்டியுள்ளன.

vi. தொடர்கதை எழுத்தாளர்கள் சாதாரண வாசகரை இலகுவிலே கவர்வதற்கேற்ற உத்திமுறைகளை வழங்கியுள்ளன. (எ-டு:- பொன்மொழிகள் இடம்பெறல்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii. ஆண்பெண் உறவுச் சிக்கல் சார்ந்த விடயங்கள் பின்னர் விரசமான, வியாபார நோக்கிலான படைப்புக்கள் உருவாவதற்கு வழிகாட்டியுள்ளன.

அடிக்குறிப்புகள்

01. பட்கே. நாஸீ முன்னுரை *ஆசா தமிழில் :* புனதாம் பேக்கர், கலைமகள் வெளியீடு, சென்னை, 1951.

02. கா. ஸ்ரீ. ஸ்ரீ. *காண்டேகரும் தமிழும்*, கலைமகள், செப்ரெம்பர், 1970, ப.22.

03. ஹட்கனகலேகர், எம்.டி. *இந்திய இலக்கியச் சிற்பிகள் வி.எஸ். காண்டேகர்*, புதுதெல்லி, மு.ப. 2000, ப. 5.

04. கா.ஸ்ரீ.ஸ்ரீ. மு. கு. நூ.

05. கிருஷ்ணமூர்த்தி, ரா. ஆனந்தவிகடனின் பிறப்பு *ஆனந்த விகடன்*, 28.04.1939, ப. 44.

06. கா.ஸ்ரீ.ஸ்ரீ. மு. கு. நூ. ப. 25

07. மோகன், இரா. *இந்திய இலக்கியச் சிற்பிகள் - கு. ப. ராஜகோபாலன்*, சாகித்திய அக்காதெமி, புதுதெல்லி, மு.ப. 1994, பக். 75.

08. இது தொடர்பாகச் சுவையான விடயமொன்று நினைவிற்கு வருகின்றது. ஆண்பெண் உறவினை உள்ளடக்கமாகக் கொண்ட புகலிடத் தமிழ் நாவலொன்றினை (*அழிவின் அழைப்பிதழ்* - தியாகலிங்கம்) "மித்ர" வெளியீட்டாளர் சிலவருடங்களுக்கு முன்னர் தமிழிலே வெளியிட்டிருந்தனர். இப்படைப்பினை மட்டக்களப்பு உதயம் பிரசுரமாக வெளியிடுவது பற்றி ஆலோசனை கேட்க, அதன் நிறுவகர் இக்கட்டுரையாளரை அணுகியிருந்தார். வெளியிடுவதில் பயனுண்டு என்று ஆலோசனை கூறப்பட்டபோதும், ஈழத்து வாசகரது ரசனைக்கு அது பொருந்திவராது என்று அவர் கருதியமையால் அப்படைப்பு இறுதிவரை உதயம் பிரசுரமாக வெளிவரவில்லை. கவனிப்பிற்குரிய அந்நாவலை ஈழத்து இலக்கிய உலகம் இழந்து விட்டது என்பது ஒரு புறமிருக்க, ஈழத்து வெளியீட்டாளர் இப்போது கூட அத்தகைய நாவல்களை வெளியிடுவதில் காட்டும் தயக்கமே எமது கவனத்திற்குரியது.

09. மோகன், இரா, மு. கு. நூ. ப. 62.

10. சம்பத்குமார், பா. *மு.வ. நாவல்களில் பாத்திரங்கள் - ஒரு திறனாய்வு*, ராஜ்காந்தி பதிப்பகம், மு.ப. 1988, ப. 39.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வளர்மதி, மு. *காண்டேகரும், கா.ஸ்ரீ.ஸ்ரீ.யும்* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மு.ப. 1994, ப. 38.

12. மே. கு. நூ. ப. 36.

13. வேங்கடராமன், சு. *இந்திய இலக்கியச் சிற்பிகள் - அகிலன்*, சாகித்திய அக்காதெமி, புதுதெல்லி, மு.ப. 2000, ப. 48.

14. இவ்வடிகள் நா.பா.வின் *குறிஞ்சிமலரில்* இடம்பெற்றுள்ள பிரசித்தி பெற்ற பாடலில் இடம்பெற்றுள்ளவை.

15. செ. கணேசலிங்கன் காண்டேகரை நேரில் சென்று சந்தித்தவர்; அது பற்றிய கட்டுரைகளும் எழுதியுள்ளார். (பார்க்க : செ. கணேசலிங்கம் *மு.வ. நினைவுகள்*, ப. 24, பாரிநிலையம், சென்னை. 1988.)

16. இக்கட்டுரையாளரிடம் எழுத்தாளர் இ. கமலநாதன் நேரிலே கூறிய தகவல்.

17. காண்டேகரின் மணிமொழிகள் என்றொரு நூலும் தமிழில் வெளி-வந்துள்ளது. (*காண்டேகரின் மணிமொழிகள்*, அன்புப்பழம்நீ, பாரி-நிலையம், சென்னை, மு.ப. 1985)

18. வளர்மதி, மு. மு. கு. நூ. ப. 22

19. குமாரி பிரேமலதா, *உறவும் பரிவும்*, முன்னுரை, ஆனந்தவிகடன், செப்ரெம்பர், 10, 1975.

20. வளர்மதி, மு. மு. கு. நூ. ப. 26.

21. மணியன், *"மோகம் முப்பது வருஷம்"* முன்னுரை, மணியன் பிரசுரம், 1976, ப. 12.

உசாத்துணைகள்

மூல நூல்கள்

1. காண்டேகர், வி.ஸ., *அமுதக்கொடி*, தமிழில் : கா. ஸ்ரீ .ஸ்ரீ. அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை. மறுபதிப்பு 1978.

2. காண்டேகர், வி.ஸ., *இருதுருவங்கள்*, மேற்குறிப்பிட்டவாறு, ம.ப. 1989.

3. காண்டேகர், வி.ஸ., *கருகியமொட்டு*, தமிழில் கா.ஸ்ரீ.ஸ்ரீ. பாரதி பதிப்பகம், சென்னை, ப.க. 1985.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காண்டேகர், வி.ஸ., *கிரௌஞ்சவதம்*, கலைமகள் காரியாலயம், ம.ப. 1971.

5. காண்டேகர், வி.ஸ., *கூட்டுக்கு வெளியே*, மே. கு. , ம.ப. 1971.

6. காண்டேகர், வி.ஸ., *புயலும் படகும்*, மே. கு. மு.ப. 1940.

7. காண்டேகர், வி.ஸ., மனோரஞ்சிதம், அல்லயன்ஸ் வெளியீடு, மே.கு. ம.ப. 1988.

8. காண்டேகர், வி.ஸ., *யயாதி, மங்கள* நூலகம், மு.ப. 1990.

9. காண்டேகர், வி.ஸ., *வெண்முகில்*, அல்லயன்ஸ் வெளியீடு, மு.கு., ம.ப. 1988.

10. காண்டேகர் வி.ஸ., *வெறுங்கோயில்*, அவமுநிலையம், சென்னை, ம.ப., 1985.

துணைநூல்கள்

1. சம்பத்குமார். பா., *மு.வ. நாவல்களில் பாத்திரங்கள்* ஓர் திறனாய்வு. ராஜ்காந்தி பதிப்பகம், சென்னை, மு.ப. 1988.

2. சிட்டி, சிவபாதசுந்தரம். சோ, *தமிழ்நாவல் நூற்றாண்டு* வரலாறும் *வளர்ச்சியும்*, கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, மு.ப., 1977.

3. வளர்மதி, மு. *காண்டேகரும் கா.ஸ்ரீ.ஸ்ரீ.யும்* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப. டிசம்பர், 1994.

4. யோகராசா. செ, *வங்கநாவல்கள் தமிழ் நாவல்களில் ஏற்படுத்திய தாக்கம்* மறுபிரசுரம், "சிந்தனைத்தொகுதி" 3:4 புரட்0மார்கழி 1976 ஆசிரியர் அ. சண்முகதாஸ்.

5. எம்.டி. ஹட்கனகலேகர், எம்.டி. *இந்திய இலக்கியச் சிற்பிகள் வி.எஸ். காண்டேகர்* தமிழில் வி. கிருஷ்ணமூர்த்தி, சாகித்திய அக்காதெமி, புதுதெல்லி, மு.ப. 2000.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரப்படுத்தலின் கட்டுப்பாடுகளும் ஒழுங்குவிதிகளும்

T.V. தர்மதாஸன்

இக்கட்டுரையின் நோக்கம் பல்வேறு ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படும் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக எமது நாட்டில் பின்பற்றப்படுகின்ற கட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகள் எந்தளவுக்குப் போதுமானவை என்பதனை வெளிப்படுத்துவதேயாகும்.

அறிமுகம்

விளம்பரப்படுத்தல் நடவடிக்கை வியாபாரத்துடன் இரண்டறக் கலந்துவிட்ட ஒரு விடயமாக இன்று காணப்படுகின்றது. "விளம்பரம் இல்லையேல் வியாபாரம் இல்லை" என்று கூறக்கூடிய அளவுக்கு இது ஒரு முக்கியமான அம்சமாக மாறிவிட்டது. "இன்றைய உலகில் விளம்பரமின்றிப் பணம் சம்பாதிக்க முடியுமான ஒரேயொரு காரியம் காசு அச்சடித்தல் மாத்திரமே" (Changing Patern of Advertising - Kusumsiri Wijayawardana, 1988 : 6) என்னும் கூற்றில் இருந்து மேலும் இதன் முக்கியத்துவத்தை உணரக்கூடியதாக-வுள்ளது. சந்தைப்படுத்தற் கலப்பில் காணப்படும் பொருள் (product), விலை (price), இடம் (place), மேம்படுத்தல் (promotion) ஆகிய அம்சங்களுள் மேம்படுத்தல் என்ற அம்சத்தினுள் இதன் நடவடிக்கைகள் அடங்குகின்றன. உற்பத்தி, வியாபார நிறுவனங்கள் தொடர்பாகவோ அவற்றின் பொருட்கள், சேவைகள் தொடர்பாகவோ பல்வேறு தொடர்புச் சாதனங்கள் ஊடாக விளம்பரம் செய்வது ஒரு அத்தியாவசியத் தேவையாக இன்று மாறியுள்ளது. வியாபாரத் துறையில் இதன் முக்கியத்துவத்தை திறந்த பொருளாதார முறைமை, வியாபாரத்திற் காணப்படும் போட்டித் தன்மை, நாளுக்கு நாள் வரும் புதிய கண்டுபிடிப்புக்கள், நவீன தொழில்நுட்ப வளர்ச்சி, பூகோளமயமாக்கல் போன்றன மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. நம்நாட்டிலும் கூட மேற்கூறிய அம்சங்கள் வியாபாரத்தில் வளர்ச்சி அடைந்து வருவதன் காரணமாக விளம்பரப்படுத்தல் முக்கியமான ஒரு துறையாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. இன்று இதன் வளர்ச்சி பல்வேறு விளம்பர முகவர் நிறுவனங்களைத் தோற்றுவித்துள்ளதோடு பலருக்கும் பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகளிலும் வேலைவாய்ப்பை வழங்கும் ஒரு துறையாகவும் மாறி வருகின்றது.

உற்பத்தியாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் அவர்களது பொருட்கள், சேவைகளின் விற்பனையை அதிகரிக்கச் செய்வதற்கான ஒரு சாதனமாக விளம்பரப்படுத்தல் பயன்படுகின்றது என்பதுடன், பொருட்கள், சேவைகளுக்குப் பிரசித்தியையும் அளிக்கவல்லதாக விளங்குகின்றது. இதற்கப்பாலும் ஒரு நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் பண்பாட்டிலும் கலைகலாச்சாரத்திலும் கூட செல்வாக்கைச் செலுத்து-கின்றது. மக்கள் பொருட்களை அதிலும் குறிப்பாக ஆடம்பரப்பொருட்களை வாங்குவதற்கு அவர்களுக்குத் தூண்டுதல் அளிப்பதன் மூலம் அவர்களின் வருமானம் உழைக்கும் ஆர்வத்தினை அவர்களை அறியாமலே பெருக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்திலும் உயர்வினைக் கொண்டு வருகின்றது. சில தேவைகள் அத்தியாவசியத் தேவைகளாக மாறுவதற்கு விளம்பரப்-படுத்தலும் ஒரு காரணமாக அமைகின்றது. வர்த்தகத் துறையில் வளர்ந்து வரும் போட்டியின் காரணமாக இதன் முக்கியத்துவம் எதிர்வரும் காலங்களில் இன்னும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இதன் நோக்கத்தினைச் சுருக்கமாக "தகவல் அளித்தல், தூண்டுதல், ஞாபகமூட்டல்" (Marketing Management - Kotler Philip, 1997: 639) எனக் கூறலாம். மேலும் "விளம்பரங்களின் மூலம் பொருட்கள், சேவைகள் விற்கப்படல் வேண்டும் அல்லது அவற்றை விற்பனை செய்ய விளம்பரப்-படுத்தல் உதவுதல் வேண்டும்" (Vilampara Yukthikal - Vimalanath, 1995 : 14)

கட்டுப்பாடுகளும் ஒழுங்குவிதிகளும்

வணிகத்துறையில் இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்ற இந்த விளம்பரப்படுத்தல் நடவடிக்கையானது நுகர்வோரைத் தவறான முறையில் வழிநடாத்தாமல் இருப்பதுடன் தவறான தகவல்களையும் வழங்காமல் இருத்தல் வேண்டும். அத்துடன் விளம்பரங்களை மேற்கொள்ளும் நிறுவ-னங்கள்/நபர்களும் தவறான விளம்பரங்களை மேற்கொள்ளாமல் இருத்தல் வேண்டும். இவ்வாறாக ஒரு விளம்பரம் அமைய வேண்டுமானால் இது தொடர்பாகச் "சில கட்டுப்பாடுகளையும் ஒழுங்குவிதிகளையும் நடைமுறைப்-படுத்த வேண்டியுள்ளது. இந்த வகையில் இது தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய கட்டுப்பாடுகளையும் ஒழுங்குவிதிகளையும் மூன்றுவிதமாக நோக்கலாம்." (Contemporary Advertising - Courtland I. Bovee, William F. Arene, 1992 : 694) அவையாவன :

(i) பொதுவான விதிமுறைகள்

(ii) குறிப்பிட்ட சில பொருட்கள், சேவைகள் மீதான வரையறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) விளம்பரப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் தொடர்புச் சாதனங்கள் சம்பந்தமான விதிமுறைகள்.

(i) பொதுவான விதிமுறைகள்

விளம்பரப்படுத்தல் தொடர்பான இந்தப் பொதுவான விதிமுறைகளானது இரு அம்சங்களை எடுத்து விளக்குவதாக அமைந்துள்ளது. அவையாவன :

(அ) ஒப்பீட்டு விளம்பரப்படுத்தல் தொடர்பானவை.

(ஆ) விளம்பபரப்படுத்தலில் குழந்தைகள் பயன்படுத்தப்படுதல் தொடர்பானவை.

(அ) ஒப்பீட்டு விளம்பரப்படுத்தல்

குறிப்பிட்ட ஒரு பொருள் தொடர்பாக விளம்பரப்படுத்தலை மேற்கொள்ளும்பொழுது வேறு நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்படும் அதை ஒத்த பொருட்களுடன் அதாவது ஒரே பாவனைக்குரிய பொருட்களுடன் உதாரணமாக:- பற்பசைகள் (சிக்னல், எஸ்ஆர், குளோகாட், கோல்கேட்) எவ்வாறு ஒப்பிடப்பட்டு விளம்பரப்படுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனையே ஒப்பீட்டு விளம்பரப்படுத்தல் எடுத்துக் கூறுகின்றது. இதனடிப்படையில் ஒரு நிறுவனம் தனது உற்பத்திப் பொருளை ஒத்த ஏனைய நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களைப் பாதிக்காத வகையில் ஒப்பீட்டு விளம்பரப்படுத்தலை மேற்கொள்ளல் வேண்டும். ஒரு பொருளை விளம்பரப்படுத்தும்போது அதனைச் சிறந்தது என விளம்பரப்படுத்தலை மேற்கொள்ளும்போது மறைமுகமாக ஏனைய நிறுவனங்களின் அதையொத்த உற்பத்திப் பொருட்கள் கூடாதது என்ற கருத்து வெளிப்படவே செய்யும். இது தவிர்க்க முடியாதது. எனவே ஒப்பீட்டு விளம்பரப்படுத்தல் என்பது நேரடியாகவே ஒப்பிடப்படாமல் மறைமுகமாகவே ஒப்பிடப்படல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) விளம்பரப்படுத்தலில் குழந்தைகள் பயன்படுத்தப்படுதல்

விளம்பரமொன்றில் குழந்தைகள் எவ்வாறு பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதனை இது குறிப்பிடுகின்றது. அதாவது எவ்வாறான விளம்பரங்களில் குழந்தைகளை பயன்படுத்தலாம். எவ்வாறான விளம்பரங்களில் குழந்தைகளை பயன்படுத்தக்கூடாது போன்ற விடயங்கள் எடுத்துக் கூறப்படுகின்றது. இதன்மூலம் குழந்தைகள் துஷ்பிரயோகம் தவிர்க்கப்படக்கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) குறிப்பிட்ட சில பொருட்கள், சேவைகள் மீதான வரையறைகள்

இது, எவ்வாறான பொருட்கள், சேவைகள் தொடர்பாக விளம்பரப்படுத்தல் மேற்கொள்ளப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும் என்பதனையும் குறிப்பிட்ட பொருட்கள், சேவைகள் தொடர்பாக விளம்பரப்படுத்தலை மேற்கொள்ளும் போது எவ்வாறான வரையறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனையும் எடுத்துக் கூறும் அம்சங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

(iii) தொடர்புச் சாதனங்கள் சம்பந்தமான விதிமுறைகள்

இது விளம்பரப்படுத்தலை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படும் தொடர்புச் சாதனங்களில் எவ்வாறான விளம்பரங்களை எந்தெந்தத் தொடர்புச் சாதனங்களில் மேற்கொள்ளலாம். எந்தெந்தத் தொடர்புச் சாதனங்களில் மேற்கொள்ளக்கூடாது என்பதனையும் விளம்பரங்கள் தொடர்புச் சாதனங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய காலவரையறைகளையும் விளக்குவதாக அமைகின்றது.

விளம்பரப்படுத்தல் தொடர்பாக மேலே கூறப்பட்ட இக்கட்டுப்பாடுகளும் ஒழுங்குவிதிகளும் எல்லா நாடுகளிலும் ஒரேவிதமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன என்று கூறமுடியாது. இது நாட்டுக்கு நாடு வேறுபட்ட முறையில் அமுல்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. ஏனெனில் அந்தந்த நாடுகளில் காணப்படும் கலாச்சாரப் பாரம்பரியங்கள், அங்கு காணப்படும் சூழ்நிலைகள், நாட்டுமக்களின் பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள், அரசாங்கக் கொள்கைகள் என்பவற்றுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றது. உதாரணமாக "சில மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்த வரையில் விளம்பரப்படுத்தல் தொடர்பாக மேலே கூறப்பட்ட கட்டுப்பாடுகளும் ஒழுங்குவிதிகளும் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றன" (Comtemporary Advertising - Counterland R. Bovee, William F. Arene, · 1992 : 694 - 695) என்பதனை அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

நோக்கு

ஒவ்வொரு நாடுகளிலும் ஒவ்வொரு விதமாகச் செயற்படுத்தப்படும் மேலே கூறப்பட்ட விளம்பரப்படுத்தல் தொடர்பான கட்டுப்பாடுகளும் ஒழுங்குவிதிமுறைகளும் நமது நாட்டில் எவ்வாறு? எந்தளவுக்கு? பயனுள்ள வகையில் செயற்படுத்தப்படுகின்றது என்பதனை எடுத்து நோக்கலாம்.

பொதுவான விதிமுறைகளில் காணப்படும் ஒப்பீட்டு விளம்பரப்படுத்தல், விளம்பரப்படுத்தலில் குழந்தைகள் பயன்படுத்தப்படுதல் தொடர்பான அம்சங்களை எடுத்து நோக்கினால் குறிப்பிட்ட ஒரு உற்பத்திப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

தெரிவு செய்யப்பட்ட சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் விளம்பரப்படுத்தல் தொடர்பான கட்டுப்பாடுகளும் ஒழுங்கு முறைகளும்

நாடுகள்	பொதுவான விதிமுறைகள்		குறிப்பிட்ட சில பொருட்கள், சேவைகள் மீதான வரையறைகள்			தொடர்புச் சாதனங்கள் மீதான விதிமுறைகள்	
	ஒப்பீட்டு விளம்பரப்படுத்தல்	விளம்பரப்படுத்தலில் குழந்தைகள் பயன்பாடு	மதுபானம் குடிபானவகைகள்	புகையிலை வகைகள்	மருந்துப் பொருட்கள்	தொடர்புச் சாதனக் கட்டுப்பாடு	வர்த்தகம் தொடர்பாக தொடர்புச்சாதன வரையறை
ஒஸ்ரியா	அவமானப்படுத்தும் வகையாயானவை தடைசெய்யப்பட்டுள்ளது.	நேரடி விண்ணப்பம் தடை செய்யப்பட்டுள்ளது.	சிறிதளவும் இல்லை.	தொலைக்காட்சி விளம்பரப்படுத்தல்கள் மீது விரும்பியவாறு தடைகள் விதிக்கப்படுகின்றன.	இவற்றை விளம்பரம் செய்ய அரசின்அனுமதி பெறப்படல் வேண்டும்.	சிறிதளவும் இல்லை	ஆகக்கூடியது 30 வினாடிகள் வரை செய்யப்படலாம்.
பெல்ஜியம்	அவமானப்படுத்தும் வகையாயானவை தடைசெய்யப்பட்டுள்ளது.	சகல தொடர்புச் சாதனங்களிலும் சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளது.	மதுபானங்களின் விளம்பரப்படுத்தல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.	திரைப்படம், வானொலி, தொலைக்காட்சிஆகியவற்றில் வெண்சுருட்டு விளம்பரப்படுத்தலுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.	சகல தொடர்புச் சாதனங்களிலும் சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.	வானொலி,தொலைக் காட்சிகளில் வர்த்தகம்சம்பந்தமானவற்றுக்குத் தடை விதிக் கப்பட்டுள்ளது.	பொருத்தமில்லை.
டென்மார்க்	சிறிதளவான கட்டுப்பாடுகள் பின்பற்றப்படுகின்றன.	சிறிதளவும் இல்லை.	சிறிதளவும் இல்லை.	வெண்சுருட்டு விளம்பரங்கள் மீது விரும்பியவாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன	சகல பொதுத் தொடர்புச் சாதனங்களிலும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.	வானொலி,தொலைக் காட்சிகளில் வர்த்தகம்சம்பந்தமானவற்றுக்குத் தடை விதிக் கப்பட்டுள்ளது.	பொருத்தமில்லை.
பின்லாந்து	சிறிதளவும் இல்லை.	சிறிதளவும் இல்லை.	தொலைக்காட்சி மீது தடைவிதிக்கப்பட்டுள்ளது.	குறிப்பாக இளவயதினரைப் பயன்படுத்தி மேற்கொள'ளப்படும் விளம்பரங்களுக்கு தொடர்புச் சாதனங்களில் தடை விதிக்கப்பட்டுள்ளது.	விளம்பரப் பிரதிகள் மீது விரும்பியவாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.	உள்நாட்டு வானொலிகளில் இல்லை.	குறித்த சில நாட்களில் வர்த்தக ரீதியானவை தொலைக் காட்சிகளில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள்	பொதுவான விதிமுறைகள்		குறிப்பிட்ட சில பொருட்கள், சேவைகள் மீதான வரையறைகள்			தொடர்புச் சாதனங்கள் மீதான விதிமுறைகள்	
	ஒப்பீட்டு விளம்பரப்படுத்தல்	விளம்பரப்படுத்தலில் குழந்தைகள் பயன்பாடு	மதுபானம் குடிபானவகைகள்	புகையிலை வகைகள்	மருந்துப் பொருட்கள்	தொடர்புச் சாதனக் கட்டுப்பாடு	வர்த்தகம் தொடர்பாக தொடர்புச்சாதன வரையறை
பிரான்ஸ்	தடைசெய்யப்பட்டுள்ளது.	வர்த்தகரீதியானவை விளம்பரப்படுத்த முன்னர் காண்பிக்கப்படல் வேண்டும்.	மதுபானங்களுக்கு எல்லா தொடர்புச் சாதனங்களிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய குடிபானங்களை வானொலி தொலைக்காட்சிகளில் விளமப்பரப்படுத்தலாம்	வானொலி, தொலைக் காட்சிகளில் வெண் சுருட்டு விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.	விளம்பரப் பிரதிகளை காண்பித்து அனுமதி பெறல் வேண்டும்.	தொலைக்காட்சி நிறுவனத்தின் மொத்த வருமானத்தில் ஒரு விளம்பரதாரரிடம் இருந்தான வருமானம் 8 சதவீதத்திற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது	துண்டுகளாக அல்லது குழுவாக வர்த்தகம் சம்பந்தமானவை மட்டும் குறிப்பான (Spot) விளம்பரப்படுத்தல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
ஜேர்மனி	தடைசெய்யப்பட்டுள்ளது.	வானொலி, தொலைக்காட்சிகளில் விரும்பிய வாறு செய்யலாம்.	குறித்த கைத்தொழிலின் ஊடாக விரும்பியவாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.	வானொலி, தொலைக்காட்சி மீது தடைவிதிக்கப்பட்டுள்ளது.	சகல தொடர்புச் சாதனங்களிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.	சிறிதளவும் இல்லை	ஞாயிறு தவிர்ந்தநாட்களில் பிற்பகல் 6 மணி முதல் இரவு 8 மணி வரை தொலைக் காட்சியில் காண்பிக்கலாம்.
இத்தாலி	நேரடியாக ஒப்பிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் நியாயமானதென நிரூபிக்கப்பட்டால் மறைமுகமாக ஒப்பிடலாம்.	விளம்பரப்படுத்தும் பொருளை குழந்தைகள் உண்பது போல காண்பிப்பது தடை விதிக்கப்பட்டுள்ளது	தொலைக்காட்சி விளம்பரப்படுத்தல்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.	சகல வகையான புகையிலைக்கும் சகல தொடர்புச்சாதனங்களிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.	விளம்பரப் பிரதிகளுக்கான அனுமதி தேவையானதாகும்	சிறிதளவும் இல்லை	பொதிகளில் அடைக்கப்பட்டவற்றை விளம்பரப் படுத்தலாம்.
நெதர்லாந்து	நியாயமானதாயின் ஒப்பீடு செய்யலாம்	விரும்பியவாறான கட்டுப்பாடுகள் பின்பற்றப்படுகின்றன.	வானொலி, தொலைக்காட்சி மீது விரும்பியவாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.	வானொலி, தொலைக் காட்சிகள் மீது விரும்பியவாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.	சிறிதளவும் இல்லை	சிறிதளவும் இல்லை	ஒவ்வொரு உற்பத்தியும் ஒவ்வொரு வாரத்திலும் ஆகக்கூடியது இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு மேற்படாத வகையில் செய்யப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள்	பொதுவான விதிமுறைகள்		குறிப்பிட்ட சில பொருட்கள், சேவைகள் மீதான வரையறைகள்			தொடர்புச் சாதனங்கள் மீதான விதிமுறைகள்	
	ஒப்பீட்டு விளம்பரப்படுத்தல்	விளம்பரப்படுத்தலில் குழந்தைகள் பயன்பாடு	மதுபானம் குடிபானவகைகள்	புகையிலை வகைகள்	மருந்துப் பொருட்கள்	தொடர்புச் சாதனக் கட்டுப்பாடு	வர்த்தகம் தொடர்பாக தொடர்புச்சாதன வரையறை
சுவீடன்	அவமானப்படுத்தும் வகையானவை தடை செய்யப்பட்டுள்ளது.	குழந்தைகள் ஆபத்தில் இருப்பதனைக் காண்பிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.	வைன், மதுபானம் என்பவற்றின் மீதான விளம்பரப்படுத்தல்களக்கு விரும்பியவாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.	சகல தொடர்புச் சாதனங்களிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.	வைத்தியர்களின் அனுமதிச் சீட்டுடன் வழங்கப்படவேண்டிய மருந்து வகைகளை விளம்பரப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.	வர்த்தகம் சம்பந்தமானவை வானொலி, தொலைக்காட்சிகளில் தடை செய்யப்பட்டுள்ளது.	பொருத்தம் இல்லை.
சுவிற்சர்லாந்து	சிறிதளவும் இல்லை	சிறிதளவும் இல்லை	எல்லாத் தொடர்புச் சாதனங்களிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.	சகல தொடர்புச் சாதனங்களிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.	சகல தொடர்புச் சாதனங்களிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.	வர்த்தகம் சம்பந்தமானவற்றுக்கு வானொலியில் தடை செய்யப்பட்டுள்ளது.	ஒவ்வொரு உற்பத்தியும் ஒவ்வொரு வாரத்திலும்ஆகக்கூடியது இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு மேற்படாத வகையில் செய்யப்படலாம்.
ஐக்கிய இராச்சியம்	அவமானப்படுத்தும் வகையானவை தடை செய்யப்பட்டுள்ளது.	குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு., ஏற்றவாறு சட்டங்கள் வரையப்பட்டுள்ளது.	வர்த்தகரீதியானவற்றை இரவு 9 மணிக்கு முன்னர் மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.	வானொலி, தொலைக்காட்சிகளில் வெண் சுருட்டுக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.	விரும்பியவாறான கட்டுப்பாடுகள் பின் பற்றப்படுகின்றன.	பெரியளவான தொடர்புச் சாதனங்களில் சிறிதளவும் இல்லை.	சிறிதளவும் இல்லை.

மூலம் : Contemporary Advertising, 1992.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளை விளம்பரப்படுத்தும்போது மற்றைய நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்படும் அதே பாவனைக்குரிய பொருட்களைப் பாதிக்காத, அவமானப்படுத்தாத வகையில் ஒப்பீட்டு ரீதியான விளம்பரப்படுத்தலை மேற்கொள்ளல் வேண்டும். ஆனால், நடைமுறையில் ஒளி, ஒலிபரப்பப்படும், பிரசுரிக்கப்படும் சில விளம்பரங்களைப் பொறுத்தவரையில் குறிப்பாகத் தொலைக்காட்சி விளம்பரங்களில் சில உற்பத்திப் பொருட்கள் தொடர்பான விளம்பரங்கள் இதனை மீறுவது போன்ற தன்மை வெளிப்படுத்துகின்றது. உதாரணமாக: எஸ்லோன் குழாய் தொடர்பான நிறுவனமொன்றின் விளம்பரத்தில் மற்றைய நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்படும் எஸ்லோன் குழாய்கள் தொடர்பாகத் தவறான கருத்துக் கொள்ள வைக்கப்படுகின்றது. இயன்றவரை இது தவிர்க்கப்படுவது நல்லதாகும். இதேபோல விளம்பரங்களில் குழந்தைகள் தோன்றுவது தொடர்பான நடவடிக்கைகளை நோக்குகின்றபோது 1979ம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்படி விளம்பரங்களில் குழந்தைகள் தோன்றுவது தடைசெய்யப்பட்டுள்ளதெனக் கூறப்படுகின்ற போதிலும் கூட அது எந்த வகையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்று விரிவாக எடுத்துக் கூறப்படாததனால் பொதுவாக விளம்பரங்களில் குழந்தைகள் தோன்று-வதனைக் காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாகக் குழந்தைகளுக்கான உணவுப் பண்டங்கள் தொடர்பான விளம்பரங்களில் இதனைக் காணக்கூடிய-தாகவுள்ளது. இதனால் பெற்றோர்கள் அதிலும் பொருளாதார வசதி குறைந்த பெற்றோர்கள் மிகுந்த கஸ்டங்களையும் சிரமங்களையும் எதிர் நோக்குகின்றனர். எனவே, இவ்விடயம் தொடர்பாக எதிர்காலத்தில் புதிய நடைமுறைகளைப் புகுத்துவது அவசியமானதாகக் காணப்படுகின்றது. ஆனால் குழந்தைகளைப் பாதிக்கின்ற, தவறாக வழிநடாத்துகின்ற விளம்பரங்களில் குழந்தைகள் தோன்ற முடியாது என்பது சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

குறிப்பிட்ட சில பொருட்கள், சேவைகள் மீதான வரையறைகள் என்பதனை எடுத்து நோக்கின் அவை தொடபாகப் பல்வேறு தொடர்புச் சாதனங்களிலும் விளம்பரப்படுத்தலை மேற்கொள்ளும்போது எவ்வாறு நடந்து கொள்ளல் வேண்டுமென்பது கூறப்பட்டுள்ளது. உதாரணமாக : அண்மையில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கிணங்க புகைத்தல், மதுபான விளம்பரப்படுத்தல்களுக்கு தொலைக்காட்சியில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மதுபான விளம்பரங்கள் அச்சடிக்கும் தொடர்புச் சாதனங்களில் (பத்திரிகைகள்) விளம்பரப்படுத்தப்படலாம். ஆனால் இதிற்கூட சில தவறான செயற்பாடுகள் காணப்படுகின்றன. அதாவது உருவாக்கப்பட்ட சட்டத்திலுள்ள குறைபாடு-களைப் பயன்படுத்தி மதுபான, புகையிலை உற்பத்தி நிறுவனங்கள் தமது பொருட்களை மறைமுகமாக தொலைக்காட்சி, பத்திரிகைகளில் விளம்பரப்-படுத்துகின்றன. உதாரணமாக, லயன் லாகர் பியர் உற்பத்தி நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமாகத் தொலைக்காட்சியில் தனது உற்பத்தியை விளம்பரப்படுத்துகின்றது. மேலும் சிலோன் டுபாக்கோ கம்பனி தனது நிறுவனத்துக்கு விளம்பரம் தொடர்பாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை பத்திரிகைகளில் பிரசுரிப்பதன் மூலம் "எதிர் சந்தைப்படுத்தல்" முறையில் தம்மையும் தமது உற்பத்திகளையும் மறைமுகமாக விளம்பரப்படுத்த முற்படுகின்றன. மேலும், மதுபான, புகையிலை உற்பத்தி நிறுவனங்கள் அனுசரணையாளர்களாகவும் செயற்பட முடியாது. அத்துடன் கணக்காய்வு, கணக்கீட்டு, சட்டத்தொழில் செய்வோரும் அவை சார்ந்த நிறுவனங்களும் வைத்தியர்களும் தம்மை விளம்பரப்படுத்த இயலாது. மேலும் குழந்தைகளுக்கான பால்மாவை விளம்பரப்படுத்த முடியாது போன்ற வரையறைகளும் காணப்படுகின்றன.

தொடர்புச் சாதனங்கள் சம்பந்தமான விதிமுறைகள் என்ற அம்சத்தினை எடுத்து நோக்கின் பெரியளவில் கட்டுப்பாடுகள் இருப்பதாகக் கூறமுடியாதுள்ளது. அதாவது, விளம்பரங்கள் எந்த வேளையில் ஒளி, ஒலிபரப்பு செய்யப்படல் வேண்டும். எத்தனை வினாடிகள் ஒளி, ஒலி பரப்பப்படல் வேண்டும். எந்தெந்த நாட்களில் விளம்பரப்படுத்தப்படல் வேண்டும் போன்றதற்கான விதிமுறைகள் தெளிவாக இருப்பதாகக் கூறமுடியாதுள்ளது.

முடிவுரை

நமது நாட்டில் விளம்பரப்படுத்தல் தொடர்பாக பின்பற்றப்படும் கட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகளை எடுத்து நோக்குகின்றபோது இது பொதுவாக இன்னமும் குறைபாடுகளையுடைய ஒன்றாகவே காணப்படுகின்றதெனலாம். எனவே, நமது நாட்டில் வாழும் மக்களின் கலாச்சார பாரம்பரியங்கள், சமயப் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், பொருளாதார நிலைமைகள் என்பவற்றுக்கேற்பவும் மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லாது அவர்களுக்குச் சிறந்த பயனுள்ள தகவல்களை வழங்கக்கூடிய முறையிலும் விளம்பரப்படுத்தலை மேற்கொள்ளும் நிறுவனங்களும் சட்டச்சிக்கல்களையும் இடையூறுகளையும் எதிர்நோக்காத வகையிலும் அவற்றை இன்னமும் சீர்படுத்துதல் அவசியமானதாகும். சிறப்பாக இன்று நுகர்வோர் கல்வி என்பது வளர்ந்து வரும் ஒன்றாகக் காணப்படுவதனால் நுகர்வோரது அறிவும் வளர்ந்து வருகின்றதெனலாம். இதன் காரணமாக எதிர்காலத்தில் மக்கள், விளம்பரப்படுத்தப்படும் பொருட்கள், சேவைகளால் தமக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு விளம்பரப்படுத்தல் தொடர்பான கட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகளில் உள்ள குறைபாடுகளைப் பயன்படுத்தி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. உதாரணமாக : மிக அண்மையில் ஒரு நபர் தனது நோய்க்கு சிலோன் டுபாக்கோ கம்பனியின் உற்பத்திகள் தான் காரணம் எனக் கூறிச் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் நீதிமன்றத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பு இன்னமும் வெளிவராத போதிலும் அவ்வாறு அவர் சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்ததற்குக் காரணம் விளம்பரப்படுத்தல் தொடர்பான கட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகளில் உள்ள குறைபாடுகளே ஆகும். எனவே இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாவண்ணம் பாதுகாக்கப்படல் வேண்டும். எனவே, அதற்கேற்ப விளம்பரப்படுத்தல் தொடர்பாக ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து சிறந்த முறையில் கட்டுப்பாடுகளையும் ஒழுங்குவிதிகளையும் மாற்றியமைப்பதன் மூலமும் திருத்தி அமைப்பதன் மூலமும் இன்று காணப்படும் திறந்த பொருளாதார முறையில் விளமப்பரப்படுத்தலினால் மக்கள் பாதுகாக்கப்பட முடியும். அத்துடன் தமது பொருட்கள் சேவைகள் தொடர்பாக விளம்பரப்படுத்தலை மேற்கொள்ளும் நிறுவனங்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.

உசாத்துணைகள்

1. Courtland, Bovee. I and William, Anens F., (1992), Contemporary Advertising, U.S.A. Richard D. Irwin, Inc.
2. Kotter, Philip, (19970, Marketing Management Analysis Planning Implecation and Control, New Delhi, Printers, Hll of India (Pvt) Ltd.
3. Mccarthy, E. Jerome, (1990), Basic Marketing A Managerial Approach, Honewood, Illnois: Richard D Irwin, Inc.
4. Betch, George, E and Mucheal, A, (1990), Introduction to Advertising and Promotion Management. U.S.A. Richard D. Inc.
5. Beruherdt, Kenneth, L. Kinnear, and Thomas (1991), Principles of Marketing, Scotland; Foresman and Co., Glen View, Illionois.
6. Leon Schiffman, Leslie, L, Knuk, (1992), Consumer Behaviour, New Delhi, Pinties Hall of India Pvt., Ltd.
7. Terrenee, A. Shimp, (1997), Advertising Promotion and Supplemental aspects of Integrated Marketing Communications, U.S.A.: The Dryden Press.
8. Kusumsiri Wijayawardana, (1998), Changing patern of advertising.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை (1948 - 2000)

அம்பலவாணர் சிவராஜா

I. வெளிநாட்டுக் கொள்கை: இயல்பும் தீர்மானிக்கும் காரணிகளும்

வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கும் குழப்பம் நிறைந்த இயல்புகளையும் அதன்மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் கொண்டு பார்க்கும் போது அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் என்பவர்களிடையே "வெளிநாட்டுக் கொள்கை" என்ற பதத்தின் சரியான அர்த்தம் பற்றி கருத்தொருமைப்பாடு இல்லை என்பது ஆச்சரியமானதல்ல. உதாரணமாக ஜிப்சன் (Gibson), மொடல்ஸ்கி (Modelski), நோதேட்ஜ் (Northedge), பிறங்கல் (Frankel), பந்தோபாட்ஜாஜா (Bandopadyaya), அப்பாத்துரை என்போரும் மற்றையோரும் வெளிநாட்டுக் கொள்கையினை வரைவிலக்கணப்படுத்துவதில் மாத்திரமல்லாது வெளிநாட்டுக் கொள்கையின் வேறுபடும் அம்சங்களுக்கு அடுத்தம் கொடுப்பதிலும் வேறுபடுகிறார்கள். இருந்தபோதிலும் இவ்வெழுத்தாளர்களிடையே ஒரு அம்சத்தில் பரந்தளவிலான ஒருமைப்பாடு நிலவுகின்றது. அது "ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை அந்த நாட்டின் தேசிய நலனை முன்னேற்ற வேண்டும்"[1] என்பதாகும்.

கியூ ஜிப்சன் என்பவர் வெளிநாட்டுக் கொள்கை "ஒரு அரசாங்கத்தின் தொடர்புகளை உலகின் மற்றைய பகுதிகளோடு அறிவு அனுபவம் என்பவற்றை அடிப்படையாக கொண்ட சிறந்த வடிவில் அமையும் விரிவான திட்டம்"[2] என வரைவிலக்கணப்படுத்தினார். எப்.எஸ். நோர்ட்ஜ் என்பவர் சம்பந்தப்பட்ட ஒரு அரசு அது விரும்பும் வகையில் மற்றைய 'அரசுகளின்' சட்டம் இயற்றும் அதிகாரத்தை செயற்படுத்தத் தூண்டும் அரசியற் செல்வாக்கை பயன்படுத்துவதே வெளிநாட்டுக் கொள்கை"3 எனக் கொண்டார். மேலும் நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் தோன்றும் சக்திகளும் அவற்றுள் செயற்படும் சக்திகளும் ஒன்றோடு ஒன்று பாதிப்புகளை ஏற்படுத்துவதே அது எனக் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோர்ஜ் மொடல்ஸ்கி மற்றைய அரசுகளின் நடத்தையினை மாற்றும் சர்வதேச சூழ்நிலைக்கு உகந்தவாறு தமது சொந்த நடவடிக்கைகளை மாற்றுவதற்கு சமுதாயங்களால் உருவாக்கப்படும் நடவடிக்கைகளைக் கொண்ட ஒரு முறையே வெளிநாட்டுக் கொள்கை"[4] என்றார்.

மேற்சொன்ன விளக்கங்களுள் ஜிப்சன் நடவக்கைகளுக்கு முந்திய சிந்தனைகளை வற்புறுத்தி மொடல்ஸ்கி நடவடிக்கைகளை வற்புறுத்து-கிறார். ஆனால் எல்லா எழுத்தாளர்களுமே மற்றைய அரசுகளை நோக்கிய ஒரு அரசின் நடத்தை பற்றியே வெளிநாட்டுக் கொள்கை கரிசனை கொள்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். அரசியல், பொருளாதார, கலாசார துறைகளில் ஒவ்வொரு அரசும் மற்றைய அரசுகளுடன் தொடர்பு-களைக் கொள்கின்றன. அவை சினேகித பூர்வமானவையாகவும் இருக்கலாம் எதிர்ப்புணர்வை அடிப்படையாகக் கொண்டவையாகவும் அமைலாம் சுருக்கமாக ஒரு அரசின் வளங்களை - பொருளாதாரம் இராஜதந்திரம், பிரச்சாரம் என்பவற்றைப் - பயன்படுத்தி பொதுவாக தேசிய நலன் என அழைக்கப்படுவதனை முன்னேற்றுவதற்கு மற்றைய அரசுகளின் நடத்தை-யினைத் தூண்டுவதே வெளிநாட்டுக் கொள்கையின் உள்ளடக்கமாகும்.[5]

தேசீய நலன் என்பதை இலகுவாக வரைவிலக்கணப்படுத்த முடியாது சில கண்டனக்காரர்கள் அது தெளிவற்ற அர்த்தமற்ற ஒரு சூத்திரம் அரைகுறைக் கோட்பாடு எனக் கண்டித்துள்ளார்கள். ஆகவே வெளிநாட்டுக் கொள்கையின் வெற்றியினை மக்கள் அதனூடாக பெறும் நன்மைகளை வைத்தே தீர்மானிப்பது தவிர்க்க முடியாதது.

மறைந்த இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் "எத்தகைய கொள்கையை நாம் தீர்மானித்தால் என்ன ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டு நடத்தும் கலை நாட்டுக்கு எது உச்ச வாய்ப்பினை தரக்கூடியது என்று கண்டுபிடிப்பதிலேயே தங்கியுள்ளது. ஒரு நாடு - ஏகாதிபத்திய சார்பானதோ, சோசலிசம் சார்பானதோ, கொம்னியூசம் சார்பானதோ அதன் வெளிநாட்டு அமைச்சர் அந்நாட்டின் நலனையே அடிப்படையில் சிந்திக்கிறார்."[6]

தனது சர்வதேச எல்லைகளை பாதுகாப்பதின் ஊடாக ஒவ்வொரு அரசும் அதன் அரசியல் சுதந்திரத்தையும் ஆள்புல ஒருமைப்பாட்டினையும் பேணிக் காப்பதை இலக்காகக் கொள்கின்றன. இதனை அடைவதற்கான வழிகள் வேறுபடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. *இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை*

(1) 1948 - 1956

இக்காலக் கட்டத்தில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான இயல்பு ஐக்கிய தேசீயக் கட்சிப் பிரதம மந்திரிகளாக இருந்த டீ.எஸ். சேனாநாயக்கா, டட்லி சேனாநாயக்கா, சேர் யோன் கொத்ததலாவல என்போர் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினை உருவாக்குவதில் தொடர்ந்து பொறுப்பு வகித்து வந்தனர். இம்மூவரும் வெளிநாட்டுத் தொடர்புகளை வழிநடத்துவதில் தத்தமது வெளிப்பார்வையில் வேறுபட-வில்லை. பாராளுமன்றத்தின் வருடாந்த ஆரம்ப உரையின் போது வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வமான கொள்கை அறிக்கைகள் இதனைக் காட்டின. அவை : (அ) பொதுநல அமைப்புடனான இலங்கையின் தொடர்பு-களை வலுப்படுத்துதல் (ஆ) எல்லா நாடுகளுடனும் சினேகபூர்வமாக இருத்தல் (இ) வல்லரசு நாடுகளைப் பொறுத்து அணி சேராமை.

இருந்தும் இக்காலப் பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மேலைத்தேச நாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையதொன்-றாகவே இருந்தது. கொம்னியூசத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தல், புதிதாக இலங்கை உருவாக்கிய பாராளுமன்ற ஸ்தாபனங்களை கொம்னியூச அச்சுறுத்தலில் இருந்து காப்பாற்றுதல் என்ற அம்சங்களே ஐக்கிய தேசீயக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிப்பதில் பிரதான பங்கு வகித்தன.

கொம்னியூஸ்டுகளுடனோ, கொம்னியூச நாடுகளுடனோ எத்தகைய தொடர்புகளையும் கொள்ள மறுப்பதே இக்காலக் கட்டத்தில் ஐக்கிய தேசீயக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையை வழிநடத்தும் தத்துவமாக இருந்தது. ஆனால் இப்பொது விதிக்கு இரு புறநடைகள் இருந்தன. அவை

(i) *1950 ஜனவரியில் மக்கள் சீனக் குடியரசுக்கு இலங்கை அங்கீகாரம் வழங்கியமை கொம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளைப் பொறுத்து இவ்வாறு அங்கீகாரம் வழங்கிய நாடுகளுள் இலங்கை முன்னணி வகித்தது.*

(ii) *1952இன் பிற்பகுதியில் இலங்கை கொம்யுனிஸ்ட் சீனாவுடன் ஒரு முக்கியமான வர்த்தக ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டது. இதன்படி ஐந்துவருட காலத்துக்கு இலங்கை சீனாவுக்கு குறிப்பிட்ட அளவு இறப்பரை விற்கும் எனவும் அதற்குப் பதிலாக சீனா இலங்கைக்கு அரசியினை வழங்குமெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்வொப்பந்தம் அண்மைக்காலம் வரையும் புதிப்பிக்கப்பட்டு வந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) 1956 - 1970

1956இல் இலங்கையில் நடந்த தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கூட்டு வெற்றி பெற்று ஒரு புதிய அரசாங்கத்தினை அமைத்ததோடு உள்நாட்டு அரசியல் பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டது போல் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. 1956இல் இலங்கையின் பிரதமராக பதவி ஏற்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா இந்தியப் பிரதமராய் இருந்த ஜவகர்லால் நேரு போன்று அணி சேராக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கினார். இவர் ஆட்சிக்கு வந்த குறுகியதொரு காலப்பகுதியினுள் பிரித்தானியாவோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி இலங்கையில் பிரித்தானியாவுக்கு இருந்த கடல், விமானப் படைத் தளங்களை அகற்றுவதில் வெற்றி கண்டதோடு கொம்னியூச நாடுகளோடு இராஜதந்திர தொடர்புகளையும் ஆரம்பித்து வைத்தார். திரு. பண்டாரநாயக்கா சர்வதேச பிரச்சினைகள் தொடர்பாக எடுத்த நிலைப்பாடுகள் இம்மாற்றத்தினைச் சுட்டிக்காட்டின. திரு. பண்டாரநாயக்காவின் வெளிநாட்டுக் கொள்கை அணுகுமுறை பின்வரும் இரண்டு அம்சங்களை உள்ளடக்கியிருந்தன:

(அ) ஒரு சமாதான காலப் பகுதி காணப்படின் கொம்னியூசம் முதலாளித்துவம் இரண்டும் மறைந்து உலகம் இவையிரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு மத்தியை நோக்கி நகரும். உ+ம் : ஜனநாயக சோசலிசம்

(ஆ) நடுவுநிலைத் தத்துவம்[8]

மேற்குறிப்பிட்ட தத்துவங்களின் அடிப்படையில் பண்டாரநாயக்கா இலங்கை எல்லாநாடுகளுடனும் சிநேகிதபூர்வமாக எவரின் எதிரியாகவும் இல்லாமல் இருக்க வேண்டுமென்று விரும்பினார். இதனால் அவர் சோவியத் யூனியன், சீனா என்பவற்றோடு இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்தார். மேலும் இலங்கைக்கு கொம்னியுச பிரசுரங்கள் இலக்கியங்கள் என்பவற்றை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கியதோடு கொம்னியூச நாடுகளோடு நெருங்கிய வர்த்தக தொடர்புகளையும் ஏற்படுத்தினார். இப்புதிய கொள்கைகளால் இலங்கையில் மேற்குநாட்டுச் செல்வாக்கு கணிசமானளவு குறைந்தது இத்தகைய கொள்கைகளையே திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலும் (1960 - 1964) பின்பற்றப்பட்டன.

தனது கணவரின் கொள்கைகளைப் பின்பற்றி திருமதி பண்டாரநாயக்கா காப்புறுதித்தாபனங்களை தேசீயமயமாக்கினார். இதனால் பிரித்தானியாவுக்குச் சொந்தமான சில கொம்பனிகளும் பாதிக்கப்பட்டன. ஆனால் எண்ணெய் (பெற்றோலிய) கொம்பனிகளைத் தேசிய மயமாக்குவதென இவ்வரசாங்கம் முடிவு செய்தபோதே தீவிரமான பிரச்சினைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தன. ஏனெனில் அவற்றுள் பல பிரித்தானியா அமெரிக்கா என்பவற்றுக்குச் சொந்தமானவை. தேசீய மயமாக்கப்பட்ட சொத்துக்களுக்கு நஸ்டஈடு வழங்குதல் என்பதில் உடன்பாடு காணமுடியாததால் 1963 பெப்ரவரியில் அமெரிக்கா இலங்கைக்கு பொருளாதார உதவி வழங்குவதை நிறுத்திக் கொண்டது. இந்நடவடிக்கையினால் மேற்கு நாடுகளோடு இலங்கை கொண்டிருந்த தொடர்புகளில் மாற்றங்கள் ஏற்படலாயிற்று. அத்தோடு 1963 இறுதியில் இவ்வரசாங்கம் இலங்கையின் கடற்பரப்பினுள் அமெரிக்காவின் 7வது கப்பற்படை பிரிவு வருவதையும் எதிர்த்தது.

இதனால் திருமதி பண்டாரநாயக்காவின் கூட்டுச் சேராக் கொள்கை அவரனது கணவரின் கூட்டுச் சேராக் கொள்கையிலிருந்து விலகிச் செல்வதாக விமர்சிக்கப்பட்டது. அதாவது கொம்னியுச நாடுகள் சார்பான வெளிநாட்டுக் கொள்கைக்கு மாறியது என கருதப்பட்டது. திருமதி. பண்டாரநாயக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் முக்கியமானது : இந்து சமுத்திரத்தை சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையாகும்.9

1965ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசீயக் கட்சி வெற்றி பெற்று டட்லி சேனநாயக்காவின் தலைமையில் தேசீய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வரசாங்கமும் முன்னைய அரசாங்கம் போன்று கூட்டுச் சேராமை எல்லா நாடுகளுடனும் சிநேகிதபூர்வமாக இருத்தல் என்பவற்றையே பின்பற்றும் என அறிவித்த போதிலும் வல்லரசுகளுடனான் தொடர்புகளைப் பொறுத்து இலங்கையின் நிலை அடிப்படையில் மாறத் தொடங்கியது.[10] டட்லி சேனநாயக்கா அரசாங்கம் அமெரிக்காவுடனான தொடர்புகளிலும் மாற்றங்களைக் கொண்டு வந்து அமெரிக்காவுடான தொடர்புகளை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்காக முன்னைய அரசாங்கம் தேசீயமயமாக்கிய எண்ணெய் கொம்பனிகளுக்கு நஸ்டஈடு வழங்குவதற்கான பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டது. அதற்கான நஸ்டஈட்டினை வழங்கியதால் 1966 பெப்ரவரியில் இருந்து அமெரிக்கா இலங்கைக்கு உதவி வழங்க முடிவு செய்தது.

(3) 1970 - 1977

1970களிலேயே கூட்டுச்சேரா இயக்கம் முக்கியத்துவம் பெற்று உலக அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க சக்தியாக பங்குவகிக்கத் தொடங்கியது. கைரோவில் நடந்த இரண்டாவது உச்சி மாநாட்டிலும் 1970இல் லுசாக்காவில் நடந்த மூன்றாவது உச்சி மாநாட்டிற்கும் இடையில் ஆறு ஆண்டுகள் சென்றன. எழுபதுகளில் கூட்டுச்சேரா இயக்கம் அத்தகைய நான்கு மாநாடு கண்டது. 1970 லுசாக்கா, 1973அ, 1976 கொழும்பு, 1979 காவன்னா அல்ஜிஅர்ஸ் இம்மாநாடுகளின் போதும் கூட்டுச்சேரா இயக்கத்தின் அங்கத்துவம் அதிகரித்து வந்து, காவன்னா மாநாட்டில் 95ஆக அதிகரித்தது.[11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுச்சேரா இயக்கத்தின் மற்றைய சிறிய நாடுகள் போலவே இலங்கையும் அங்கத்துவம் பெற்றமையும் கருத்தொடர்பாடுடனான தீர்மானம் எடுத்தல் என்பதும் வெளிநாட்டுக் கொள்கைத் தீர்மானம் எடுப்பதில் ஸ்தாபன ரீதியான அம்சம் மேலும் விரிவாக்கியதோடு ஒரு சிறிய என்பதால் ஏற்படும் கட்டுப்பாடுகளிலிருந்து விலகி பல மாற்றுக் கொள்கைகளைத் தெரிவு-செய்வதற்கும் வழிவகுத்தது. இலங்கை சிறிய நாடாக இருந்தபோதிலும் 1961ஆம் ஆண்டு கூட்டுச்சேரா இயக்கம் ஆரம்பித்ததிலிருந்து இலங்கை செயற்பாடு நிறைந்த பங்கினை வகித்து வந்தது. விசேடமாக 1970களில் கூட்டுச்சேரா கொள்கை தொடர்பாக புதிய பிரேரணைகளை இலங்கை முன்வைத்ததோடு அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் முன்னணிப் பங்கு வகித்தது.[12]

1970ஆம் ஆண்டு மே மாதத்தில் திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழ், பதவிக்கு வந்த கூட்டரசாங்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இலங்கைச் சமசமாஜக் கட்சி, கொம்னியூசக் கட்சி என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இக்கூட்டரசாங்கம் ஏற்றுக்கொண்ட பொதுக் கொள்கை ஒரு புதிய குடியரசு யாப்பினை அறிமுகம் செய்தல், காணிச்சீர்திருத்தம், அரச துறை சார்ந்த பொருளாதார அபிவிருத்தி என்பவற்றைக் கொண்டிருந்தது. இவற்றை நடைமுறைப்படுத்தல் கொள்கை உள்நாட்டுக் கொள்கையில் ஒரு இடதுசாரி அசைவினையே குறித்து நின்றதோடு வெளிநாட்டுக் கொள்கையிலும் ஒரு இடதுசாரி அசைவினைக் குறித்தது.[13]

1972இல் இவ்வரசாங்கத்தினால் புதிய குடியரசு யாப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த யாப்பு அரசாங்கத்தின் தேசிய மயமாக்கல் கொள்கை நடவடிக்கைகளையும் ஒரு சோசலிச சமூகத்தை உருவாக்கு-வதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. வெளிநாட்டுக் கொள்கையின் புதிய ஆரம்பம் விரைவில் தொடங்கி வைக்கப்பட்டது. 1970 மே மாதத்தில் இவ்வரசாங்கம் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு, வட வியட்நாம், வட கொரியா, தென் வியட்நாமிய புரட்சிகர அரசாங்கம் சிகானுக் அரசாங்கம் போன்ற-வற்றுக்கு இராஜதந்திர அங்கீகாரம் வழங்கியது. மரபுரீதியான கொள்கைப்படி சீனாவுடன் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன.

1976இல் கொழும்பில் நடக்கவிருந்த கூட்டுச் சேரா மாநாட்டிற்கு முன்னோடியாக பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா பாகிஸ்தான், ரூமேனியா, யூகோசிலாவியா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை கூட்டுச் சேராமையை அடிப்படையாகக் கொண்ட-தென்பதை தெளிவுபடுத்தினார்.[14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. 1977 - 1994

1977ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் முன்னர் ஒரு போதும் இல்லாத அளவு ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்தது. அத்தோடு இலங்கை தமிழ்ச் சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பிரதான எதிர் கட்சியாகியது. இலங்கையின் இரு பிரதான கட்சிகளுள் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றத்தில் எட்டு ஆசனங்களையே பெற்றது. இதனால் ஐக்கிய தேசியக் கட்சி தனது கொள்கைகளை நடைமுறைப்படுத்தத்தக்க பலமான ஒரு நிலையில் இருந்தது.

1977இல் பதவிக்கு வந்ததை உடன் உடுத்து ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசீயக் கட்சி அரசாங்கம் அரசாங்க கொள்கைப் பிரகடனத்தில் அது பின்பற்றவிருந்த கொள்கையினை பின்வருமாறு வெளியிட்டது :

> *"ஏகாதிபத்தியவாதம் காலனித்துவம் என்பவற்றின் எல்லா வெளிப்பாடுகளையும் எதிர்க்கும் ஒரு சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கை பின்பற்றப்படும் அது இலங்கையின் இறைமை ஒற்றுமை சுதந்திரம் என்பவற்றை பேணிப் பாதுகாக்க முயற்சிக்கும் 1955இல் பந்துங் இல் நடத்த ஆபிரிக்க ஆசிய மாநாட்டில் முதலாவதாக நிறைவேற்றப்பட்ட கூட்டுச்சேராமை தத்துவம் நடைமுறைப்படுத்தப்படும்"*[15]

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மேற்சொன்ன கொள்கைப் பிரகடனம் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் தொடர்ச்சியினைப் போதுமானளவு வெளிப்படுத்தியது. அதாவது கூட்டுச்சேராமையைப் பின்பற்றுவது தொடர்பாகத் தொடர்ச்சியை வெளிப்படுத்தியது மேலும் சர்வதேச கற்கைக்கான பண்டாரநாயக்க நிலையத்தின் பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோது ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் "சுதந்திரத்திலிருந்து இலங்கையில் பல அரசாங்கங்கள் பதவி வகித்தன. ஆனால் தொடர்ச்சியாக நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் தொடர்ச்சி இருந்து வந்துள்ளது. அதன் சில அம்சங்களில் சிறு வேறுபாடுகள் இருந்துள்ள போதிலும், கொள்கையில் தொடர்ச்சி இருந்து வந்துள்ளது"[16] என்று குறிப்பிட்டார்.

1977ஆம் ஆண்டு மே மாதத்தில் காவன்னாவில் நடத்த கூட்டுச்சேரா நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் பேசும் போது இலங்கையின் வெளிநாட்டமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீட், திருமதி பண்டாரநாயக்கா முன்னர் பிரேரித்த இந்து சமுத்திர சமாதான பிராந்திய பிரதேச பிரேரணையை ஆதரித்தமையும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் தொடர்ச்சியை எடுத்துக் காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு புதிய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகளில் ஒருமைப்பாடும் தொடர்ச்சியும் காணப்பட்டபோதும் இவ்வரசாங்கம் வேறு சில கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுப்பதில் வேறுபாடு காணப்பட்டது. உதாரணமாக அப்போதைய வெளிவிவகார உதவி மந்திரியாக திரு. ரணில் விக்கிரமசிங்க "இலட்சியங்களினதும் தத்துவங்களினதும் கடந்த கால அனுபவங்கள் அழிவுக்கு வழி வகுப்பதாக இருப்பதால் எமது கொள்கையில் திட்டவட்டமான பொருளாதார நோக்கிருக்கும்"[17] எனக் குறிப்பிட்டார். இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் வெளிநாட்டமைச்சர் தனது உரையொன்றின் போது "தமது வெளிநாட்டுக் கொள்கையை பொருளாதார வாய்ப்பின் ஒரு கருவியாக"[18] ஆக்குவேன் எனக் குறிப்பிட்டார்.

5. 1994 -

1994இல் பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இலங்கையின் அயல்நாடுகளுடனான தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கும் சார்க்கின் ஊடாக கூடியளவு பிராந்திய ஒத்துழைப்பினை ஏற்படுத்துவதிலும் பங்கு வகிப்பதில் முக்கியத்துவம் வழங்கியது. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான கடந்த காலத்தில் காணப்பட்ட அவநம்பிக்கை சந்தேகம் என்பவற்றை நீக்கி இரு நாடுகளுக்கிடையிலும் நின்று நிலைக்கக் கூடிய தொடர்புகளைக் கட்டியெழுப்ப முயற்சித்தது. சார்க்கினை உயர்ந்தளவு செயற்பாடு மிக்கதாக ஆக்குவதில் குறிப்பாக பொருளாதார கூட்டுறவினை ஏற்படுத்தச் செய்வதிலும் இலங்கை முன்னணிப் பங்கு வகித்தது. பிராந்தியத்தினுள்ளே மக்களுக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்புகளை விருத்தி செய்வதிலும் மற்றைய பிராந்திய குழுக்களான ஆசியான் ஐரோப்பிய சமூகம் என்பவற்றுடன் உறவுகளைப் பலப்படுத்துவதிலும் இலங்கை கவனம் செலுத்தியது.

சீனா, யப்பான், தென்கொரியா என்பவற்றுடன் மரபுரீதியாக இருந்து வந்த சினேக பூர்வமான நெருக்கமான தொடர்புகளை மேலும் உறுதியாக்கியதோடு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்துடன் பெருமளவு ஆக்கபூர்வமான தொடர்புகளை உருவாக்குவதிலும் விசேட கவனம் செலுத்தியது. இப்பிராந்தியத்திலுள்ள பல நாடுகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் வெளிநாட்டமைச்சர் கதிர்காமரும் விஜயம் செய்துள்ளனர். இத்தகைய விஜயங்கள் அரசியல பரிணாமத்தினை விட பொருளாதார ரீதியில் செழிப்பான பெறுபேறுகளை எற்படுத்தியுள்ளன. தாய்லாந்து, மியன்மார், இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கு 1995 - 96ஆம் ஆண்டில் உயர்மட்ட வர்த்தக தூதுக் குழுக்களுடன் விஜயம் செய்தபோது இந்நாடுகளிலிருந்து முதலீடு செய்யக் கூடிய குழுக்களை இலங்கை வந்து கூட்டு முயற்சிகளை ஆரம்பிக்க முடியுமா என்பதை அறிவதற்கு அழைப்பு விடுத்தனர். இம்முயற்சிகள் பின்னர் பலன் தர ஆரம்பித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997 செப்டம்பரில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மலேசியாவுக்கு விஜயம் செய்த போது இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். அது கிட்டத்தட்ட 50,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கக் கூடியது. அதற்கு முன்னர் தென்-கொரியாவுக்கு விஜயம் செய்தபோது செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி 10,000 இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பு பெறக்கூடிய சாத்தியம் ஏற்பட்டது. உதவியும் கடனுமாக சுமார் 1.5 பில்லியன் ரூபாய்கள் வரை கிடைத்தது. மணிலாவில் திரும்பவும் இலங்கைத் தூதரகம் திறப்பதற்கும் முடிவு எடுக்கப்பட்டது.

1997ஆம் ஆண்டு யூனில் இலங்கை தனது வெளிநாட்டுத் தொடர்பு-களில் ஒரு புதிய பரிணாமத்தையும் ஏற்படுத்தியது : இலங்கை, தாய்லாந்து, வங்காளதேசம், இந்தியா என்பன சேர்ந்த பொருளாதார கூட்டுறவில் சேர்ந்-ததன் மூலம் தென் ஆசியாவுக்கும் தென்கிழக்கு ஆசியாவுக்குமிடையில் ஒரு புதிய பாலம் அமைக்கப்பட்டது. இக்காலக்கட்டத்தில் மத்திய கிழக்கு நாடுகளுடனான இராஜதந்திர தொடர்புகளிலும் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. குறிப்பாக இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வசதிகள் பெற்றுச் சென்றவர்களின் தேவைகளைக் கண்காணிக்க ஆரம்பிக்கப்பட்ட ஆலோசனை நிலையங்களோடு சம்பந்தப்பட்டவையாகும்.

1977ல் ஜனாதிபதி மேற்கொண்ட குவைத்துக்கான விஜயம் மத்திய கிழக்கு நாடுகளுடனான சிநேக பூர்வமான தொடர்புகளை மேலும் வளர்க்க உதவியது.

இலங்கையின் இராஜதந்திர வரலாற்றில் 1996இல் தென்னாபிரிக்கா-வுடன் ஆரம்பிக்கப்பட்ட இராஜதந்திர தொடர்புகளும் 1997 செப்டம்பரில் நிரந்தர தூதுவராலயம் திறக்கப்பட்டமையும் முக்கியமான நிகழ்வுகளாகும். இக்காலக் கட்டத்தில் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் தென் ஆபிரிக்கா, எகிப்து போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்த போது எகிப்துடன் பாதுகாப்பு கூட்டுறவு சம்பந்தமாக ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது பயங்கரவாதத்தினை எதிர்ப்பது போதைப் பொருட்கள் கடட்தலைத் தடுப்பது என்பவற்றோடு சம்பந்தப்பட்டதாகும்.

ரஷ்யக் குடியரசுடன் நெருக்கமான உறவினைப் பராமரிக்கும் அதே வேளையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்னயை சோவியத் யூனியனிலுள்ள மற்றைய குடியரசுகளுடனும் தொடர்புகளைப் பலப்படுத்த முயற்சித்துள்ளது. இக்குடியரசுகளுடன் இரு தரப்பு தொடர்புகளை விரிவாக்குவதற்கான குறிப்பாக பொருளாதாரத்துறையில் பேச்சுவார்த்தை-களை வெளிநாட்டமைச்சர் நடத்தியுள்ளார்.

மேற்கு ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுடனான தொடர்புகள் இலங்கையின் மிகவும் மோசமான மனித உரிமை மீறல்கள் காரணமாகப் பின்னடைந்திருந்தன. அண்மைக் காலத்தில் தப்பபிப்பிராயங்கள் நீக்கப்பட்டு தொடர்புகள் அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்துள்ளன. இவை சிறப்பான அரசியல் புரிந்துணர்வுக்கு மாத்திரமல்ல பொருளாதாரத் தொடர்புகளுக்கும் வழிவகுத்துள்ளன. உடுதுணி ஏற்றுமதியினைப் பொறுத்து இலங்கைக்கு நன்மை தரும் விதத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய சமூகம் என்பவற்றிடமிருந்து ஏற்றுமதிக்கான கேள்விகளைப் பெற்றுள்ளது. இந்நாடுகளது தலைநகரங்களுக்கும் லட்சம் பேர்க்குக்கும் வெளிநாட்டமைச்சர் மேற்கொண்ட விஜயத்தின் பயனாக இலங்கையினது சமாதான முயற்சிகளுக்கு ஆதரவைத் தேடிக் கொண்டதோடு இலங்கையின் பொருளாதார நலன்களையும் ஊக்குவிக்க முடிந்தது.

அடிக்குறிப்புகள்

1. A. Appadorai, *The Domestic Roots of India's Foreign Policy* (Delhi : Oxford University Press, 1983) p. 1.
2. Ibid., p.3
3. Ibid., p.1
4. Ibid., p.4
5. Kodikara, S. U. Foreign Policy of Sri Lanka : *A Third World Prespective* (Delhi: Chanakya Publication) p 1.
6. A. Appadorai, Op.cit p. 4.
7. Kodikara, S. U. Op.cit p. 14
8. Ibid, p. 16
9. Ibid, p. 48
10. Ibid, p. 101
11. V.L.B. Mendis, *Foreign Relations of Sri Lanka*, p.
12. Ibid, p. 37
13.
14. Kodikara S. U. op.cit.. 142.
15. Indian Defence studies Analysis, *New Review on South Asia and India Ocean*, Jan., Dec., 1977, p. 139.
16. Ceylon Daily News, 15th May, 1980.
17. Ceylon Daily News, 16th March, 1978.
18. Ibid 16th March 1978.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவின் இயற்கை வளங்களும் சுற்றாடல் மாசாக்கமும்

மொழிபெயர்ப்பாளர்கள் :

ஏ. நஸீர் அகமட்

சஞ்சீவி சிவகுமார்

அறிமுகம்

கடந்த 30 ஆண்டுகளில் ஆசியா அதன் காட்டு வளத்தில் பாதியளவை இழந்துள்ளது. காட்டு வளத்துடன் சேர்ந்து காட்டுச் சாகித்தியத்திற்குரிய எண்ணிலடங்காத தாவர விலங்கு இனங்களையும் இழந்துள்ளது. மூன்றில் ஒரு பங்கு விவசாய நிலம் சீரழிக்கப்பட்டுள்ளது. மீன் இனங்களின் இருப்பு 50 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. உலகில் வேறெந்த பிரதேசத்திலும் இல்லாத அளவு மிக கடுமையாக மாசாக்கமடைந்த நகரங்களும், உலகில் மிகவும் மாசாக்கலுக்குட்பட்ட ஆறுகள், ஏரிகள் என்பனவும் ஆசியாவிலேயே காணப்படுகின்றன. சுருக்கமாக நோக்கினால் ஆசியா மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகின்றது. இதனால் பொருளாதார ரீதியில் அபிவிருத்திப் போக்கையும், செல்வத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்ற அதேவேளை அழுக்கடைவதும், சூழலியல் பின்னடைவும், பாரிய சுற்றாடல் பாதிப்பும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இது வியப்புக்குரிய ஒன்றல்ல. ஏனெனில் மேற்கு ஐரோப்பா, வட-அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் கைத்தொழில் மயமாதலுக்கு உட்பட்ட அதே காலப்பகுதியில் அவற்றின் சுற்றாடலும் பாதிப்புக்குள்ளானது. 1950களில் லண்டனின் அடர்பனியும் ஐரோப்பாவில் கணக்கில்லாமல் காடுகள் அழிக்கப்பட்டமையும் நியூயோர்க் டோக்கியோ ஆகியவற்றில் சன நெரிசலும் மாசாக்கமும் பழங்கதைகள் ஆகும். செல்வ வள உயர்வு என்பது தனியே பொருளாதார நடவடிக்கைகளின் விரிவை மட்டும் குறிப்பதன்று. அதற்கும் மேலாக அது பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றத்தையும் குறிக்கின்றது. அதாவது செறிவு குறைந்த ஜீவனோபாய விவசாயத்திலிருந்து செறிவான விவசாயம், மற்றும் கைத்தொழில் துறைக்கு இம்மாற்றம் நடைபெற்றுள்ளதைக் குறிக்கின்றது. ஏனெனில் ஆசியாவின் பொருளாதாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறெங்குமில்லாதவாறு மிக வேகமாக அபிவிருத்தியடைந்துள்ள அதே வேளையில், சுற்றாடல் மிகமோசமான தாக்கத்தை அடைந்துள்ளது. இயற்கை ஒரு குறிப்பிட்ட அளவில் மட்டுமே வளங்கள் பாதிக்கப்படுவதையும் மாசுக்கள் சேருவதையும் தாக்குப்பிடிக்கும். ஆனால் சூழல் ஒன்றிப்போகும் மட்டத்திற்கு மேலாக வளம் பயன்படுத்தப்படும் வீதம் அல்லது சூழல் மாசாக்கப்படும் வீதம் அதிகரிக்கும்போது சூழலைப் பேணிக் காப்பதற்கான படிமுறைகள் எடுக்கப்படாத வரை சூழல் சிதைவுக்கும் அழிவுக்கும் உள்ளாவது தவிர்க்க முடியாததாகும்.

ஆசியாவின் சுற்றாடல் பிரச்சினைகள் தனியே அபிவிருத்தியின் துரிதவளர்ச்சியினால் ஏற்பட்டதல்ல. அதேபோல் பொருளாதார மந்த வளர்ச்சி சிறந்த சுற்றாடலுக்கான உத்தரவாதமும் அல்ல. உதாரணத்திற்கு மந்த வளர்ச்சியையுடைய தென்ஆசியா துரித வளர்ச்சியடைந்து வரும் கிழக்காசியாவைப் போலவே மேற்சொன்ன சூழல் பிரச்சனைகளால் அவஸ்தைப்படுகின்றது. ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும்போது சுற்றாடல் பாதிக்கப்பட்டாலும் துரித வளர்ச்சியானது வறுமையை நீக்குவதற்கு மிகச்சிறந்த மார்க்கமாகும். மேலும் அதிகரித்த வருமானம் மக்களின் சுற்றாடல் பாதுகாப்புக்காகச் செலவிடும் தரத்தை உயர்த்தும் என்று கூற முடியாவிட்டாலும் அதற்காக முதலிடும் வளத்தை உருவாக்கும் என்று கூறலாம். இதிலும் ஆசியாவின் தவறான செயற்பாட்டு பகுதிகள் இரண்டைக் காணமுடியும்.

முதலாவது, நீண்டகாலமாக ஆசிய கொள்கை ஆக்குனர்கள் (Asian policy makers) துரித வளர்ச்சியின் மூலமான சுற்றாடல் தாக்கம் பற்றி புறக்கணித்து வந்துள்ளனர். ஆயினும் மாசடைதல், அழிவுக்குள்ளாதல் குறித்து முன்னுரிமையற்ற கருதுதலே பொதுவாக அவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. நடைமுறையில் அரசாங்கங்களின் மனோநிலை இப்போது வளர்ச்சியடைவோம், பின்னர் சுத்தத்தைக் கவனிப்போம் என்பதாகவே அமைந்துள்ளது. தூய்மையான சுற்றாடலுக்கான பொதுசனங்களின் முனைப்பு நாட்டின் வருமான அதிகரிப்பு மந்தமாய் இருப்பதையே ஆதரிக்கிறது. இருந்தபோதிலும் அரசாங்கத்தின் கவனக்குறைவே இங்கு பிரச்சினையாகும். தூயகாற்று. நீர் என்பன முக்கியமான பொதுப்பண்டங்கள் ஆயினும் கூட ஆசிய அரசாங்கங்கள் தமது துரித வளர்ச்சியால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புக்களைப் பார்த்துக் கொண்டிருப்பதுடன் மாசடைதலை அனுமதித்தல், கழிவுகள் சேருதல், வளங்கள் சுரண்டப்படுதல் என்பவற்றைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் பொதுக் கொள்ளைகளையும் தடுக்கின்றன.

இரண்டாவதாக அரசாங்கங்கள் ஒரு தடவை குறித்த ஒரு சுற்றாடல் ஒழுங்கமைப்புக்குப் பொருந்திவிட்டால் பின்னான காலங்களில் திறனற்ற முறையில் திட்டமிடப்படுவதனையும் சரியற்ற நடைமுறையாக்கலையும் செய்கின்றன. கைத்தொழில் நாடுகளிலும் இதேபோல பல அனுபவங்கள் காணப்படுகின்றன. இன்னும் ஆசிய அரசாங்கங்கள் கைத்தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிலிருந்து இதனைக் கற்றுக் கொள்ளவில்லை போல் தோன்றுகின்றது. அதேவேளை ஆசிய கொள்கை ஆக்குனர்கள் நவீனகரமான சுற்றாடல் நியமங்களையும், திட்பமான ஒழுங்காக்கும் முறைகளையும் அறிமுகப்படுத்தியதுடன் அடிக்கடி இந்நியமங்களைக் கண்காணிப்பதையும் அல்லது அதனைக் கட்டாயப்படுத்தித் திணிப்பதையும் செய்தும் வந்தனர். வேறுவிதமாகச் சொல்வதானால் ஆசியாவின் சுற்றாடற் கொள்கைகளை அமுல்படுத்தும் நிறுவன கொள்ளளவு குறைபாடுடையதாகவே காணப்பட்டு வந்துள்ளது.

இதன் அடிப்படையில் பார்க்கும்போது பிரதான முடிவு சுற்றாடல் முகாமைத்துவத்தை நோக்கிய புதிய அணுகுமுறைதான் ஆசியாவில் சுற்றாடல் சேதப்படுத்தப்படுவதை குறைப்பதில் பெரும்பங்கு வகிப்பதாயிருக்கும் என்பதாகும். இப்பிரதேசத்திற்குத் தேவையாயிருப்பது சுற்றாடல் முகாமைத்துவத்திற்கான புதிய மாதிரி ஆகும். அது கடைப்பிடிப்பவர்களுக்கு ஊக்குவிப்பு செய்து நம்பிக்கை ஊட்டக் கூடியதாகவும், அரசாங்க ஒழுங்கு முறைகளுக்குட்பட்ட இலக்குடையதாகவும், அமுல்படுத்துதலையும் கொண்டதாயிருக்க வேண்டும்.

சகல பொருளாதார நிறுவனங்களுக்கான கொள்கைகளும் கட்டாயமாகச் சுற்றாடலைக் கருதுவதாயிருப்பதுடன் நெகழ்ச்சியுடையதாகவும், சந்தை அடிப்படையிலான அணுகுமுறையைக் கொண்டதாகவும் அதாவது ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி சுற்றாடல் முகாமைத்துவத்திற்குப் பிரயோகிக்கக் கூடியதாகவும் அமைக்கப்படல் வேண்டும். ஆசியாவால் சூழலைப் பெரிதளவில் புறக்கணிக்க முடியாது. ஆயினும் கூட அது சுற்றாடலின் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக தனது வளர்ச்சியை ஒருபோதும் தியாகம் செய்யக் கூடாது. ஆசியாவின் சுற்றாடல் தோல்வி எதனால் எனில் சீர்திருத்தங்கள் பொருளாதாரம் சுற்றாடல் இரண்டையும் நன்மை பெறச் செய்ய முனைவதால் ஆகும்.

ஆசியாவின் சுற்றாடலின் சமகால நிலை

உலகிலேயே மிகவும் மாசுறுதலுக்கும் சுற்றாடல் பாதிப்புக்கும் உட்பட்ட பிரதேசம் ஆசியாவே ஆகும். ஆயினும் ஆசியாவின் எல்லாப் பாகங்களும் சமமாக மாசுபடுத்தப்படவில்லை. அத்துடன் இப்பிரதேசத்தின் எல்லா சுற்றாடல் சுட்டிகளும் மோசமானதாகவும் இல்லை. சுற்றாடல் பிரச்சினைகளின் வீச்சு, கிராம நிலம் மாசுறுத்தப்படுவதனாலான பாதிப்பு முதல் மீநகர (Mega city) நெருசல் வரை விசாலித்துள்ளது. சில பகுதிகளில் பசுபிக் தீவுகளில் கடல் மட்டம் உயர்வது முதலான தனித்துவமான பிரச்சினைகளும் உள்ளன. நீர் மாசடைதல் போன்ற சுற்றாடல் பிரச்சினைகள் உள்ளூரில் உருவாக்கப்படுகின்ற அதேவேளை வெளியிலிருந்தும் எதிர்பார்க்காத சில சுற்றாடல் தாக்கங்களும் வந்து சேரலாம். உதாரணத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சீனக்குடியரசினால் பெருவாரியாக நிலக்கரி எரிக்கப்பட்ட நிகழ்வு ஜப்பான், கொரியா முதலான நாடுகளில் அமில மழையை தோற்றுவித்தமை-யைக் குறிப்பிடலாம்.

வளிமாசடைதல்

உலகிலுள்ள அழுக்கடைந்த நகரங்களுள் ஆசிய நகரங்களின் வளியே மிகவும் மாசடைந்ததாகக் காணப்படுகின்றது. புகை, தூசி முதலான சுற்றயல் துணிக்கைகள் உலக சராசரியின் இரட்டிப்பாக இருப்பதுடன் கைத்தொழில் நாடுகளிலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் பார்க்க ஐந்து மடங்கு அதிகரித்த அளவாகவும் இது காணப்படுகின்றது. ஆசிய நாடுகளில் வாகனங்களிலிருந்து வெளிவிடப்படும் ஈயம் பாதுகாப்பு மட்டத்திற்கு மேலுள்ளது. ஈயம் குருதி நஞ்சாதலைத் தோற்றுவிப்பதுடன் சிறுவர்களில் உணர்திறன் அபிவிருத்தியையும் பாதிக்கின்றது. இறுதியாக சுற்றாடலின் So_2 மட்டம் அமில மழையைத் தோற்றுவிக்கும் ஒரு முக்கியமான குறுக்குக் கரை தாண்டிய (cross border) மாசாக்கியாகும். இது ஏற்படுத்தும் பயிரழிவும் செயற்கைக் கட்டமைப்பாக்கமும் ஆபிரிக்க, இலத்தீன், அமெரிக்க நாடுகளிலும் பார்க்க ஆசிய நாடுகளில் 50 சதவீதம் உயர்வாகும். இப்படி இருப்பினும் இவை கைத்தொழில் நாடுகளிலும் பார்க்க மூன்றில் ஒரு பங்கு மட்டத்திலேயே காணப்படுகின்றன.

வளி மாசடைதல் மட்டம் உலக சுகாதார அமையத்தினால் (WHO) விதந்துரைக்கப்பட்ட நியம வளிமண்டல பண்பளவை விட திட்டவட்டமாக உயர்ந்து காணப்படுகின்றது. ஆசியாவில் உள்ள 11 மீநகரங்களில் 10 மீநகரங்களின் வளி கொண்டுள்ள துணிக்கைகளின் அளவு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஈய அளவை விட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரித்-திருப்பதுடன் தாங்கக் கூடிய அளவை விட மூன்று மடங்கு ஓசோன் (மற்றும்), SO_2 மட்டத்தை எட்டியுள்ளதாகவும் தெரிகிறது. துணிக்கை மாசாக்கிகளின் மொத்த வீச்சுக்கும் சராசரி மட்டத்திற்கும் ஏற்ப நிரல்படுத்தப்பட்டுள்ள 41 உலக நகரங்களில், மிக அழுக்கான 15 நகரங்களில் 13 நகரங்கள் ஆசியாவிலேயே உள்ளன. 1990க்கும் 1993 க்குமிடைப்பட்ட காலப்பகுதியில் பூகோள சக்தி நுகர்வு ஒரு சதவீதத்தினால் குறைவுபட்டுள்ள அதே வேளையில் ஆசியாவில் 6.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஆசியா அதிகப்படியான சக்தி நுகர்வைக் காட்டுவதனாலும் அதிலும் முக்கியமாக நிலக்கரி, எண்ணெய் முதலான காபனை அதிகம் கொண்ட சக்தி முதல்-களை உபயோகிப்பதனாலும் CO_2 வாயுவின் வெளியீடு மிக அதிகரித்-துள்ளது. குறிப்பாக ஆசியாவின் இராட்சத பொருளாதார நாடுகளான சீனாவும் இந்தியாவும் நிலக்கரியில் மிகவும் தங்கியிருக்கின்றன. இதன் விளைவாக காலநிலை மாற்றத்திற்குப் பொறுப்பான பச்சை இல்ல வாயு வெளியேற்றம் (Green House effect) ஆசியாவில் உயர்வான வீதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துள்ளன. ஆசியாவின் CO_2 வெளியேற்ற வளர்ச்சி சராசரி உலக வளர்ச்சியிலும் நான்கு மடங்கு வேகமானது. ஆனால் உலக சராசரி ஆள்வீத CO_2 வெளியேற்றத்திலும் அரை மடங்கு குறைவானதாகக் காணப்படுவதுடன் பொருளாதார கூட்டுறவுக்கும் அபிவிருத்திக்குமான அமைய (OECD) நாடுகளின் மட்டத்தில் இது 15 சதவீதமே ஆகும். அதுமட்டுமன்றி 1970 களிலிருந்து ஆசியாவின் கைத்தொழில் வெளியேற்றம் மொத்தத்தில் 60 சதவீத வேகமாகவும் அமைந்துமிருக்கின்றது.

ஏனைய மாசாக்கிகளைக் கருதும்போது நிலைமை மேம்பட்டதாகக் காணப்படுகிறது. ஈயமற்ற எரிபொருட்களின் அறிமுகம் உலகில் சராசரி ஈய மாசின் அளவைக் குறைத்தபோதிலும் ஈய மாசாக்கம் உயர்வாகக் காணப்படுகின்ற ஆசியாவில் இக்குறைவுபடும் வீதம் சிறிதளவாகவே காணப்படுகிறது. துணிக்கை மாசாக்கிகளின் அளவு கூட 1971 க்கும் 1975 க்குமிடைப்பட்ட அளவை விட 1991 க்கும் 1995 க்குமிடைப்பட்ட காலப்பகுதியில் 40 சதவீதம் குறைவுபட்டே காணப்பட்டது.

வளி மாசுபடும் அளவு கூட பிரதேசத்திற்குப் பிரதேசம் கணிசமான அளவில் வேறுபட்டுள்ளது. துணிக்கை மாசுக்களின் அளவு தென் ஆசியாவில் உயர்வாகவும் தென்கிழக்கு ஆசியாவில் இடைமட்டத்திலும், ஆனால் அதிகரிப்பு வீதத்துடனும் கிழக்கு ஆசியாவில் ஓரளவு குறைவாகவும் காணப்படுகின்றது. ஈய மாசுக்களின் அளவு தென்கிழக்கு ஆசியாவில் உயர்வாகவும், தென் ஆசியாவில் இடைத்தரத்திலும். மக்கள் சீனக்குடியரசில் குறைவாகவும் காணப்படுகின்றது. விதிவிலக்காக சில கிழக்கு நகரங்களில் இது மிகையாக உயர்வடைவதையும் காணமுடிகின்றது. SO_2 மாசாக்கம் மிகப்பார தூரமானதாகவும் கிழக்கு ஆசியாவில் உயர்வடையும் நிலையிலும் காணப்படுகின்றது. ஆயினும் இம்மாசுக்களில் பெரும்பகுதி வெளிப் பிரதேசங்களிலிருந்தே தோற்றுவிக்கப்படுபவையாகும். இவை இந்தியா, மக்கள் சீனக் குடியரசு, தென்கிழக்கு ஆசியா ஆகியவற்றில் இடைமட்டத்தில் காணப்பட்ட போதிலும் சீனாவின் கிழக்குப் பகுதி, வடகிழக்கு இந்தியா, தாய்லாந்து முதலான சில பகுதிகளில் மிகையாகவும் காணப்படுகின்றது. இந்த SO_2 அளவு மாறுபாடு உள்ளூர் வலு நிலையங்களிலும், கந்தக நிலக்கரியினை பிரதான சக்தி முதலாக உபயோகிக்கும் கைத்தொழில் நிலையங்களிலுமே பிரதானமாகத் தங்கியுள்ளது. சுருக்கமாகச் சொல்லப்போனால் வளிமண்டலத்தின் தரத்தினை உயர்த்துவது என்பது தென்ஆசியா, சீனா என்பவற்றின் துணிக்கை மாசுக்களையும், தென்கிழக்கு ஆசியாவில் ஈயமாசுக்களையும், கிழக்கு ஆசியாவிலும், கிழக்குச் சீனாவிலும் SO_2 மாசுக்களையும் மட்டுப்படுத்துவதாகவே அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவை விரட்டும் மாசுமயமேகம்

இந்து மாகடலின் மேல் படிம எரிபொருட்கள் நிறைந்ததும் CO_2 செறிந்ததுமான மேகக் கூட்டம் தடிப்பான படலமாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக சூரியக் கதிர்கள் பெருமளவில் தடுக்கப்பட வாய்ப்புள்ளது. இதன் விளைவாக இந்து சமுத்திரத்தின் வெப்பநிலை 10^0C இனால் குறையும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கடல்வாழ் உயிரினங்கள் அழிவுக்கு உள்ளா-வதுடன் கடல்நீர் ஆவியுயிர்ப்பு குறைவடைவதற்கும் வாய்ப்பாகும். இதன் காரணமாக மழைவீழ்ச்சி பெரிதும் பாதிக்கப்படும் எனவும் அஞ்சப்படுகிறது.

நீர் மாசடைதல்

உலகின் மற்றைய பகுதிகளைவிட ஆசியாவின் ஆறுகள் மிக மாசாக்கப்பட்டுள்ளதையே கணிப்பீடுகள் காட்டுகின்றன. தொங்கலாகக் காணப்படும் திண்மக் கழிவுகள் ஆறுகளை மாசுபடுத்தும் ஒரு வகைப் பதார்த்தங்களாகும். பூகோளச் சுற்றாடல் கண்காணிப்பு சட்டங்களின்படி ஆசியாவின் ஆறுகள் உலக சராசரியை விட 4 மடங்கு தொங்கல் திண்மங்களைக் கொண்டிருப்பதுடன் பொருளாதார கூட்டுறவுக்கும் அபிவிருத்திக்குமான நாடுகளின் (OECD) மட்டத்திலும் இது 20 மடங்கு உயர்வானதாகும்.

சேதனக் கழிவுகள் குறிப்பானவொரு நீர்மாசாகும். பெருமளவு சேதனக் கழிவுகளைக் கொண்ட ஆறு அல்லது ஏரிக்கு அதனை பிரிந்தழியச் செய்வதற்குப் பெருமளவு ஒட்சிசன் தேவைப்படும். இந்த சேதனக் கழிவு-களின் அளவானது உயிரியல் ஒட்சிசன் கேள்வி (Biological Oxygen Demand) மூலம் அளவீடு செய்யப்படுகின்றது. உயர் உயிரியல் ஒட்சிசன் கேள்வி என்பது உயர் அளவில் மாசாக்கப்பட்ட ஆறு அல்லது ஏரியைக் குறிக்கும். ஆசியாவின் உயிரியல் ஒட்சிசன் கேள்வி உலக சராசரியிலும் பார்க்க 1.4 மடங்குகளாக உள்ளது. அத்துடன் இது லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் பார்க்க பலமடங்கு உயர்வாகவும் உள்ளது. குறிப்பாக ஆசியாவின் ஆறுகள் உலகச் சராசரியிலும் பார்க்க மூன்று மடங்கு அதிகப்படியான அளவில் மனிதக் கழிவுகளிலிருந்தான பக்ரீரியாக்களைக் கொண்டதாகக் கணிப்-பிடப்பட்டுள்ளது. ஆசிய ஆறுகளில் காணப்படும் சராசரி Fecal coliform எண்ணிக்கை உலக சுகாதார திணைக்கள விதந்துரையிலும் பார்க்க 50 மடங்கு உயர்வாக உள்ளது. இறுதியாக ஆசியாவின் மேற்பரப்பு நீர், பொருளாதார கூட்டுறவு அபிவிருத்தி நாடுகளின் (OECD) மேற்பரப்பு நீரை விட 20 மடங்கு கைத்தொழில் கழிவுகளிலிருந்து பெறப்பட்ட அதிகளவு ஈயத்தைக் கொண்டுள்ளது. மனிதவிலங்கு கழிவுகள் அல்லது நைதரசன் வளமாக்கிகளின் மேற்பரப்பு ஓட்டம் காரணமாக நைதரசன் மட்டம் மட்டுமே மற்றைய உலக நாடுகளைவிட ஆசியாவில் குறைவாகக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவுக்குள்ளேயே நீர் மாசடைதலின் தன்மையும், அவற்றின் பாரதூரமும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. தொங்கும் திண்மக் கழிவுகளின் மட்டம் மக்கள் சீனக்குடியரசில் அதிகமாகவுள்ள அதேவேளை Fecal coliform எண்ணிக்கை இந்தியாவிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் உயர்வாகக் காணப்படுகிறது. இந்தியா உட்பட தென் ஆசியாவில் நைத்திரேற்று மிக முக்கிய பிரச்சினையாகும். அதேவேளை தென்கிழக்கு ஆசியாவில் ஈயம் மிகமோசமான நிலையிலுமுள்ளது.

நீர் மாசடைதலானது பல மூலங்களைக் கொண்டுள்ளது. பரிகாரம் செய்யப்படாத மாநகர சபைக்கழிவுகள், கைத்தொழில் வெளியேற்றங்கள், நகர மற்றும் விவசாய நடவடிக்கைகளாலான மேற்பரப்பு நீரோட்டக் கழிவுகள் என்பன ஆசியாவில் பிரதானமான மாசாக்கும் வழிகளாகும். இது தவிர கழிவு நீர் பரிகார முறைகளும் குறைவாகக் காணப்படுகின்றது. (உதாரணத்திற்கு பீஜிங், மணிலா ஆகிய இடங்களில் 10 முதல் 15 சதவீதம் வரையிலான கழிவு நீர் மட்டுமே பரிகரணம் செய்யப்படுகின்றது. இதுவே ஆசியாவின் நியமங்களில் உயர்ந்த அளவாகும்.) பரிகரணம் செய்யப்படாத நகரக்கழிவு நீர் என்பது நகரங்களிலிருந்து வரும், நுண்ணங்கிகளையும், சேதனப் பொருட்களையும், பார உலோகங்களையும், ஏனைய மாசாக்கி-களையும் கொண்ட மேற்பரப்பு வடிகால் நீராகும்.

ஆசியாவின் நீர் மாசடையும் போக்கு அனுமதிக்க முடியாததாகும். 1970களின் பின்னிருந்து தொங்கும் திண்மங்களின் அளவு உலகின் ஏனைய பகுதிகளில் அத்துணை மோசமாக இல்லாத போதிலும் ஆசியாவில் 4 மடங்கு அதிகரித்துள்ளது. 1980களில் உயிரியல் ஒட்சிசன் கேள்வியில் Biological oxygen demand (BOD) குறைவினை அடைந்திருந்த போதிலும் 1990களில் இது நீடிக்கவில்லை. மாசாக்கப்பட்ட நீரினால் விளைவிக்கப்படும் பல தீவிரமான சுகாதார ஆபத்துக்கள் மாநகர நீர் வழங்கல், சுகாதார சேவைகளால் பாதுகாப்பான நீரினை வழங்குவதன் மூலம் குறைவாக்க முயற்சிக்க முடியும். இதிலும் கூட ஆசியாவின் சாதனைகள் குறைவே ஆகும். உலகில் ஆபிரிக்கா தவிர்ந்த ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஆசியாவில் நல்ல குடிநீர் கிடைக்கும் மக்கள் சிறுபங்கினரே எனலாம். மூன்றில் ஒரு பங்கு ஆசியாவினர்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை. நீர் வழங்கல் நாளில் சில மணிநேரத்திற்கு மட்டுப்பட்ட சேவையாக வீட்டிலிருந்து 200m தூரத்திற்குள் கிடைக்கக் கூடியதாக இருந்தபோதிலும் அடிக்கடி இது தடைப்படுதல், நம்பியிருக்க முடியாமை என்பனவும் காணப்படுகின்றது. நல்ல குடிநீர் வழங்கல் இந்தியா உட்பட தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளில் கீழ் நிலையிலேயே காணப்படுகின்றது.

சுகாதார சுத்திகரிப்பு, நீர் வழங்கலை விட கீழ்மட்டத்திலேயே காணப்படுகின்றது. ஏறக்குறைய அரைப்பங்கு ஆசியர்கள் சுகாதார சுத்திகரிப்பு சேவைகளைப் பெறவில்லை. இச்சேவை வழங்கப்படும் இடங்களில் கூட வீட்டுக் கழிவுகள் சேகரிக்கப்படுவது, பரிகரிக்கப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையாக மந்தமாகவே இருப்பதனால் மேற்பரப்பு நீரிலும் நிலங்கீழ் நீரிலும் கழிவுகள் கலக்கின்றன. இந்த நிலைமை தென் ஆசியாவிலும் மத்திய ஆசிய குடியரசுகளிலும் மக்கள் சீனக் குடியரசிலும் மிக மோசமாகக் காணப்படுகின்றது.

திண்ம மற்றும் தீங்கான கழிவுகள்

மக்களின் செல்வவள அதிகரிப்பு, கழிவுப் பொருட்களின் தேங்குதலை அதிகரிக்கின்றது. அத்தோடு, வருமான உயர்வு மக்களின் நுகர்வு அளவை மட்டும் மாற்றாமல் அதன் தன்மையையும் மாற்றுகிறது. தாமாக செய்கை பண்ணிய உணவிலிருந்து கொள்வனவு செய்யும் உணவுக்கு மாறியது. ஆகார உணவிலிருந்து இறைச்சி உணவுக்கு நகர்ந்தது மற்றும் நுண்ணங்கிகளால் பிரிந்தழியக் கடினமான பொதியிடல் என்பனவெல்லாம் வருமான அதிகரிப்பு காரணமாக மாநகர சபைக் கழிவு அதிகரிப்பதுடன் தொடர்புடையதாக இருப்பதையே காட்டுகின்றன. வருமானம் அதிகரிக்கும் போது பிரிந்தழியக் கடினமான கழிவுகளின் அளவு அதிகரிக்கின்றது. உதாரணம்: உலோகம், கண்ணாடி, பிளாத்திக்கு....... ஆய்வு ஒன்றின்படி சரியாக ஒருசதவீத வருமான அதிகரிப்பு 0.34 சதவீத மாநரசபை கழிவு அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது. ஆகவே வேகமாக அதிகரிக்கும் ஆசியாவின் வருமானம் மிகமோசமான திண்மக் கழிவுகளைத் தேக்கும் என்பது வெளிப்படையாகும். சரியாக ஆசிய நகரங்களின் மாநகர அதிகார சபைகள் தமது வருமானத்தில் 50 - 70 சதவீதத்தை மாநகரசபைக் கழிவுகளை முகாமைப்படுத்தவே பயன்படுத்துகின்றன.

வைத்தியசாலைகள், தொழிற்சாலைகள், வீட்டுக் கழிவுகள் முதலான மாநகரசபை கழிவுகள் வெளித்தோற்றாவிட்டாலும் பாதிப்பு நிறைந்தவைகளாகவும் நச்சுப்பொருட்களைக் கொண்டவைகளாகவும் அமைகின்றன. வழமையாக அறிவிக்கப்பட்டுள்ளதற்கு மாறாக தீமையான கழிவுகளின் உற்பத்தி நாட்டின் செல்வவளம் உயரும்போதும் அதன் பொருளாதார கட்டமைப்பு மாறும்போதும் குறைகின்றது. உதாரணத்திற்கு சீனமக்கள் குடியரசு ஆண்டொன்றிற்கு 50 மில்லியன் தொன் நச்சுப்பொருட்களையும் இந்தியா ஆண்டொன்றிற்கு 40 மில்லியன் தொன் நச்சுப்பொருட்களையும் உற்பத்தி செய்கின்றது. ஆசியாவில் 60 - 65 சதவீத நச்சுக்கழிவுகள் நிலத்தின் கீழ் புதைக்கப்படுகின்றன. 5 - 10 சதவீதம் சமுத்திரங்களின் கீழாகவும் புதைக்கப்படுகின்றன. மீதிப்பகுதி தகனப்படுத்தப்பட்டு அல்லது இரசாயன பரிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டு அழிக்கப்படுகின்றது. பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் எந்தவொரு பாதுகாப்புமின்றியே கழிவு சீராக்கம் நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடழிப்பு

ஆசியாவின் காடுகளின் அளவு ஆண்டு தோறும் ஒரு சதவீதத்தினால் குறைந்து கொண்டு வருகின்றது. ஏனைய உலக நாடுகளை விட ஆசியாவின் காட்டின் அளவு குறைவாகக் காணப்படுவதால் இது மிக பாரதூரமானதாகும். உலக சனத்தொகையின் பாதியளவு சனத்தொகையை ஆசியா கொண்டிருந்த போதிலும் அதன் காட்டின் அளவு 13 சதவீதம் மட்டுமே ஆகும். உலகின் ஆள்வீத காட்டுச் சராசரியில் ஆசியா மூன்றில் ஒரு பங்களவான காட்டினையும் லத்தீன் அமெரிக்கா பத்திலொரு பங்களவிலான காட்டினையுமே கொண்டிருக்கின்றன. காடழித்தல் பல்வேறு காரணங்களுக்காகச் செய்யப்படுகின்றன. விறகுக்காக மிகையளவு மரம் வெட்டுப்படுதல், உள்ளகக் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் குறிப்பாக வீதிகள், அணைக்கட்டுகள், விவசாய நடவடிக்கைகள் என்பன அவற்றுள் சிலவாகும். பெருமளவு காடழித்தல் ஏற்கெனவே ஆசியாவில் நடந்தாகிவிட்டது. இதனால் பாலை வனமாதல், மண்ணரிப்பு, வெள்ளப்பெருக்கு, உயிரங்கிகளின் இழப்பு என்பன ஏற்பட ஏதுவாகின்றது. இந்நிலை தென்கிழக்கு ஆசியாவில் மிக முன்னிற்பானதாகும்.

நிலம் மாசடைதல்

உலகின் மற்றைய பாகங்களுடன் ஒப்பிடுகையில் ஆசியாவில் ஆள்வீத நிலப்பரப்பு அருமையானதாகும். 1992இல் ஆசியாவின் ஆள்வீத விவசாய நிலத்தின் அளவு 0.3 ஹெக்டேயர்களாயிருந்தபோது உலகின் ஏனைய அபிவிருத்தியடையும் நாடுகளில் சராசரி ஆள்வீத விவசாய நிலம் 1.6 ஹெக்டேயர்களாகக் காணப்பட்டதுடன் பொருளாதார கூட்டுறவுக்கும் அபிவிருத்திக்குமான நாடுகளில் 1.4 ஹெக்டேயர்களாக இருந்தது. அத்துடன் ஆசியாவின் நிலம் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் வளம் குன்றியதுமாகும். 4 சதவீதத்திற்கும் குறைந்தளவு நிலமே ஆசியாவில் இயற்கையாக மண் மட்டுப்படுத்தல் அற்ற நிலமாகும். (அதாவது எல்லா இனப்பயிரும் பயிரிட ஏற்ற நிலம்) இத்தன்மை ஆபிரிக்காவில் 15 சதவீதமாகவும் லத்தீன் அமெரிக்காவில் 12 சதவீதமாகவும் உள்ளது.

மண் பல்வேறு வழிகளில் நாசமாக்கப்பட முடியும். மண் அரிப்புக்குள்ளாதல், உப்பாக்கப்படுதல், பாலைவனமாக்கப்படுதல், நீர்தேக்கமுறல், காடழித்தல், சரிவான நிலங்களில் பயிர்ச்செய்கை பண்ணுதல், சீரற்ற வடிச்சல் முறையற்ற மட்காப்பு செயற்பாடுகள் ஆகிய பல்வேறு வழிகளால் நாசமாக்கப்படுகின்றது. மண்ணரிப்பு ஆசியாவில் மிகப் பாரிய இயற்கை வளம் சார்ந்த பிரச்சனையாகும். அத்துடன் இது தென்கிழக்கு ஆசியா, தென் ஆசியா, சீனா, இந்தியா என்பவற்றில் சம அளவு பெரும்தாக்கத்தையும் கொண்டுள்ளது. இந்தியாவில் 27 சதவீதம் நிலம் மண்ணரிப்பினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்படுகின்றது. இது சீனாவில் 6.4 சதவீதமாகும். தாய்லாந்தின் சராசரி மண்ணரிப்பு வீதம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஏக்கருக்கு 34 தொன்கள் ஆகும். மண்ணின் தாங்கு திறனுள்ள மேற்பரப்பு அரிப்பு வீதம் ஆண்டுக்கு 13 தொன்/ ஹெக்டேயர் எனும் அளவு மட்டுமே ஆகும்.

நிலம் உப்பாதல், நீர் தேங்குதல் என்பனவும் பாரதூரமான பிரச்சனைகளே ஆகும். ஒழுங்கற்ற நீர்வடிப்பு இன்மையால் ஆசியாவில் 130 மில்லியன் ஹெக்டேயர் பயிர்ச்செய்கை நிலம் உப்பாகியும் நீர் தேக்கமுற்றும் உள்ளது. தென்ஆசியாவின் வறள் வலய (semi arid), இடைவறல் வலய (arid) பகுதிகளில் பாலைவனமாதல் மிக முக்கிய பிரச்சனையாகும். கிட்டத்தட்ட 63 மில்லியன் ஹெக்டேயர் மானாவரி நிலமும் 16 மில்லியன் ஹெக்டேயர் பாய்ச்சல் நிலமும் பாலைவனமாதல் மூலம் இழக்கப்பட்டுள்ளது. குடியேற்றத் திட்டங்களுக்காக அழிக்கப்பட்ட காட்டுப்பகுதியில் நிலைத்து வளர்ந்துள்ள அழிப்பதற்குக் கடினமான புல் மற்றொரு பிரச்சினையாகும். இந்த அழிக்க முடியாத புல்வகை சிறிதளவு பயன்பாட்டைக் கொண்டபோதிலும் அதனை அகற்றுவது கடினமானதாகும். அத்துடன் மற்றைய தாவரங்களையும் இது வளரவிடாது தடுக்கின்றது.

உயிரின வகைப்பாட்டு இழப்பு

உலகில் தேசத்திற்குரிய தாவர விலங்கு வகைகளில் 40 சதவீதம் ஆசியாவிலேயே காணப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆயினும் விவசாய உள்ளக கட்டமைப்பு நோக்கங்களுக்காக காட்டு வாழிடங்கள் அழிக்கப்படுதல், காடழித்தல், நிலம் சேதமாக்கப்படுதல், நீர் மாசாதல் என்பன உயிரியல் வளத்தையும் உயிரின வகைப்பாட்டையும் குறைவுபடச் செய்ய வழிவகுக்கின்றது. பூட்டான், மலேசியா தவிர்ந்த ஏனைய ஆசிய நாடுகளில் காட்டு வாழிடம் 70 - 90 சதவீதம் வரை இழக்கப்பட்டுள்ளது. ஆசியாவின் உயர் சனத்தொகை அடர்த்தியே இதற்கான பிரதான காரணமாக இருந்தபோதிலும் கூட சில நாடுகள் மீந்திருக்கும் காட்டு வாழிடங்களைப் பேணுவதில் வெற்றி பெற்றதிலிருந்து சனத்தொகை மட்டுமே இதற்கான காரணி அல்ல என்பது தெளிவாகிறது. ஏறக்குறைய 1.3 மில்லியன் சதுர கிலோமீற்றர் அல்லது ஆசியாவின் மொத்த நிலப்பரப்பின் 7 சதவீதம் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது.

சனத்தொகை தொடர்பாகப் பார்க்கும்போது பாதுகாக்கப்பட்டுள்ள அளவானது ஏனைய உலக நாடுகளிலும் குறைவாகவே உள்ளது. ஆசியா தவிர்ந்த மற்றைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைக் கருதினால் அவை தம் பாதுகாக்கப்பட்ட பகுதிகளைப் பேணுவதில் முனைப்பாகவுள்ளன. ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி மூலம் காட்டப்படும் செல்வத்தை காட்டு வளம் பேணப்படுவதற்கான நல்லதொரு சுட்டியாகக் கொள்ள முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவில் கரையோர மற்றும் ஆழ்கடல் மீன்பிடி, கண்டல் தாவரம் முருகைப்பாறைத் தொகுதி என்பன மிக வகைப்பாடுடையதாகக் காணப்படுகின்றது. உலகில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கு முருகைப் பாறைகள் ஆசியாவிலேயே காணப்படுகின்றது. மாலைதீவு, நீர்ச் சுற்றயல் மட்டும் 1200 மீன் இனங்களைக் கொண்டிருக்கின்றது. தென்கிழக்கு ஆசியாவின் நன்னீர் சூழற்தொகுதிகளே உலகில் மிகவும் பெரியனவும் நன்கு விருத்தியடைந்ததுமாகக் காணப்படுகின்றன. அப்படியிருப்பினும் ஆசியாவில் அரைவாசிக்கும் அதிகமான கண்டல் தாவரங்கள் இந்திய, மலேசிய வட்டாரங்களில் அழிக்கப்பட்டுள்ளன. சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பெருமளவு ஈர நிலங்கள் (தாழ் நிலம்) அழிவுக்குள்ளாகியுள்ளன. இதற்கான காரணங்களாக வேட்டையாடுதல், வடிகால் மாசாக்கம், முறையற்ற மீன் பிடித்தல், மனித குடியிருப்புகளைப் பாதுகாத்தல் என்பனவற்றைக் கொள்ளலாம்.

இந்த முன்னுரிமைப்படுத்தல் கொள்கை ஆக்குனர்களை (policy makers) இனைப் பொறுத்த வரை ஆய்வாளர்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து வேறுபடலாம். ஆசிய சுற்றாடல் கொள்கை ஆக்குனர்களின் ஒரு மதிப்பீட்டில் இப்பிரதேசத்தின் முக்கிய பிரச்சினையாக நீர் மாசுறுவதையும், நன்னீர் குறைவடைவதையும் காட்டுகின்றனர். இதற்கு அடுத்த நிலையிலேயே காடழிப்பு, வளி மாசடைதல் என்பனவும் திண்மக்கழிவு மாசாக்கம் இறுதியாகவும் காட்டப்பட்டுள்ளன. இத்தகைய பிரச்சினைகளை கருத்திற் கொண்டதான அபிவிருத்தி உபாயம் எவ்வகையிலாவது இவற்றின் தாக்கங்களைக் கருதுவதாக அமைதல் வேண்டும்.

சனத்தொகை வளர்ச்சியும் சுற்றாடலும்

சனத்தொகை வளர்ச்சி வீதமும் சுற்றாடல் மாசுபடுத்தலும் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருப்பதைப் பற்றி பலரும் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். முடிவுறு அளவிலுள்ள இயற்கை வளங்கள் விரிவடையும் சனத்தொகையின் தேவைகளை ஒருபோதும் ஈடுகட்டாது. காடழிப்பு, மண்ணரிமானம், உள்ளக சூழற்றொகுதிக்கு ஏற்படும் சேதம், மற்றும் ஏனைய சூழல் சீரழிவுகள் ஆகியன மக்கள் பெருக்கத்துடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளன. சனத்தொகையின் பெருக்கத்தின் வேகத்தினை விட சனத்தொகையின் நடத்தை முக்கியமானதாகக் கருதப்படலாம்.

சில ஆசிய நாடுகளின் பொருளாதாரத்தில் குறிப்பாக கொறியா, தைபே, சீனா ஆகிய நாடுகளில் சனத்தொகைப் பெருக்கம் இயற்கை வள அழிவுகளிலிருந்து முற்றாக அன்னியப்படுத்தப்பட்டுள்ளன. விவசாய உற்பத்தித் திறனின் நிலைபேறான வளர்ச்சி (இது சாத்தியமான பயிர் விலைகள், பாதுகாப்பான நிலக்குத்தகை கடன் வசதிகளின் அடிப்படையில் சாத்தியமானது) விவசாயத்திற்கு புறம்பான தொழில்துறை விருத்தி என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இதனை அவர்களால் அடைய முடிந்துள்ளது. ஆனால் ஏனைய ஆசிய நாடுகளில் அதிலும் குறிப்பாக இந்தியா, பிலிப்பைன்ஸ் முதலானவற்றில் விவசாய வளர்ச்சி மந்தகதி உடையதாகவும் அவ்வரசாங்கங்களின் கொள்கைகள் மூலதனச் செறிவுள்ள கைத்தொழில்துறைக்கே முக்கியம் அளிப்பதாகவும் உள்ளது. மிகையளவான தொழிலாளர்கள் விவசாயத்துறையில் இருந்து வேறு தொழில்துறைகளுக்கு நகர முடியாதவர்களாக உள்ளனர். இதனால் சுற்றாடல் மிகையாக சேதப்படுத்தப்படுகிறது.

சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைவாயிருத்தல் அவசியமாக சுற்றாடல் மாசாக்கப்படுவதைக் குறைக்கும் என்றில்லை. எடுத்துக் காட்டாக, இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி வீதம் மிகையளவு குறைந்து காணப்படுகின்றது. ஆயினும் சனத்தொகை வளர்ச்சி வீதம் அதிகமாயுள்ள நாடுகளைப் போலவே இங்கு சூழல் மாசடைதல் தொடர்ந்தும் அதிகரித்த வேகத்திலேயே செல்வதைக் காணலாம். சூழல் மாசடைதலுக்கும், சனத்தொகை அடர்த்திக்குமிடையிலான தொடர்பைக் காட்டும் மிகவும் வெளிப்படையான சான்று காடழித்தல் தொடர்பான கற்கைகள் ஆகும். இக்கற்கைகளில் பெரும்பான்மையானவை இவற்றுக்கிடையில் மிகச் சிறிதளவு தொடர்பு காணப்படுவதை அல்லது தொடர்பு காணப்படாமையைக் காட்டுகின்றன.

ஆனால் சனத்தொகை காரணமாகச் சுற்றாடலின் மீதுள்ள தொடர்பு வறுமை, வரையறை குறைந்த சொத்துரிமை, மாற்று தொழில்துறை இல்லாமை அல்லது வெற்றியளிக்காத அரசாங்க கொள்கைகள் என்பன மூலம் நிகழ்த்தப்படுவதை உறுதியான புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. சனத்தொகை அடர்த்திக்கும், வருமான மட்டத்திற்குமிடையிலான இடைத்தாக்கம், தனியே சனத்தொகை விளைவிக்கும் தாக்கத்தை விடவும் அதிகளவிலான தாக்கத்தைக் காடழித்தலில் கொண்டிருக்கின்றது. ஆகவே வறுமையும். வேகமான சனத்தொகை வளர்ச்சியும் கூட்டாகவும் குறிப்பாகவும் சுற்றாடலில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

சுற்றாடல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

கைத்தொழில் வள நாடுகளின் ஆய்வாளர்களிடையே மனித சுகாதாரத்திற்கு இடர்செய்யக் கூடியனவான வளி மாசுபடுதல், பாதுகாப்பற்ற குடிநீர் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அணுகுமுறைகள் காணப்படுகின்றன. சூழல் தொகுதிக்கும், மனித நல செயற்பாடுகளுக்கும் ஊறு செய்யும் விடயங்கள் இரண்டாம் இடத்திலேயே கவனஞ் செலுத்தப்படுகின்றன. இவை உயிரினங்கள் இழக்கப்படுதல், இயற்கை வாழிடம் அழிவுக்குள்ளாதல் என்பனவற்றையும் உள்ளடக்கும்.

சுற்றாடல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்யும் மற்றொரு வழி பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்டுதல் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச மதிப்பீடுகளின்படி உள்நாட்டு சமூகங்கள் பாதிக்கப்படும் பிரச்சினைகளுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளை விட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளே முன்னுரிமை கொடுக்கின்றன.

சுத்திகரிப்பீனம், நகரசபைக் கழிவுகள் அகற்றப்படுவதிலான ஒழுங்கீனம், சுத்தமான நீர் கிடைக்காமை, தூயவளி கிடைக்காமை என்பன உள்ளூர் சமூகங்களைப் பாதிக்கும் முக்கிய பிரச்சினைகளாகும். தேசிய மற்றும் பூகோள சூழற் பிரச்சினைகளுள் முன்னிலையில் வளி மாசடைதல், மேற்பரப்பு நீர் மாசடைதல், காடழிப்பு என்பனவும் அடுத்ததாக உயிரன வகைப்பாட்டு இழப்பு மண்ணரிப்பு என்பனவும் காணப்படுகின்றன.

இந்த முன்னுரிமைப்படுத்தல் கொள்கை ஆக்குனர்களை (policy makers) ப் பொறுத்தவரை ஆய்வாளர்கள் பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து வேறுபடலாம். ஆசிய சுற்றாடல் கொள்கை ஆக்குனர்களின் ஒரு மதிப்பீட்டில் இப்பிரதேசத்தின் முக்கிய பிரச்சினைகளாக நீர் மாசுறுவதையும் நன்னீர் குறைவடைவதையும் காட்டுகின்றனர். இதற்கு அடுத்த நிலையிலேயே காடழிப்பு, வளிமாசடைதல் என்பனவும் இறுதியாகத் திண்மக்கழிவு மாசாக்கமும் இறுதியாகவும் காட்டப்பட்டுள்ளன. இத்தகைய பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டதாக அபிவிருத்தி உபாயம் எவ்வகையிலாவது இவற்றின் தாக்கங்களைக் கருதுவதாக அமைதல் வேண்டும்.

மக்கள் சீனக் குடியரசு, இந்தோனேசியா, மலேசியா, மயன்மார், தாய்லாந்து ஆகிய ஐந்து நாடுகளிலேதான் ஆசியாவின் காடழிப்பில் 80 சதவீதம் நடைபெறுவதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும் இந்நாடுகளில் அனேகமானவை தமது சனத்தொகை வளர்ச்சி வீதங்கள் குறைந்தவையாகவும் மேலும் குறைந்து வருபவையாகவும் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு இந்தோனேசியாவின் சனத்தொகை விகிதம் 2000ஆம் ஆண்டளவில் 1.5 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கும் அதேவேளை இப்போக்கு மேலும் குறைவடைந்தாலும் கூட மீந்திருக்கும் காட்டின் அளவைப் பேணுவதற்கு முடியாமலேயே இருக்கும்.

இதற்கு முரணான காட்டைப் பயன்படுத்தும் அனுமதிக் கொள்கைகள் முக்கிய பல மாறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளன. நீண்டகாலமாக வெட்டும் அனுமதி, போட்டி அடிப்படையில் வழங்கப்பட்டபோதிலும், பிரதேசவாரியான வரித்திட்டம், ஏற்றுமதித் தடைத்தளர்வு என்பவற்றை அறிமுகப்படுத்தியதன் மூலமே இந்தோனேசிய அரசாங்கம் வெட்டப்பட்ட காட்டுப்பரப்பை அரைவாசியாக்கியபோதிலும், ஆண்டு வருமானத்தை 1 பில்லியனால் அதிகரிக்கக்கூடியதாக இருந்ததாக மதிப்பீடுகள் காட்டுகின்றன. இதற்கு மாறாக நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், வியட்நாம் ஆகிய நாடுகளில் இவற்றின் சனத்தொகை வளர்ச்சி உயர்வானமையினாலும், இவற்றின் சமூகங்கள் பெரும்பாலும் கிராமப்புறங்களில் வதிவதாலும் காட்டு நில ஊடுருவலும், விறகுப் பயன்பாடும் உயர்வாயிருப்பதாலும், சுற்றாடல் உறுதிப்பாட்டை சனத்தொகை கொள்கைகள் தடுக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகை வளர்ச்சிக்கும், நிலம் சீரழிவுறுதலுக்கும் இடையிலான தொடர்புகள் நேரிடையானதல்ல. சனத்தொகை வளர்ச்சிக்கும், சுற்றாடலின் உணவு உற்பத்திக்குமிடையிலான சிக்கலான இடைத்தொடர்புகள் பற்றிய திட்டமான ஆய்வு கலப்பு பெறுமதிகளையே தந்துள்ளது. அதாவது சனத்தொகை அடர்த்தி அதிகரிப்பானது நிலத்தின் தன்மையை மேம்படுத்தும் அல்லது சீரழிக்கும் என்பதான இரண்டு வாய்ப்புகளுமுள்ளன. விவசாய நோக்கங்களுக்கு உட்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாயிருக்கும் நிலம் மீந்திருக்காத நாடுகளில் செறிவான விவசாய நடவடிக்கைகளுக்கு நிலம் உட்படுத்தப்படுகிறது. இந்த வகையில் இரசாயன உரப்பாவனை, பூச்சிநாசினி, களைநாசினி ஆகியவற்றின் அதிகரித்த பாவனை காரணமாக சுற்றாடல் சேதங்கள் விளைவிக்கப்படுகின்றன. ஜப்பானும், அமெரிக்க ஐக்கிய அரசும், இருபதாம் நூற்றாண்டில் அதிகரிக்கும் சனத்தொகை அடர்த்தி நிலத்தின் தரத்தினை அதிகரித்தமைக்கு நல்ல உதாரணங்களாகும்.

நீர் வளத்துடனும் நிலைமைகள் வேறுபாடுகளைக் காட்டுவனவாக இல்லை. இந்தோனேசிய முழு உலகிலும் அதிகூடிய ஆள்வீத நன்னீர் பங்கீட்டினை கொண்டிருந்த போதிலும், இன்று அது பாரிய தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் ஒரு நாடாகக் காணப்படுகின்றது. மக்கள் சீனக் குடியரசு, இந்தியா, பாகிஸ்தான் ஆகியனவும் கடுமையான நீர்ப்பற்றாக் குறையை எதிர்நோக்குகின்றன. இவை மானிய அடிப்படையிலான நீர் வினியோகத்தாலும். சனத்தொகை விருத்தியினாலும் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாக பாகிஸ்தானின் நீர்ப்பாசன தொகுதியின் திறன் 10 சத வீதத்தினால் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக சேமிக்கப்பட்ட நீர் மேலதிக 2 மில்லியன் ஹெக்டேயர் நிலப்பரப்பைப் பாசனம் செய்யக் கூடியதாயிருந்தது. ஆனால் பாகிஸ்தானிய விவசாயிகள் நீரின் செலவை அந்தளவுக்கு அறியாத காரணத்தால் நீர்ப்பற்றாக்குறையை உணராதவர்களாய் அதனை வீண்விரயம் செய்கின்றனர்.

சுருங்கச் சொன்னால், தனியே சனத்தொகை வளர்ச்சியும், அதன் அடர்த்தியும் சுற்றாடற் சீரழிவை ஏற்படுத்துவனவல்ல. ஏனெனில் சுற்றாடலுக்கு முடிவற்ற காவுதிறன் இருப்பதில்லை. அத்துடன், குறித்த தாங்கு மட்டத்திற்குப் பின்னான சனத்தொகை அடர்த்தி வளங்களை அழிவுக்குள்ளாக்குகின்றன. ஆசியா இந்த சனத்தொகை அடர்த்தி மட்டத்தை இன்னும் அடைந்து விடவில்லை. சனத்தொகை அடர்த்தியும், வறுமையும் சேர்ந்தே சுற்றாடலைச் சேதப்படுத்தவல்லனவாய் இருக்கின்றன. அத்துடன் இவை நிறுவன ரீதியான தோல்விகளையும் உண்டுபண்ணுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடலும் வறுமையும்

ஆசியாவில் ஏறக்குறைய 1 மில்லியன் மக்கள் வறுமையில் வாழ்கின்றார்கள். அவர்களுடைய முக்கிய தேவையாக உயிர் வாழ்தலே காணப்படுகின்றது. இதனால், சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான அவர்களின் சித்தமும், அதற்காக செலவிடும் திறனும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமைந்திருக்கின்றது.

வறுமையில் உள்ளவர்களுக்கு நிதிவளம் (கடன்) அல்லது தகவலும் தொழில்நுட்பமும் மிகக் குறைவாகவே கிடைக்கிறது அல்லது ஒருபோதும் அவை கிடைக்காது விடுகிறது. மிக முக்கியமாக அவர்களின் சொத்துரிமைப் பாதுகாப்பு மிக அரிதாகவே உள்ளது. இயற்கை வளங்களான விறகு, வெட்டுப்புல், மீன், விளையாட்டு, நீர் என்பன திறந்த அடைவுக்குரியதாகக் காணப்படுவதுடன் அவற்றை வறியவர்கள் அவர்களின் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. சிறுவர்கள் இத்தகைய இயற்கை வளங்களை தன்வயப்படுத்திக் கொள்ளும் மூலங்களாக இருப்பதனால் இந்த நிலைமை உயர்ந்த கருவளத்திற்கு இட்டுச் செல்கின்றது. ஆனால் இவ்வாறு உயர்ந்து செல்லும் கருவளம் இயற்கை வளங்கள் மீதான மிகையான பயன்படுத்துகைக்கும் சேதமாக்கலுக்கும் வழி கோலுகிறது. இது வறுமை சூழலில் ஏற்படுத்தும் எதிரான அதிகரித்துச் செல்லும் பாதிப்பான விளைவு ஆகும்.

வறியவர்கள் வாழுகின்ற பகுதிகள் வெள்ளப் பெருக்கு, மண்சரிவு, அல்லது மிகையான மாசாக்கிகள், தீங்கான கழிவுகள், கழிவுப் புதையல்கள் ஆகிய சூழல் சார்ந்த இயற்கைப் பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கும் பகுதிகளாக உள்ளன. குறைபோசணை, சுகாதார சீர்கேடுகள் என்பன மேலும் அவர்களை இலகுவில் தொற்றுநோய்களின் தாக்கத்திற்குள்ளானவர்களாக்குகின்றது. குறைந்த வருமானம், குறைந்த கல்வி, சுகாதார, வசதிக்குறைவு என்பன காரணமாக தொற்றுநோய்களிலிருந்து மீளுவது இவர்களுக்குக் கடினமாகும். ஆகவே, சுற்றாடல் பாதிப்பு மக்களை வறுமைக்குள்ளாக்குவதும் வறுமை சுற்றாடல் மாசாக்கத்தைத் தூண்டுவதும் முடிவின்றி மீண்டும் மீண்டும் வட்டப்பாதையில் அதிகரித்த போக்கில் நிகழ்கின்றது. வறுமையானது சந்தேகமின்றி சுற்றாடல் சேதமாக்கலை ஏற்படுத்துகின்றது. ஆனால் அது ஒரு சுயாதீனமான காரணியல்ல. சனத்தொகை வளர்ச்சி போலவே வறுமையும் சமகால சந்தை, நிறுவனம், கொள்கை தோல்வி (market, institutional, policy failure) என்பவற்றில் தாக்கம் விளைவிக்கக் கூடிய சுற்றாடல் பிரச்சனைகளாகக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடல் சேதம் எவ்வளவு ஏற்பட்டுள்ளதென்பதும், இப் பிராந்தியத்தில் துரித பொருளாதார வளர்ச்சியின்போது சுற்றாடல் சேதம் எப்படி முடுக்கிவிடப்பட்டுள்ளது என்பதும் பொருளாதார வளர்ச்சி சுற்றாடல் மாசாக்கத்திற்கு ஒரு முக்கிய காரணியா என்பதை அறிந்து கொள்வதில் நியாயமாக எழக்கூடிய வினாக்கள் ஆகும். உயர் வருமான மட்டம் சுற்றாடல் மீது பாதகமான விளைவை ஏற்படுத்துகின்றதா? பல ஆய்வாளர்கள் வருமானத்திற்கும், சுற்றாடல் மாசாக்கத்திற்குமான தொடர்புகளை இனங்கண்டு தலைகீழ் U வடிவிலான "சுற்றாடல் குஸ்நெற் வளையியை" வெளியிட்டுள்ளனர். இந்தத் தொடர்பானது ஒரு நாடு செல்வவள அதிகரிப்பின்போது பேணப்பட்ட சுற்றாடல் நிலைமையை பெறுவதற்கு முன்னர் மிக மோசமான சுற்றாடல் பாதிப்புகளை கடக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

படம் 1

சுற்றாடல் குஸ்நெற்ஸ் வளையி

கொள்கைகள் வளம் மற்றும் சுற்றாடல் பாதிப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு



இந்த அவதானிப்புக்கு அடிப்படையிலுள்ள தத்துவங்களான முடுக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தியால், வ்விவசாயம் செறிவாக்கப்பட்டபோது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களின் பயன்படுத்துகை அதிகரித்து, கைத்தொழில் மயமாதல் ஏற்படுகின்றது. இதனால் இயற்கை வளங்களின் தேய்வு அதிகரிக்கத் தொடங்கும். அதேவேளை நஞ்சாக்கமுள்ள கழிவுகளின் அளவும் அதிகரிக்-கின்றது. முடிவாக பொருளாதாரம் செல்வந்த நிலையை அடைவதோடு பொருளாதாரக் கட்டமைப்பு கைத்தொழில் துறைக்கும், சேவைகளுக்கும் நகரும். இது இயற்கை வளப்படுத்துகையைக் குறைந்த செறிவுள்ள பாவனைக்குள்ளாக்குகின்றது. அத்துடன் வாழ்வு உயர்வு பெறுவதனால் சுற்றாடல் பற்றிய அறிவும், சுற்றாடலை பேணுவதற்கான ஆற்றலும், விருப்பும் அதிகரிக்கும். இதன் விளைவாகச் சுற்றாடல் சட்டதிட்டங்களை கடுமையாக அமுல்படுத்த முடிவதுடன் அதற்காகப் பெருமளவு செலவிடவும் கூடிய-தாயிருக்கும். இதனடிப்படையில் சுற்றாடல் பாதிப்பு மட்டம் படிப்படியாகக் குறைவுறும்.

உத்தியோகப் பற்றற்ற சில அவதானிப்புகள் இத்தொடர்புகள் நகரங்களுக்கும் அதேபோல் கிராமச் சுற்றாடலுக்கும் பிரயோகிக்கப்-படுவதை விதப்புரை செய்கின்றது. உதாரணமாக, பாங்கொக், சியோல், சங்கை முதலான புதிதான கைத்தொழில் மயமான நாட்டு நகரங்கள், அவை 20 அல்லது 30 வருடங்களுக்கு முன்னர் இருந்ததைவிட மிக அதிகம் மாசாக்கப்படுவதையும், அவற்றின் மாசுறும் மட்டம் பொருளாதார வளர்ச்சியை தாண்டிவிடும் அளவுக்கு உயர்ந்த வீதத்தில் செல்வதைக் காட்டலாம். மாறாக, கைத்தொழில் மய நாடுகளின் நகரங்கள் அவை 20 அலலது 30 வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையை விட சுத்தமானவை-யாகக் காணப்படுகின்றன.

இவ்வாய்வுகள் சிறப்பாக ஆசியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும், சுற்றாடலுக்கும் இடையிலான தொடர்பும் குறிப்பிட்ட மாசாக்கிகளாலான சுற்றாடல் பாதிப்புகளும், பொருளாதார அபிவிருத்தி மட்டமும் "குஸ்நெற்" வரையியுடன் தொடர்புபடும் விதமும் காட்டப்பட்டுள்ளன. ஆய்வுகளின்படி ஆசியாவின் சில மாசாக்கிகள் உண்மையில் தலைகீழ் U வடிவ தொடர்பினை வருமானத்திற்கும், சூழல் சீரழிவுகளுக்குமிடையில் காட்டுவதில்லை. அவை ஆரம்பத்தில் உயர்ந்து ஆள்வீத வருமானம் அதிகரிக்கும்போது குறை-வடைந்து செல்கிறது. இந்த மாசாக்கிகளுள் கந்தகவீரொட்சைட்டு (SO_2), நகரத்துணிக்கை மாசுக்கள், fecal coliform, அத்துடன் ஆறுகளில் கலந்திருக்கும் ஆசனிக் நஞ்சுகளும் உள்ளடங்கும்.

தனியாள் வருமானம் ஆண்டுக்கு $ 5000 இலிருந்து $ 7000 வரையான மட்டத்தை அடையும்போது இந்த மாசாக்கிகளின் அளவு திரும்பல் புள்ளியில் உச்ச மட்டத்தை அடைந்து வீழ்ச்சியுறுகிறது. ஆசியாவின் உலர்வலய நாடுகளில் மேற்கொண்ட பரிசோதனைகளின்படி காடழிப்பு வீதத்திலும் இதே பெறுதிகளே பெறப்பட்டன. ஆனாலும் இதில் குறைந்த ஆள்வீத ஆண்டு வருமான திரும்பல் புள்ளியே காணப்பட்டன. இது அண்ணளவான $ 1000 ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வடைவுகள் அடுத்த 20 அல்லது 30 ஆண்டுகளில் கிழக்காசியாவிலும், மலேசியா போன்ற உயர்ந்த வருமானமுள்ள தென்கிழக்கு ஆசியாவிலும் சுற்றாடலின் தராதரம் மந்தகதியில் முன்னேறும் என்பதனையும் விளக்குகின்றன. ஆயினும் தெற்காசியாவிலும் குறைந்த வருமானம் பெறும் தென்கிழக்காசியாவிலும் சூழல் சீரழிவு தொடரும் என்பதையும் இது காட்டுகிறது. கந்தகவீரொட்சைட்டு (SO_2), துணிக்கைகள் ஆறுகளிலுள்ள fecal coliform, முதலான சில மாசாக்கிகள் ஆசியாவிலும், ஏனைய உலக நாடுகளிலும் வருமான சுற்றாடல் தொடர்புகளிலுள்ள வேறுபாட்டமைப்பில் முக்கியத்துவமுள்ளனவாகத் தோன்றுகின்றது. ஏனைய நாடுகளை விட ஆசியாவில் குறிப்பிட்ட சில வகை மாசுக்கள் வருமான அதிகரிப்புடன் அதிகரித்துச் செல்வதையும் காணலாம். ஆனால் அவை கூட மிகவிரைவில் வீழ்ச்சியடைய ஆரம்பித்து விடும். உயர் ஆரம்ப சனத்தொகை அடர்த்தி, துரித கைத்தொழில் மயமாக்கலுடன் சேர்ந்து சுற்றாடல் பற்றிய அறிவை அதிகரிப்பதுடன் புதிய தொழில்நுட்ப கிடைத்தகு தன்மைகள் காரணமாக ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வருமான நிலையிலும் சூழல் மாசாக்கம் குறைவடைய ஏதுவாகின்றது. இந்த முடிவுகள் தரும் உயர்ந்த அடிப்படைகளிலிருந்து, வருமானத்திற்கும், சுற்றாடலுக்குமிடையிலான தொடர்புகள் தவிர்க்க முடியாததா? எனும் வினா எழுகிறது.

பாதிக்கப்பட்ட சுற்றாடல் எப்போதும் பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புபட்டதா அல்லது சுற்றாடல் குஸ்நெற் வளையி தட்டையானதாக ஆக்கப்பட முடியுமா என்பதற்கு போதுமான தகவல்கள் சான்றாக உள்ளன. தற்போதைய கொள்கை பாதிப்பு, அல்லது கொள்கைத் தோல்விகளாலான சுற்றாடல் சீரழிவு குறைந்த வருமான மட்டங்களில் அதுவல்லாத இடங்களை விட அதிகமாகும். அதே போல வருமான வளர்ச்சியுடனான சுற்றாடல் மேம்பாடு உயர்வருமான மட்டங்களில் தன்னிச்சையானதல்ல. ஆனால் அது அப்பகுதியிலுள்ள கொள்கை மற்றும் நிறுவன செயற்பாடுகளில் தங்கியுள்ளதாகும்.

நிறுவனம், கொள்கை மற்றும் சந்தைத் தோல்விகள்

மக்கள் அழுக்கடைந்த சுற்றாடலை விட சுத்தமானதையே விரும்புகின்றனர். அவர்கள் அதிகரித்த வருமானத்தையும், ஓய்வு நேரத்தையும் பெற்றுக் கொள்ளும்போது, மாசடையாத வனங்களையும், பொழுதுபோக்கு இடங்களையும் தேடுகின்றனர். இதனால் தூய்மையான வளிக்கும், தூய நீருக்கும் தேசிய பூங்கா முதலான இயற்கைப் பொழுதுபோக்கு இடங்களுக்கும் சரியான கிராக்கி காணப்படுகிறது. எப்படியும் கூட இந்த கிராக்கி அடையப்பட முடியாதது என்பதையே சுற்றாடல் மாசடைதல் காட்டுகிறது. இது பெரும்பாலும் நிறுவன ரீதியிலான கொள்கை மற்றும் சந்தை தோல்விகளால் விளைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைத் தோல்வி பல வழிகளில் நிகழலாம். உதாரணத்திற்கு வளத்தை விலைமதிப்பில் அதற்கு சரியான சொத்துரிமை இல்லாத காரணத்தால் சந்தை தோல்வி அடைகின்றது. திறந்த காட்டு வளத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற விறகு பயன்படுத்துபவருக்கு இனாமாகக் கிடைத்தாலும் அது காடழித்தல், மண்ணில் விளைவிக்கும் தாக்கம் என்பன காரணமாகவும் நீர்வளம் பாதிக்கப்படல் விறகு எரிக்கப்படுவதால் வெளியேற்றப்படும் காபனீரொட்சைட்டு, உயிரின அழிவு என்பவற்றாலும் சமூக செலவுகளை ஏற்படுத்துகிறது. சொத்துரிமை காணப்படுகின்ற இடங்களிலும் கூட பொருட்களின் விலை அவற்றின் உற்பத்தியின் போதான சுற்றாடல் செலவினை பிரதிபலிக்கத் தவறி விடுகின்றன. உதாரணத்திற்கு இரசாயன உற்பத்தி நிலையம் ஒன்றினால் சுமத்தப்படும் சுற்றாடல் செலவு சுயாதீனமாக அந்த உற்பத்தியின் சந்தை விலையில் பிரதிபலிப்பதில்லை.

ஆசியாவின் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான தோல்விகளையும் பல வகையினதாகப் பிரிக்கலாம். முதலாவது தனியார் துறை சுற்றாடல் சேவைகளை வழங்குவதில் மிகவும் புறம்பானதாகவே காணப்படுகின்றது. ஏனைய உலகநாடுகளினால் நீர் வழங்கல், சுத்திகரிப்பு, திண்மக்கழிவுச் சேகரிப்பு, நீர்த்தொட்டிப் பாதுகாப்பு, உயிரினப்பாகுபாட்டுப் பாதுகாப்பு மற்றும் கழிவுநீர் பரிகரிப்பு முதலான சேவைகள் அரசாங்கத்தின் கண்காணிப்புகளுக்கு புறம்பானதாகவே செய்யப்படுகின்றன. இந்நாடுகளில் தனியார் துறைகள் சுற்றாடல் சேவைகளுக்கான கேள்வியில் பொறுப்பின்றிக் காணப்படுவதன் ஒரு விளைவே இந்நிலை ஆகும். இன்னும் சில பகுதிகளில் அரசாங்கம் சொத்துரிமை பற்றி விளங்கிக் கொள்ளத் தவறியமையால் இதில் தனியார் துறைகளின் பொறுப்புணர்வுகளை மந்தப்படுத்திக் கொள்கிறது. பொதுப்படையாக கவலை தரும் விடயம் என்னவெனில் யாருக்கும் சொந்தமில்லாத ஆசியாவின் காடுகள், ஆறுகள், மற்றும் ஏனைய சுற்றாடல் வளங்கள் பெருமளவில் மிகைப்பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படுகின்றது.

இரண்டாவதாக ஆசியாவின் பொதுத்துறை (அரசதுறை) சுற்றாடல் மேம்படுத்துகைக்கான கேள்வியினை நிரப்புவதற்கு தவறுவதாகும். மக்களுக்கு நல்ல சுற்றாடல் தேவைப்படுவதாகவும் அதற்காக செலவிடுவதற்கு அவர்கள் தயாராகவும் உள்ள நிலையிலும் கூட அரசாங்கத்தின் பொறுப்புணர்வு மந்தமானதாகவே உள்ளது. இதற்கு மூலதனப் பற்றாக்குறை, நடாத்தும் நிதியிடல் என்பன குறைவாயிருத்தல் ஆகியன அடிப்படைக் காரணங்களாகும். சில அரசாங்கங்கள் சுற்றாடல் சேவைகளுக்கான முழுமையான செலவீட்டை அறவிட முடியாதவர்களாக உள்ளன. மற்றும் சில நிதியை அறவிடுகின்ற அளவுக்கு சுற்றாடலை தூய்மையாக வைத்திருப்பதில்லை. சுற்றாடல் சேவைகளுக்காக முழுச்செலவும் அறவிடப்படாத வரை அல்லது போதுமான நிதியை அரசாங்கம் ஒதுக்காத வரை சுற்றாடல் சேவை தரத்திலும் அளவிலும் குறைவானதாகவே காணப்படும் என்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவின் நீர் வினியோகம், நீர்ப்பாசன முறைமைகள், சுத்திகரிப்பு வசதிகள், கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படுதல் ஆகியன நல்ல எடுத்துக்காட்டாகும்.

மூன்றாவதாக ஆசியாவின் அரசாங்கங்கள் பொருத்தப்பாடு இல்லாத சுற்றாடல் கொள்கைகளை கடைப்பிடித்து வருகின்றன. வழமையாக செல்வ நாடுகளின் கொள்கைகளுக்கு பொருத்தப்பாட்டை பெறுவதையும் அவற்றை அரைகுறையாக அமுலாக்குதல் என்பனவே நடைமுறையாக உள்ளது. ஆசியாவின் கொள்கைகளையும் சந்தை வாய்ப்புகளையும் இங்கு மூன்று உதாரணங்களாக ஆராயலாம்.

1. நீர் வழங்கல்
2. மாசடைதல் / மாசைக் கட்டுப்படுத்தல்
3. காட்டுவள முகாமைத்துவம்

நீர் வழங்கல்

பாதுகாப்பான குடிநீர் போதுமான அளவில் கிடைக்காமையும், சுத்திகரிப்பு இன்மையும் காரணமாக சிசு மற்றும் குழந்தைகளின் இறப்பு வீதம் ஆசிய நாடுகள் பலவற்றில் அதிகரித்த வீதத்தில் காணப்படுகிறது. இதன் விளைவாக ஆண்டு தோறும் மில்லியன் அளவிலான மரணங்கள் நிகழ்வதுடன் ஆசிய பொருளாதாரத்தில் மில்லியன் அளவிலான பொருளாதார நட்டத்தையும் இது ஏற்படுத்துகின்றது. துரித சனத்தொகை வளர்ச்சி, நகரமயமாக்கல், வறிய மக்கள் தங்களது நீர் விநியோகத்திற்காக முழுத் தொகையையும் செலுத்த முடியாத நிலைமையும் இதற்குக் காரணங்களாகக் கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் அரசாங்கத்தின் நோக்கில் தரம் குறைந்த நீரை மானிய அடிப்படையில் வழங்குவதே ஒரு பகுதி மக்களின் நீர் தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாகும்.

இந்த அணுகுமுறையை அமுல்படுத்துவது பல காரணங்களால் சிக்கலானதாகும். நீரின் மாற்றுப் பயன்பாடுகளான நீர்ப்பாசனம், மீன்பிடி, கழிவு அகற்றல், வீட்டுப்பாவனை, கைத்தொழிற் பாவனை என்பன காரணமாக போட்டிப் பயன்பாடு உடையதாகவும் இருப்பதனால் நீர் தாராளமாகக் கிடைப்பதாகவும், இலவசப் பண்டமாகவும் கருதப்பட முடியாதுள்ளது. எது எப்படியிருப்பினும் நீர் வளம் திறந்த ரீதியில் அடையக் கூடிய பண்டமாகவே உள்ளது. இது அரசாங்கத்தின் கொள்கைகளின் வருந்தத்தக்க தவறுகளால் ஏற்பட்ட சந்தை வீழ்ச்சியே ஆகும். அரசாங்கம் மட்டும் இத்தகைய நடவடிக்கைகளில் முழுமையாகச் செயலாற்ற முடியாது. எனவே நீர் வளத்தைப் பேணும் சொத்துரிமையை ஏனைய அமைப்புக்களும் தலைமேற்கொண்டு செயலாற்ற வேண்டும். உதாரணத்திற்கு நேபாளம், பங்களாதேஷ், தாய்லாந்து ஆகிய நாடுகளில் அறவிடப்படும் வருமானத்தைப் போல் 10 மடங்கு செலவிலேயே நீர் வழங்கல் செய்யப்படுகின்றது. மக்கள் சீனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியரசு அண்மையில் கனவளவு அடிப்படையிலான பாசன நீர் வினியோகத் திட்டத்தை கடைப்பிடித்து நீர்ப்பயன்பாட்டின் திறனை அதிகரிக்கச் செய்தது. ஆனால் நீருக்காகக் கிடைக்கும் பணம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

வறிய மக்கள் நீருக்காக பணம் செலுத்தாதிருப்பது அல்லது பணம் செலுத்த முடியாதவர்களாக இருப்பது கொள்கையிலுள்ள தவறினையே காட்டுகின்றது. மதிப்பீடுகளும், அவதானிப்புகளும் வறிய மக்கள் நிச்சயமாக நீருக்காக பணம் செலுத்த விரும்புவதையும் செலுத்துவதையும் காட்டுகின்றன. இந்த மதிப்பீடுகளின்படி அவர்களின் வருமானத்துடன் ஒப்பிடுகையில் பெருந்தொகையை அவர்கள் இதற்காக செலவிடுவதாகத் தெரிகின்றது. இந்தியா, லாஓ (Lao), ஜனநாயக மக்கள் குடியரசு, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளில் செய்யப்பட்ட மதிப்பீடுகளின்படி நடைமுறை வரியை விட கூடிய தொகையை வறியவர்கள் நீருக்காகச் செலவிடுகின்றனர். இவர்கள் குறைந்த வருமானம் பெறுவோர் மானிய ரீதியிலான பொது நீர் விநியோகத்தைப் பெற முடியாதவர்களாகவும் உள்ளனர். இதனால், உண்மையில் அவர்கள் கூடிய தொகைப் பணத்தைச் செலுத்தி நீரினை வாங்கும் நிலை அல்லது கொண்டு வரும் நிலை காணப்படுகின்றது. கணக்கீடுகளின்படி வறியவர்கள் அவர்களின் வருவாயில் 10% க்கும் அதிகமான தொகையினை தூயநீருக்காகச் செலவிடுகின்றனர். வசதி படைத்தோரே அரசாங்கத்தின் பொது நீர் வழங்கல்களினால் பிரதான பயன் பெறுவோராகக் காணப்படுகின்றனர். இதனால் வறியவர்களுக்கான நீரின் கிடைத்தகு தன்மையை பெருமளவில் குறைக்கப்படுகின்றது.

தேவையினளவு மட்டுப்படுத்தப்படுதலும் நிறைவில்லாத முதலீட்டுச் சந்தையும் பிரச்சினைகளை மோசமடையச் செய்துள்ளது. இதனால் மாநகர சபைகளினால் அதன் முதலீட்டைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. அதாவது நீருக்கும், கழிவு அகற்றுவதற்குமான முதலீட்டு செலவு நகர சபையின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் செலவிலேயே செய்யப்பட வேண்டியிருப்பதாகும். வறிய பகுதிகளில் இந்த பணம், நீர் விநியோகம் துண்டிக்கப்படும் வரை செலுத்தப்படாமலே காணப்படுகின்றது. அதற்கு மேலாக அனேகமான சேரிகளிலும், நெருக்கமான நகரங்களிலும் மாநகர ஏழைகள் அத்துமீறி வாழ்கிறார்கள். அந்நிலங்களின் மீது மாநகர சபை அதிகளவிலான முதலை முதலீடு செய்ய நிலைமை காணப்படுகிறது.

மானிய அடிப்படையான விவசாய மற்றும் கைத்தொழில் துறைகளுக்குமான நீர் வழங்கல் மொத்தத்தில் தவறுடைய கொள்கையாகவே காணப்படுகின்றது. நீருக்கான செலவு கைத்தொழில் நிலையத்தின் மொத்த உற்பத்திச் செலவில் ஒரு வீதமாகக் காணப்படுகின்றது. இதன் கிடைத்தகுதன்மை, நம்பகத்தன்மை, மற்றும் தரம் என்பன அதன் உற்பத்திச் செலவை விட முக்கியமானவைகளாகும். நீர்ப்பாசன விவசாயத்திலும் கூட உற்பத்திச் செயன்முறைகளில் நீர் முக்கிய பங்கை வகிக்கின்றது. இலவசமாக நீர் கிடைக்கும்போது அது நீர்த் தேக்கத்தை ஏற்படுத்தும். இதனால் அனுகூல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகப் பயன்படுத்தப்படாது தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, நம்பகமான நீர்ப்பாசனமும், அதன் கட்டுப்பாடும் அதன் விலையை விட முக்கியமானவைகளாகும். பழச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் அவர்களின் மொத்தச் செலவில் 10 - 15 சதவீதத்தை நம்பகரமான நீர்ப்பாசனத்திற்காக உபயோகிக்க விரும்புகின்றார்கள். 80%க்கு அதிகமான நீர் ஆசியாவில் விவசாயத்திற்காக உபயோகப்படுத்தப்படுகின்றது. இதில் சிறுபகுதி நீரை குறைத்துக் கொள்ள முடியுமாயின் பெருந்தொகையான வீட்டு நீர்த் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள கூடியதாயிருக்கும். இத்தகைய குறைபாடுகளை நிவர்த்திப்பது கடினம் ஆயினும், நீர் மிக அருமையானதாக மாறும்போது இதைத் தவிர வேறு வழி காணப்படுவதுமில்லை.

நிறுவன ரீதியிலான குறைபாடுகளே நீர் முகாமைத்துவத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கு முக்கிய காரணமாகவுள்ளது. பலதுறை அரச முகவர்களின் திட்டமிடப்படாத செயற்பாடுகள் சரியான தொடர்புபடுத்தலின்மை என்பனவே இந்தக் குறைபாடுகளுக்காகக் காட்டப்படும் காரணங்களாகும். உதாரணத்திற்கு சில ஆசிய நாடுகளில் ஒருங்கிணைந்த ஆற்றங்கரை முகாமைத்துவம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் பாதுகாப்பற்ற நீரேந்து பிரதேசங்கள் காணப்படுதலும் அவற்றில் கழிவு நீர் கலங்கப்படுதலும் என்பன தடுக்கப்பட முடியாதவையாகவுள்ளன. அத்தோடு நீர் வழங்கல் தொகுதிகளில் 40 சதவீதம் நீர்க்கசிவு மூலம் வீணழிக்கப்படும் அதேவேளை, கழிவு நீரில் சராசரியாக 2 சதவீதம் மட்டுமே பரிகரிக்கப்பட்டுப் பாவிக்கப்படுகின்றது.

மாசாக்கத்தைக் கட்டுப்படுத்தல்

ஆசியாவின் மாசாக்கம் கட்டுப்படுத்தப்படுதல், கட்டுப்படுத்தும் அணுகுமுறையிலும் கட்டளையிடுவதிலுமே பெரும்பாலும் தங்கியுள்ளது. மாசாக்கத்தைக் கட்டுப்படுத்தும் அரச கொள்கைகள், அனுமதிப்பத்திரம், தண்டப்ணம், சில அரசாங்கக் கட்டளைகள் என்ற வகையிலேயே அமைந்துள்ளன. அரசாங்கங்கள் அடிக்கடி சூழல் நியம சட்டங்களைக் கைத்தொழில் மீது செலுத்துகின்ற போதிலும் இவற்றின் கண்காணிப்பு முற்றாகவே போதுமானதாயில்லை. இதன் விளைவு அமுல்படுத்தப்படாத சட்டதிட்டங்களில் அதிகரித்துச் செல்லும் நிலையை ஏற்படுத்தும். கொள்கை ஆக்குனர்கள் தற்போது புத்தூக்க அடிப்படையிலான பொருளியல் கருவிகளாலான வரி மானியம், மாசாக்க கொடுப்பனவு, மீளக் கையளித்தல் என்பனவற்றை பரிசோதிக்க தொடங்கியிருக்கின்றார்கள் என்ற போதிலும் அவை இன்னும் ஒப்பீட்டு ரீதியில் அரிதாகவே காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக இந்தியாவில் 1986ஆம் ஆண்டில் சுற்றாடல் தர நிர்ணய சட்டம் தேசிய அளவில் குறைந்த நியமங்களின் மூலம் கைத்தொழில் சாலைகளை தேசிய அளவில் கட்டுப்படுத்தியது. அரசாங்க மாசாக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டுச் சபைகள் நியமங்களைத் தளர்த்த முடியாத அதே வேளை அவற்றை அதனை விட இறுக்கமாக்கக் கூடியதாக இருந்தன. தேசிய நியமங்கள் மாசாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியிடப்படும் கழிவுகளை ஐதாக்கும் வகையில் இழப்பீடுகள் கோரும் அணுகுமுறைகள் மூலமும் தொழிற்சாலைக் கழிவுகளைக் குறைக்க முடியாவிட்டாலும் அவை பெருமளவில் ஐதாக்கப்பட்டன. ஆனால் இந்த நடைமுறைகள் பல இடங்களில் சிறப்பாக அமுல்படுத்தப்படவில்லை. மத்திய மாசுக்கள் கட்டுப்பாட்டு சபையின் புள்ளி விபரங்களின்படி 1990இல் 7 சதவீதமான தொழிற்சாலைகள் மட்டுமே இந்த நடைமுறைகளைச் சரியாகப் பின்பற்றியுள்ளன. (மொத்த நடுத்தர பெரிதான 1641 கைத்தொழில்சாலைகளில் 117 மாத்திரம் இதனைப் பின்பற்றியது) அண்மைக் காலங்களில் இந்தியா பெரும்பாலான மாசுக்களின் பாதிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் சீனக் குடியரசு சுற்றாடல் கடமைப்பாடுகளைத் தொடர்புபடுத்தும் வகையில் தொழிற்சாலைகளுக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்குமிடையான சிக்கலான தொடர்புகள் மாசாக்கத்தைக் குறைக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுற்றாடல் அதிகார சபை கூட மாசாக்கத்தைத் தடைப்படுத்தும் செயன்முறைத் தொகுதிகளை நடைமுறைப்படுத்துகிறது. துரதிஷ்ட வசமாக இந்தத் தொகுதிகளும் திறனுள்ளவையாக இல்லை. அதற்குக் காரணம் அதிகார சபை விதிக்கும் இழப்பீட்டுத் தொகைகள் மாசாக்கத்தைக் கட்டுப்படுத்தும் எல்லைச் செலவை விடக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் தொழிற்சாலைகளுக்கு மாசாக்கத்தைக் குறைப்பதை விட இழப்பீட்டுச் செலவைச் செலுத்துவது மிக மலிவானதாகும்.

1987இல் மக்கள் சீனக் குடியரசு தொழிற்சாலைக் கழிவு வெளியகற்றுவதற்கான அனுமதி வழங்கும் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இதன் திறனை அதிகரிக்கும் வகையில் அதிகார சபைகள் ஒவ்வொரு நிறுவனத்தினதும் மாசாக்கலை குறைக்கும் செலவையும், அவற்றின் நிதிவளத்தினையும் அனுமதிப் பத்திரம் வழங்கும் போது கருத்தில் எடுத்துக் கொண்டன. ஆனால் அதிஷ்டவசமாக இந்தியாவில் நடைபெற்றது போன்று இங்கும் கழிவுகளின் செறிவுகளின் அடிப்படையிலேயே அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. இது நடைமுறையில் ஐதாக்கலை ஏற்படுத்தியது. எப்படியாயினும் புதிய நடைமுறைகளை பழைய நடைமுறைகளின் மீது திணித்தலானது கலக்கமான நிலைப்பாட்டையே ஏற்படுத்தும்.

மக்கள் சீனக் குடியரசில் புதிய கைத்தொழில் முதலீடுகளின் 7 சதவீதம் சுற்றாடல் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காகவும், கழிவுகளைப் பரிகரிப்பதற்காகவும் தேவைப்படுகின்றன. இருப்பினும் 4 சதவீதமான புதிய முதலீடுகளே இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் தொழிற் சாலை களில் கழிவுகள் பரிகரிக்கப்படுதல் குறித்த விகிதத்தில் அதிகரிக்கப்படவில்லை. காரணம் பெரும்பாலான தொழிற்சாலைகள் தமது செலவினத்தைப் பேணும் வகையில் கழிவுகள் பரிகாரம் செய்வதை தவிர்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியா எங்கனும் போல் தென்கிழக்கு ஆசிய நாடுகளும் அடிப்படையில் கட்டளையிடும் கட்டுப்படுத்தும் அணுகுமுறையையே கடைப்பிடிக்கின்றன. கழிவு வெளியிடுதல், மற்றும் காலுதல் நியமங்கள் (Emission standards) என்பனவே மிகப் பொதுவான ஒழுங்காக்கும் முறைகளாகும். உதாரணத்திற்கு பிலிப்பைன்சில் நியமமான சுற்றாடல் வளியும், நீரின் தரமும் தொழிற்சாலை நிறுவுவதிலும், மின் உற்பத்தியிலும் அவற்றின் அளவு, இருப்பிடம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு பிரயோகிக்கப்படுகின்றது. எப்படியாயினும், இந்த நியமங்கள் கண்காணிப்பதும், அமுல்படுத்துவதும், திறனற்றதாகவும், போதுமற்றதாகவுமே உள்ளன. மேலும், சுற்றாடல் சீராக்கல் திட்டங்கள் ஏனைய பொருளாதாரக் கொள்கைகளுடன் முரண்படுவதாகவே காணப்படுகின்றது. உதாரணத்திற்கு, நாட்டின் எரிபொருள் கொள்கையிலுள்ள ஒழுங்குபடுத்தப்படாத சந்தை முறை டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணையை போக்குவரத்திற்கு பயன்படுத்துவதைத் தூண்டுகிறது. மலேசியாவின் வளி மாசுபடுதல் நியமங்கள் தொன் மாசுச் சுமையினால் அளவிடப்படுகின்றது. நீர் கழிவு வெளியேற்ற நியமங்கள் செறிவாக்கல் விகிதத்தில் அளவிடப்படுகிறது. இருப்பினும், மலேசியா திறனுள்ள கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலமாக இப்பிரச்சினைக்கு பகுதியளவிலாவது தீர்வு கண்டுள்ளது. தெங்கு எண்ணெய் (Palm oil), இறப்பர் முதலான தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட சில இனங் காணப்பட்ட மாசுக்களே காணப்படுகின்றன. ஏனைய ஆசிய நாடுகளை விட மலேசியாவில் இது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தாய்லாந்து கூட, நியமங்களின் அடிப்படையிலான திட்டமிடல், அனுமதிச் சீட்டு வழங்கல், நிலம் பயன்படுத்தும் வலயம் முதலானவற்றின் மூலம் சுற்றாடல் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆயினும் கூட அரசாங்கம் ஒழுங்குமுறைக் கட்டளை மற்றும் கட்டுப்படுத்தும் அணுகுமுறைகள் மூலம் பொருளியல் உபகரண பரிசோதனைகளினை ஆரம்பித்துள்ளது. இதிலுள்ள பிரச்சினை என்னவெனில் தாய்லாந்தின் சுற்றாடல் பாதிப்புக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்பட்டபோது 500 தொழிற்சாலைகள் அளவிலே இருந்தது. ஆனால் கைத்தொழில் மயமாதலின் பின் இங்கு 50,000ஐ விட அதிக தொழிற்சாலைகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக இந்த அணுகுமுறைகள் தற்போது செயற்றிறன் குன்றிக் காணப்படுகின்றன.

காட்டு வள முகாமைத்துவம்

ஆசியாவின் சந்தை, கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியான ஒழுங்கமைப்பு சீர்குலைந்துள்ளமைக்கு ஆசியாவின் காடழிப்பும் மற்றொரு உதாரணமாகும். விவசாய நிலத்திற்கும் காட்டு வளங்களுக்கும் உரிய பாதுகாப்பான சொத்துரிமை சட்டங்கள் இல்லாதிருப்பது இந்நிலைமைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசமான நிலைமைக்குத் தள்ளி காடுகளை அழிப்புக்குள்ளாக்குகின்றது. குத்தகை நிலப் பாதுகாப்பு இன்மையால் குத்தகை நிலம் பெறுவோர் அதனை வளம்படுத்துவதில் ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் மீந்திருக்கும் நிலத்தில் விவசாய உற்பத்தியை பேணுவது சாத்தியமற்றுப் போகும் அதே வேளை காடுகளின் ஓரங்களிலுள்ள வளமான நிலங்களை மக்கள் பயன்படுத்தும் நிலைமையும் ஏற்படுகின்றது.

இந்த நிலைமைகள் காட்டு முகாமைத்துவ கொள்கைகளாலேயே தூண்டப்படுகின்றன. உள்ளார்ந்த வெளியார்ந்த மானியங்களும் கனவளவு அடிப்படையிலான வரிகளும் காட்டுமரங்கள் அகற்றப்படுவதைத் தூண்டுவதோடு குறிப்பாக எல்லைக் காட்டு நிலங்களிலிருந்தும் அவை இழக்கப்படுவதைத் தூண்டுகின்றது. காட்டுடன் தொடர்பான சலுகைகள் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. இதனால் காட்டுப் பாதுகாப்பும், மீள் நடுகையும் இதன் மூலம் தூண்டப்பட போதுமானதாகக் காணப்படுவதில்லை.

இந்த சட்டதிட்டங்களில் வெட்டு மரத்தைத் தவிர காட்டிலிருந்து பெறப்படும் பொருட்களும் சேவைகளும் அரிதாக விலையிடப்படுவதாகவே உள்ளது. இது மிகையான காடழிப்பையும், உள்ளூர் சமூகத்திற்கும் மரம் வெட்டும் நிறுவனங்களுக்குமிடையிலான முரண்பாடுகளையுமே காட்டுகின்றன.

காடழிப்பு வேகமாக நடைபெறும் இடங்களைக் கருதும்போது இந்தோனேசியா, பிலப்பைன்ஸ், தாய்லாந்து உள்ளடங்கலான தென்கிழக்கு ஆசிய நாடுகளே முன்னணியில் இருக்கின்றன. இந்நாடுகளில் பதனிடப்படாத மரம் ஏற்றுமதி செய்யப்பட முடியாத வகையில் சட்டங்களும் காணப்படுகின்றன. இச்சட்ட அடிப்படையில் பிலிப்பைன்ஸிலும் தாய்லாந்திலும் காட்டுவளம் பேணப்படுவதோடு இந்தோனேசியாவில் இதன் பிரதான நோக்கம் உள்ளூர மரம் பதப்படுத்தும் செயலை ஊக்குவிப்பதாகவே இருக்கின்றது. ஏற்றுமதியின் மூலம் பெறப்படக் கூடிய மரத்தின் பெறுமதி அதிகரிப்பது காட்டு வளத்தைப் பாதுகாப்பதற்குரிய வருமானத்தை அதிகரிக்கும் எனக் கருதப்பட்டது. காட்டு வளத்தைப் பாதுகாக்க இந்தக் கொள்கைகள் சரியான முறையில் தொழிற்படவதாக இல்லை. பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளில் சட்ட பூர்வமற்ற மரம் வெட்டுதல், நிலம் துப்பரவாக்கம் ஆகியன தொடர்வதையும் எதிர்பார்க்கப்பட்டவாறு உள்ளூர் வெட்டுமரம் பதப்படுத்தும் தொழில் செயற்றிறன் பெறாமல் மரம் வெட்டும் வீதம் அபரிமிதமாக அதிகரிப்பதையுமே காணமுடிகிறது.

இக் கட்டுரை இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் News Survey எனும் சஞ்சிகையில் வெளியான "Environment and Natural Resources" எனும் கட்டுரையின் தமிழ்மொழி பெயர்ப்பாகும். இதனை மொழிபெயர்ப்பதற்கு அனுமதி தந்த மத்தியவங்கியின் செய்தித் தகவல் பிரிவின் பணிப்பாளர்க்கு மொழிபெயர்ப்பாளர்கள் தமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரயக் கணக்கீட்டில் மேந்தலைப் பகுப்பாய்வு

எம். அல்பிறட்

முகவுரை

கிரயக் கணக்கீடு நிதிக்கணக்கீட்டின் பின்னர் வளர்ச்சியடைந்ததொன்றாம். உற்பத்தி நிறுவனங்கள் கிரயங்கள் சம்பந்தமான முடிவுகளை எடுப்பதற்கு நிதிக்கணக்கீட்டுத் தகவல்கள் மட்டும் போதுமானவையல்ல. நிதிக் கணக்கீடு இலாபங்களையும், உற்பத்திக் கிரயங்களையும் மொத்த ரீதியாக வழங்குவதனால் உற்பத்தி நிறுவனங்கள் தாம் எதிர்பார்க்கும் தரவுகளை நிதிக் கணக்கீட்டிலிருந்து பெற முடிவதில்லை. எனவே நிதிக் கணக்கீட்டிலுள்ள குறைபாடுகளின் காரணமாக கிரய, முகாமைக் கணக்கீடு வளர்ச்சி அடைந்துள்ளன எனக் கூறிக் கொள்ளலாம். இன்று கைத்தொழில் புரட்சியின் விளைவான இயந்திரமயமாக்கலினால் வணிக உலகம் மாறுபாடடைந்துள்ளது. ஓர் உற்பத்தி நிறுவனம் ஒரு உற்பத்தி பொருளுடனும் நின்று விடாமல் அதனுடன் தொடர்புடைய பலவகையான உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளதினால் அவ்வாறான நிறுவனங்கள் ஒவ்வொரு பொருளுக்குமான மூலப் பொருட்கிரயம், ஊழியக் கிரயம், மேந்தலைகள், விற்பனை விலை, இலாப நட்டம் என்பன போன்றவற்றின் தரவுகளை வேண்டி நிற்கின்றன. எனவே ஆய்வில் மேற்கூறிய காரணிகளில் ஒன்றான மேந்தலைகள் குறித்து ஆய்வு செய்யப்படுகின்றது.

மேந்தலைக்கான விளக்கம்

மேந்தலை என்னும் பதமானது உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி அலகுகளுக்கு நேரடியாக விதிக்கமுடியாத அல்லது சேர்க்க முடியாத கிரயங்கள் அனைத்தையும் குறித்து நிற்கின்றது. இக்கிரயத்தினுள் நேரில் மூலப் பொருட் கிரயம், நேரில் ஊழியக் கிரயம் என்பனவற்றுடன் தொழிற்சாலை, நிர்வாகம், விற்பனை, விநியோகம் போன்றவற்றின் போது ஏற்படும் நேரில் செலவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுருக்கமாகக் கூறின் அனைத்து நேரில் கிரயங்களினதும் மொத்தம் மேந்தலை எனக் கூறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். ஒரு அலகிற்கான கிரயத்தினைக் கணிக்கும் போது அதன் நேர்க்கிரயத்துடன் மேந்தலைக் கிரயங்களின் ஒரு பகுதியும் சேர்த்தே பெறப்படல் வேண்டும். நேர்க்கிரயங்களை மிக இலகுவாக இனம் கண்டு கொள்ளலாம். ஏனெனில், நேர்க்கிரயங்களை உற்பத்தி அலகுகளுக்கு நேரடியாக விதிக்கப்படுவதினால் இதனை கணிப்பது மிகச் சுலபம். ஆனால் நேரில் கிரயங்கள் நேரடியாக அல்லாது பொதுவாக ஒரு கிரய நிலையத்திற்கோ அல்லது பல கிரய நிலையங்களுக்கோ ஏற்படக்கூடியதாக இருப்பதனால் இதனைக் கணிப்பதில் பல சிரமங்கள் காணப்படுகின்றன.

ஓர் உற்பத்திப் பொருளின் கிரயத்தினுள் மூன்று வகையான கிரய மூலங்கள் அடங்கியுள்ளன. அவையாவன :

1. மூலப்பொருள்
2. ஊழியம்
3. ஏனைய செலவுகள்

எனவே மூலப் பொருட்கிரயம், ஊழியக்கிரயம், ஏனைய செலவுகள் ஆகியவைகளின் கூட்டுத் தொகையே மொத்தக் கிரயம் எனக் கூறிக் கொள்ளலாம். இந்த மொத்தக் கிரயத்தினை நேர்க்கிரயம், நேரில் கிரயம் என இரண்டாக வகுத்து ஆராயலாம். இந்நிலையில் மொத்தக் கிரயமானது நேர்க்கிரயங்களினதும் நேரில் கிரயங்களினதும் கூட்டுத் தொகையாக அமையும்.

நேர்க்கிரயத்தினை மேலும் நாம் நோக்கும்போது அதனுள் மூன்று வகையான கிரயங்கள் இருப்பதனை அவதானிக்கலாம். இது மேற்கூறிய மூன்று மூலவளங்களினாலும் ஏற்படும் நேர்க்கிரயங்களைக் குறித்து நிற்கும். அவைகள் நேர் மூலப்பொருட் கிரயம், நேர் ஊழியக் கிரயம், நேர் ஏனைய செலவுகள் ஆகும். இவைகளின் கூட்டுத் தொகையே நேர்க்கிரயம் ஆகும். இவ்வாறே நேரில் கிரயங்கள் நேரில் மூலப்பொருட் கிரயம், நேரில் ஊழியக் கிரயம், நேரில் ஏனைய செலவுகளின் கூட்டுத்தொகையாகக் காணப்படும். இந்த வகையில் நோக்கும் போது மூலப் பொருட் கிரயத்தினை நேர் மூலப் பொருட் கிரயம், நேரில் மூலப் பொருட் கிரயம் எனவும் ஊழியக் கிரயத்தினை நேர் ஊழியக் கிரயம், நேரில் ஊழியக் கிரயம் எனவும் ஏனைய செலவுகளை நேர் ஏனைய செலவுகள்,நேரில் ஏனைய செலவுகள் எனவும் பிரித்தறியலாம். (Lucy, 1989) இவைகளை ஒட்டு மொத்தமாகப் பின்வரும் சமன்பாட்டு வடிவில் எழுதிக் கொள்ளலாம்.

மூலப் பொருட் கிரயம்	=	நேர்மூலப் பொருட்கிரயம்	+	நேரில் மூலப்பொருட்கிரயம்
ஊழியக் கிரயம்	=	நேர் ஊழியக் கிரயம்	+	நேரில் ஊழியக் கிரயம்
ஏனைய செலவுகள்	=	நேர் ஏனைய செலவுகள்	+	நேரில் ஏனைய செலவுகள்
- - - - - - - - - - - - -		- - - - - - - - - - - - - - - -		- - - - - - - - - - - - - - - - -
மொத்தக் கிரயம்	=	நேர்க்கிரயம்	+	நேரில் கிரயம்
=============		===============		================

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்க்கிரயம் ஆனது மூலக்கிரயம் என பொதுவாக அழைக்கப்படுவது வழக்கம். மேலும் நேர் மூலப் பொருட் கிரயம் பயன்படுத்திய மூலப் பொருட் கிரயம் எனவும் இனங்காணப்படுகின்றது. நேரில் கிரயங்கள் என்பவை மேந்தலைகளைக் குறித்து நிற்கின்றன. அதாவது, ஒரு குறிப்பிட்ட உற்பத்தி பொருளின் உற்பத்தியில் குறிப்பிட்ட உற்பத்தி பொருளிற்கு நேரடியாக விதிக்க முடியாத மறைமுகமான கிரயங்களே இவைகளாகும். இந்நிலையில் மொத்தக் கிரயத்தினை மூலக்கிரயத்தினதும் மேந்தலைகளினதும் கூட்டுத்தொகை என கூறிக் கொள்ளலாம். மேலே கூறியவற்றை பின்வரும் வரைபடம் மூலம் பின்வருமாறு காட்டிக் கொள்ளலாம்.



உற்பத்தி பொருளிற்கு மேந்தலைகளைக் கணித்தல்

மேந்தலைகள் நேரடியாக உற்பத்தி அலகுகளுடன் நேரடியாக தொடர்பற்றவைகளாகக் காணப்படுவதினால் அவைகள் நியாயமான ஓர் முறையில் ஏற்படும் மேந்தலைகளை எடுத்து நோக்கின் அவைகள் பெரும்பாலும் நிறுவன தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றன. ஓர் நிறுவனத்தின் தொழிற்பாடுகளை உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாடு, நிர்வாகத் தொழிற்பாடு, விற்பனை விநியோகத் தொழிற்பாடு, நிதித் தொழிற்பாடு, ஆராய்ச்சி அபிவிருத்தி தொழிற்பாடு என பல்வேறு தொழிற்பாடுகளாக இனம் காணலாம். இன்னுமோர் வகையில் மேந்தலைகளை நோக்குவோமாயின் அவைகள் உற்பத்தி நிறுவனங்களில் காணப்படும் கிரய நிலையங்களில் ஏற்படுவதனைக் காணப்படலாம்.

கிரய நிலையம் என்பது ஓர் நிறுவனத்தின் தனித்தனி பகுதிகளில் ஒன்றினையோ அல்லது பல பகுதிகளையோ குறித்து நிற்கும். மேலும் ஒரு நிறுவனத்தின் தொழிற்பாடு பொறுத்தும் அங்கு கிரய நிலையங்கள் காணப்படலாம். ஒவ்வொரு தொழிற்பாடும் ஒரு கிரய நிலையமாகக் கருதப்படலாம். எனவே கிரய நிலையம் என்பது ஒரு இடமாகவோ (விற்பனைப் பிரதேசம்) ஒரு ஆளாகவோ (விற்பனையாளர்) இயந்திரம் பராமரிக்கும் பகுதியாகவோ அன்றேல் ஓர் மோட்டார் வாகனமோ அல்லது மேற் கூறியவைகளின் ஒரு தொகுதியாகவோ இருக்கலாம். இந்த வகையில் ஒரு உற்பத்தி நிறுவனத்தில் இயந்திரப் பகுதி, ஒன்று சேர்த்தல் பகுதி, முடித்தல் பகுதி, களஞ்சியப் பகுதி, நலம்புரி சேவைப் பகுதி என பல்வேறு கிரய நிலையங்கள் காணப்படலாம். பேக்கரி ஒன்றினை எடுத்து நோக்குவோமாயின் அங்கு இருக்கக்கூடிய கிரய நிலையங்களாக போறனை உள்ள பகுதி, மாவை தயாரிக்கும் பகுதி, களஞ்சியப் பகுதி, நிர்வாகப் பகுதி, விற்பனைப் பகுதி என்பவைகள் காணப்படலாம். இங்கு முக்கிய விடயம் என்னவெனில் ஒவ்வொரு கிரய நிலையங்களிலும் கிரயங்களை ஏற்படுத்த கூடியதாகவுள்ளதை அவதானிக்கலாம்.

மேந்தலைகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல்

மேந்தலைகள் நேர்க்கிரயங்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டு அவைகள் சேகரிக்கப்படுதல் அவசியமானதாகும். இவ்வாறு சேகரித்த பின்னரே அக்கிரயங்கள் கிரய நிலையங்களிற்கு சாட்டுதல் செய்யப்பட முடியும். இந்தக் கிரய சேகரிப்பினை இலகுவாக்க தகுந்த குறியீட்டு இலக்கங்கள் கிரயக்கணக்காய்வாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

மேந்தலை ஒதுக்குதலும் பகிர்தலும்

உற்பத்தி நிறுவனமொன்றில் ஏற்பட்ட மேந்தலைகளில் சில குறிப்பிட்ட கிரய நிலையத்துடனோ அல்லது பல கிரயங்களுடனோ தொடர்புபட்டதாக இருக்கலாம். எனவே ஏற்பட்ட மேந்தலைகள் ஒரு குறிப்பிட்ட கிரய நிலையத்திற்கென தெளிவாகத் தெரியும் பட்சத்தில் அம்மேந்தலைகளை அக்கிரய நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யலாம். இதனையே நாம் "மேந்தலை ஒதுக்கீடு" எனக் கூறுகின்றோம். எனவே மேந்தலைகளை ஒதுக்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம் மேந்தலைகள் சரியாகக் கணிக்கப்படக்கூடியதாக இருப்பதுடன் அம்மேந்தலைகள் அக்குறிப்பிட்ட கிரய நிலையம் இயங்குவதால் மாத்திரம் ஏற்பட்டவையாக இருக்க வேண்டுமென்பது இங்கு முக்கியமானதாகும்.

நேரடியாக கிரய நிலையங்களுக்கு ஒதுக்க முடியாத மேந்தலைகளை எடுத்து நோக்கின் அவைகள் பல்வேறு கிரய நிலையங்களிற்காக பொதுவாக ஏற்பட்ட மேந்தலைகளாகக் காணப்படும். எனவே, இவ்வாறாக பல கிரய நிலையங்களிற்கூடாக ஏற்பட்ட பொதுவான மேந்தலைகள் அந்தந்தக் கிரய நிலையங்களிற்கு ஓர் நியாயமான அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். இவ்வாறு கிரய நிலையங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவதனையே "மேந்தலைப் பகிர்வு" என அழைக்கின்றோம். உதாரணத்திற்கு ஒரு நிறுவனத்தில் இயந்திரப் பகுதி, ஒன்று சேர்த்தல் பகுதி, முடித்தல் பகுதி எனும் உற்பத்தி பகுதிகளும், களஞ்சியம், தேனீர்சாலை எனும் சேவைப் பகுதிகளும் காணப்படுகின்றன எனவும் இங்கு காணப்படுகின்ற ஐந்து கிரய நிலையங்களுக்குமாக மொத்த வாடகையாக ரூபா 200,000 செலுத்தப்பட்டுள்ளது எனவும் கொள்வோம். எனவே செலுத்தப்பட்ட வாடகை பொதுவாக செலுத்தப்பட்டுள்ளதையும் செலுத்தப்பட்ட வாடகை ஒவ்வொரு கிரய நிலையங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டியதாகவுள்ளதையும் அவதானிக்கலாம். எனவே இவ்வாறு பகிர்ந்தளிப்பதற்கு ஓர் நியாயமான அடிப்படை ஒன்று தேவைப்படுகின்றது. இங்கு அந்த நியாயமான அடிப்படையாக ஒவ்வொரு கிரய நிலையங்களின் தளப்பரப்பு எனக் கொள்வோமாயின் இங்குள்ள ஐந்து கிரய நிலையங்களிற்குமான தளப்பரப்புக்களின் விபரம் தேவையானதாக காணப்படுகின்றது. இந்நிலையில் கிரய நிலையங்களின் தளப்பரப்புக்களின் விபரங்கள் பின்வருமாறு உள்ளதெனக் கொள்வோம்.

உற்பத்தி பகுதிகள் :		சேவைப் பகுதிகள் :	
இயந்திரப் பகுதி	4000 சதுர அடி	களஞ்சியப் பகுதி	800 சதுர அடி
ஒன்று சேர்த்தல் பகுதி	3000 சதுர அடி	தேனீர் சாலை	700 சதுர அடி
முடித்தல் பகுதி	1500 சதுர அடி		

எனவே மொத்த வாடகையானது பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படும்.

$$\text{ஒரு சதுர அடிக்கான வாடகை} = \frac{\text{ரூபா } 200,000}{10,000 \text{ சதுர அடி}} \text{ ரூபா 20 என்ற அடிப்படையில்}$$

கிரய நிலையங்கள் ஒவ்வொன்றிற்குமான மொத்த வாடகை பின்வருமாறு அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரய நிலையங்கள்	வாடகை
இயந்திரப் பகுதி	ரூபா 80,000
ஒன்று சேர்த்தல் பகுதி	ரூபா 60,000
முடித்தல் பகுதி	ரூபா 30,000
களஞ்சியம்	ரூபா 16,000
தேனீர்சாலை	ரூபா 14,000

	ரூபா 200,000
	=========

பொதுவாக ஏற்பட்ட மேந்தலைகளை கிரய நிலையங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு பொதுவாக பின்பற்றப்படும் பகிர்வு அடிப்படைகள் பின்வருமாறு :

பகிர்வு அடிப்படை	பகிரப்படும் மேந்தலைகள்
தளப்பரப்பு	வாடகை, இறைகள், ஒளியூட்டல், கட்டிட பெறுமானத் தேய்வு. உஷ்ணமாக்கல் செலவு.
ஊழியர்கள் தொகை	நிர்வாகச் செலவுகள், மேற்பார்வை செலவுகள், நலன்புரி செலவுகள், சிற்றுண்டிச் செலவு, பாதுகாப்புச் செலவுகள், ஆளணிச் செலவுகள்.
புத்தகப் பெறுமதி	பெறுமானத் தேய்வு, காப்புறுதி.
மூலப்பொருள் நிறை	மூலப்பொருள் கையாளல், களஞ்சியப்படுத்தல் செலவுகள்
கன அளவு	கட்டிட பெறுமானத் தேய்வு, உஷ்ணமாக்கல் செலவுகள்.
தொழில்நுட்ப மதிப்பீடு	சக்தி, மின்சாரம், எரிபொருள் செலவுகள்.

குறிப்பு:

ஓர் குறிப்பிட்ட மேந்தலைக் கிரயத்தினை ஒன்றிற்கு மேற்பட்ட அடிப்படையில் பகிரக் கூடியதாக இருப்பதினைக் காணலாம். எனினும் நிறுவனத்தின் தன்மை பொறுத்து எந்த அடிப்படையினை பின்பற்ற வேண்டும் என்பது தீர்மானிக்கப்படல் வேண்டும்.

மேற்படி ஆய்வில் கிரய நிலையங்களிற்கு மேந்தலை ஒதுக்குதல் மூலமும் மேந்தலை பகிர்வு மூலமும் மேந்தலைகள் விதிக்கப்படுவதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு அவதானித்தோம். எனவே ஓர் கிரய நிலையத்தில் காணப்படும் மொத்த மேந்தலைகளை பின்வருமாறு காணலாம்.

விபரம்	உற்பத்தி பகுதிகள்			சேவைப்பகுதிகள்	
	1	2	3	4	5
மேந்தலை ஒதுக்குதல்	xx	xx	xx	xx	xx
மேந்தலை பகிர்வு	xx	xx	xx	xx	xx
	xx	xx	xx	xx	xx

இங்கு சேவைக் கிரய நிலையங்களிற்கும் மேந்தலை ஒதுக்குதல், மேந்தலை பகிர்வு மூலம் மேந்தலைகள் விதிக்கப்பட்டுள்ளதனை அவதானிக்கலாம். எனவே கிரய நிலையங்களில் ஏற்பட்ட மேந்தலைகள் உற்பத்தி கிரய நிலையங்களுக்கிடையே மீள் பகிரப்படல் வேண்டும்.

சேவைக்கிரய நிலையங்களின் மேந்தலைகளை உற்பத்தி கிரய நிலையங்களுக்கிடையே மீள்பகிர்தல் :

சேவைக் கிரய நிலையங்கள் உற்பத்தியினை மேற்கொள்ளாத போதிலும் உற்பத்தியினை மேற்கொள்ளும் ஏனைய கிரய நிலையங்களுக்கு உதவும் கிரய நிலையங்களாகக் காணப்படுகின்றன. சேவைப்பகுதியின் உற்பத்தி செய்முறைக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளை வழங்குகின்றன. எனவே சேவைக்கிரய நிலைய மேந்தலைகள் உற்பத்தி கிரய நிலையங்களுக்கிடையே மீளப் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். இதனையே "மேந்தலை மீள் பகிர்தல்" என்படுகின்றது. சேவைக்கிரய நிலையங்களின் மேந்தலைகள் உற்பத்தி கிரய நிலையங்களுக்கிடையில் மீள்பகிர்ந்தளிக்கப்பட்டால் மட்டுமே கணிக்கப்படும் உற்பத்திக் கிரயம் எல்லாக் கிரயங்களையும் உள்ளடக்கிய தொன்றாகக் காணப்படும்.

சேவைக்கிரய நிலையங்களின் மேந்தலைகளை மீளப்பகிரும் போது இரு விதமாக நிலைமைகள் காணப்படலாம்.

1. சேவைக் கிரய நிலையங்கள் தனியே உற்பத்தி கிரய நிலையங்களுக்கு மட்டும் சேவை ஆற்றுகின்ற நிலமை.
2. சேவைக்கிரய நிலையங்களை தமக்குள்ளும் ஒன்றிற்கொன்று சேவையாற்றி உற்பத்தி கிரய நிலையங்களுக்கு சேவை ஆற்றுகின்ற நிலமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நிலைமைகளுக்கேற்ப சேவைக் கிரய நிலையங்களின் மேந்தலைகள் உற்பத்தி கிரய நிலையங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது. மேற்படி இரு நிலைமைகளுள் முதலாவது நிலைமையில் மேந்தலைகளை மீளப்பகிர்வதில் கஷ்டங்கள் எதுவும் இல்லை. ஏனெனில் குறிப்பிட்ட அடிப்படையில் நேரடியாகவோ சேவைக்கிரய நிலைய மேந்தலைகள் கிரய நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதினாலாகும். இவ்வாறு மீள் பகிர்விற்கு மேந்தலைப் பகிர்விற்கு பயன்படுத்திய அடிப்படைகளே சூழ்நிலைகள் பொறுத்து பாவிக்கப்படும்.

இரண்டாவது நிலைமையினை எடுத்து நோக்குவோமாயின் இங்கு ஒரு சேவை கிரய நிலையம் இன்னோர் சேவை கிரய நிலையத்திற்கு சேவை ஆற்றுவதினைக் காணலாம். இச்சந்தர்ப்பத்தில் சேவைக்கிரய நிலைய மேந்தலைகளை ஒரே முறையில் உற்பத்தி கிரய நிலையங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பது இயலாததொன்றாக இருக்கும். உதாரணமாக களஞ்சிய கிரய நிலையம், பராமரிப்பு கிரய நிலையம் என இரு சேவைக் கிரய நிலையங்கள் உள்ளன ஏனவும் அவைகள் ஒன்றிற்கொன்று சேவையாற்றுகின்றன எனவும் கொள்வோமாயின் களஞ்சியத்தின் மேந்தலையினை பகிரும்போது அதில் ஒரு பகுதி பராமரிப்புப் பகுதியிற்கும் பகிர்ந்தளிக்கப்படும். அதேபோன்று பராமரிப்புப் பகுதியின் மேந்தலையினைப் பகிரும்போது அதில் ஒரு பகுதி களஞ்சியப்பகுதியிற்கு பகிரப்படும். இந்நிலை முடிவுற்ற முறையில் ஒன்றை ஒன்று தொடர்வதாக அமைகின்றது. இதனைத் தவிர்ப்பதற்கு நடைமுறையில் இரண்டு முறைகள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

1. திரும்பத் திரும்ப / தொடர்ந்து பகிர்ந்தளிக்கும் முறை
2. இருபடிச் சமன்பாட்டு முறை

திரும்பத் திரும்ப பகிர்ந்தளிக்கும் முறை:

இம்முறையில் மேந்தலைகள் உற்பத்தி கிரய நிலையங்களுக்கும் சேவைக்கிரய நிலையங்களுக்குமிடையே திரும்பத் திரும்ப பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இங்கு முதல் பகிர்விற்காக எந்த சேவைக் கிரயத்தின் மேந்தலைகள் கூடுதலாக உள்ளதோ அதுவே முதலில் பகிர்விற்காக எடுத்துக்கொள்ளப்படுவது வழக்கம். இவ்வாறு பகிர்ந்தளித்துக்கொண்டு செல்லும் போது சேவைக்கிரய நிலைய மேந்தலையின் அளவு குறைந்து குறைந்து கொண்டு செல்லும். எனவே மேந்தலைகள் மிகச் சொற்பமாக வரும்போது மேற்கொண்டு அதனை சேவை கிரய நிலையங்களுக்கு பகிராது தனியே உற்பத்தி கிரய நிலையங்களுக்கு இடையே மட்டும் பகிரப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமன்பாட்டு முறை

இம்முறையில் சமன்பாடுகள் உருவாக்கப்பட்டு அவற்றினைத் தீர்ப்பதன் மூலம் சேவைக் கிரய நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய முழு மேந்தலைகளும் (குறிப்பிட்ட சேவைக்கிரய நிலையத்தின் மேந்தலைகளும் ஏனைய சேவைக்கிரய நிலையங்களின் மேந்தலைகளின் ஒரு குறிப்பிட்ட பகுதியும்) முதலில் கணிக்கப்படுகின்றது. பின்னர் அவைகள் நேரடியாக உற்பத்தி கிரய நிலையங்களுக்கிடையே மட்டும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் போது சேவைக்கிரய நிலையங்களுக்கு மீண்டும் பகிர்வு செய்யப்படுவதில்லை. ஏனெனில், சேவைக் கிரய நிலையங்களுக்கு பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன என்ற அடிப்படையிலேயே சமன்பாடுகள் தயாரிக்கப்படுகின்றன.

மேற்படி இரு பகிர்வு முறைகளையும் ஓர் உதாரணத்தின் மூலம் விளங்கிக் கொள்வோம்.

ஒரு நிறுவனத்தில் மூன்று உற்பத்திப் பகுதிகளும் இரண்டு சேவைப் பகுதிகளும் காணப்படுகின்றன. நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் படி திட்டமிடப்பட்ட மேந்தலைகளின் விபரம் வருமாறு :

உற்பத்திப் பகுதிகள் :	இயந்திரப் பகுதி	ரூபா	244,000
	ஒன்று சேர்த்தல் பகுதி	ரூபா	168,000
	முடித்தல் பகுதி	ரூபா	155,000
சேவைப் பகுதிகள் :	களஞ்சியப் பகுதி	ரூபா	72,000
	நலன்புரிப் பகுதி	ரூபா	49,000
		ரூபா	688,000

சேவைப் பகுதி மேந்தலைகள் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைப் பகுதி	உற்பத்திப் பகுதிகள்			சேவைப் பகுதிகள்	
	இயந்திரப் பகுதி	ஒன்று சேர்த்தல் பகுதி	முடித்தல் பகுதி	களஞ்சியப் பகுதி	நலன்புரிப் பகுதி
களஞ்சியப் பகுதி	15%	20%	30%	-	35%
நலன்புரி பகுதி	45%	-	25%	3%	-

சேவைப்பகுதியின் மேந்தலைகளினை உற்பத்தி கிரய நிலையங்களுக்கிடையே மேற்படி இரு முறைகளின் அடிப்படையில் பகிர்வோம்.

1. திரும்பத் திரும்ப பகிர்ந்தளிக்கும் முறை :

விபரம்	பகிர்வு அடிப்படை	உற்பத்திப் பகுதிகள்			சேவைப் பகுதிகள்	
		இயந்திரப் பகுதி	ஒன்று சேர்த்தல் பகுதி	முடிவுறுத்தல் பகுதி	களஞ்சியப் பகுதி	நலன்புரிப் பகுதி
மேந்தலைகள்	ஒதுக்கப்பட்டது	244,000	168,000	155,000	72,000	49,000
களஞ்சியப் பகுதி	தொழிற்சாலை மதிப்பீடு	10,800	14,400	21,600	(72,000)	25,200
நலம்புரி பகுதி	தொ.சா.மதிப்பீடு	33,390	---	18,550	22,260	(74,200)
களஞ்சியப் பகுதி	"	3,340	4,450	6,690	(22,260)	7,780
நலம்புரி பகுதி	"	3,500	---	1,950	2,330	(7,780)
களஞ்சியப் பகுதி	"	350	460	700	(2,330)	820
நலம்புரி பகுதி	"	370	---	200	250	(820)
களஞ்சியப் பகுதி	"	40	50	70	(250)	90
நலம்புரி பகுதி	"	60	---	30	----	(90)
		295,850	187,360	204,790	--- -	----

2. ***சமன்பாட்டு முறை :***

களஞ்சியப் பகுதியின் மொத்த மேந்தலையை x எனவும் நலன்புரிப் பகுதியின் மொத்த மேந்தலையை y எனவும் கொள்க

எனவே x,y என்பவைகளிற்கான சமன்பாடுகளை பின்வருமாறு எழுதிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$X = 72,000 + Y \text{ இன் } 30\%$$

$$Y = 49,000 + X \text{ இன் } 35\%$$

எனவே இதனை பின்வருமாறு எழுதிக் கொள்ளலாம்.

$$X = 72,000 + 0.3\,Y \quad _________(1)$$

$$Y = 49,000 + 0.3\,X \quad _________(2)$$

இவ்விரு சமன்பாடுகளையும் இலகுவாகத் தீர்ப்பதற்கு பின்வருமாறு எழுதிக் கொள்ளலாம்.

(2)ஆவது சமன்பாட்டினை (1) ஆவது சமன்பாட்டில் பிரதியீடு செய்யும் போது X இன் பெறுமதியினைக் காண்க.

$$X = 72,000 + 0.3\,(49,000 + 0.35X)$$

$$X = 72,000 + 14,700 + 0.105X$$

$$X - 0.105X = 86700$$

$$0.895X = 86,700$$

$$X = 96,872$$

இனி X இன் பெறுமதியை (2)ஆவது சமன்பாட்டில் பிரதியீடு செய்யும் போது Y இன் பெறுமதியைக் கண்டு கொள்ளலாம்.

$$Y = 49,000 + 0.35\,(96872)$$

$$= 49,000 + 33905$$

$$Y = 82,905$$

எனவே களஞ்சியப் பகுதியினதும், நலன்புரியினதும் மொத்த மேந்தலைகள் முறையே ரூபா 96,872 எனவும் ரூபா 82,905 எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கணிக்கப்பட்ட மொத்த மேந்தலைகள் உற்பத்தி கிரய நிலையங்களுக்கிடையில் பின்வருமாறு பகிரப்படும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரம்	பகிர்வு அடிப்படை	உற்பத்திப் பகுதிகள்			மொத்தம்
		இயந்திரப் பகுதி	ஒன்று சேர்த்தல் பகுதி	முடிவுறுத்தல் பகுதி	
மேந்தலைகள்	ஒதுக்கியது	244,000	168,000	155,000	567,000
களஞ்சியப் பகுதி	தொழிற்சாலை மதிப்பீடு	14,531	19,374	29,062	62,967
நலம்புரி பகுதி	தொ.சா.மதிப்பீடு	37,307	---	20,726	58,033
		295,838	187,374	204,788	688,000

மேற்படி தீர்வினை நாம் பின்வருமாறு நிரூபித்துக் காட்டலாம்.

களஞ்சியப்பகுதியின் = களஞ்சியப்பகுதியின் + மேந்தலைகள் நலன்புரிப்-பகுதியின் 30%

மொத்த மேந்தலைகள்

X = 72,000 + (82,905 x 30%)

Y = ரூபா 92,872

==========

இவ்வாறு

Y = 49,000 + (96,872 x 35%)

= ரூபா 82,905

==========

எனவே சேவைக்கிரய நிலையங்களினது மேற்தலைகளும் உற்பத்தி கிரய நிலையங்களுக்கு மீளப் பகிரப்பட்ட பின்னர் உற்பத்தி கிரய நிலையங்களில் காணப்படும் மேந்தலைகள் ஒதுக்குதல், பகிர்வு, மீள்பகிர்வு எனும் மூன்று வழிகள் மூலம் பெறப்பட்டதாகக் காணப்படும்.

	உற்பத்தி கிரய நிலையங்கள்		
	1	2	3
மேந்தலை ஒதுக்குதல்	xx	xx	xx
மேந்தலை பகிர்வு	xx	xx	xx
சேவைக்கிரய நிலையமீள்பகிர்வு	xx	xx	xx
	xx	xx	xx

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைக்கிரய நிலையங்களின் மேந்தலைகளை உற்பத்தி கிரய நிலையங்களிற்கு மீள்பகிந்தளிப்பதன் முக்கிய நோக்கம் என்னவெனில் பல்வேறு உற்பத்தி கிரய நிலையங்களினூடாக செயன்முறைப் படுத்தப்படும் உற்பத்திப் பொருட்களிற்கு உண்மையான மேந்தலைகளை கணிப்பதற்காகவாகும்.

மேந்தலை உட்கொள்ளல் வீதங்களை கணித்தல்

கிரய நிலையங்களில் காணப்படும் மேந்தலைகளை அவைகளினூடாக செயன்முறைப்படுத்தும் கிரய அலகுகளினால் உட்கொள்ளப்படல் வேண்டும் அல்லது உறிஞ்சப்படல் வேண்டும். அவ்வாறு உட்கொள்ளப்பட்டு கணிக்கப்படும் கிரயமே அந்தந்த கிரயங்களில் செயன்முறைப் படுத்தப்படும் கிரய அலகுகளிற்கான உண்மையான கிரயமாக இருக்கும். இதற்குதவியாக மேந்தலை உட்கொள்ளல் வீதம் கணிக்கப்படுகின்றது.

மேந்தலை உட்கொள்ளல் வீதத்தினை குறிப்பிட்ட கிரய நிலையத்திற்கென கணிக்கும் போது அக்குறிப்பிட்ட கிரய நிலையம் எவ்வாறான தன்மையான கிரய நிலையம் என்பது மிகவும் முக்கியமானதாகும். அதாவது குறிப்பிட்ட அக்கிரய நிலையத்தில் காணப்படும் மேந்தலைகள் அக்குறிப்பிட்ட கிரய நிலையத்தின் எந்தச் செயல்பாட்டினால் கூடுதலாக ஏற்பட்டிருக்கின்றது என்பது மிக முக்கியமானதாகும். ஏனெனில் அக் குறிப்பிட்ட கிரய நிலையத்திற்கான மேந்தலை உறிஞ்சுதல்/ உட்கொள்ளல் வீதத்தினைக் கணிக்கும் போது அந்தச் செயற்பாட்டினை அடிப்படையாக வைத்து கணிக்கப்படும் மேந்தலை உறிஞ்சுதல் வீதமே அம் மேந்தலைகளை கூடுதலாக பிரதிபலிக்கக் கூடிய வீதமாக இருக்கும். உதாரணமாக : இயந்திரப் பகுதி, ஒன்று சேர்தல் பகுதி எனும் இரு உற்பத்தி கிரய நிலையங்களை எடுத்து நோக்கின் இங்கு இயந்திரப் பகுதியில் ஏற்படும் மேந்தலைகள் இயந்திரத்தின் இயக்கத்துடன் நேரடியாக தொடர்புள்ளதாகையால் இங்கு மேந்தலை உள்கொள்ளல் வீதமானது இயந்திர மணித்தியாலங்களின் அடிப்படையில் கணிக்கப்படுவதே நியாயமானதாக இருக்கும். இவ்வாறு ஒன்று சேர்த்தல் பகுதியானது கூடுதலாக ஊழியர்களுடன் தொடர்புள்ளதாகையால் நேர் உழைப்பு மணித்தியாலத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் வீதம் மிகவும் பொருத்தமுடையதாகக் காணப்படும். எனவே மேந்தலை உள்கொள்ளல் வீதம் கணிக்கப்படும் முறையினை பின்வரும் உதாரணத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

	ஒன்று சேர்த்தல் பகுதி	இயந்திரப் பகுதி
ஏற்பட்ட மேந்தலைகள்	ரூபா 100,000	ரூபா 150,000
நேர் ஊழிய மணித்தியாலங்கள்	25,000	-
இயந்திர மணித்தியாலங்கள்	-	10,000
மேந்தலை உள்கொள்ளல் வீதம்	ரூபா 4 நேர் ஊழிய மணித்தியாலம்	ரூபா15 இயந்திர மணித்தியாலம்

மேந்தலை உள்கொள்ளல் வீதத்தினை பல்வேறு அடிப்படையில் கணித்துக் கொள்ளலாம். எனினும் பொதுவாகப் பயன்படுத்தும் அடிப்படைகளாக இயந்திர மணித்தியாலம், நேர் ஊழிய மணித்தியாலம், நேர் மூலப்பொருள் கிரயம், நேர் ஊழியக் கிரயம், மூலக்கிரயம் என்பன காணப்படுகின்றன. இவைகளைக் கணிக்கும் முறைகளை பின்வருமாறு கூறிக் கொள்ளலாம் :

அடிப்படை	சமன்பாடு
இயந்திர மணித்தியாலம்	மொத்த மேந்தலைகள் / மொத்த இயந்திர மணித்தியாலங்கள்
நேர் ஊழிய மணித்தியாலம்	மொத்த மேந்தலைகள் / மொத்த நேர் ஊழிய மணித்தியாலங்கள்
நேர் மூலப்பொருள் கிரயம்	மொத்த மேந்தலைகள் x 100% / நேர் மூலப்பொருட் கிரயம்
நேர் ஊழியக் கிரயம் மொத்த நேர்க் கூலிக்	மொத்த மேந்தலைகள் x 100% / மொத்த நேர் கூலிக் கிரயம்
மூலக் கிரயம்	மொத்த மேந்தலைகள் x 100% / மொத்த மூலக் கிரயம்

மேந்தலை உள்ளடக்க வீதம் தெரிவு செய்யும் போது இயன்றளவிற்கு காலப்பகுதியுடன் தொடர்புடைய வீதங்களைத் தெரிவு செய்தல் சிறந்ததாகும். ஏனெனில் மேந்தலைகள் உற்பத்தி அலகுகளின் தன்மையிலன்றி காலப்பகுதியின் தன்மையிலேயே கூடுதலாக அமைந்திருப்பதினாலாகும். காலப்பகுதியின் அடிப்படையில் தொடர்புள்ள உள்ளடக்க வீதங்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திர மணித்தியால வீதம், நேர் ஊழிய மணித்தியால வீதம் காணப்படுகின்றது. எனினும் எந்த உள்கொள்ளல் வீதத்தினை பயன்படுத்துவது என்பது கிரய நிலையத்தில் காணப்படும் மேந்தலை எந்தக் காரணிகளினால் கூடுதலாக ஏற்பட்டது என்பது பொறுத்து தீர்மானிக்கப்பட வேண்டும் எனக் கூறிக் கொள்ளலாம்.

மேந்தலைகளை கிரய அலகிற்கு சாட்டுதல் செய்தல்

மேந்தலை உள்கொள்ளல் வீதத்தினைக் கணிப்பதன் முக்கிய நோக்கமாக குறிப்பிட்ட கிரய நிலையங்களிற்கான மேந்தலைகளை அக் குறிப்பிட்ட கிரய நிலையங்களில் செயன்முறைப்படுத்தும் உற்பத்தி அலகுகளிற்கு சாட்டுதல் செய்வதற்கேயாகும். உதாரணமாக ஓர் இயந்திரப் பகுதியில் ஓர் உற்பத்தி அலகு 4 மணித்தியாலத்திற்கு செயன் முறைப்படுத்தப்படுகின்றது எனவும் மேந்தலை உட்கொள்ளல் வீதம் இயந்திர மணித்தியாலமொன்றிற்கு ரூபா 5 எனவும் இருக்குமாயின் இக்குறிப்பிட்ட இயந்திரப் பகுதியில் ஓர் உற்பத்தி அலகிற்கு சாட்டுதல் செய்ய வேண்டிய மேந்தலை ரூபா 20 ரூபா (5 x 4 மணித்தியாலங்கள்) ஆகும். இதனை பின்வரும் உதாரணம் மூலம் விளங்கலாம்.

விபரங்கள் பின்வருமாறு :

	இயந்திரப் பகுதி	ஒன்றுசேர்த்தல் பகுதி	முடித்தல் பகுதி
மேந்தலைகள் (ரூபா)	40,000	48,000	10,000
இயந்திர மணித்தியாலங்கள்	20,000	- -	- -
நேர் ஊழிய மணித்தியாலங்கள்	-	12,000	2,000

உற்பத்திப் பொருள் ஆனது இயந்திரப் பகுதியில் 3 மணித்தியாலங்களிற்கும் ஒன்று சேர்த்தல் பகுதியில் 5 மணித்தியாலங்களிற்கும், முடித்தல் பகுதியில் 2 மணித்தியாலங்களிற்கும் செயன்முறைப்படுத்தப்படுகின்றது.

இந்நிலையில் உற்பத்திப் பொருளினால் உள்கொள்ளப்படவேண்டிய மேந்தலையினைக் கணிக்கும்போது அது பின்வருமாறு அமையும் :

இயந்திரப் பகுதி உள்கொள்ளல் வீதம் = ரூபா 2/- இயந்திர மணித்தியாலம்

ஒன்றுசேர்த்தல் பகுதி உள்கொள்ளல் வீதம் = ரூபா 4/- நேர் ஊழிய மணித்தியாலம்

முடித்தல் பகுதி உள்கொள்ளல் வீதம்= ரூபா 5/- நேர் ஊழிய மணித்தியாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்கொள்ள வேண்டிய மேந்தலைகள்

இயந்திரப் பகுதி	- ரூபா 2 x 3 மணித்தியாலங்கள்	= ரூபா	6
ஒன்று சேர்த்தல் பகுதி	- ரூபா 4 x 5 மணித்தியாலங்கள்	= ரூபா	20
முடித்தல் பகுதி	- ரூபா 5 x 2 மணித்தியாலங்கள்	= ரூபா	10
	மொத்தம்	= ரூபா	36

முன்பு தீர்மானிக்கப்பட்ட மேந்தலை உட்கொள்ளல் வீதம்

இதுவரை நாம் மேற்கொண்ட ஆய்வில் உண்மையாக ஏற்பட்ட மேந்தலைகள் கிரய நிலையங்களிற்கு எவ்வாறு ஒதுக்கப்படுகின்றது? எவ்வாறு பகிரப்படுகின்றது? எவ்வாறு மேந்தலை உட்கொள்ளல் வீதங்கள் கணிக்கப்படுகின்றது? என்பதனை ஆராய்ந்தோம். எனினும் உண்மையாக ஏற்பட்ட மேந்தலைகளின் அடிப்படையில் அமைந்த மேந்தலை உட்கொள்ளல் வீதத்தினை ஓர் கணக்கீட்டு காலத்தில் கணிப்பதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. உண்மையாக ஏற்பட்ட மேந்தலைகளை கணிப்பதற்கு கணக்கீட்டு காலம் முடிவடையும் வரை காத்திருக்க வேண்டும். எனவே உற்பத்திக் கிரயத்தினை கணக்கீட்டு காலம் முடிவடைந்த பின்னரே கணிக்கக் கூடியதாக இருக்கும். நிறுவனங்கள் இலாபக் கணிப்பீடுகளிற்கும் சரக்கிருப்பு மதிப்பீடுகளிற்கும் மேலும் விற்பனை விலை நிர்ணயிப்பதற்கும் உற்பத்திக் கிரயம் தொடர்பான விபரங்களை மிக விரைவாக வேண்டி நிற்கின்றன.

சில ஆய்வாளர்கள் இக்காலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உண்மையாக ஏற்பட்ட மேந்தலைகளை அடிக்கடி கணிப்பதன் மூலம், உதாரணமாக மாதாந்த அடிப்படையில் கணிப்பதன் மூலம், தீர்த்துக் கொள்ளலாம் என வாதிடுகின்றனர். இந்த யோசனைக்கு எதிராக வாதிடுவோர் பெரும்பாலான மேந்தலைகள் பெரும்பாலும் நிலையானதாகக் காணப்பட மாதாந்த உற்பத்திகள் மாதத்திற்கு மாதம் மாறிக் கொண்டிருப்பதினால் இதனடிப்படையில் கணிக்கப்படும் மாதாந்த மேந்தலை உட்கொள்ளல் வீதங்களில் பெரும் வித்தியாசங்கள் காணப்படும் என கூறுகின்றனர். (Drury, 1992) இதனை பின்வருமாறு விளக்கலாம்:

ஓர் உற்பத்திக் கம்பனியின் பின்வரும் விபரங்கள் தரப்பட்டுள்ளதெனக் கொள்வோம்.

வருடாந்த நிலையான மேந்தலைகள்	-	ரூபா 480,000
மாதாந்த உற்பத்திக்கான இயந்திர மணித்தியாலங்கள்		
ஆகக் கூடியது	-	20,000
ஆகக் குறைந்தது	-	40,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மாதாந்த மேந்தலை, மாதாந்த இயந்திர மணித்தியால பாவனை பின்வருமாறு அமையும் :

மாதாந்த மேந்தலைகள்	-	ரூபா	40,000
ஆகக் கூடியது	-	ரூபா	40,000
ஆகக் குறைந்தது	-	ரூபா	20,000

எனவே மாதாந்த மேந்தலை உட்கொள்ளல் வீதம்

ஆகக் கூடியது (மணித்தியாலமொன்றிற்கு)	-	ரூபா	2.00
ஆகக் குறைந்தது (மணித்தியாலமொன்றிற்கு)	-	ரூபா	1.00

மேற்படி உதாரணத்தில் மாதாந்த இயந்திர மணித்தியாலங்களின் பாவனையில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக மாதாந்த மேந்தலை உட்கொள்ளல் வீதத்தில் மாற்றம் ஏற்படுகின்றது. எனவே இந்த உட்கொள்ளல் வீதமானது ரூபா 1 தொடக்கம் ரூபா 2 வரை மாதாந்தம் மாறிக் கொண்டிருக்கும். ஓர் உற்பத்திப் பொருளிற்கு ஒரு மாதத்தில் இயந்திர மணித்தியாலமொன்றிற்கு ரூபா 2 படி மேந்தலைகளை சாட்டுதல் செய்வதும் அதேவேளை அதே உற்பத்திப் பொருளிற்கு இன்னோர் மாதத்தில் இயந்திரமணித்தியாலமொன்றிற்கு ரூபா 1 படி மேந்தலைகளை சாட்டுதல் செய்வதும் நியாயமான மேந்தலை சாட்டுதல் செய்வதாக இருக்க முடியாது.

உற்பத்தி நிறுவனங்களில் ஏற்படும் சில வகையான செலவுகள் ஓர் கணக்கீட்டு காலம் பூராகவும் ஒரே மாதிரியாக ஏற்படுவதில்லை. உதாரணமாக, திருத்தல் செலவுகள், பராமரிப்புச் செலவுகள், மின்சாரச் செலவுகள் போன்றனவற்றை கூறிக் கொள்ளலாம். ஆகவே மாதாந்த மேந்தலை உட்கொள்ளல் வீதங்கள் பயன்படுத்தப்படும் பட்சத்தில் இவ்வகையான செலவுகள் நியாயமான முறையில் உற்பத்தி அலகுகளிற்கு சாட்டுதல் செய்ய முடியாததாகக் காணப்படும். எனவே மொத்த வருடாந்த மேந்தலைகள், மொத்த வருடாந்த நடவடிக்கைகள் என்பவைகளிற்கான தொடர்பினை அடிப்படையில் கணிக்கப்படும் வருடாந்த சராசரி மேந்தலை உட்கொள்ளல் வீதமானது மாதாந்த வீதத்தினை விட கிரயங்களினதும் உற்பத்தி தொகைகளுக்குமிடையிலான தொடர்பினை கூடுதலாக பிரதி நிதித்துவப்படுத்துவதாக அமையும். நிறுவனத்திற்கு உண்மையில் தேவைப்படுவது என்னவெனில் உற்பத்தி தொகை மாற்றத்தின் காரணமாக மாதா மாதம் மாறுபடுகின்ற உண்மையான உற்பத்திக் கிரயத்தினைவிட சராசரி உற்பத்தியின் அடிப்படையிலமைந்த சாதாரண உற்பத்திக் கிரயமாகும்.

மேற்படி காரணங்களை நாம் கருத்திற் கொண்டு பார்ப்போமாயின் மதிப்பிடப்பட்ட மேந்தலை அடிப்படையிலான மதிப்பிடப்பட்ட மேந்தலை உட்கொள்ளல் வீதத்தினைக் கணிப்பது மிகவும் விரும்பத்தக்கதாக அமையும். எனவே மேந்தலை உட்கொள்ளல் வீதங்கள் மதிப்பிடப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பாட்டு மட்டத்தில் கணிப்பிட வேண்டுமேயன்றி உண்மையான செயல்பாட்டு மட்டத்தில் அல்ல எனக் கூறிக் கொள்ளலாம்.

மேந்தலை கூடிய உள்ளடக்கம், குறைவு உள்ளடக்கம்

மேந்தலை உட்கொள்ளல் வீதங்களினது மதிப்பிட்ட மேந்தலைகள், அடிப்படையில் முன்கூட்டியே கணிக்கப்படுவதினால் அவைகள் உண்மையான உட்கொள்ளல் வீதங்களுடன் சமமாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. இதற்கான வெளிப்படையான காரணம் என்னவெனில் உண்மையாக ஏற்பட்ட மேந்தலைகளும் மதிப்பிடப்பட்ட மேந்தலைகளும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுவதினாலாகும். இதனால் உண்மையாக உற்பத்தி செய்த அலகுகளிற்கு மதிப்பிட்ட மேந்தலை உட்கொள்ளல் வீதங்களின் அடிப்படையில் மேந்தலைகளை சாட்டுதல் செய்யும் போது உண்மையாக ஏற்பட்ட மேந்தலைகளை விட கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ மேந்தலைகளை உட்கொள்ளலாம். உண்மையாக ஏற்பட்ட மேந்தலைகளை விட கூடுதலாக உட்கொள்ளுதலை "மேந்தலை கூடுதல் உள்ளடக்கம்" என்றும் குறைவாக உட்கொள்ளுதலை "மேந்தலை குறைவு உள்ளடக்கம்" என்று கூறப்படுகின்றது. இதனை பின்வருமாறு ஆராயலாம்:

ஓர் கம்பனியின் மதிப்பிடப்பட்ட வருடாந்த மேந்தலைகள் ரூபா 150,000 ஆகவும் மதிப்பிடப்பட்ட வருடாந்த நேர் ஊழிய மணித்தியாலங்கள் 30,000 ஆகவும் இருந்தன எனவும் இக்காலப் பகுதியில் உண்மையாக ஏற்பட்ட மேந்தலை ரூபா 160,000 ஆகவும் உண்மையாக ஈடுபடுத்தப்பட்ட நேர் உழைப்பு 28,000 ஆகவும் காணப்படுகிறது எனக் கொள்வோம்.

மதிப்பிடப்பட்ட மேந்தலை உட்கொள்ளல் வீதம் பின்வருமாறு கணிக்கப்படும்.

மதிப்பிடப்பட்ட மேந்தலைகள்	=	150,000
மதிப்பிடப்பட்ட நேர் உழைப்பு மணித்தியாலங்கள்	=	30,000

எனவே நேர் உழைப்பு மணித்தியாலமொன்றிற்கான மேந்தலை உள்கொள்ளல் வீதம் ரூபா 5 ஆகும்.

இந்நிலைமையில் ரூபா 140,000 (28,000 x 5) மேந்தலைகள் மட்டும் உற்பத்தி அலகுகளிற்கு சாட்டுதல் செய்யப்படும். எனவே இங்கு மேந்தலை குறைவான உள்ளடக்கம் ரூபா 10,000 (ரூபா 150,000 - ரூபா 140,000) ஏற்பட்டுள்ளது.

மேற்படி உதாரணத்தில் உண்மையாக ஈடுபடுத்தப்பட்ட நேர் உழைப்பு 33,000 மணித்தியாலங்கள் எனக் கருதின், சாட்டுதல் செய்ய வேண்டிய மேந்தலைக-ள் ரூபா 165,000 ஆகக் காணப்படும். இந்நிலைமையில் மேந்தலை கூடுதல் உள்ளடக்கம் ரூபா 15,000 (ரூபா 165,000 - ரூபா 150,000) ஆக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பிடப்பட்ட மேந்தலை உள்கொள்ளல் வீதத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்ட மேந்தலையின் பெறுமதியே உற்பத்திப் பொருட்களுக்கு சாட்டுதல் செய்யப்படும் தொகையாகும். எனவே இங்கு மேந்தலை கூடுதல் உள்ளடக்கம், மேந்தலை குறைவு உள்ளடக்கம் எவ்வாறு கணக்கிலிடப்படல் வேண்டும் என்பது குறித்து கேள்வி எழுகின்றது. இவைகளை மீண்டும் உற்பத்திப் பொருட்களுக்கிடையே பகிர முடியாது. காரணம் இந்த முறை நடைமுறையில் பிரயோசனமற்றதாக இருப்பதுடன் இவ்வாறான வரலாற்று ரீதியான தகவல் முகாமைக்கு மேலதிக பாவனைக்கு உகந்ததற்றதாக இருக்கும். மேற்படி மேந்தலைகளை அடுத்த நிதியாண்டிற்கு மீதி கீழ் கொண்டு செல்லவும் முடியாது. காரணம், எதிர்கால கணக்கீட்டு காலங்களில் முன்னைய கணக்கீட்டு காலங்களில் ஏற்பட்ட கிரயங்களை செம்மையாக்க முடியாது. இம்மேந்தலைகள் குறிப்பிட்ட நிதியாண்டின் நடவடிக்கையினால் ஏற்பட்டதாக இருப்பதினால் இதனை எதிர்கால கணக்கீட்டு காலங்களில் செம்மையாக்கப்படும் பட்சத்தில் அது அக்காலங்களிற்கான வினைத்திறன் தரவுகளை திரித்து கூறுவதாக அமையும்.

மேந்தலை கூடுதல் உள்ளடக்கத்தினையும் குறைவு உள்ளடக்கத்தினையும் காலக்கிரயங்களாக கருதுதல் வழமையான நடைமுறையாக உள்ளது. காலக் கிரயங்கள் அந்தந்த காலங்களில் செம்மையாக்கப்படுகின்றன. எனவே மேந்தலை கூடுதல் உள்ளடக்கம், குறைவு உள்ளடக்கங்கள் அந்தந்த கால இலாபநட்டக் கணக்குகளில் பதிவழிக்கப்படுகின்றன.

உற்பத்தி மேந்தலை கூடுதல் / குறைவு உள்ளடக்கத்திற்கான விளக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை

மேற்கணிக்கப்பட்ட மேந்தலை உட்கொள்ளல் வீதங்கள் தனியே நிதிக் கணக்கீட்டு நோக்கத்திற்காகவும் சரக்கிருப்பு மதிப்பீட்டு நோக்கத்திற்காகவும் மட்டுமே பயன்படுத்தப்பட முடியும் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும் மேற்படி மேந்தலை ஒதுக்குதல் நடைமுறையானது தீர்மானம் எடுத்தலிற்கும், கிரய கட்டுப்படுத்தலிற்கும் பொருத்தமற்றதாகக் காணப்படலாம். கிரய கட்டுப்பாட்டினைப் பொறுத்தமட்டில் மேந்தலைகள் உற்பத்திப் பொருட்களுக்கல்லாது பொறுப்பு நிலையங்களிற்கு (responsibility Centres) விதிக்கப்பட வேண்டியது முக்கியமாகும்.

மேலும் உயர்தர தொழில்நுட்ப சூழலில் மேந்தலைகளின் இம்முறைகளிலமைந்த கணிப்பீடு குறித்து சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருந்தன. இதனால் *1980*பதுகளில் நடவடிக்கை அடிப்படையிலான கிரயமிடம் (Activity Based Costing) தோன்றியுள்ளது. இந்த கிரயமிடல் நுட்பமானது கூப்பர், கப்லான *(1988)* போன்றோரால் அபிவிருத்தி செய்யப்பட்டு இன்று உயர்தொழில் கணக்கீட்டு சஞ்சிகைகளில் இது தொடர்பான கட்டுரைகள் பெருமளவு இடத்தினைப் பிடித்துள்ளது. எனினும், நவீனமானதும், போட்டி நிறைந்ததுமான உற்பத்தி சூழலில் இயங்கும் நிறுவனங்களிற்கு மேற்படி முறையிலமைந்த மேந்தலை கணிப்பீடுகள் சரியான தகவல்களை வழங்குவதில் தவறுகின்ற போதிலும் ஒப்பீட்டு ரீதியில் சிறிய நிறுவனங்களிற்கு மேற்படி முறையினைப் பயன்படுத்துவதில் தவறேதும் இல்லை.

உசாத்துணைகள்

1. Alan Pizzey, (1989) *Cost and Management Accounting*, 3rd Edition, Paul Chapman Publishing, London.

2. Ashton D., Hopper T. and Scapens R.W., (1991) *Issues in Management Accountiong*, Prentice Hall.

3. Brown M. and A. Bhimani, (1989) *Management Accounting : Evolution not revolution*, Charted Institute of Management accountants, London.

4. Chartered Institute of Management Accountants, (1991), *Management Accounting : Official Terminology.*

5. Cooper R. and Kaplan R. S. (1988). *Measure Cost Right*: *Make the right decisions*, Hardward Business Review, Septem / October, 96 - 103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Cooper R. and Kaplan R.S. (1991) "*Profit Priorities from Activity - based Costing*", Harward Business Review, May - June, p. 132 - 138.
7. Drury C. (1995), *Costing : An Introduction*, 3rd edition, Chapman & Hall, UK.
8. Drury C. (1992), *Management and Cost Accounting*, Chapman & Hall, UK.
9. Edwards J.R. and Mellett H.J. (1995), *Introduction to Accounting*, 2nd Edition, Paul Chapman Publishing Litd., London.
10. John A. and S. Turley (1996), *Accounting for Management Decision*, Prentic Hall, Europe.
11. Johnson T. and Kaplan R.S. (1987), *Relevance Lost: The Rise and Fall of Management Accounting*, Harward University Press.
12. Kaplan R.S. (1982), *Advanced Management Accounting*, Prentice - Hall.
13. Lucy T. (1989), *Costing*, 3rd Edition, EP Publications.
14. Scapens R.W. (1991), *Management Accounting : A Review of Recent Developments*. Macmillan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்ஸிர் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்

எம். ஐ. எம். அமீன்

முஸ்லிம்களிடையே தோன்றி வளர்ந்த பலதுறை அறிவுக் கலைகளில் தப்ஸிர் கலை முதன்மை வாய்ந்தது. இது முஸ்லிம் சமூகத்தின் அறிவியற் பணியின் முதல்வடிவம் என்று கூறினும் மிகையாகாது. "அல்லாஹ்வின் கலாம்" என்று வழங்கப்படும் அல்குர்ஆன் பற்றிய அறிவியற்கலை என்று அதனை அறிமுகப்படுத்த முடியும்.

"தப்ஸிர்" எனும் பதம் "பஸ்ஸர" எனும் வினைச் சொல்லில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தெளிவுற விளங்கவைத்தல், உட்பொதிந்த கருத்தைப் புரியச் செய்தல், திரையை நீக்குதல் முதலாம் பொருட்களில் இப்பதம் கையாளப்படுகின்றது. அல்குர்ஆன் இப்பதத்தை விளக்குவுரை வியாக்கியானம் எனும் பொருளில் 25:33 "ஆயத்தில்" கையாண்டுள்ளது.

> *"(இந்நிராகரிப்போர் எத்தகைய கேள்விகளையும் கேட்டு அதற்காக) எந்த உதாரணத்தையும் உம்மிடம் அவர்கள் கொண்டுவந்தபோதும் (அதைவிட) உண்மையான(விஷயத்)தையும் அழகான வியாக்-கியானத்தையும் (அஹ்ஸன தப்ஸிர்) உமக்கு அருளாமல் இல்லை."*

அல்குர்ஆனின் விளக்கவுரையைக் குறிக்க 'தஉவில்' எனும் பதமும் கையாளப்பட்டுள்ளது. 'தஉவில்' எனும் பதம் 'அவ்வல' எனும் வினைச்-சொல்லில் இருந்து பெறப்பட்டுள்ளது. இப்பதம் நடைமுறைப்படுத்தல் எனும் பொருளிலும் ஹதிஸில் கையாளப்பட்டுள்ளது. அல்குர் ஆனில் அப்பதம் கையாளப்பட்டுள்ள விதத்தைப் பின்வரும் வாக்கியங்களில் அவதானிக்கலாம்.

> *"அதற்கவர் எனக்கும் உமக்குமிடையில் பிரிவினை (க்குரிய) நேரம் இதுவே. நீர் பொறுத்துக்கொள்ள முடியாமற்போன விஷயங்களின் உண்மையை (தஉவில்) உமக்கு அறிவிக்கின்றேன்." 18:78*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"..... நீர் பொறுத்துக் கொள்ள முடியாமற்போன (என்) செய்கைகளின் கருத்து (தஉவில்) இதுதான்" 18:82

மேற்குறித்த இரு ஆயத்துகளிலும் இப்பதம் உட்பொதிந்திருக்கும் உண்மையைச் சுட்டிக் காட்டுவதற்காகக் கையாளப்பட்டிருப்பதைக் காணமுடியும். ஒரு வாக்கியத்தின் உட்பொதிந்த கருத்தை விளக்க இப்பதத்தை கையாளும் போது 'தப்ஸிர்' எனும் பதம் தரும் அதே பொருளில் 'தஉவில்' எனும் பதமும் கையாளப்படுவதை மேற்குறித்த ஆயத்துகளின் மூலம் அறியமுடியும். குறித்த ஒரு பதத்தின் புறப் பொருளில் இருந்து பெற்றுக் கொள்ளமுடியாத ஒரு பொருளைப் பெறுவதற்கும் தஉவில் எனும் பதம் பயன்படுகிறது. அத்தகு சந்தர்ப்பங்களில் பதத்தின் புறப் பொருளுக்கு வெளியே செல்கின்ற அப்பொருளைப் பெறுவதே சரியானது என்பதனை நிறுவப்போதிய காரணங்கள் இருப்பது அவசியமாகும். அத்துடன் அவ்வாறு பெறும் கருத்தை சஹாபாக்களும் பின்வந்த பரம்பரையினரும் ஏற்றிருப்பதும் அவசியமானதாகும். இவ்வழியில் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே தஉவில் வழியிலான கருத்து, சட்டத்தீர்மானங்களை எடுக்க உதவமுடியும். எனினும் ஆரம்பகால முஸ்லிம்கள் இவ்விருபதங்களையும் ஒரே பொருளில் கையாண்டுள்ளார்கள். பிரபல குர்ஆன் விரிவுரையாளரான ஜரீர் அத்தபரியும் (மர. ஹி. 306) இவ்விரு பதங்களையும் ஒரே பொருளில் கையாண்டுள்ளார் என்பதும் நோக்கத்தக்கதாகும்.

அல்குர்ஆனின் எழுத்துக்களை உச்சரிக்கும் முறையை, அதன் விதிகள் என்பவற்றை உள்ளடக்கியதான 'கிறாஅத்' எனும் கலை, மொழி இயல், பதவாக்கம் (ஸர்பு), உயிர்க்குறிகள் (இஃராப்), சொல் நயம், பொருள் நயம், வாக்கியத்தின் உட்பொதிந்த கருத்துக்கள், அல்குர்ஆனின் அற்புதத்தன்மை, இரத்து செய்யப்பட்ட சட்டங்கள் (நஸ்கு) குர்ஆன் ஆயத்துகள் அருளப்பட்ட பின்னணி (ஸபப் அந்நுதூல்) குர்ஆன் ஆயத்துகளில் இருந்து பெறப்படும் சட்டங்கள் (அஹ்காம்) முதலாம் அம்சங்களை உள்ளடக்கி அல்குர்ஆனுக்கு விளக்கமளிப்பதையே தப்ஸிர்க் கலை குறித்து நிற்கிறது.

அல்குர்ஆன் ஆயத்துகளின் புறப்பொருள், அவ்வாயத்துகள் முன்வைக்கக் கருதிய அகப்பொருள். பொருள் தெளிவற்ற (முதஷாபிஹாத்) ஆயத்துகளுக்கான விளக்கம் என்பன பற்றி விளக்கவுரை அளிக்கும் போது, பின்வரும் அம்சங்களைக் கவனிப்பது அவசியமாகும்.

அ. அல்குர்ஆன் ஆயத்துகளின் கருத்தில் குழப்பத்தையும் கொள்கை வித்தியாசத்தையும், சந்தேகத்தையும் உண்டாக்காமல் இருத்தல்.

ஆ. அல்லாஹ் விதித்துள்ள நியதிகளுக்கு விரோதமில்லாதிருத்தல்

இ. அந்நிய சிந்தனை, பிற கலாசாரம் என்பவற்றின் தாக்கத்திற்குட்படாதிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவில்லாமலும், தவறான கொள்கைகளைத் தாமாகப் புகுத்தியும் அல்குர்ஆனுக்கு விளக்கமளிப்போன் தனதிருப்பிடத்தை நரகத்தில் ஒதுக்கிக் கொள்ளவும் என்று நபிகள் (ஸல்) அவர்கள் கூறிய ஹதிஸ் ஒன்று "திர்மிதி"யில் பதியப்பட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும்.

அறபு மொழியில் சாதாரண அறபு மக்களுக்கும் விளங்கக்கூடியதாக அல்குர்ஆன் அருளப்பட்ட போதும், ஜாஹிலியாக் காலத்தின் இலக்கியத் திறனை மிஞ்சியதாக வழங்கப்பட்டதால், அல்குர்ஆனுக்கு விரிவுரை வழங்குவதற்கு அறபுமொழி, இலக்கியம், இலக்கணம் முதலாம் அம்சங்களை அறிந்திருப்பது அவசியமாகியது. இவற்றில் புலமை படைத்தவர்களாலும் சிலவேளை அல்குர்ஆனைப் புரிந்து கொள்வது சிரமம் ஆகியது. பின்வரும் காரணிகள் அல்குர்ஆனுக்கு விளக்கமளிக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தின.

அ. அறபுமொழி ஆற்றலும் தப்ஸிர் கலைத்துறையில் ஆர்வமும் உடையவர்களில் சிலரும் அல்குர்ஆனில் கையாளப்பட்டுள்ள சில சொற்களின் பொருளை அறியச் சிரமப்பட்டனர். அறபுமொழி ஆற்றலுடைய நபித் தோழர்கள் சிலர் கூட அல்குர்ஆனின் பதங்கள் சிலவற்றைப் புரியச் சிரமப்பட்டனர். அல்குர்ஆனுக்கு விளக்கவுரை வழங்குவதில் ஆற்றல் பெற்றிருந்த அப்துல்லா இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள், அல்குர்ஆனில் கையாளப்-பட்டிருந்த "பாதிர்" என்ற பதத்தின் பொருளைத் தான் அறியா-திருந்ததாகவும், நாட்டுப்புற அறேபியர் இருவர் வந்து தமக்-கிடையே ஏற்பட்ட தகராறு பற்றி முறையிட்ட போது அப்பதத்தைக் கையாண்டதால் தான், அச்சொல்லின் பொருளை தன்னால் புரிந்து கொள்ள முடிந்தது என்று கூறியுள்ளமை நோக்கத்தக்கது. உமர்பின் கத்தாப் (றழி) அவர்களும், அல்குர்ஆனில் வருகின்ற "வபாகிஹதன் வ அப்பா" என்ற தொடரில் "அப்பா" என்ற பதத்தின் பொருளை அறியாதிருந்தார்கள் என்ற வரலாற்றை அனஸ் (றழி) அவர்களின் ரிவாயத் ஒன்றில் இருந்து அறியமுடிகிறது.

ஆ. அல்குர்ஆனின் சில பதங்கள் சில இடங்களில் அகராதிகளில் கையாளப்பட்டுள்ள பொருளில் அன்றி இஸ்லாமிய சிந்தனை வழியிலான பொருளில் கையாளப்பட்டுள்ளன. ஆதலால் அத்தகைய பதங்கள் தரும் பொருள் பற்றி அறிய தப்ஸிர் அவசியமாகியது.

இ. பல பொருள்களைத் தரக்கூடியதாக இருக்கும் ஒரு குறித்த பதம் குறித்த ஆயத்தில் எப்பொருளில் கையாளப்பட்டிருக்கிறது என்பதனை அறிவதற்கும், தப்ஸிர் அவசியமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதே அல்குர்ஆனின் இலக்கிய மரபாகும். ஸஹாபாக்கள் காலத்தில் ஏற்பட்ட பல பிரச்சினைகளின் போது வழிகாட்டுவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போது தீர்வுகள் மட்டும் சொல்வது போதுமாகியது. ஸஹாபாக்கள் எதிர்கொண்ட பிரச்சினை என்பதால் அத்தீர்வுகளை அவர்கள் முழுமையாகப் புரிந்து கொண்டாலும் அடுத்த பரம்பரையினர் அவற்றை விளங்க அவ்வாயத்துகள் அருளப்பட்ட பின்னணியை எடுத்துக்காட்டி விளக்கமளிப்பது அவசியமாகியது.

உ. மயக்கமான பொருள் தரக்கூடியதும், பொருள் தெளிவு குறைந்ததுமான "முதஷாபிஹாத்" ஆன ஆயத்துகளுக்கு விளக்கவுரை அளிப்பதும் அவசியம் ஆகியது.

நபிகள் (ஸல்) அவர்கள் உயிர் வாழ்ந்த போது தமக்கு விளங்காதவற்றை ஸஹாபாக்கள், நபிகள் (ஸல்) அவர்களிடம் நேரடியாகக் கேட்டு விளங்கிக் கொண்டனர். அவர்களின் மரணத்துடன் அவ்வாய்ப்பு அற்றுப் போய்விட்டது. இஸ்லாமிய இராச்சிய வியாபகம் குலபாஉற்றாசிதூன்கள் கால முதல் ஏற்பட்டதால் பிற கலாசாரங்களுடன் முஸ்லிம்கள் தொடர்பு கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் பல புதுப் பிரச்சினைகள் தோன்றின. அவை பற்றிய வழிகாட்டுதல்களைப் பெற அல்குர்ஆனையே நாடவேண்டியதாயிற்று. அதனால் அல்குர்ஆனை முடிந்தவரை விளங்கிக் கொள்ளவும் விளக்கம் குறைந்த குர்ஆன் ஆயத்துகளின் பொருளை அறியவும் அல்குர்ஆனின் வேறுசில ஆயத்துகளையும் ஹதிஸ்களையும் துணை கொண்டனர்.

அல்குர்ஆனின் ஆயத்துகள் சில தெளிவான பொருளை உடையவை. வேறு சில ஆயத்துகள் பொருள் தெளிவு குறைவானவை. இத்தகைய பொருள் விளக்கம் குறைந்த "முஜ்மலான" ஆயத்துகளுக்கான பொருளை சரியாக விளங்க அல்குர்ஆனின் "முபய்யனாத்" எனப்பட்ட தெளிவான வாக்கியங்களின் துணையை நாடவேண்டியதாயிற்று. பின்வரும் உதாரணம் இதனை நன்கு புலப்படுத்தும்.

"உங்களுக்கு இனிக் கூறப்படுவனவற்றைத் தவிர மற்ற நாற்கால் பிராணிகள் ஆகுமாக்கப்பட்டுள்ளன" 5:1

இது ஒரு "முஜ்மலா"ன ஆயத்து. இந்த ஆயத்தின் பொருளை அறிவது கொண்டு மாத்திரம் எந்த மிருகங்கள் உண்பதற்கு ஆகுமாக்கப்பட்டிருக்கின்றன. எவை தடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய முடிவதில்லை. பின்வரும் ஆயத்துகள் மேற்குறித்த ஆயத்தின் பொருளைத் தெளிவாக்குவதை அவதானிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விசுவாசிகளே புசிக்க உங்களுக்குத் தடுக்கப்பட்டிருப்பவைகள் எல்லாம் (தானாக) செத்ததும் இரத்தமும் பன்றியின் மாமிசமும் (அறுக்கும்போது) அல்லாஹ் அல்லாத வேறு பெயர் கூறப்பட்டவையுமாகும் 2 : 173

இவ்வாயத்தை கீழே உள்ள 5:3 ஆம் ஆயத்து மேலும் விளக்கி நிற்கிறது.

(விசுவாசிகளே தானாகச்) செத்தது, இரத்தம், பன்றி இறைச்சி அல்லாஹ் அல்லாதவைகளின் பெயர் கூறப்பட்டவை முதலியவைகளும், கழுத்து நெறுக்கிச் செத்ததும், அடிபட்டுச் செத்ததும் (மேலிருந்து) விழுந்து செத்ததும், கொம்பால் குத்தப்பட்டு செத்ததும், (சிங்கப்பல்லும் வீரநகமுமுள்ள, மாமிச பக்ஷணிகளாகிய சிங்கம், புலி, சிறுத்தை போன்ற) ஐவாய் மிருகங்கள் கடித்துச் செத்தவையும் உங்களுக்கு விலக்கப்பட்டிருக்கின்றன" 5:3

மற்றோர் உதாரணத்தையும் நோக்கலாம்.

"எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்களுடைய வழியில் (நடத்துவாயாக)" - 1:6

அல்லாஹ்வின் அருளுக்குப் பாத்திரமானவர்கள் யார் என்பதனை மேற்குறித்த இவ்வாயத்தின் மூலம் அறியமுடியாதுள்ளது. ஆயினும் பின்வரும் 4:69 ஆம் ஆயத்து அதுபற்றிய விளக்கம் ஒன்றைத் தருகிறது.

"ஆகவே எவர்கள் மெய்யாகவே அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் (இவ்வாறு) வழிப்படுகின்றார்களோ அவர்கள், அல்லாஹ்வின் அருளைப் பெற்ற நபிமார்கள், சத்தியவான்கள், உயிர்த்தியாகிகள், நல்லொழுக்கமுடையவர்களுடன் (மறுமையில்) வசிப்பார்கள் இவர்கள் தாம் மிக்க அழகான தோழர்கள்"

4 : 69

அல்குர்ஆனில் வருகின்ற "முத்லக்" ஆன ஆயத்களுக்கு "முகையத்" ஆன ஆயத்களும் "ஆம்" ஆன ஆயத்களும் "ஃகாஸ்" ஆன ஆயத்துகளும் விளக்கமாக அமைகின்றன என்று இத்துறை அறிஞர்கள் சுட்டிக் காட்டுவர். இதே போன்று ஆதம் (அலை) இப்றாகிம் (அலை) நூஹ் (அலை) முகம்மது (ஸல்) போன்ற நபிமார்கள் பற்றியும் வழிதவறிய சமூகங்களின் தலைவர்கள் பற்றியும், அல்குர்ஆனில் பல இடங்களில் வரும் ஆயத்துகள் ஒன்றற்கு ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கமாக அமைகின்றன. ஆரம்பகால அல்குர்ஆன் விரிவுரையாளர்கள் பொருள் விளக்கம் குறைந்த முஜ்மலான ஆயத்துகளுக்கு விளக்கவுரை வழங்கும் போது இந்நடைமுறையைக் கையாண்டனர். ஹிஜ்ரி 150 / கி. பி. 767இல் மரணித்த முகாதில் பின் சுலைமான் எழுதிய முதஷாபிஹ் பில் குர்ஆன் எனும் தப்ஸிர் இதற்கு சிறந்ததோர் உதாரணமாகும்.

பொருள் விளக்கம் குறைந்த ஆயத்துகளுக்கு ஹதிஸ்களின் துணையுடன் விளக்கம் கூறும் வழிமுறையையும் இத்துறை அறிஞர்கள் அங்கீகரித்துள்ளனர். பின்வரும் ஆயத்தில் கையாளப்பட்டுள்ள "லுழ்ம்" எனும் பதத்தின் பொருளை நபிகளார் (ஸல்) விளக்கியுள்ளதை அவர்கள் எடுத்துக் காட்டுவர்.

> *"எவர்கள் மெய்காகவே விசுவாசம் கொண்டு தங்கள் விசுவாசத்துடன் அக்கிரமத்தையும் (லுழ்ம்) கலந்து-விட வில்லையோ அவர்களுக்கு நிச்சயமாக அபயம் உண்டு. அவர்கள் தாம் நேரான வழியிலும் இருக்கின்-றார்கள்." 6:82*

இவ்வாயத்தில் "லுழ்ம்" எனும் பதம் எதனைக் குறிக்கின்றது என்பதனை ஸஹாபாக்கள் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத போது நபிகளார் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். இவ்வாயத்தில் இப்பதம் இணைவைத்தலைக் குறிக்கிறது என்று அவர்கள் பதில் உரைத்தார்கள். இதேபோன்று 108ஆம் சூறாவில் வரும் "கவ்தர்" எனும் பதம் அல்லாஹ் நபிகளார் (ஸல்) அவர்களுக்கு சுவர்க்கத்தில் வழங்கும் நீர் அருவியைக் குறிக்கிறது என்றும், அல்ஹம்து சூறாவில் வரும் கோபத்துக்குள்ளானவர்கள் என்ற பதம் யூதர்களையும், வழிதவறியவர்கள் என்ற பதம் கிறித்தவர்களையும் குறிக்கின்றன என்று நபிகளார் (ஸல்) அவர்கள் விளக்கமளித்தார்கள்.

> *".... அன்றியும் பஜ்ரில் வெண்மையான கயிறானது கறுப்புக் கயிற்றில் இருந்து பிரிந்து தெரியும்வரை புசியுங்கள் பருகுங்கள்....." 2:187*

என்ற ஆயத்து அருளப்பட்ட போது அதிபின்ஹாதிம், கறுப்பு, வெள்ளை நிறக் கயிறுகளை வைத்து ஸஹ்ரு முடிவடையும் நேரத்தை இனங்காண விரும்பிப் பரீட்சித்தபோது முடியவில்லை. அதுபற்றி நபிகளார் (ஸல்) அவர்களிடம் முறையிட்டபோது வெள்ளைக்கயிறு கறுப்புக்கயிறு என்பன முறையே பகலையும், இரவையும் குறிக்கின்றன என்று விளக்கமளித்தமையும் நோக்கத்தக்கதாகும்.

அல்குர்ஆனுக்கு விளக்கமளிக்க மிக்க உரித்தும், மிகுந்த தகைமையும் உடையவர் அல்லாஹ்வின் தூதர் முகம்மது (ஸல்) அவர்களாவர். குர்ஆனுக்கு விளக்கமளிக்குமாறு அல்லாஹ் அவர்களுக்கு ஏவியும் உள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"... இந்தக் குர்ஆனையும் நாம் உமக்கு அருளினோம். மனிதர்களுக்காக உம்மீது அருளப்பட்ட இதை நீர் அவர்களுக்கு தெளிவாக எடுத்துக் காண்பியும். (இதன்மூலம்) அவர்கள் கவனித்து அறிந்து கொள்வார்கள்" 16:44

அல்குர்ஆன் ஆயத்துகளின் பொருளை மட்டுமன்றி அல்குர்ஆனின் ஏவல்களை அமுல்நடத்தும் வழிமுறை பற்றிய விளக்கத்தையும் அவர்களே அளித்தார்கள். அல்குர்ஆன் தொழுமாறு பல ஆயத்களின் மூலம் அறிவுறுத்திய போதும், தொழும் முறையை நபிகளார் (ஸல்) அவர்களே காட்டித் தந்தார்கள். இறைதூதர் முகம்மது (ஸல்) அவர்கள் அளித்த இத்தகைய விளக்கம் "அத்தப்ஸிர் அந்நபவி" என்றழைக்கப்படுகிறது. இவை புகாரி, முஸ்லிம் திர்மிதி முதலாம் ஹதிஸ் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளன. இருந்தபோதும் அல்குர்ஆனின் எல்லா ஆயத்துகளுக்குமான விளக்கங்கள் நபிகளார் (ஸல்) அவர்களால் வழங்கப்படவில்லை. ஹதிஸ் கிரந்தங்களில் எல்லா சூறாக்களுக்குமான ஹதிஸ் விளக்கங்கள் இருப்பினும் அவை எல்லா ஆயத்துகளுக்குமாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சில சஹாபாக்கள் இஸ்லாத்தின் ஆரம்பகாலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றிருந்தனர். மற்றும் சிலர் பிற்காலத்தில் ஏற்றிருந்தனர். சிலர் தம் இளம்பராயத்திலும் வேறுசிலர் தமது முதுமைப்பருவத்திலும் ஏற்றிருந்தனர். அவர்களில் சிலர் குர்ஆன் ஆயத்துகள் குறிப்பிடும் சில நிகழ்வுடன் நேரடித் தொடர்புடையவராய் இருந்தனர். மற்றும் சிலர் அது பற்றித் தம் சஹாபாத் தோழர்களுடன் கலந்துரையாடி அறிந்திருந்தனர். எனினும் எல்லாரும் எல்லா அம்சங்கள் பற்றியும் அறிந்திருக்கவில்லை. சிலர் அறிந்திருந்தவற்றை வேறு சிலர் அறியாதும் இருந்தனர். அறிந்தவர்கள் தானும் ஒரே அளவில் அறிந்திருக்கவில்லை. அவர்கள் புரிந்து கொண்ட விளக்கத்தின் ஆழம் வித்தியாசமாக இருந்தது. அலி(றழி) அப்துல்லா இப்னு மஸ்ஊத்(றழி) போன்றவர்கள் ஏராளமான குர்ஆன் ஆயத்துகள் இறங்கிய பின்னணி அவற்றின் உட்பொதிந்த பொருள் என்பன பற்றிய பூரண விளக்கத்தைப் பெற்றிருந்தனர். அல்குர்ஆன் விதந்துரைத்த சமூக வாழ்வு நிலவிய குர்ஆனிய சமூகத்தில் சஹாபக்கள் வாழ்ந்து இருந்ததால் அவர்கள் அல்குர்ஆனியக் கோட்பாடுகளைப் பற்றி மட்டுமன்றி அவற்றை நடைமுறைப்படுத்தும் முறைமையையும் அறிந்திருந்தனர். இதனால் நபிகளார் (ஸல்) அவாகளின் மரணத்தின் பின் எழுந்த சமூக, பொருளாதார, அரசியல். பிரச்சினைகளின் போது குர்ஆனில் இருந்து அவை பற்றிய வழிகாட்டுதல்களைப் பெற அல்குர்ஆனை நன்கு அறிந்திருந்த ஸஹாபாக்களிடம் கேட்டு அவர்கள் விளக்கம் பெற முயற்சித்தனர். இதனால் சஹாபாக்கள் காலத்தில் தப்ஸிர் கலை வளர்ச்சியுறலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனுக்கு விளக்கம் கூறும் உரித்தும், தகைமையும் நபிகளார் (ஸல்) அவர்களுக்கு மட்டுமேயுண்டு என்று கருதிய சஹாபாக்கள் சிலர் இருந்தனர். இவர்கள் சஹாபாக்கள் குர்ஆனுக்கு விளக்கவுரை வழங்குவதை எதிர்த்தனர். இக்கருத்து ஹி.216/கி.பி. 831 வரை சமூகத்தில் நீடித்திருந்தது என்பர். சிலர் "தக்வா"வின் காரணமாக (விளக்கமளிக்கும் போது தவறு நடந்துவிடலாமோ என்ற அச்சத்தின் காரணமாக) தப்ஸிர் விளக்க-மளிப்பதைத் தவிர்த்தனர். எனினும் நாளடைவில் முஸ்லிம்களுக்கு மத்தியில் இது அங்கீகரிக்கப்பட்ட கலையாக மாறியது.

சஹாபாக்கள் குர்ஆன் விளக்கமளிக்க அல்குர்ஆனையும் அடுத்து அல்ஹதீசையும் ஆதாரமாகக் கொண்டனர். இவ்விரண்டும் போதாது போகும் சந்தர்ப்பங்களில் தங்களது பகுத்தறிவையும் மொழியறிவையும் பயன்படுத்தி விளக்கம் கூறலாயினர். இவ்வாறு விளக்கமளித்த சஹாபாக்களுள் முதல் நான்கு கலிபாக்களும் இப்னுமஸ்ஊத் (றழி) AH32, இப்னு அப்பாஸ் (றழி) AH68, உபை இப்னு கஃபு (றழி) AH20,ஸைது இப்னு ஸாபித் (றழி) AH45, அபூமூஸா அல் அஸ்அரி (றழி) AH44, அப்துல்லா இப்து சுபைர் (றழி) AH73, அனஸ் இப்னுமாலிக் (றழி), அப்துல்லா - இப்னு உமர்(றழி), ஜாபீர் இப்னு அப்துல்லா (றழி) AH74, அப்துல்லா இப்னு அம்ரிப்னு ஆஸ் (றழி) AH63, ஆயிஷா (றழி) AH58 முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களுள் முதல் மூன்று கலிபாக்களது விளக்கவுரைகள் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. அலி (றழி) அவர்களின் குர்ஆன் ஆயத்து-களுக்கான விளக்கவுரைகள் ஹதிஸ் தொகுப்புகளில் எழுத்துருவில் கிடைக்கின்றன. அலி (றழி) அவர்கள் ஒருமுறை பிரசாரம் செய்யும்போது "அல்குர்ஆ"னைப் பற்றி என்னிடம் கேளுங்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக அதன் ஆயத்துகள் ஒவ்வொன்றும் இரவிலா, பகலிலா, மலையிலா, மடுவிலா அருளப்பட்டது என்பதனை நான் அறிவேன்"என்று கூறினார்கள். அலி (றழி) அவர்கள் அல்குர்ஆனில் ஆழமான அறிவுடையவர்-களாக இருந்தபோதும் அவர்கள் தப்ஸிர் எதனையும் எழுதினார்களா என்று உறுதிப்படுத்திக் கூறமுடியாத நிலையுண்டு. "ஜம்அல் குர்ஆன் வதஉவிலிஹி" எனும் தலைப்பில் ஒரு தப்ஸிர் எழுதினார் என்று சிலர் கூறுவதுண்டு. உதுமான் (றழி) அவர்கள் காலத்தில் உத்தியோகரீதியாகத் தொகுத்த குர்ஆன் தவிர அதற்கு முன்புள்ள குர்ஆன் ஆயத்துகள் அடங்கிய ஏடுகள் அனைத்தும் சஹாபாக்களின் அங்கீகாரத்துடன் எரிக்கப்பட்டன. இந்நிகழ்வுக்கு முன்பு அலி (றழி) அவர்கள் இத்தகைய ஒரு தப்ஸிரை எழுதியிருந்தால் அதுவும் எரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்நிகழ்வுக்குப் பின் சமூகத்தில் ஏற்பட்ட அரசியல் சூழல், அதனை சரி செய்ய அவர்கள் எடுத்த முயற்சிகள் என்பன காரணமாக அத்தகையதொரு தப்ஸிரை எழுதுவதற்குப் போதிய கால அவகாசம் அவர்களுக்கு இருந்திருக்கமாட்டாது என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆன் விளக்கமளித்த சஹாபாக்களில் இப்னு அப்பாஸ் (றழி) அவர்களைத் தப்ஸிர் கலையின் தந்தை என்றழைப்பர். அவரிடம் இருந்த அறுபுமொழி இலக்கிய அறிவு தப்ஸிர் விளக்கமளிக்க அவருக்கு பெரிதும் உதவியது. குர்ஆன் கையாண்டுள்ள அறுப் பதங்களின் பொருளை விளக்க அப்பதம் கையாளப்பட்டுள்ள அறுபுக் கவிதைகளை எடுத்தாளும் ஆற்றல் அவருக்கிருந்தது. மெல்லிய திரையொன்றினூடாகப் பார்த்து மறைந்திருக்கும் பொருளை எடுத்துக்காட்டுவது போல அல்குர்ஆனின் உட்பொதிந்த கருத்தை எடுத்துக்காட்டும் வல்லமை அவருக்கிருந்தது என்று அலி (றழி) அவர்கள் இப்னு அப்பாஸ் (றழி) அவர்களைப் பாராட்டியுள்ளார்கள். இத்தகு ஆற்றல் அவரிடம் இருந்ததால் தான் 110ஆம் சூறாவுக்கு அவர் விளக்கமளிக்கும் போது அது, நபிகளார் (ஸல்) அவர்களின் மரணத்தை சுட்டிக் காட்டுகிறது என்று விளக்கமளித்தார். இப்னு அப்பாஸ் (றழி) சுட்டிக்காட்டிய அவ்விளக்கத்தை உமர் கத்தாப் (றழி) அங்கீகரித்தமை அவரது தப்ஸீர் கலை ஆற்றலை நிறுவுகிறது. இவருக்கு அடுத்த மட்டத்தில் இப்னு மஸ் ஊத் (றழி) கணிக்கப்படுகிறார்கள். இவர் அழகாக கிறாஅத் ஓதும் ஆற்றலைப் பெற்றிருந்தார். தப்ஸிர் விளக்கம் அளிக்கும் இவரது ஆற்றலை அலி (றழி) விதந்துரைத்துள்ளார்கள். ஸஹாபாக்களுள் இப்னு அப்பாஸ் (றழி) இப்னு மஸ் ஊத் (றழி) அலி (றழி) உபை இப்னு கஃபு (றழி) ஆகிய நால்வரும் இத்துறையில் சிறப்பாற்றல் பெற்றவர்களாகக் கணிக்கப்படுகின்றனர்.

பின்வந்த குர்ஆன் விரிவுரையாளர்கள் ஸஹாபாக்களின் விளக்கவுரைக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பர். குர்ஆனிலோ சுன்னாவிலோ ஒரு குறித்த ஆயத்துக்கான விளக்கத்தைப் பெற முடியாது போனால் அது பற்றிய சஹாபாக்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததாக இப்னு கஸிர் (றஹ்) குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும். ஸஹாபாக்கள் கணிசமான அளவு குர்ஆன் ஆயத்துகளுக்கு விளக்கமளித்தபோதும் பல ஆயத்துகளுக்கு அவர்கள் விளக்கம் அளிக்கவில்லை. அவற்றுக்கான விளக்கத்தை சஹாபா சமூகம் அறிந்திருந்தமை அதனைத் தேவையற்றதாக ஆக்கியிருக்க முடியும். அவர்கள் தமது விளக்கங்களை எழுத்துருவில் வடிக்கவும் இல்லை. ஹதிஸின் ஒரு பகுதியாகவே சஹாபாக்கள் காலத்தில் அவையிருந்தன.

குர்ஆனிய சமூகம் ஒன்றில் சஹாபாக்கள் வாழ்ந்ததால் தம் வாழ்க்கையுடன் நேரடியாகத் தொடர்புபட்ட பல ஆயத்துகட்கும் அத்தகைய தொடர்பு இலாத ஆயத்துகள் பலவற்றிற்கும்கூட விளக்கவுரை அவசியமாகவில்லை. ஆயின் அடுத்து வந்த பரம்பரையினர்க்கு, சஹாபாக்கள் விளக்கவுரை வழங்காதுவிட்ட ஆயத்துகளுக்கும் விளக்கவுரை அவசியமாகியது. சஹாபாக்கள் சிலரின் சிறப்புறு மாணவர்களாக இருந்த தாபிஈன்களில் சிலர் இப்பணியைத் தொடர்ந்தனர். இவர்கள் மூன்று பிரதான சஹாபாக்களின் மாணவர்களாக மக்கா, மதினா, ஈராக் ஆகிய இடங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைய தலங்களாக வைத்து மூன்று குழுக்களாகி இக்கலையை வளர்த்தனர். ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இவர்கள் இவ்விடங்களில் செயற்பட்டதைக் காணமுடிகிறது.

மக்காவில் இப்னு அப்பாஸ் (றழி) அவர்களின் மாணவர்களான ஸஇத் இப்னு சுபைர் (மர.ஹி. 94) முஜாஹித்பின் ஜப்ர் அல் மக்கி (மர.ஹி. 104) இக்ரிமா மவ்லா இப்னு இப்பாஸ் (மரணம் ஹி. 105) தாவுஸ் பின் கையான் அல்யமனி (மர.ஹி. 106) அதாபின் ரபிஆ (மர. ஹி. 114) முதலானோர் இக்கலையை வளர்த்தனர். மதினாவில் உபை பின் கஃபு (றழி) அவர்களின் மாணவர்களான அபூஅல்ஆலியா (மர.ஹி. 90) முகம்மது பின் கஃபுஅல் கர்ஸி (மர.ஹி.130) என்னும் ஸஹாபாக்கள் இக்கலையை வளர்த்தனர். இராகில் அப்துல்லா பின் மஸ்ஊத் (றழி) மாணவர்களான அல்கமா பின்கைஸ் (மர. ஹி. 102) அல்அஸ்வத் பின் யதீத் (மர.ஹி.75) மஸ்ருக் பின் அல் அழா (மர.ஹி.63) அல்ஹஸன் அல்பஸரி (மர.ஹி.121) கதாதா அஸ்ஸதூஸி (மர.ஹி. 117) இப்றாகிம் அந்நகஇ (மர.ஹி. 95) என்பவர்கள் ஒரு குழுவினராகி தப்ஸிர் கலையை வளர்த்தனர். இக்குழுக்கள் ஒன்றற்கு ஒன்று எதிர்எதிராக இயங்கவில்லை. மக்கா மதினாக் குழுக்களுக்கிடையில் சிந்தனையில் நெருங்கிய ஒருமைப்பாடு இருந்தது. இராகியக் குழு இவர்களின் சிந்தனைக்கு முரண்படாத போதும் குர்ஆனுக்கு விளக்கவுரை வழங்கும்-போது மற்றிருகுழுக்களையும் விட பகுத்தறிவு ரீதியான விளக்கத்துக்கு அதிக இடம் அளித்தது. "அஹ்லுர்ரஉயு" என்றழைக்கப்பட்ட பகுத்தறிவுச் சிந்தனைக்குழுவுக்கான அடித்தளத்தை ஈராகில் அப்துல்லா பின் மஸ்ஊத் (றழி) அவர்களே அமைத்துக் கொடுத்தார் என்பர்.

ஸஹாபாக்களின் காலத்தில் விளக்கவுரை வழங்கப்பட்ட குர்ஆன் ஆயத்துகளின் எண்ணிக்கையைவிடக் கூடுதலான ஆயத்துகளுக்கு தாபிஈன்கள் காலப்பகுதியில் விளக்கவுரை வழங்கப்பட்டதுடன் அவை எழுதியும் வைக்கப்படலாயின. அவை பெருமளவில் தம் குழுத்தலைவரான ஆசிரியரின் விளக்கவுரையாக அமைந்திருந்தன. தாபிஈன்கள் குர்ஆனுக்-கான விளக்கவுரை வழங்குவதற்கு அல்குர்ஆன் அஸ்ஸுன்னா என்பவற்-றுடன் ஸஹாபாக்களின் கருத்துக்களையும் துணை கொண்டார்கள். அஹ்லுல்கிதாபுகளாக இருந்து இஸ்லாத்தை ஏற்றவர்கள் குர்ஆனுக்கு விளக்கமளிக்கும் போது தவ்றாத், இன்ஜில் வேதங்களில் இருந்து பெற்றுக்-கொண்ட கருத்துக்களையும் சேர்த்துள்ளனர். அப்துல்லா இப்னுஸலாம், கஃபு இப்னு அஹ்பார் (மர.ஹி.32) வஹப் இப்னு முனப்பஹ் (மர.ஹி 110), அப்துல் மலிக் இப்னு அப்துல் அஸிஸ் இப்னு ஜரிஹ் என்போர் முன்னைய வேதங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களைப் புகுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

ஹதிஸ் கலையின் ஓரம்சமாக இருந்த தப்ஸிர் விளக்கம், எக்காலப்-பகுதியில் தனித்தப்ஸிர் நூல்களாக வளர ஆரம்பித்தது என்பதைக் கணிப்-பதில் இத்துறை ஆய்வாளர்கள் கருத்து முரண்படுவர். ஆரம்பகாலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்ட தப்ஸிர்கள் ஆய்வாளர்களுக்குக் கிடைக்காதிருப்பதே காலத்தைச் சரியாகக் கணிப்பதற்கு முடியாமைக்கான முக்கிய காரணி எனலாம். ஹி.94இல் மரணித்த ஸஇத்பின் சுபைர் ஹி.90இல் மரணித்த அபூஅல்ஆலியா எனும் இருவரில் ஒருவரே முதன்முதல் தப்ஸிரை ஒரு தனி நூலாக எழுதியிருக்கலாம் என்பர். அதன் கருத்து ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் இறுதித்தசாப்தத்தில் தப்ஸிர் தனிக் கலையாக ஹதிஸில் இருந்து வேறுபட்டு வளர்ந்துள்ளது என்பதாகும்.

இவர்களுக்கு அடுத்த கட்டமாகத் தோன்றிய விரிவுரையாளர்களில் இஸ்மாயில் அஸ்ஸுதி (மர.ஹி.105) அல்கல்பி (மர.ஹி.146) முகாதில் பின் ஹய்யான் (மர.ஹி.150) முகாதில்பின் சுலைமான் (மர.ஹி150) என்போர் குறிப்பிடத்தக்வர்களாவர். இவர்களால் எழுதப்பட்ட தப்ஸிர்கள் பல கிடைப்பதில்லை. இன்று ஆய்வாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பழைய தப்ஸிர்கள் முஜாஹிர் பின்ஜபர் அல்மக்கி (மல.ஹி.104) ஸைதுபின் அலி (மர.ஹி. 122) முகாதில்பின் சுலைமான்அல் குராசானி (மர.ஹி 150) என்பனவாகும். எனினம் வாசகர்களுக்குப் பரவலாகக் கிடைக்கும் தப்ஸிர், ஜரீர் அத்தபரி (மர.ஹி.306) எழுதிய ஜாமி அல் பயான் அன் தஉவீல் அல்குர்ஆன் என்பதாகும்.

ஹிஜ்ரி நாலாம் நூற்றாண்டு ஆகும்போது தப்ஸிர் கலை, ஹதிஸ்-கலையில் இருந்து பிரிந்து முழுமை பெற்ற ஒரு கலையாக வளர்ந்-திருப்பதைக் காணமுடிகிறது. இப்னுமாஜா (மர.ஹி.273) ஜரீர் அத்தபரி (மர.ஹி.306) இப்னு அபிஹாதிம் (மர.ஹி.327) முதலானவர்கள் எழுதிய தப்ஸிர்கள் ஹதிஸ் தொகுப்புகளில் இருந்து வேறுபட்டு தனித்தப்ஸிர்கள் என்று இனங்காட்டத்தக்கதாக முழுமை பெற்றிருந்ததையும் அவதானிக்க முடிகிறது. இக்காலப்பகுதியில் ஏற்பட்ட, ஹதிஸ் கலைத்துறை வளர்ச்சி, பிக்ஹ் கலை வளர்ச்சி என்பன காரணமாக ஸஹீஹான ஹதிஸ்களைப் பெறும் வழிமுறை நன்கு பிரபல்யமாகியது. இதன் காரணமாக தப்ஸிர் கலையும் இக்காலப் பகுதியில் ஆதாரமுள்ள ஹதிஸ்களைக் கொண்டு வளர்ச்சி பெற்றது என்பர். அனைத்து "முபஸ்ஸிர்"களும் ஹதிஸ்கலை பற்றிய அறிவுஞானம் உடையவர்களாக இருந்தார்கள் என்பதும் நோக்கத்-தக்கதாகும்.

தப்ஸிர் கலையின் இவ்வளர்ச்சிக் கட்டத்தில் தப்ஸிர் விளக்க-வுரையாளர்கள் பின்வரும் இரு வழிமுறைகளைக் கையாண்டு விளக்க-மளித்தார்கள்.

i. இறைதூதர் முகம்மது (ஸல்) அவர்களிடம் இருந்தும், ஸஹாபாத் தோழர்களிடம் இருந்தும் பெற்ற ஹதிகஸ்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கமளிப்பது ஒருவழிமுறை. இவ்வழிமுறை அத்தப்ஸிர் பிஅல் மஃதூர் அல்லது அத்தப்ஸிர் பில்றிவாயா எனப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. தமது சிந்தனையைப் பயன்படுத்தி குர்ஆன் ஆயத்துகளுக்கு விளக்கமளிப்பது மற்றொரு வழிமுறை. இவ்வழிமுறை அத்தப்ஸிர் பி அல்ரஉயு எனப்படுகிறது.

சுயசிந்தனா வழியிலான விளக்கங்கள் வெறும் ஊகங்களின் அடிப்படையில் அமைவது அனுமதிக்கப்படுவதில்லை. எவன் ஒருவன் தனது சொந்த சிந்தனையின் வழியில் அல்லது தனது அறியாமையின் காரணமாக குர்ஆனுக்கு விளக்கமளிக்கின்றானோ, அவன் தன் இருப்பிடத்தை நரகத்தில் ஆக்கிக் கொள்கின்றான் என்ற கருத்தைத் தரும் ஹதிஸ் தர்மிதி, நஸஇ, அபூதாவுத் முதலாம் ஹதிஸ் கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. ஆதலால் சுயசிந்தனை வழியிலான தப்ஸிர் குர்ஆனிலும் சுன்னாவிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டதன் காரணமாகப் பெற்றுக்கொண்ட இஸ்லாமிய சிந்தனை வழி விளக்கமாக இருப்பது அவசியமாகும்.

மேலே குறிப்பிட்ட வகையிலான தப்ஸிர்களுக்குப் பின்வருவனவற்றை உதாரணமாக எடுத்துக் காட்டலாம்.

அல் தப்ஸிர் பி அல் மஉதூர்

1. இப்னு அப்பாஸ் (றழி) றிவாயத்துகளைச் சுட்டிக்காட்டும் தப்ஸிர் விளக்கம்.
2. தப்ஸிர் இப்னு அதிய்யா.
3. இமாம் அல்ஸுயூதி எழுதிய அல்-துர்ரு - அல் - மன்சூர் பி - அல் - தப்ஸிர் பில் மஉதூர்.
4. அபுல் லைஸ் அல் ஸமர்கந்தி எழுதிய அல் தப்ஸிர் பஹ்ர் அல் உலூம்.
5. அபுல் இஸ்ஹாக் எழுதிய அல் கஷ்ப வல்பயான் அன்தப்ஸிர் அல் - குர்ஆன்.
6. இமாம் ஜரீர் அத்தபரி எழுதிய ஜாமி அல் பயான் பி தப்ஸிர் அல்குர் ஆன்.
7. அல் பஃகாவி எழுதிய மஆலிம் அத்தன்ஸீல்.
8. இப்னு கஸீர் எழுதிய தப்ஸிர் அல்குர்ஆன் அல் அழீம்.
9. சவ்கானி எழுதிய - பத்ஹ் அல் கதீர்

2. அல்தப்ஸீர் பி அல் ரஉயு (இவ்வகைத் தப்ஸிர் - தப்ஸிர் பில் மஉகூல் / தப்ஸிர் பில் தராயா என்றும் அழைக்கப்படுகிறது) பகுத்தறிவின் / சுயசிந்தனையின் வழியிலான விளக்கம் நாளடைவில் மொழியியல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ஞ்ஞானம், தத்துவஇயல் முதலாம் அடிப்படைகளுக்கு முதன்மையளிக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டிருப்பதைக் காண- முடிகிறது. ஆதலால் சுயசிந்தனைவழி அமைந்த தப்ஸிர்களைப் பின்வருமாறு வகைப்படுத்தி அட்டவணைப்படுத்த முடியும்:

2:1 மொழிஇயல் ரீதியானவை (அத்தப்ஸிர் அல்லுகவி) இவ்வகைத் தப்ஸிர்கள் அல்குர்ஆனுக்கான மொழிஇயல் ரீதியான விளக்கங்- களைக் கொண்டிருக்கின்றன. உ - ம்:

(அ) முகம்மதிப்னு உமர் அல் ஸமஃக்சரி எழுதிய தப்ஸிர் அல்கஷ்ஷாப்.

(ஆ) அபூ ஹய்யான் அல் அந்தலூஸி எழுதிய தப்ஸிர் அல் பஹ்ர் அல் முஹீத்.

2:2 மெய்ஞ்ஞானம், தத்துவஇயல் சார்ந்தவை.
இவை அல்குர்ஆனின் மெய்ஞ்ஞான, தத்துவ இயல் கருத்துக்களுக்கு அழுத்தம் கொடுத்து விளக்கமளிப்பவை. உ - ம் :

(அ) இமாம் பஃருத்தின் அற்றாதி எழுதிய மபாதீஹ் அல் கைப்

(ஆ) அல்ஃகாதின் என்பவர் எழுதிய அல்லுபாப் பி மஆனி அத்தன்தீல்

2:3 அல்குர்ஆனின் கட்டளைகள் சார்ந்தவை (தப்ஸிர் ஆயாத அல் அஹ்காம்)
இவை அல்குர்ஆன் கூறும் சட்டங்கள் பற்றி அழுத்தம் கொடுத்து விளக்கம் அளிக்கின்றன. உ- ம் :

(அ) இப்னல் அரபி அல் மாலிகி எழுதிய அஹ்காம் அல் குர்ஆன்.

(ஆ) அல்குர்தாபி எழுதிய தப்ஸிர் அல்குர்தாபி

பொருத்தமான இடங்களில் றிவாயத் (மஉதூர்) மூலமாகவும் ரஉயு மூலமாகவும் விளக்கமளிக்கும் வழிமுறையும் பல தப்ஸிர்களில் கையாளப்- பட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது. இதற்கு உதாரணமாகப் பின்வரும் தப்ஸிர்களை சுட்டிக்காட்டலாம்:

i. இப்னு கஸிர் எழுதிய தப்ஸிர் அல் கஸிர்

ii. ஷவ்கானி எழுதிய பத்ஹ் அல் கதிர்

தப்ஸிர் கலை வளர்ச்சியடைந்த அப்பாஸிய காலப்பகுதியில் பல்வேறு வகையான சிந்தனைப் பிரிவுகள் வளர்ச்சி கண்டிருந்தன. கர்பலா நிகழ்ச்சி முதல் தற்காலம் வரை படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ள பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக் குழுக்கள் ஏனைய கலைகளில் தம் செல்வாக்கைப் பதித்தது போல தப்ஸிர் கலையிலும் தம் செல்வாக்கைப் பதித்துள்ளன. முஸ்லிம் சமூகம் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா எனும் இரண்டின் வழி நிறுவாத எந்தச் சிந்தனையையும் அங்கீகரிக்காததால் ஒவ்வொரு குழுவும் தனது சிந்தனைகளை நிறுவ அல்குர்ஆன் ஆயத்துகளின் துணையை நாடியது. ஆதலால் தமது கருத்தை நிறுவ குர்ஆன் ஆயத்துகள் சிலவற்றிற்கு இக்குழுக்கள் வலிந்து பொருள் கூறலாயின. சீஆ போன்ற அரசியற் குழுக்களும், சூபிச, தத்துவ ஞானக் குழுக்களும், குறிப்பாக முஃதிலாக்களும், அண்டைக்காலத்தில் வாழ்ந்த காதியானி போன்ற குழுக்களும் குர்ஆன் ஆயத்துகளுக்கு இவ்வாறு வலிந்து விளக்கம் கூறித் தம் கருத்துக்களை நிறுவ முயற்சித்துள்ளன. பின்வரும் உ-ம் நோக்கத் தக்கன.

"ஒன்றுசேரும் இரு நீர்ப்பரப்புக்களையும் அவனே சந்திக்கச் செய்தான்" 55 : 19

"அவ்விரண்டில் இருந்தே முத்து பவளம் (முதலியன) வெளிப்படுகின்றன" 55 : 22

இவ்வாயத்துகளில் கையாளப்பட்டுள்ள இருகடல்கள் என்பன அலி (றழி) அவர்களையும் பதிமா (றழி) அவர்களையும் குறிக்கின்றன என்றும் முத்து பவளம் என்பன இமாம் ஹஸன் ஹுஸைன் (றழி) ஆகியோரைக் குறிக்கின்றன என்றும் சீயாக்கள் வலிந்து விளக்கமளித்துள்ளனர்.

"நிச்சயமாக பிர்அவ்ன் வரம்புமீறிவிட்டான்" (79:17) எனும் ஆயத்தில் பிர்அவ்ன் எனும் பதம் பாவம் புரியும் உள்ளத்தைக் குறிக்கிறது என்றும், அல்லாஹ் மூஸா (அலை) அவர்களுக்கு "நீர் உம்முடைய தடியை எறியும்" (27 : 10) எனும் ஆயத்துக்கு உலக வாழ்வைத் தூக்கி எறியுமாறும் சூபிச சிந்தனையாளர்கள் வலிந்து விளக்கமளித்துள்ளனர்.

"அன்றி இப்றாஹிம் (இறைவனை நோக்கி என்) இறைவனே இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கின்றாய்? (அதை) நீ எனக்குக் காண்பி எனக் கூறியபோது அவன் (இதை) நீர் நம்பவில்லையா என்று கேட்டான். (அதற்கு) மெய்தான் (நான் நம்பியே யிருக்கின்றேன்) ஆயினும் (அதனை என் கண்ணால் கண்டு) என்னுடைய இருதயம் திருப்தியடையும் பொருட்டு (அதனைக் காண்பி) என அவர் கூறினார். 2 : 260 இவ்வாயத்தில் இருதயம் எனும் பதம் இப்றாகிம் (அலை) அவர்களின் நண்பனைக் குறிக்கக் கையாளப்பட்டுள்ளது என்று முஃதிலாக்கள் வலிந்து விளக்கமளிப்பர்.

"உங்களுடைய ஆண்களில் எவருக்கும் முகம்மது (ஸல்) தகப்பனாக இருக்கவில்லை. ஆனால் அவரோ அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களுக்கு முத்திரையாகவும் (இறுதி நபியாகவும்) இருக்கிறார் 33 : 40. எனும் ஆயத்தில் இறுதி எனும் பொருளில் கையாளப்பட்டுள்ள ஃகாதம் எனும் பதம் இறுதி நபி எனும் பொருளில் அல்ல, நபிமார் அனைவரிலும் மேலானவர் எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளில் கையாளப்பட்டுள்ளது என்று காதியானிகள் எடுத்துக்காட்டி முகம்மது (ஸல்) அவர்களின் பின் நபி வரமாட்டார் என்ற கருத்தைப் புறக்கணித்து தாம் நபியாக ஏற்றுள்ள மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானியை நபியாக நம்பச் செய்வதற்கு தடையாக உள்ள இக்குர்ஆன் ஆயத்தின் கருத்தைத் தமக்குச் சார்பாகத் திரித்துக் கூறமுயற்சித்துள்ளதைக் காணமுடியும்.

"சூர் ஊதப்பட்டு குற்றவாளிகளை நாம் ஒன்று சேர்க்கும் நாளில் (பயத்தினால்) அவர்களுடைய கண்கள் நீலம் பூத்திருக்கும்" (20:102) எனும் இவ்வாயத்துக்கு விளக்கமளிக்கும்போது தன்னை நபி என்று பிரகடனப்படுத்திய கறுப்புநிற அமெரிக்கரான எலிஸா முகம்மது (கி. பி. 1975) என்பவர் இவ்வாயத்து நீலநிறக் கண்களையுடைய வெள்ளையர்கள் நரகத்தின் குடிமக்களாக இருப்பர் என்று வலிந்து பொருள்கூற முயற்சித்திருப்பதைக் காணலாம்.

முன்னைய நபிமார்களதும் அவர்களது சமூகங்களதும் வரலாற்றை அல்குர்ஆன், சுருக்கமாகச் சுட்டிக்காட்டுகிறது. அதுபற்றிய விளக்கங்களை முன்னைய வேதங்களைப் பின்பற்றிய அஹ்லுல் கிதாப்களாக இருந்து இஸ்லாத்தை ஏற்றவர்களிடம் முஸ்லிம்கள் கேட்டறிந்தனர். முன்பு யூதராக இருந்து இஸ்லாத்தை ஏற்ற கஃபு இப்னு அல் அஹ்பார் போன்றவர்கள் தமது வேதநூல்களில் இருந்து பெற்றுக்கொண்டதாகக் கருதப்பட்ட தகவல்களை விளக்கவுரைகளாக வழங்கினர். இவற்றின் உண்மைத் தன்மைபற்றி அறியாத குர்ஆன் விரிவுரையாளர்களில் சிலர் அஹ்லுல் கிதாப்கள் அளித்த இவ்விளக்கங்களையும் தமது தப்ஸிர்களில் எழுதியுள்ளனர். பிற்கால முஸ்லிம்கள் இவர்கள் அளித்த விளக்கவுரைகளில் பல தவறானவை என்று நிறுவியுள்ளனர். தப்ஸிர்களில் இடம்பெற்றுள்ள இத்தகைய தவறான விளக்கங்கள் "இஸ்ராஇலிய்யாத்" என்றழைக்கப்படுகின்றன. அஹ்லுல் கிதாப்களில் இருந்து இஸ்லாத்தை ஏற்று விளக்கமளித்தவர்களின் விளக்கவுரைகளில் குர்ஆனும் சுன்னாவும் ஏற்கக்கூடிய விளக்கத்தை ஏற்பதும், அவ்விரண்டிற்கும் முரண்படுவதை நிராகரிப்பதும் அவசியமாகும். குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் சார்பாகவோ எதிராகவோ இல்லாத இஸ்ரா இலிய்யாத் விளக்கங்கள் பற்றி மேலும் ஆராய்வதற்கு முபஸ்ஸிர்களுக்கு சுதந்திரம் உண்டு என்று இத்துறை ஆய்வாளர் கூறுவர். இப்னுஹையான் எழுதிய தப்ஸிர் இப்னுஹையானையும், அல்குர்தாபி எழுதிய தப்ஸிர் அல்குர்தாபி என்பதையும் இஸ்ரா இலிய்யாத் இடம்பெற்ற தப்ஸிர் நூல்களுக்கான உதாரணமாகக் காண்பிக்க முடியும்.

அப்பாசியர் காலத்தில் எழுந்த அறிவியல் மறுமலர்ச்சி பல்துறை சார்ந்த கலைகளின் வளர்ச்சிக்கு உதவியது. எனினும் காலப்போக்கில் மெய்ஞ்ஞான விஞ்ஞானக் கலைகள் முஸ்லிம்களிடையே முக்கியத்துவத்தை இழந்தன. இதற்கு மாறாக தப்ஸிர்கலை நவீன காலத்திலும் புதிய சூழலை எதிர்கொண்டு வளர்வதைக் காணமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸஹாபாக்கள் காலத் தப்ஸிர்கள் மிக எளிமையானவை. சுருக்கமானவை அறபுப் பதப் பிரயோகம் தரும் பொருளையும் ஹதிஸ்களையும் அடியொட்டி வளர்ந்தவையாகும். ஆயினும் இராச்சிய விஸ்தரிப்பின் காரணமாக பல கலாசாரங்களுடன் நேரடியாகவே தொடர்புகொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டதால் தப்ஸிர் கலை அப்புதிய சூழலை எதிர்கொண்டு வளர்ச்சியடைந்ததை வரலாறு காண்பிக்கின்றது. அறபுமொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத பலர் இஸ்லாத்தில் நுழைந்ததால் அவர்களுக்கு குர்ஆனை விளங்க வைக்க அதிக விளக்கம் அளிக்க வேண்டியதாகியது. இராச்சிய வியாபகத்துடன் மத்தியதர வகுப்பினர் தோற்றம் பெற்றதால் அவர்கள் தமக்குக் கிடைத்த, கால அவகாசத்தைப் பயன்படுத்தி குர்ஆனைப் பற்றிய ஆய்வுகளை நடத்தலாயினர். இதனால் இது காலவரை மனித நடத்தைகளை சீராக்குதற்கான வாழ்க்கை வழிகாட்டியாகக் கருதப்பட்டு வந்த குர்ஆன் அதுமுதல் ஆய்வுக்குரிய ஒரு நூலாகக் கருதப்படும் போக்கு அறிமுகமாகியது. குர்ஆனியப் போதனைகளை நடைமுறைப்படுத்திய ஸஹாபாக்களின் போக்கிற்கு மாற்றமாக குர்ஆனியப் போதனைகளின் உண்மைத தன்மையை, மகிமையை, அற்புதத்தன்மையை எடுத்துக்காட்டும் போக்கு வளர்ச்சியடைந்தது.

அல்குர்ஆன் ஆயத்துகளுக்கு விளக்கமளிக்கும் ஒரு தொகை ஹதிஸ்கள் உள. அவை அல்குர்ஆனின் 1/8 பங்கு அளவிலான ஆயத்துகளுக்கு மட்டுமே விளக்கம் தந்தன. இப்பற்றாக் குறையும், உருவாகிய புதிய சமூக சூழலும் தப்ஸிர் கலையில் பகுத்தறிவைப் பயன்படுத்தும் வாய்ப்பை அதிகரித்தன. அதேவேளை ஒவ்வொரு குர்ஆன் ஆயத்தையும் விளக்கும் முகமாக தப்ஸீர் எழுதும் வழிமுறை (தப்ஸீர் முஸல்ஸல்) வளர்ந்தது. இதனால் விரும்பத்தகாத சில அம்சங்கள் தப்ஸிரில் புகுந்தன. இவற்றை சுட்டிக்காட்டி, குர்ஆன் அருளப்பட்ட இலட்சியத்தைப் புரிந்து செயற்படத்தூண்டும் பணிகளையே நவீன தப்ஸிர் அறிஞர்கள் மேற்கொள்ளலாயினர்.

இடைக்காலத்தில் தப்ஸிர் கலையில் புகுந்து கொண்ட விரும்பத்தகாத சில அம்சங்களைப் பின்வருமாறு சுட்டிக்காட்ட முடியும்:

i. சிந்தனைக் குழுக்கள் தப்ஸிர் ஊடாகத் தம் கருத்தை நிறுவ முயற்சித்தமை.

ii. முழுமையற்ற இஸ்னாதுகளைக் கொண்ட ஹதிஸ்களைப் புகுத்தியமை. ஹதிஸின் நம்பத்தகும் தன்மைக்கு முதன்மை வழங்காது, வெறுமனே "ஹதிஸ்" என்ற பதிவுடன் மட்டும் ஹதிஸ்களைக் கையாண்டமை.

iii. கிரேக்க சிந்தனைகளை உள்ளடக்கி தப்ஸிர் எழுதப்பட்டமை. இதனால் தப்ஸிர் ஒரு கலைக்களஞ்சியத்தின் பண்பைப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பஃருத்தின் அற்றாதியின் தப்ஸிர் பற்றிக் குறிப்பிடும்போது தப்ஸிர் தவிர்ந்த ஏனைய எல்லா அம்சங்களும் அதில் உண்டு என்று சுட்டிக்காட்டுவது நோக்கத்தக்கது)

iv. இஸ்ரா இலிய்யாத்கள் எடுத்தாளப்பட்டமை.

v. கி. பி. 13ஆம் நூற்றாண்டு முதல் அண்மைக்காலம் வரை தப்ஸீர் விளக்கத்தின் போது மூலாதாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது காலத்தால் முந்திய தப்ஸிர்களை ஆதாரம் காட்டி தப்ஸிர்கள் எழுதியமை.

இவற்றை இனங்கண்டு சுட்டிக்காட்டுவதற்கு நவீன காலத் தப்ஸிர் ஆசிரியர்கள் முயற்சித்துள்ளார்கள். அத்துடன் கி. பி. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் தாம் வாழும் சூழலில் எதிர்கொண்ட புதிய பிரச்சினைகளை குர்ஆனின் நிழலில் விளங்கவும் அவர்கள் முயற்சித்துள்ளார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் முஸ்லிம் பிரதேசங்கள் பல ஐரோப்பியரின் அரசியல் கலாசார ஆதிக்கத்துக்குட்பட்டன. இதனால் அப்பிரதேசங்களில் இதுகாலவரை இருந்த மரபுரீதியான கல்விப் போதனை மாற்றங்கண்டு ஐரோப்பிய முன்மாதிரியிலான நவீன கல்வி வழக்கில் வந்தது. நவீன வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் அச்சுயந்திரம் புதிய இலக்கிய வடிவங்கள் உரைநடை என்பன செல்வாக்குப் பெற்றன. இவை தப்ஸிர் கலை வளர்ச்சியில் ஒரு புதிய திருப்பத்தைத் தோற்றுவித்தன.

அப்பாசிய காலத்தில் எழுந்த தப்ஸிர்கள் அறிஞர் குழாத்தை உள்ளடக்கிய வாசகர் வட்டத்தைக் கருத்தில் கொண்டே எழுதப்பட்டன. இதனால்தான் அவை "இல்முல் பலாகா" போன்றனவற்றை உள்ளடக்கியதாக எழுதப்பட்டன. ஓரளவேனும் சமய பின்னணியும் மொழி ஆற்றலும் உடையவர்களாலேயே அவற்றை விளங்கிக் கொள்ள முடிந்தது. இதற்கு மாற்றமாக நவீனகாலத் தப்ஸிர்கள், சாதாரண வாசகர்களுக்கும் விளங்கக் கூடியதாக இலகு நடையில், எழுதப்பட்டன. அச்சுவாகன வசதி இருப்பதால் அவற்றை சாதாரண வாசகர்கட்கு மலிவு விலையில் வழங்கவும் முடிந்தது. இவ் வாய்ப்பு தப்ஸிர் பொதுமக்களிடத்தில் பிரபல்யம் அடைய துணையாகியது.

காலனித்துவ ஆட்சியின் கீழ் முஸ்லிம்கள் ஐரோப்பிய கலாசாரத்தினதும், அரசியல் சிந்தனையினதும், பொருளாதார நடைமுறையினதும் தாக்கத்துக்குள்ளாகியிருந்தனர். அவர்களுள் பலர் இஸ்லாத்தை நம்பி ஏற்றிருந்த போதும் ஐரோப்பிய வாழ்க்கை முறைக்கு மக்களை அழைப்பவர்களாக இருந்தனர். இதனால் நவீனகால சமூக அரசியல் ஒழுக்கவியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முஸ்லிம்கள் முகம் கொடுத்து உந்துதலைப் பெறும் வகையில் தப்ஸிர்கள் நவீன காலத்தில் தோற்றம் பெற்றன. அதாவது இருபதாம் நூற்றாண்டில் முக்கியத்துவம் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல் கண்ணோக்கில் இஸ்லாத்தை முன்வைக்கும் வகையில் தப்ஸிர்கள் எழுதப்பட்டன. இவ்வகையில் முகம்மதிப்னு அப்துஹு, ரஷித் அற்றிழா என்பவர்கள் முன்னோடிகளாயினர். இவர்களுக்குப் பிந்தி வந்த செய்யத் குதுப் (றஹ், மௌலானா மௌதூதி (றஹ்) போன்றவர்களும் இத்துறைக்கு முதன்மை கொடுத்துள்ளதைக் காணமுடிகிறது. இவை அல்குர்ஆனின் அறிவியல் ஆழத்தை எடுத்துக்காட்டுவதற்காகவன்றி அல்குர்ஆனின் போதனைப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் அதற்கு உதவுவதாகவும் இருக்கின்றன. இதனால் நவீன காலத் தப்ஸிர்கள், அறிஞர்கள் மட்டத்திலும் சாதாரண வாசகர்கள் மட்டத்திலும் செல்வாக்குப் பெற்றன. இருந்தபோதும் ஆரம்பகாலத் தப்ஸிர்களின் சமூக செல்வாக்கு அருகிவிடவில்லை. சரியாகச் சொல்வதாயின் நவீனகாலத் தப்ஸிர்கள் புதிய ஒரு செயற்பாட்டை நிறைவேற்றுவனவாக உள்ளனவே தவிர பழையவற்றை நிராகரிக்கும் பணியில் ஈடுபடவில்லை. தப்ஸிர் ஆசிரியர்களான அத்தபரி, இப்னுகஸிர், பைழாவி, சுயூதி முதலானோரின் தப்ஸிர்கள் இன்றும் சமூகத்தில் செல்வாக்குடனேயே இருக்கின்றன. வாசகர்கள் அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்துகின்றனர். அஸ்பாப். அல்நுதூல், பலாகா, இலக்கண இலக்கிய அமைப்பு என்பன பற்றி அறிய, அவையே துணை நிற்கின்றன.

பாரம்பரிய வழிமுறையில் இருந்து வேறுபட்டு ஒரு புதிய அணுகுமுறை-யூடாக தப்ஸிர் கலையை அறிமுகப்படுத்திய ஒரு முன்னோடி என்ற தோரணையில் தப்ஸிர் அல்மனாரின் ஆசிரியரான அப்துஹு அவரது வழி தப்ஸிர் பணியைத் தொடர்ந்த ரசித் அற்றிழா என்பவர்களது தப்ஸிர்கள் பற்றி அறிவது அவசியமாகும்.

ஜமாலுத்தீன் ஆப்கானியின் சிந்தனைத் தாக்கத்துக்குள்ளாகி-யிருந்த அப்துஹு (1849 - 1905) எகிப்தில் வாழ்ந்தவர். அவர் தனது மாணவர்களுக்கு வழங்கிய அல்குர்ஆன் விளக்கவுரைகளை அவரது மாணவர்களுள் ஒருவரான ரசித் அற்றிழா (1865 - 1935) என்பவர் எழுதினார். அதன் கை எழுத்துப் பிரதியை அப்துஹு சரிபார்த்தார். அதன்பின் அல்மனார் பத்திரிகையில் அது பகுதி பகுதியாகப் பிரசுரிக்கப்பட்டது. முதலாம் சூறாவில் இருந்து நாலாம் சூறாவின் 125ஆம் ஆயத்து வரை மட்டுமே அப்துஹு அவர்களின் விளக்கவுரை இடம்பெற்றது. அப்துஹு விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து பன்னிரண்டாம் சூறாவின் 107ஆம் ஆயத்து வரை ரசித் அற்றிழா விளக்கவுரை எழுதினார். இவ்விருவரது விளக்கவுரை-களும் அடங்கிய தப்ஸிர்நூல் "தப்ஸிர் அல்மனார்" என்றழைக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியும் சுமார் 500 பக்கங்களைக் கொண்டதாக 12 தொகுதிகளாக இத்தப்ஸிர் வெளியிடப்பட்டுள்ளது. இத்தப்ஸிரின் முகவுரை-யில் இதன் நோக்கம் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. "இம்மையிலும் மறுமையிலும் மகிழ்ச்சியாக வாழ வழிகாட்டும் ஒரு நூல் அல்குர்ஆன்" என்பதை விளக்குவதே இத்தப்ஸிரின் நோக்கம் என்று அதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளார். அப்பாசியர் கால முதலான தப்ஸிர்கள் இலக்கண இலக்கியச் சிறப்பு, சமய கருத்து முரண்பாடுகள், சூபிச சிந்தனை வழி விளக்கங்கள் விஞ்ஞானத் தகவல்கள் முதலானவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டுள்ளதால் அவை அல்குர்ஆன் ஒரு வாழ்க்கை வழிகாட்டி என்ற சிந்தனையில் இருந்து வாசகர்களைத் தூரமாக்கியுள்ளது என்றும் வாசகர்களின் கவனத்தைத் திசை திருப்பியுள்ளது என்றும் கருதுகின்றார். இதனால் தான் தப்ஸிர் அல்மனாரில் சமூக வாழ்க்கைப் பிரச்சினைகள் பலவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டுள்ளது.

இஸ்லாத்திற்கு சவாலாக வளர்ந்துள்ள ஐரோப்பிய நாகரீகத்துக்கு முகம் கொடுத்து முஸ்லிமாக வாழ வழிகாட்டும் சக்தி இஸ்லாத்துக்குண்டு என்று அப்துஹு கருதுகின்றார். அதனால் இஸ்லாமிய சிந்தனை வழியிலான வாழ்க்கை முறையை உதாசீனம் செய்யவோ, இரண்டாந்தரமாகக் கணிக்கவோ தேவையில்லை என்று எடுத்துக்காட்ட பின்வரும் மூன்று அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து விளக்கியுள்ளதையும் காண-முடியும்.

அ. மேற்கு நாகரிகம் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டிருக்க இஸ்லாம் வஹியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்றும் வஹியும் பகுத்தறிவும் ஒன்றற்கு ஒன்று முரண்பட்டதன்று என்றும் ஒன்றற்கு ஒன்று துணை நிற்பவை என்பதை எடுத்துக்காட்டி இஸ்லாமிய நாகரிகம் மேற்கை எதிர்கொள்ள சக்தியுடையது என்று விளக்கமளித்துள்ளார்.

ஆ. அறிவுக்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி இஜ்திஹாதின் வாயில் மூடப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

இ. இஸ்லாத்தில் நுழைந்துள்ள மூடநம்பிக்கைகள், அதீத கற்பனை-கள் என்பவற்றைப் புறந்தள்ளி, இஸ்லாத்தை அசல் நிலையில் புரிந்து கொள்ள முயற்சித்தல் வேண்டும் என்றும் விளக்க-மளித்துள்ளார்.

அப்துஹுவுக்கு முன்புள்ள குர்ஆன் விரிவுரையாளர்களில் சிலரும் குர்ஆன் ஒரு வாழ்க்கை வழிகாட்டி என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். எனினும் அதனை தனது விளக்கவுரையின் முதன்மை இலக்காக்கி விரிவுரை வழங்கிய முன்னோடி அப்துஹு ஆவார்.

தப்ஸிர் விளக்கங்கள் பொதுமக்கள் கைக்கு எட்ட வேண்டும் என்பதற்காக இலகு மொழி நடையில் எழுதிப் பத்திரிகைகளில் பகுதி பகுதியாக வெளியிட்டார். இதுவும் இதற்கு முன்பு காணமுடியாத ஒரு பண்பு என்பதும் இந்நடைமுறையைப் பின்வந்த விரிவுரையாளர்கள் பின்பற்றி-யுள்ளார்கள் என்பதும் நோக்கத்தக்கதாகும். தப்ஸிர்களின் பழமைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணியை உதாசீனம் செய்யாமலும் புதுமைக்கு இடமளித்தும் நடுவழி ஒன்றைப் பின்பற்றித் தன் தப்ஸிரை அவர் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த ஒரு விடயம் சம்பந்தமான தகவல்கள் அல்குர்ஆனில் பல இடங்களில் விரவி வந்துள்ளன. உ-ம்: இப்றாகிம் (அலை) அவர்களின் வரலாறு பல சூறாக்களில் இடைக்கிடை குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல இஸ்லாமிய சட்டங்கள் (அஹ்காம்) பல இடங்களில் விரவி வந்துள்ளன. இவ்வாறு குறித்த ஒரு தலைப்பில் வந்துள்ள அனைத்து ஆயத்துகளையும் ஒன்று திரட்டி நோக்கும் போதே அவ்வாயத்துகளின் உண்மையான கருத்துக்களையும் அவற்றின் இலட்சியங்களையும் புரிந்து கொள்ள முடியும். இதனால் இவ்வகையில் குர்ஆனுக்கு விரிவுரை வழங்கும் போக்கு முக்கியத்துவம் பெற்று வருகிறது. இவ்வகை விளக்கவுரைகள் "தப்ஸிர் அல் மவ்ழூஇ" என்றழைக்கப்படுகிறது. இவ்வகையில் விளக்கம் அளிக்கும் முறை அண்மைக்காலத்தில் தான் அறிமுகமாகியது என்பதல்ல. இஸ்லாமிய சட்டங்கள் விரவிவரும் ஆயத்துகளைத் தொகுத்து ஒரே பார்வையில் நோக்கக் கூடியதாக "அஹ்காமுல் குர்ஆன்" எனும் தப்ஸிரை இப்னல் அரபி அல் மாலிகி என்பவர் ஏற்கனவே எழுதியுள்ளார். எனினும் தற்காலத்தில் தான் இவ்வணுகுமுறை பிரசித்தி பெற்று வருகிறது. சேஃ அல்அஸ்ஹர் ஆகக் கடமையாற்றிய முகம்மது ஸல்தூத் (1893 - 1963) என்பவர் எழுதிய தப்ஸிர் அல்குர்ஆனில் கரீம் எனும் தப்ஸிர், மவ்ழூஇ வகைத் தப்ஸிருக்கு சிறந்த உதாரணமாக காண்பிக்கப்படுகிறது.

குர்ஆன் ஆயத்துகளைத் தனித்தனியாக நோக்கி விரிவுரை வழங்கும் தப்ஸிர்களில் (தப்ஸிர் முஸல்ஸலா) முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்துக்கள் ஒரே தப்ஸிரில் இடம் பெற வாய்ப்புண்டு என்றும் பல்வேறுபட்ட சிந்தனைக் குழுக்கள் தமக்கு சார்பான கருத்துக்களை முன்வைக்கவும் துணை போகிறது என்றும் சல்தூத் அவர்கள் கருதுகின்றார்கள். இவ்வழிமுறை அறிவியலாளரிடையே சிந்தனாரீதியான குளறுபடிகளைத் தோற்றுவிக்கவும் குர்ஆனையும், தப்ஸிர்களையும் புறக்கணிக்கச் செய்யவும் வழிகோலியுள்ளது என்றும் கருதுகின்றார்.

தப்ஸிர்கலை ஸஹாபாக்கள் கால முதல் தற்காலம் வரை அடைந்துள்ள வளர்ச்சி பற்றிக் கூட்டு மொத்தமாக நோக்கும்போது ஆரம்பகால தப்ஸிர்கள் குர்ஆன் விளக்கத் துணை நின்றது போல பிற்காலத் தப்ஸிர்களில் சில குர்ஆனை விளங்கத் தடையாக இருப்பதையும் காணமுடிகிறது என்று பிரபல அல்குர்ஆன் விரிவுரையாளர்களுள் ஒருவரான அபுல்கலாம் ஆஸாத் சுட்டிக்காட்டுகிறார். ஸஹாபாக்களின் உள்ளம் பல்வேறு நாகரிகங்களின் தாக்கத்துக்குள்ளாகாமல் எளிமையாக இருந்ததால் மிக எளிமையாக அலங்காரங்களின்றி நேரடியாகவே முன்வைக்கப்பட்ட அல்குர்ஆனின் இலட்சியத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆயினும் அன்னிய நாகரிகங்களின் தாக்கத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் சமூகம் உட்பட்டபின் கிரேக்க பாரசிக தத்துவக்கலை, மொழி அலங்காரம், சூபிச சிந்தனை. பகுத்தறிவு ரீதியான ஆராய்ச்சி, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என்பவற்றுக்கு மையதளமாக குர்ஆனைக் காண்பிக்க பிற்காலக் குர்ஆன் விரிவுரையாளர்கள் முயற்சித்துள்ளனர். இதனால் அல்குர்ஆனின் இலட்சியத்தைத் தெளிவாக்குவதற்கு அத்தப்ஸிர்களில் இரண்டாந்தர இடமே வழங்கப்பட்டிருக்கிறது. காலத்தின் தேவை கருத்திக் கொள்ளப்பட்டுத் தப்ஸிர் விளக்கம் அளிப்பது அவசியமாகியபோதும் இறைவழியைக் காட்டித் தரும் ஒரு வழிகாட்டி என்ற எல்லைக்கு வெளியே தப்ஸிர்கள் செல்லாதிருப்பது அவசியமாகும்.

உசாத்துணைகள்

1. Abdul - Kalam Azad (1996), *The Tarjuman Al - Quran* - Vol. I New Delhi, Kitab Bhavan.
2. Abl. A'la Maududi - 1880, *The Meanings of the Qur'an* Lahore Pakistan, Islamic Publication Ltd.
3. Jarir Al - Tabari A.J.M., (1987), *Jami - Al - Bayan an ta'wil ay Al - Qur'an*, Abridged Translation - Volume I, Oxford University Press.
4. Abu Ameenah- B.P., (1988), *Tafseer of Soorah AL - Hujurath* , Riyadh, International Islamic Publishing House.
5. Kurshid Ahmed, (1979), *Islamic Prespectives*, U.K., Islamic Foundation.
6. Kate Zebiri, 1993, *Mahmud Shaltut and Islamic Modernism*,U.S., Oxford University Press
7. Usuf Ali - A, *The Holy Quran Text Translation and Commentary*, U.S.A., Amana Corporation.
8. Mannâ Al Kathan, (1986), *(Arabic) Mabahis Fi Ulumdil - Qur'an*, Muassasa Al - Risalah, Beruth.
9. அப்துற்றகுமான் E.M., (1968), *அன்வாறுல் குர்ஆன்*, ஆதம் டிரஸ்ட், இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்ரன்ட் ரஸல் வரை
௨0ம் நூற்றாண்டின்
ஐரோப்பிய மெய்யியல்

ஒரு சுருக்க விபரம்

எம். எஸ். எம். அனஸ்

நவீன மெய்யியல் என்று கூறப்படும் 1600 - 1900 காலப் பகுதிக்குரிய மெய்யியல் இன்று வரலாற்றிற்கு மட்டும் உரியதாகிவிட்டது. எமது காலத்திற்குரிய மெய்யியல் அதன் தேவைகளிலிருந்தும் சொந்த வளர்ச்சி-யின் அடிப்படையிலும் முன்னைய மெய்யியல்களைக் கடந்து சென்றுள்ளது. ஆயினும், சிந்தனையில் தொடர்ச்சியுள்ளது. புதிய சிந்தனை கடந்து சென்ற சிந்தனைகளைவிட வேறுபட்டதாயிருந்தாலும் கடந்து சென்ற சிந்தனை-களின் ஊற்றும் தொடர்ச்சியும் அதில் இல்லாமலில்லை. குறிப்பாக 19ம் நூற்றாண்டு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. "19ம் நூற்றாண்டின் முடிவில் மனிதன் வினவிக்கொண்டிருந்த கேள்விகளுக்கான விரிவுபெற்ற விடை-களாகத்தான் 20ம் நூற்றாண்டு மெய்யியல் காணப்படுகிறது" (B. Delfgaaw, 1960 : 01).

19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரை காண்டினதும் ஹெகலினதும் கருத்துவாதம் (Idealism) தமது செல்வாக்கை இழக்கவில்லை. பிரித்தானி-யாவில் கருத்துவாத இயக்கம் பிரித்தானிய சிந்தனையின் தலைமைத்-துவத்தைப் பெறும் அளவு அதன் செல்வாக்கைப் பெற்றிருந்தது. இதன் பிதாமகர்களாக தோமஸ் ஹில் கிறீன், ஜோன் கெய்ட், F. H. பிரெட்லி, B. பொஸான் குவே போன்றோர் காணப்பட்டனர். தோமஸ் ஹில் கிறீன் (1836 - 1882) அனுபவவாதத்திற்கும் பொருள் முதல் வாதத்திற்கும் எதிராகக் கருத்து பேதங்களை உருவாக்கினார். ஜோன் கெய்ட் ஹெகலிய சமய மெய்யியலை வளர்த்தார்.

19ம் நூற்றாண்டின் அறிவுவரலாற்றைச் செம்மைப்படுத்திய ஊற்றுக்-களில் பொருள்முதல்வாத வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றிய லுத்விக் ஃபாயர் பாஹ் (1804 - 1872) மனத்தின் இருப்பை மறுத்தார். மற்றொரு குறிப்பிடத்தக்க இயக்கம் அப்போது உருவான சமூக மெய்யியலுடன் சம்பந்தப்பட்டிருந்தது. விஞ்ஞான வளங்களில் இவர்கள் ஆழ்ந்த கரிசனை செலுத்தினர். கடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப் பிரமாணங்களை ஆராய்வற்ற முறையில் பின்பற்றுவதை எதிர்த்தனர். இறுதியில் இவ்வியக்கம் பிரான்ஸில் கொம்டே (Comte, 1798 - 1857) யினால் புலனெறிவாத (Positivism) மாக வடிவமைந்தது. விஞ்ஞானரீதியான மெய்யியலினூடாகக் கொம்டே சமூக சீர்திருத்தத்தை விழைந்தார். பௌதிக விஞ்ஞானங்களுக்கு நியூற்றன் செய்ததை அவர் சமூகத்திற்குச் செய்ய விரும்பினார். இப்புலனெறிவாதச் சிந்தனையை அல்லது முறையை உருவாக்கியதில் அவர் பெற்றிருந்த கணிதப் பயிற்சிக்கு முக்கிய பங்கிருந்தது. கொம்டேயின் தொடர்பின்றி புலனெறிவாதம் இங்கிலாந்தில் பயன்வழிவாதமாக (Utiliterianism) வளர்ந்தது.

"விஞ்ஞானம் மனிதனின் பணியாள்" என்ற பேக்கனின் கருத்தாக்கத்தை புலனெறிவாதம், மெய்யியலில் மீள உட்படுத்தியது. மனிதன், சமூகம் என்ற கருத்தாக்கங்களுக்கு விஞ்ஞானத்தைக் கொம்டே கீழ்ப்படிவுள்ளதாக்கினார். J. S. மில், ஹேர்பர்ட் ஸ்பென்ஸர் போன்றோர் அவரின் சிந்தனைகளால் பாதிப்படைந்தனர். "அறிவு" எமக்குப் பயனுள்ளது பௌதீக மற்றும் சமூகத்தின் நிலைமைகளை அது மறுசீரமைப்புச் செய்யவல்லது என்ற கருத்து இதன் மூலம் பரவியது. விடயங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை அறிவதன் மூலமே இதில் வெற்றி காணலாம் என்பதை அவர்கள் எடுத்துக்காட்டினர்.

இதற்குச் சமாந்தரமாக வேறுசில வாதங்களும் இருந்தன. பயன்வழி வாதம், தோற்றப்பாட்டு வாதம், பயன் நல வாதம் (Pragmatism) இயந்திரிகப் பொருள் முதல் வாதம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். புலனெறி வாதத்திலிருந்தும் பாரம்பரிய மெய்யியலிலிருந்தும் வேறுபட்ட இருதுறைகள் இக்காலத்தில் உருவாகின. ஒன்று சமூகவியல் மற்றது உளவியல்.

புலனெறிவாதம், பயன்வழிவாதம் (Utiliterianism) என்ற பெயரில் இங்கிலாந்தில் வளர்ச்சி பெற்றது. ஜெரமி பெந்தம் *(1743 - 1832)* ஸ்ட்டுவர்ட மில் *(1806 - 1873)* ஆகியோர் பயன்வழி வாதத்தின் பிரதான சிந்தனையாளர் ஆவர். கைத்தொழில் புரட்சி ஏற்படுத்திய சமூக நோய்களுக்குத் தீர்வு காணும் சமூக சீர்திருத்த இயக்கமாக இது வளர்ந்தது. இதன் தாபகர்கள் ஒழுக்கவியலில் அதிக ஆர்வம் காட்டினர். லொக் மற்றும் பிரித்தானிய மெய்யியலாளர்களின் அனுபவ வாதத்தை மறுசீரமைப்புக்குள்ளாக்கினர்.

J. S. மில், அரிஸ்டோட்டிலின முக்கூற்று நியாயத் தொடையை (Syllogism) விமர்சித்ததோடு இனக்குறைப்பு அளவையியல் (reductivelogic) என்ற புதிய அளவையியலைத் தாபிக்கவும் முயன்றார். ஒழுக்கவியலில் அவர் இன்பவாதத்திற்கும் பொதுநலவாதத்திற்கும் இடையில் ஒரு சமநிலையைக் காண முயன்றதோடு அரசியற் பொருளாதாரத்தில் தனிநபர் வாதத்திற்கும் சம உடைமை வாதத்திற்கும் இடையிலும் சமநிலையைக் காண முயன்றார்.

கருத்துவாத மெய்யியலுக்கு இரு திசைகளிலிருந்து எதிர்ப்புக்கள் எழுந்தன. ஒரு பகுதியினர் அளவையியலாளர்கள், இவர்கள் ஹெகலியத்திற் காணப்பட்ட போலிகளை எடுத்துக்காட்டினர். மறுபகுதியினர் வில்லியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேம்ஸும் பெர்க்குஸனுமாகும். இவர்கள் இருவரும் ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்கவில்லை. வெவ்வேறு அறிவுகளினால் அவர்கள் தூண்டுதல் பெற்றிருந்தனர். அவர்களின் கோரிக்கைகளும் வேறுபட்டிருந்தன. ஒருவரின் கோரிக்கை "புலமை" (acadamic) சார்ந்ததாகவும் மற்றவருடையது "மானுடம்" (human) சார்ந்ததாகவும் இருந்ததென ரஸல் கூறுகிறார். புலமைவாதப் பிரிவினர் ஹெகலியவாதம் பொய் என்றனர். மானுடக் கோரிக்கையாளர்கள் ஹெகலிய வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்றனர் (பார்க்க, Russell in 1958 : 202).

1850 - 1870 காலப்பகுதியில் ஐரோப்பா இயந்திரிக பரிணாம வாதத்திலேயே இருந்தது. நவீன பரிணாமவாதம் பிரான்ஸிய இயற்கைவாதி ஜேன் பெப்டிஸ்ட் லாமார்க் *(1744 - 1827)* இலிருந்து ஆரம்பிக்கிறது. சார்ள்ஸ் டார்வினின் *(1809 - 1882)* "On the Origin of Species" *(1859)* உயிரினங்களின் பரிணாமத்தை இயந்திரிக அர்த்தத்தில் வெளியிட்டது. இயற்கைவாத நோக்கும் சடப்பொருள் வாதப் பிரதிபலிப்பும் முதன் நிலைபெற இச்சிந்தனைகள் காலாக அமைந்தன. ஆனால், *1870*ன் பின்னர் கருத்து-வாதத்தை நோக்கிய பெயர்ச்சி ஆரம்பமாகியது. இங்கிலாந்தில் H. L. கிறீன் (H. L. Green, 1836 - 1882) ஜெர்மனியில் நவகாண்டியவாதிகள் ஆகியோரின் சிந்தனைகளில் இது பிரதிபலித்தது.

*19*ம் நூற்றாண்டில் அறிவுரீதியான மீள் ஆதிக்கம் ஒரு புதிய காரணியாகத் தோற்றம் பெறலாயிற்று. இது காண்டிடமிருந்து ஆரம்பிக்கிறது. காண்டின் பின்னர் கருத்து வாதமும் பிந்திய ஜெர்மனிய மெய்யியலும் ஜெர்மனிய வரலாற்றை ஆழமாகப் பாதித்தது. *19*ம் நூற்றாண்டின் இறுதிவரை இங்கிலாந்தில் பிரித்தானிய அனுபவவாதமே ஆதிக்கம் செலுத்தியது. பிரான்ஸிற்கும் இது பொருந்தும் ஆயினும் பிரான்ஸிலும் இங்கிலாந்திலும் காண்டினதும் ஹெகலினதும் கருத்துவாதச் சிந்தனைகள் ஆதிக்கம் பெற்றமை தவிர்க்க முடியாத நிகழ்வு போலாயிற்று. (பார்க்க, Russell, 1966: 721) குறிப்பாக *19*ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஜெர்மனியக் கருத்துவாதம் அமெரிக்காவிற்கும் பரவியது.

இங்கிலாந்தில் தோமஸ்ஹில் கிறீனும் F. H. பிரட்லியும் இக்கருத்து-வாதப் போக்கின் பிரதான சிந்தனையாளர்களாக விளங்கினர். கிறீனின் மெய்யியல் நிலைப்பாடு புறவயக் கருத்துவாதமாகும். (Objective Idelism) அவர் பிரித்தானிய அனுபவவாத மரபைத் தாக்கினார். ஸ்பென்சரின் பரிணாமவாதத்தையும் அவர் தாக்கினார். மனிதன் இயற்கையின் குழந்தை அல்ல. அவன் ஒரு ஆன்மீக உயிரி என்று அவர் கூறினார். அனுபவவாதத்-தினால் ஆழமான அரசியல் மெய்யியல்களை வெளியிட முடியாது என்றும் இயற்கை விஞ்ஞானத்தினால் இயற்கையையும் விஞ்ஞானத்தையும் மட்டுமே விளக்க முடியும் என்றும் கிறீன் கூறினார். ஆன்மீக நெறிகளை ஒழுங்கு படுத்தாது இயற்கை பற்றிய அறிவு சாத்தியமில்லை என்றும் விஞ்ஞானம் போலல்லாது மெய்யியல் ஆன்மீகமானதென்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயக் கருத்து முதல் வாதிகளுள் பிரதான இடம் F. H. பிரட்லி (1846 - 1924) க்குரியது. வெறும் தோற்றம் என்பதற்கு அப்பால் யதார்த்தத்தை அறிவதும் அடிப்படையான உண்மைகளை அறிவதுமே உண்மையான அறிவென அவரது பௌதீகவதீதம் கூறுகிறது. "தோற்றமும் யதார்த்தமும்" என்பது அவரது முக்கிய நூலாகும். இந்நூலினால், தான் பெரிதும் பாதிக்கப்பட்டதாக ரஸல் கூறியுள்ளார். பிரெட்லி, அக்காலத்தில் ஆர்வத்தைத் தூண்டும் சிந்தனையாளராக இருந்தார் என்பதற்கு இதனை ஒரு உதாரணமாகக் கூறலாம். புறவயமும் அகவயமும் வேறுபாடற்றதென்ற கருத்தை அவர் கட்டியெழுப்பினார். அவை முழுமையும் தனி ஒரு முழு முதலின் உருவெளிப்பாடென விளக்கினார். இதன் மூலம் அவர் ஒருமைவாதத்தை (monism) ப் பிரதிபலித்தார். அவரது கருத்தில், அடிப்படை உள்பொருள், பகுதி பகுதியானதல்ல அது முழுமையானது. அது தனிப்பட்ட உணர்வு அல்ல அது அதனிலும் அதிகமானது. அது உயர் தனிநபர் தன்மை கொண்டது. அதாவது அது தனி முழுமுதலானது. இவ்வாறு அமைந்துள்ள அவரது கோட்பாட்டை ஒருமைவாதக் கருத்துவாதம் (Monistic Idealism) எனலாம்.

பிரெட்லியின் மெய்யியலுக்குப் பல திசைகளிலிருந்தும் தாக்குதல்கள் வந்தன. வில்லியம் ஜேம்ஸ், பெர்க்ஸன் போன்றோர் இதற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டனர்.

வில்லியம் ஜேம்ஸின் (1842 - 1910) சிந்தனைகள் பயன்நலவாதத்தை (Pragmatism) தோற்றுவித்தது. அவர் வழங்கிய பங்களிப்பினால் அது ஒரு கோட்பாடாக வடிவமைந்தது. பயன்நலவாதம் பல மூலங்களிலிருந்து விடயங்களைப் பெற்றுக்கொண்டது. பிரித்தானிய அனுபவவாதமும் கருத்து முதல்வாதத்தை விமர்சித்து வந்த பிந்திய - காண்டீய வாதத்தின் சில போக்குகளும் இதில் ஒன்று கலந்திருந்தன. எவ்வாறாயினும் அது ஒரு புதுவகைக் கோட்பாடாகவே அறிமுகமானது. மனிதச் செயலுக்கும் மனித வாழ்வுக்கும் பயன்நலவாதம் முதன்மை இடத்தை வழங்கியது. "பிரக்மா" (Pragma) என்ற கிரேக்கச் சொல்லிற்கு "நடைமுறை" அல்லது "மனித நடவடிக்கை" என்று அர்த்தம் தரப்படுகிறது. ஆங்கிலேய அனுபவவாதத்தின் ஒரு தொடர்ச்சியாக இது கருதப்படுகிறது.

ஹென்றி பெர்க்ஸன் (Henri Bergson, 1859 - 1941) 20ம் நூற்றாண்டின் முன்னணி பிரெஞ்ச் மெய்யியலாளராவார். வில்லியம் ஜேம்ஸ், வைட்ஹெட் ஆகியோர் அவரது சிந்தனைச் செல்வாக்கிற்குட்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பிரெஞ்ச் மெய்யியலில் அவரது சிந்தனை குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது (Russell, 1966 : 791) வாழ்வு - மெய்யியலின் (Life - Philosophy) மூலாதாரப் பிரதிநிதியாக பெர்க்ஸன் விளங்கினார். Essays on the Immediate Data of Consciousness, Creative Evolution, Introduction to Metaphysics முதலியன அவரது முக்கிய படைப்புக்களாகும். அவரது எழுத்துநடையும் அழகியதாக இருந்ததால் அவர் முன்வைத்த புதிய மெய்யியல் விரைவாகச் செல்வாக்குப் பெற்றது. காலத்தின் ஆழமான தேவைக்கேற்றதாக பெர்க்ஸன் அவரது மெய்யியலை முன்வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாராய்ச்சியியல் பிரச்சினைகளுக்கு பெர்க்ஸன் உள்ளுணர்வு முறையைப் பயன்படுத்தினார். பெர்க்ஸன் தனது அறிவாராய்ச்சியியலை திட்டவட்டமான உளவியல் கோட்பாடுகளினால் ஆதாரப்படுத்த முயன்றார். அவர் சடப்பொருள் வாதத்தை நிராகரித்தார். பெர்க்ஸனின் மெய்யியல் இருமைத் தன்மையைப் பெற்றிருந்தது. உயிரும் சடமுமாக உலகம் அவருக்கு இரண்டாகத் தெரிந்தது. இரு எதிர் இயக்க ஆற்றல்களு (Motions)க்கிடையிலான முரண்பாட்டில் முழு உலகும் இருப்பதாக பெர்க்ஸன் கருதுகிறார். வாழ்க்கை உயர்வை நாடுகிறது. சடம் தாழ்வை நோக்கி வீழ்கிறது. வாழ்வுதான் மிக உயர்ந்த ஆற்றலாகும். எவ்வாறாயினும், பெர்க்ஸனின் மெய்யியல் பற்றிய ரஸலின் மதிப்பீடு பின்வருமாறு இருந்தது. "பெர்க்ஸனின் மெய்யியலின் பெருமளவிலான பகுதி சற்றுப் புதிய மொழியினால் வெளிப்படுத்தப்பட்ட பாரம்பரிய மறைஞானமாகவே (mysticism) காணப்பட்டது". (பார்க்க, Russell, *1966 : 792*)

தற்காலப் பிரச்சினைகளுக்குப் பதில் அளிப்பதில் மார்க்ஸின் (*1818 - 1883*) சிந்தனை முக்கிய இடத்தை வகித்தது. இளைய மார்க்ஸ், முதிய மார்க்ஸ் என்ற வேறுபாட்டினூடாக மார்க்ஸின் சிந்தனைகள் ஆராயப்பட்ட போது முதலாளித்துவப் பொருளாதார நுகத்தடியின் கீழ் மனிதப் பிரச்சினை மட்டுமல்ல பொதுவான தனிமனித இருப்புப் பற்றியும் மார்க்ஸ் ஆழமாகச் சிந்தித்துள்ளார் என்பது வெளிப்படுத்தப்பட்டது. மார்க்ஸிய சிந்தனை வளர்ச்சி வெவ்வேறு வடிவங்களை அல்லது கருத்து விளக்கங்களைப் பெற்று வந்துள்ளது. இவ் வளர்ச்சி மார்க்ஸியத்தின் சித்தாந்தத் தன்மையை உடைத்து மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் மூல எழுத்துக்களினால் விபரிக்கப்பட்டது. "பிந்திய - தோமிய வாதம், பிந்திய - காண்டீய வாதம் என்பது போல் மார்க்ஸியத்தைக் கூறுவது இலகுவல்ல. ஏனெனில், மார்க்ஸினதும் எங்கெல்ஸினதும் தொடர்ச்சியான சிந்தனை மரபுகள் பிந்திய என்று கருதப்படுவனவற்றுள் ஆழமாகப் பதிந்திருப்பதனால் இது சாத்தியமல்ல" (B. Delfgaaw, 1969 : 57)

நவீன மனிதனையும், அவனது சமூகப் பிரச்சினைகளையும் பற்றித் தற்கால மார்க்ஸிய மெய்யியலாளர்கள் மார்க்ஸிலிருந்து எடுத்துக்காட்டினர். மார்க்ஸின் அரசியல், மெய்யியல் சிந்தனைகளில் தற்காலப் பிரச்சினைகளுக்கான பதில்கள் இருந்தன. தற்கால மெய்யியலில் மார்க்ஸியத்தின் தாக்கம் குறிப்பிடத்தக்க வகையில் நிகழ்ந்துள்ளது. பொருளாதாரத்திற்கும் அரசியலுக்கும் மெய்யியலுக்கும் இடையில் மார்க்ஸியம் ஏற்படுத்திய சிந்தனைத் தொடர்பும் முக்கியமானதாகும்.

19ம் நூற்றாண்டு முறைமைகளிலிருந்து தற்காலப் போக்கிற்கு மெய்யியலை நெறிப்படுத்தியதில் தோற்றப்பாட்டியலின் வகிபங்கு முக்கியமானதாகும். இதன் ஆரம்ப ஸ்தாபகர்களாக பிரான்ஸ் பிரண்டானோ (*1838 - 1917*) துவார்ட்டோவ்ஸ்க்கி (*1866 - 1938*) எலொய்ஸ் மெய்ன்னோங் (Alois Meinong 1853 - 1921) ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். எவ்வாறாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றப்பாட்டியலின் (Phenomenology) வளர்ச்சியில் நேரடி உரித்திற்குரியவர் எட்மண்ட் ஹுஸ்ஸல் (Edmand Husserl, 1859 - 1938) ஆவார். இது கணித அளவையியல் ஆராய்ச்சியையும் உட்படுத்தியதாக மெய்யியலில் வளர்ச்சி பெற்றது. தோற்றப்பாட்டியலுக்குப் பங்களிப்புச் செய்தவர்களில் அலெக்ஸாண்டர் பெண்டர் (1870 - 1941) ஓஸ்க்கார் பேக்கர் (பி. 1889) மொறிஸ்ட் கைகர் (1880 - 1937) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

எட்மண்ட் ஹுஸ்ஸல் கல்வி போதிக்கும் தொழில் ஊடாக கணிதத்தையும் கணிதத்திற்கும் அளவையியலுக்குமிடையிலான அடிப்படைத் தொடர்புகளையும் ஆராய்வதில் ஈடுபட்டிருந்தார். ஹுஸ்ஸலின் செல்வாக்கு 19ம் நூற்றாண்டின் புலனெறி வாதத்தை எதிர்த்தது. அத்துடன் ஹுஸ்ஸல் வகுத்திருந்த முறை பொருளொன்றின் உள்ளடக்கத்திற்கும் சாரத்திற்கும் அழுத்தம் தந்ததினால் அவரது முறை எதிர்காண்டிய நிலையைக் கட்டாயமாக்கியது (I.M. Bochenski, 1956 : 132).

ஹுஸ்ஸல் தமது அளவையியல் "ஆய்வுகள்" (Logische Unteruchungen, 1900) நூலில் லொக், ஹியூம் களின் அனுபவவாதம், உளவியல்வாதம் என்பனவற்றை கடுமையான விமர்சனத்திற்குள்ளாக்கினார்.

தோற்றப்பாட்டியல் அடிப்படையில் ஒரு மெய்யியல் முறை புறவய - உறவுகளைக் கண்டுபிடிப்பதற்காகத் தரவு பற்றிய மனித உணர்வுகளில் கவனம் செலுத்துகிறது. "phenomenon" என்ற கிரேக்கச் சொல்லிற்கு "தோற்றம்", "வெளிப்பாடு" என்ற பொருள் தரப்பட்டுள்ளது. இதனைவிட "சொல்" "எண்ணக்கரு" என்ற பொருள்களும் அதற்குத் தரப்பட்டுள்ளது. எமது நனவுக்கு (உணர்வுக்கு) பொருள்கள் தோற்றமாகும் விதம் என்பதாகவே தோற்றப்பாட்டியல் வாதிகள் இதனைக் கூறுகின்றனர். அவர்களின் கருத்தில் தோற்றப்பாடு என்பது எமது உணர்வின் தூய அகவயமான அசைவு அல்ல. ஆனால், அது புறவயத் தொடர்புள்ள பௌதிகச் செயலாகும். சிந்தித்தல், உணருதல், விரும்புதல் என்பன எப்போதுமே எதையாவது பற்றியன. அவை உட்கிடையான செயல்கள்.

தோற்றப்பாட்டியலின் இரு அடிப்படை அம்சங்களில் ஒன்று : அது ஒரு முறை என்பதாகும். அது தோற்றப்பாடு என்ற அம்சத்தை வலியுறுத்துகிறது. அது முன்வைக்கும் கருத்துக்களால் அது அனுபவவாதத்தை எதிர்க்கிறது. அது விஞ்ஞானத்திலிருந்து மாறிச் செல்கிறது. கருத்துவாதத்திலிருந்து அது வேறுபடுகிறது. அறிவாராய்ச்சியியலையும் அது ஏற்க மறுக்கிறது.

தோற்றப்பாட்டியல் என்பது உணர்வுநிலை மெய்யியலாகும் (Philosophy of Consciousness) அறிவோ விஞ்ஞானமோ உணர்வுநிலையின் அடிப்படை இயல்பினை அறிய முடியாது என இது கருதுகிறது. அதன் புறநோக்கு சாரமாகும். பார்வைச் செயற்பாட்டினை அது உடனடியாகப் பற்றிக் கொள்கிறது. இதை இன்னொரு வகையில் கூறுவதாயின் புலப்பாட்டிற்குரிய அனுபவரீதியான நேர்வுகளை விஞ்ஞானம் ஆராய்கையில் மெய்யியல் சாரத்தையே அது கையாள்கிறது. ஹுஸ்ஸலின் கருத்தில் சாரம் நேராகவே உள்ளுணர்வாக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா அறிவுரீதியான கூற்றுக்களினதும் அடிப்படை உரித்துடைய மூலாதாரமானது பார்த்தலாகும். "தரப்படுவன" எதுவுமே பொருள்களாகும். உணர்வுகளினால் அது பார்க்கப்படுகிறது. "தரப்படுவன" தோற்றப்பாட்டிற்குரியனவாகும். இதன் எளிய அர்த்தம் எமது உணர்வுக்குத் தோற்றமாகின்றவை என்பதாகும். தோற்றப்பாட்டியல் உய்த்தறி முறையோ அனுபவரீதியானதோ அல்ல "தரப்பட்டது" எது என்று சுட்டுவது. அதுதான் அதைத் தெளிவுபடுத்துகிறது. விதிகளின் துணை கொண்டு விளக்கமளிப்பதோ வேறு தத்துவக் கோட்பாடுகளினால் ஊகித்தலுக்குள்ளாக்குவதோ அல்ல. எது உணர்வுக்கு அளிக்கப்பட்டதோ அதுதான். எல்லா அறிவும் தரப்பட்டதையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்ற பொருளில் ஹுஸ்ஸல் தம்மை ஒரு புலனெறிவாதி என்று கூறுகிறார்.

இவ்வாறு பார்க்கும் போது 19ம் நூற்றாண்டில் ஆதிக்கம் பெற்றிருந்த எல்லா மெய்யியல் மரபுகளுக்கும் இது மாறானதாக வெளிப்பட்டது எனலாம். இதன் தாக்கத்தினால் மெய்யியலில் புதிய தூண்டுதல்கள் முனைப்படைந்தன. G. E. மூவரினால் முன் வைக்கப்பட்ட பிரபலமிக்க பகுப்பாய்வு முறை ஹுஸ்ஸலின் தோற்றப்பாட்டியலுக்கு மிக நெருங்கியதாகும். மூவரின் Principia Ethica (1903) எலோய்ஸ் மெய்ன்னோங்கின் முறையை மிக நெருங்கியதாகக் காணப்பட்டது. கணித அளவையியலும் தோற்றப்பாட்டியலும் அடிப்படையில் முறைகளாகும். இவை இரண்டுமே விஞ்ஞான அடித்தளங்களின் தன்மைகளையும் அம்சங்களையும் பெற்றிருந்தன என்பது கருத்திற்கொள்ளக் கூடியதாகும்.

II

பௌதிகக் கொள்கைகளிலும் கணித ஆய்வுகளிலும் மாற்றங்களும் நெருக்கடிகளும் நிகழ்ந்தன. இது பகுத்தறிவுக்கு ஆதரவற்ற சிந்தனையாளர்களின் (irrationalist) தோற்றத்திற்கு வழிவகுத்தது. இப்புதிய மாற்றங்களில் அறிவுபூர்வமாக ஈடுபட்டிருந்தவர்கள்தான் தோற்றப்பாட்டியலையும், பிந்திய - புறப் பொருள்வாதத்தை (Neo-realism) யும் தோற்றுவித்தனர். இப்புதிய கொள்கைகளும் இவற்றின் அறிவுநிலைப்பாடும் 20ம் நூற்றாண்டின் மெய்யியலை உருவாக்கும் காரணிகளாகச் செயற்பட்டன.

19ம் நூற்றாண்டில் சரியானவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவை பற்றி ஐயம் எழுப்பப்பட்டது. உதாரணமாக நியூட்டேனியப் பௌதிகவதீதம், இயற்கை பற்றிய பூரண விளக்கவகை என்று கொள்ளப்பட்டது. இயந்திரிகக் கருத்து வளர்ச்சிக்கு இது வழிவகுத்தது. சடம் எளிதானதென்றும் எல்லாவற்றையும் தர்க்கரீதியாக சடத்திற்கு இனக்குறைப்புச் செய்ய முடியும் என்றும் கருதப்பட்டது. இது தீவிர பொருள் முதல்வாதச் சிந்தனைக்கு வழிவகுத்தது. மேலும். 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்கை பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரம் ஐயத்திற்குள்ளாகியது. சடமானது சாதாரண, எளிதான ஒன்று என்பதற்கு மாறாகச் சிக்கலான, விஞ்ஞானிகள் விளக்கமளிப்பதற்குத் தடைகள் உள்ள ஒன்றென எடுத்துக்காட்டப்பட்டது.

மேலும், முன்னர் விஞ்ஞானத்தினால் முன் வைக்கப்பட்ட ஒருமைவாத (monistic) நிர்ணய வாத (deterministic) கோட்பாடுகளின் ஆதிக்கம் எதிர்ப்புக்குள்ளாகியது. இதை எதிர்த்தவர்கள் வாழ்வின் உரிமைகள் பாதுகாகப்பட வேண்டும் என்று கோஷமெழுப்பினர். மனிதனை வாழும் நபராகக் காண்பதற்கும் ஆன்மீகப் பெறுமானங்களுக்கு மதிப்பளிப்பதற்கும் அவசியமான சில மெய்யியற் கொள்கைகள் இவர்களால் முன்வைக்கப்பட்டன. வில்லியம் ஜேம்ஸ், ஹென்றிபெர்க்ஸன் ஆகியோர் இக்கோட்பாடுகளின் முன்னணிச் சிந்தனையாளர்களாக விளங்கினர். இவர்கள் இருவரும் பகுத்தறிவு சாராக் கொள்கையாளர்களாகும். கீழ்நாட்டுச் சிந்தனையில் குறிப்பாக இந்திய உபகண்டத்தில் மேற்கின் வாழ்வு - மெய்யியலையும் ஹென்றிபெர்க்ஸனையும் இஸ்லாமியச் சிந்தனயையாளர்களோடு தொடர்புபடுத்தி தனக்கென ஒரு சுய தத்துவ விசாரத்தை அல்லாமா. செர். முஹம்மத் இக்பால் (1873 - 1938) உருவாக்கினார்.

அறிவு, வாழும் விருப்பத்திற்கு வழிகாட்டுகிறது என்றும் வாழ்வையும் உணர்வையும் கணித ரீதியாகக் கையாள்வது அவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ள உதவாது என்றும் இவர்கள் வாதாடினர். அறிவையும் விஞ்ஞானத்தையும் விட வாழ்வுக்கு அருகில் இருப்பது உள்ளுணர்வும் ஆன்மீகப்படுத்தப்பட்ட இயல்பூக்கமும் (instinct) தான் என்று இவ்வாழ்வு - மெய்யியலாளர் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும், ஆன்மீகமாக மனித மூலங்களை ஏற்கும் மனப்பாங்கு மட்டும் இந்நூற்றாண்டிற்குச் சொந்தமானதாக இருக்கவில்லை. அதிகமான மெய்யியலாளர்கள் புலனெறிவாதத்தின் (Positivism) வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்டனர். இவர்களுள் சிலர் இயந்திரிகப் பரிமாண வாதத்தை ஆதரித்தனர். இதன்வழியாக, அனுபவவாதம் மீண்டும் பிரதான இடத்திற்கு வந்தது.

ஜோன். பி. வொட்சன் மனம் பற்றிய 19ம் நூற்றாண்டின் ஆன்மிகக் கோட்பாட்டை நிராகரித்தார். மனத்தின் உண்மைகள் விஞ்ஞான முறை மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றார். மனதை ஆராய்வதற்கு அதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த உள்நோக்குகை முறையை (introspective method) க் கைவிடும்படிக் கோரியதோடு மன ஆராய்ச்சியில் புறநடத்தைதான் அவதானத்திற்கும் பரிசோதனைக்கும் உள்ளாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை அவர் வலியுறுத்தினார். ஏர்னஸ்ட்மாஹ் (1838 - 1932) வில்ஹெல்ம் ஓஸ்ட்வோல்ட் (1853 - 1932) போன்றோர் இயற்கை விஞ்ஞானம், கணிதம் ஆகியவற்றை மெய்யியற் சிந்தனையுடன் தொடர்புபடுத்தினர்.

இவற்றின் பின்னணியில் ஒரு புதிய மெய்யியல் நோக்கு உருவாகியது. மெய்யியல் விஞ்ஞானத்துடன் தொடர்புள்ள ஒருதுறை என்றும் அறிவின் உறுதித்தன்மை விஞ்ஞான அறிவைச் சார்ந்திருப்பதனால் மெய்யியல் அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானமுறையின் உறுதிப்பாட்டினைப் பெற வேண்டும் என்றும் கருதப்பட்டது. முன்னைய மெய்யியலைப் போல் முழுப் பிரபஞ்சத்தையும் பற்றியதான ஒரு கூற்றை, விரிவான திட்டத்தைக் கட்டியெழுப்பும் ஒரு உலக நோக்குத் தத்துவத்தை உருவாக்குவதை புதிய மெய்யியல் நிராகரித்தது. இப்புதிய மெய்யியலுக்கு மூன்று தோற்றப்பாடுகள் இருந்தன.

(i) அறிவாராய்ச்சியியல்

(ii) அளவையியல்

(iii) கணிதக் கோட்பாடுகள்

கணிதக் கோட்பாடுகளுக்கு மெய்யியலில் எப்போதும் நெருங்கிய தொடர்பிருந்துள்ளது. கணிதம் முன்னது ஏதுவானது (a priori), புலன் சாராதது என்பதோடு அதன் உறுதித்தன்மை மிக உயர்வானது. கணித அடிப்படைகளில் தங்கியிராத பௌதிக அதீத மெய்யியல் விசாரத்தை காண்ட்டும் ஹெகலும் பாரிய அளவில் நிகழ்த்தினர். 20ம் நூற்றாண்டு பிறக்கும் போது மெய்யியலில் ஏற்பட்ட நெருக்கடிக்கும் கணித நெருக்கடிக்கும் முக்கிய பங்கிருந்தது. கணிதத்திலும் பௌதிகவியலிலும் ஏற்பட்ட நெருக்கடிகள் உயர்ந்த பகுப்பாய்வுச் சிந்தனைகள் மெய்யியலில் தோன்றக் காரணமாகின.

19ம் நூற்றாண்டின் அடையாளம் போல் விளங்கிய சில பழைய அறிவு மனப்பாங்குகள் வீழ்ச்சியடைந்தன. கணித அளவையியலும் தோற்றப்பாட்டியலும் வளர்ந்தது. பகுத்தறிவு சாராத வாதமும் (irrationalism) பிந்திய புறப்பொருள் வாதமும் வளர்ச்சி பெற்றன. புதிய மெய்யியல் வெறும் விமர்சன ஆய்வு மாத்திரமல்ல. அது ஆக்கபூர்வமானதாகவும் இருந்தது. அதன் ஆக்கக் கட்டமைப்பிற்கு கணித அளவையியல் ஒரு தொழில்நுட்பமாக அமைந்தது. கணித அளவையியல் கணிதத்தின் புதியதொரு கிளையாகியது. மெய்யியலின் எந்தப் பாரம்பரிய கிளைகளைவிடவும் அதற்கு மிக ஒத்ததான கிளையாகியது என அதன் ஆதரவாளர்கள் வர்ணித்தனர்.

கணித நெருக்கடியில் அளவியல் மிக நெருக்கமான தொடர்பைப் பெற்றிருந்தது. பௌதிகவியலில் ஏற்பட்டதைவிடச் சிறிதும் குறைவில்லாத நெருக்கடி 19ம் நூற்றாண்டில் கணிதத்தில் ஏற்பட்டது. கணிதத் துறையின் செல்வாக்கும் கண்டுபிடிப்புக்களும் மெய்யியலில் தாக்கத்தைச் செலுத்தின. கணிதத்தில், அளவையியல் குறியீடு அல்லது கணித அளவையியல் முக்கிய இடத்தைப் பெற்றது.

நவீன கணித அளவையியலில் (mathematical logic) டி மோர்கன் (1806 - 1878) ஜோர்ஜ் பூலி (1815 - 1864) ஆகியோர் 19ம் நூற்றாண்டில் முக்கிய கவனத்தைப் பெற்றிருந்தனர். இதன் தொடர்ச்சியில் திருப்புமுனை கொண்ட ஆழமான பங்களிப்புச் செய்தவர் ஃபிராஜ் ஆவார் (Gottlob Frege, 1848 - 1925). ஃபிராஜ் ஜெர்மனியைச் சேர்ந்த கணிதவியலாளரும் மெய்யியலாளருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அரிஸ்டோட்டிலிய அளவையியலை அகற்றினார். இதன் இடத்திற்கு நவீன மொழி மெய்யிலுக்கான அடித்தளத்தை இட்டார். கணித அடிப்படைகள் பற்றி முன்னரே பெறப்பட்டிருந்த சில கண்டுபிடிப்புக்கள் ஃபிராஜின் அளவையியல் ஆய்வுகளுக்குக் களமாக அமைந்தது. அளவையியல் விசாரணைகள் மூலமாக மெய்யியலில் காணப்பட்ட தவறுகளை அவர் சுட்டிக்காட்டினார்.

ஃபிராஜ் கணிதத்திற்கும் அளவையியலுக்கும் இடையே ஒரு தொடர்ச்சி இருப்பதை உறுதிசெய்தார். காண்ட் மறுத்து வந்த அளவையியலிலிருந்தே எண்கணிதம் தொடர்கின்றதென்பதை ஃபிராஜ் உண்மைப்படுத்தினார். கணிதத்திற்கும் அளவையியலுக்கும் இடையில் உள்ள தொடர்புகள் பற்றி அவர் காட்டிய உண்மைகள் 20ம் நூற்றாண்டின் பகுப்பாய்வு மெய்யியலுக்கும், விட்கன்ஸ்டைனின் முந்திய மெய்யியலுக்கும், அவரது பிந்திய மெய்யியலுக்குமான அடிப்படையாகவும் அதுவே அமைந்தது. ரஸலினதும் விட்கன்ஸ்டைனினதும் கரங்களில் கணிதமும் கணித அளவையியலும் என்ற எண்ணக்கரு ஒரு புதிய அறிவாராய்ச்சி இயலுக்கு வித்திட்டது. அது புதிய பௌதீகவதத்திற்கும் புதிய மெய்யியற் சிந்தனையின் தூர அகப்பார்வைக்கும் (vision) வழிவகுத்தது.

III

இதன் தொடர்ச்சியில் முக்கியமான வளர்ச்சியும் மெய்யியலில் திருப்புமுனை மிக்க பங்களிப்பும் 20ம் நூற்றாண்டில் பெர்ட்ரன்ட் ரஸலினாலேயே பெரிது சாத்தியமாகியது. 20ம் நூற்றாண்டின் அறிவாற்றலில் பெரும் துணிகரமான பங்காற்றியவராக ரஸல் கருதப்படுகிறார். எளிதாகவும் அதிகமாகவும், அளவுக்கதிகமாகவும் ரஸல் எழுதியுள்ளார். சில கருத்துக்களில் அவருக்கு நிலையான ஈடுபாடு இருந்துவந்த போதும் அவரது நிலைப்பாடுகளில் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமிருந்தன.

பீனோவின் சிந்தனைச் செல்வாக்கில் இருந்தபோது "The Principles of Mathematics" (1903) என்ற நூலை வெளியிட்டார். *1910 - 1913* களில் வைட்ஹெட்டுடன் இணைந்து "Principia Mathematica" வை வெளியிட்டார். குறியீட்டு அளவையியல கணித மெய்யியல் ஆகிய துறைகளில் இந்நூல்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. பெஸ்மோர்வின் மொழியில் கூறுவதாயின் "கணிதத்தின் தத்துவங்கள்" *(1903)* நூல் பிரித்தானிய மெய்யியலில் புதிய சக்தியின் ஆரம்பத்தை முதல் தடவையாக தெளிவாகக் காட்டியது. உண்மையான புதுமையுடன் அளவையியல் - கணிதக் கருத்துக்கள் அதில் தீவிர பரிசீலனைக்குள்ளாக்கப்பட்டிருந்தன.

கணித - அளவையியலில் ரஸலின் சிந்தனை ஏற்படுத்திய தாக்கத்தைப் பின்வருமாறு கூறலாம் : (i) நிரூபணங்களுக்கும் எண்ணக்கரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுப்பாய்வுக்கும் அது ஒரு சிறந்த கருவியாகியது. (ii) கணித - அளவையியலினூடாக பழைய மெய்யியற் பிரச்சினைகள் மீண்டும் ஆழமான பிரச்சினைகளாக வடிவெடுத்திருந்தன. விலக்கிய நடுப்பதவிதி (Excluded Middle) ப் பிரச்சினை, பொதுமைகளின் பிரச்சினைகள் (Problems of Universals) போன்றவற்றை உதாரணங்களாகக் கூறலாம்.

கேம்பிரிட்ஜில் அவர் பயின்ற காலத்திலும் அதற்கு முன்னரும் செந்நெறிக் கருத்துவாதத்தில் (Classical Idealism) அவர் அதிக கவனம் செலுத்தினார். "நான் கேம்பிரிட்ஜில் இருந்தபோது நான் காண்ட், ஹெகல், மற்றும் என்னை ஆழமாகப் பாதித்த திரு. பிரெட்லியின் நூல்களையும் வாசித்தேன். சில வருடங்கள் நான் பிரெட்லியின் மாணவனாக இருந்தேன். ஆனால், 1898 அளவில் நான் எனது கருத்தை மாற்றிக் கொண்டேன்" (பார்க்க, Russell, 1966 : 324).

ரஸல் ஆரம்பத்தில் கருத்துவாதியாகவும் பிளேட்டோனியவாதியாகவும் இருந்தார். காலம் - வெளி, புலன் பண்புகள், இயல்பூக்கிகள், புள்ளிகள், எண்கள், பொதுமைகள் யாவுமே உள்பொருள் அம்சங்கள் கொண்டவை எனக் கருதினார். கணிதத்தை அவர் மெய்யியலுக்கான காட்டுருவாக (Model) க் கருதினார். மெய்யியல் புலன் அனுபவம் சாராத உய்த்தறி விஞ்ஞானம் என்ற கருத்தும் அவரால் முன்வைக்கப்பட்டது. எனினும், பின்னர், ரஸல் இந்நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார். தற்போது, புலனெறிவாதத்தை அவர் ஆதரித்தார். பொதுமைகள் (Universals) பற்றிய பிரச்சினைகள் அர்த்தமற்றதாகின. மெய்யியல் புலன்சாரா உய்த்தறி அல்ல அது அனுபவம் சார்ந்ததென்றார். கணிதம் பற்றிய பிளேட்டோனிய இலட்சியத்தைக் கைவிட்டு அதை எளிய, நடைமுறை ரீதியான விஞ்ஞான உபகரணம் என நோக்கினார். பாரம்பரிய பிரித்தானிய அனுபவ முறைக்கு உயிரூட்டியதோடு இயற்கை விஞ்ஞான முறைதான் எமக்கு அறிவைத் தரவல்லது என்ற கருத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அளவையியலில் முக்கூற்று நியாயத்தொடை (Syllogism) பல நூற்றாண்டுகளாக ஆட்சி செய்தது. ஒரு வகையில் அரிஸ்டோட்டில் காலத்திலிருந்து இது ஆரம்பித்திருந்தது. ரஸல் இம்மரபை எதிர்த்தார். கணித அடிப்படைகளைக் கருத்திற் கொண்டால் பாரம்பரிய உய்த்தறி (deduction) கணித உய்த்தறிதலுக்குப் போதுமானதல்ல அத்துடன் அளவையியலிலும் உய்த்தறி மிகக் குறுகிய நிலைக்கே இடமளிக்கின்றதென்றார். நவீன அளவையியல் ஃபிராஜ்லிருந்தே ஆரம்பமாகிய போதும் அதுவரை அதிகம் பேசப்படாதிருந்த ஃபிராஜின் தத்துவங்களுக்கு விரிவான அவதானத்தை வழங்கியதோடு இவ்விடயத்தில் தான் எடுக்கும் நிலைப்பாடு என்ன என்பதையும் ரஸல் வெளிப்படுத்தினார். முன்னைய அறிவுச் செல்வாக்குகள் அவரிடம் காணப்பட்டபோதும் ரஸல் சுதந்திரமாகவும் தமது சுய நிரூபணங்களையும் கணித - அளவையியல் அடிப்படைகளுக்கு வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, அளவையியலுக்கும் பௌதீகவதீதத்திற்கும் இடையிலான தொடர்பு அளவையியலுக்கும் கணிதத்திற்குமிடையிலான தொடர்பு பற்றி அவர் முன் வைத்த கருத்துக்கள் அளவையியல் மெய்யியலை மெய்யியலின் மையத் தலைப்பாக மாற்றியது (Ibid, 180) இதன் விளைவுகளிலிருந்து மொழிப் பகுப்பாய்வுக்கான தோற்றத்தை இலகுவாகக் காணமுடியும்.

இலக்கணம், அளவையியல், வாக்கியங்களிலிருந்து தமது நுண்ணாய்வை ரஸல் ஆரம்பித்தார். பொதுமொழியில் உள்ள சாதாரண வசனங்கள் தவறாக வழிநடத்தப்பட முடியும் என்றும் அதனால் மெய்யியல் குறியீட்டு அளவையியலை (Symbolic Logic) ப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ரஸலின் கருத்தில் சடத்தை நேராக அறிய முடியாது. சடத்தின் சார்பில் புலன் தரவுகள் (Sense - data) தான் மனிதனால் பெறப்படுகின்றன. பார்க்கப்படும் பொருள்களிலிருந்து புலன்களால் தரப்படும் பொருளின் ஒவ்வொரு பண்புகளைவிட பொருளின் உண்மையை அறிய முடியாது என ரஸலின் புலன் தரவுக் கோட்பாடு கூறுகிறது. ஆகவே, புலன்தரவு மூலமாக ஒரு பொருள் பற்றிய (உதாரணம்: ஒரு நாணயக் குற்றி அல்லது மேசை) ஒரு ஊகத்தை, உய்த்தறியத்தான் வாய்ப்புள்ளது. அதாவது, மேசை பற்றிய நேரடியான அறிவு இங்கு சாத்தியமற்றிருக்கிறது.

ரஸலின் புறப்பொருள் வாதம் ஹியூமினதும் லொக்கினதும் அனுபவ-வாதச் சாயல்களைக் கொண்டிருந்தது. மெய்யியலாளர்கள் எண்ணக் கருக்களைத் தெளிவுபடுத்த முன்வரவேண்டும் என்ற அவரது கோரிக்-கைக்கும் இதனால் மெய்யியலில் நிகழ்ந்து வந்துள்ள தொடர்ச்சியான பின்னடைவுகளைத் தடுக்க முடியும் என்ற நம்பிக்கைக்கும் தீர்வாக அவரது அளவையியல் அணுவாதம் (Logical Atomism) அமைந்தது. இது எண்ணக் கருத் தெளிவாக்கம், பகுப்பாய்வு முறை என்பனவற்றிற்கு ஆதாரமான ஒரு அடித்தளத்தை வழங்கியது. பிரெட்லி மெர்ட்டகார்ட் ஆகியோர் முன்வைத்த உள்ளக உறவுகள் (Internal Relationes) அதைச் சித்தாந்தப்படுத்திய அவர்களின் ஒருமைவாதம் (Monism) ஆகியவற்றைத் தகர்ப்பதற்கும் ரஸல் அதனைப் பயன்படுத்தினார்.

ஒன்றினால் அல்ல உலகம் பலவற்றினால் ஆக்கப்பட்டது எண்ணிக்கையற்ற கொள்கைகள் கொண்ட அணுக்களின் சேர்க்கையினால் உருவாக்கப்பட்டது என்ற பன்மைக் கோட்பாட்டை ஒருமை வாதத்திற்கு மாற்றமாகத் தமது தர்க்க அணுவாதத்தை ரஸல் வளர்த்தார்.

கருத்துக் கிளர்ச்சியும் சுயநிர்மாணத்திறனுமிக்க கட்டுரைகள் மூலம் 1900ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் ஆங்கிலேய புறப்பொருள்வாத மெய்யிய-லுக்கும் பகுப்பாய்வு மெய்யிலுக்குமான வாயில்களை G. E. மூவர் (1873 - 1958) திறந்துவிட்டார். மூவர் கேம்பிரிட்ஜில் கல்வி பயிலும்போது ரஸலினதும் மெக்ட்டகாட்டினதும் தொடர்பைப் பெற்றார். நட்பு ரீதியிலும் சிந்தனை ரீதியிலும் ரஸலுடன் மூவர் கொண்டிருந்த தொடர்பு மிக ஆழமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்த மெய்யியலாளனைவிடவும் என்னில் அதிக அளவு தனியொரு மெய்யிலலாளனாகச் செல்வாக்குச் செலுத்தியவர் ரஸல்தான்" என்று மூவர் குறிப்பிட்டுள்ளார் (F. Thilly, 1955 : 277).

மூவரின் முதல் முக்கிய கட்டுரை "The nature of Judgement" ஆகும். இது மனம் மெய்யியல் இதழில் (1899) பிரசுரமாகியது. அக்காலத்தில் ஆதிக்கம் செலுத்திய கருத்துவாதத்தை அது எதிர்த்தது. அவரது குறிப்பிடத்தக்க மற்றொரு கட்டுரை "Refuation of Idealism" என்ற தலைப்பில் 1903ல் வெளிவந்தது. இக்கட்டுரையிலும் அவர் கருத்து வாதத்தை விமர்சித்திருந்ததுடன் தனது புறப்பொருள்வாத அறிவாராய்ச்சியியலுக்கான வடிவமைப்பையும் அதில் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

எந்த மெய்யியல் பிரச்சினையானாலும் அது "தோன்றுகின்ற" (apparent) என்ற நிலையிலிருந்து எழுகின்றன. இப்பிரச்சினைகளின் பொருள் என்ன என்று தெரிந்து கொள்ள முடிந்தால் அவை மறைந்துவிடும். இதனைச் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட சொற்கள் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். பகுப்பாய்வைப் பயன்படுத்துவதிலும் வாதங்களைக் கையாள்வதிலும் மெய்யியலாளர் கவனயீனமாக நடந்து கொண்டுள்ளதாக மூவர் கூறினார் (B. Delfgaauw, 1969 : 56).

உறுதியான மெய்யியல் அம்சங்களின் அடிப்படையில் பொது உணர்வு (commensense), சாதாரண மொழி (common language) என்ற அவரது முறைகள் முன் வைக்கப்பட்டன. புலன் தரவு (sense - data) என்ற தமது மூலக் கருத்திலிருந்து இம்முறைகளுக்கு அல்லது கொள்கை உருவாக்கங்களுக்கு மூவர் வந்து சேர்ந்தார். பின்னர், புலன் தரவு எண்ணக்கருவை ரஸல் பயன்படுத்தினார்.

புலன் உணர்வும் பொருட்களின் இருப்பும் பற்றிக் கூறப்பட்ட பார்க்லேயின் உச்சநிலைக் கருத்து வாதத்தை மூவர் நிராகரித்தார். எல்லாப் புலன் பண்புகளிலும் இரு சிறப்புப் பண்புகள் உள்ளதாக அவர் கூறினார். ஒன்று உணர்வு மற்றது உணர்வுப் பொருள். அதாவது சாதாரண உலகில் பொருள்கள் இருக்கின்றன என்பதை அவர் சாதாரண மூலங்களிலிருந்து எடுத்துக் காட்டினார். பிச்டே, சோப்பனவர், பிரெட்லி அனைவராலும் முன் வைக்கப்பட்டிருந்த புறப் பொருள் மறுப்பு வாதங்களை அவரது விளக்கங்கள் ஸ்தம்பிதமடையச் செய்தன. மூவரின் புறப்பொருள் வாதச் சிந்தனை இலக்குகள "states of sense data" என்ற கட்டுரையில் வெளியிடப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் மெய்யியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய விட்கன்ஸ்டைன் (1889 - 1951) உணர்வு பெற்றெழுந்த சிந்தனைச் சூழல் அப்போது கேம்பிரிட்ஜில் இரு பெரும் மெய்யியலாளர்களால் முழுவதுமாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஒருவர் பெர்ட்ரண்ட ரஸல் மற்றவர் G. E. மூவர். கணித மூலப் கோட்பாடுகளை விட்கன்ஸ்டைன் ரஸலிடம் கற்றார். ரஸலின் "Priciples of Mathematics" (1903) பெரும்பாலும் அவருக்குப் பாட நூலாக இருந்துள்ளது. 1912ல் கேம்பிரிட்ஜில் தனது உளவியல் விரிவுரைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்கன்ஸ்டைன் மாணவராக இருந்தது பற்றி மூவர் குறிப்பிட்டுள்ளார். "நான் அவரைப் பற்றி அறிந்த போது மெய்யியலில் என்னைவிட அவர் கெட்டித்தனமுள்ளவராயிருப்பதை நான் அறிந்து கொண்டேன்" எனத் தனது வாழ்க்கைக் குறிப்பில் மூவர் பதிவு செய்திருப்பதையும் இங்கு குறிப்பிடலாம். விட்கன்ஸ்டைனின் முதற் படைப்பு 1921ல் ஜெர்மன் மொழியில் "Logisch - philosophische Abhandlung" என்ற தலைப்புடன் வெளிவந்தது. ஜெர்மன் - ஆங்கில சமபாட நூலாக அது வெளிவந்தபோது அதன் இலத்தீன் தலைப்பை Tractatus logico - philosophicus எனப் பிரேரித்தவர் G. E. மூவர் ஆவார். (பார்க்க, George Pitcher, 1985 : 5, 6)

உசாத்துணைகள்

Bochenski, I. M.	(1956)	Contemporary European Philosophy, Trans: From German Donald Nicholl & K. Aschenbernner, California.
Russell, B.	(1958)	Philosophy of the Twentieth Century in Living Schools of Philosophy Ed., : Dagobert D. Runes, U. S. A.
	(1966)	A History of Western Philosophy, NewYork.
Delfgaauw, B.	(1969)	Twentieth Century Philosophy, Trans: N. D. Smith, Dublin.
Thilly, F.	(1955)	A History of Philosophy, London.
Pitcher, G.	(1985)	The Philosophy of Wittgenstein, New Delhi.

ஏனைய நூல்கள்

Marias, J.	(1967)	History of Philosophy, New York.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புகள் (பேராசிரியர் மூக்கையா : அபிவிருத்தியும் தொழிற் பயிற்சியும், தொகுதி 1 ஆடி 2000, இதழ் 1)

1. Deolalikar, Anil B. 1988. "*Nutrition and Labour productivity in Agriculture : Estimates for Rural South India*", The Review of Economics and Statitics, 70 (3): pp. 406 - 13.
2. Ibid.
3. Pinstrup - Anderson per, Susan Buger, Jean - Pierre Habicht, and Karen Peterson 1993. "*Protein - Energy Malnutrition*". In Dean Jamison, et. al, (eds.) Disease control Prionities in Developing Countries, New Yorl, Oxford University Press.
4. Foster, Andrew D., et. al, 1994, Technical Changhe and Human Capital Returns and Investments : "*Consequences of the Green Revolution*" University of Pennsilbania Philadelphia and National Council of Applied economic Research, Washington D. C.
5. Pinstrup - Anderson, et.al, (1993) "*Protein Energy Malnutrition*". In Dean Jamison et.al, Disease control Prionities in Developing countries, New York, Oxford University Press.
6. Arrigada; Ana - Maria, 1989, "*Occupational Training among Peruvian Men Does it make a difference,*" Policy Research Working Paper No. 207 World Bank, Washington. D. C.
7. Orazem, Peter F., and Milan Vodopivec, 1994, *"Winners and Losers in Transition: Returns to Education Experience and Gender in slovenia,"* Policy Research Working Paper No. 1342, World Bank, Washington D. C. Reprinted in worl Bank Review 9(2) : pp. 201 - 230.
8. Baro, Robert, J and Jong - Wha Lee, 1993, "*I nternatonal Comparison of Educational Attainment*" Journal of Monetary Economics 32(3): pp. 363-394.
9. Middleton, John et.al, 1993, "*Skills for Productivity* " Vocational Education and Training of in Developing countries, New York, Oxford University Press.
10. Appleton, Collier and Horsneli 1990, *"Gender, Education and Employment in Cote d'Ivaire"*, SDA, Working Paper No. 8, Washington, D.C. World Bank.
11. Behman, Jaire R., et. al, 1994, "*Are There Differential Returms to Schooling by Gender? The Case of Indonesia Labour Markets*" University of Pensilvania, Philadelphia.
12. Behmam Jere and Zheng Zhang, "*Women's Employment: Patterns Across Countries and Over time*", In World Bank Development Report - 1995, p.132.
13. Pollitt, et al, 1995, "*Nutrition in Early Life and the Fulfillment of Intellectual Potential*". Journal of Nutrition 125 (45) 1111S - 1118S.
14. Banerji, Arup, et al 1993, "*Wage Distortions Over manning and reforms in Developing Country Public Enterprises*", World Bank, Policy Research Department, Washington, D. C.
15. Ahuja, Vinod, et al. *Educational Attainment in Developing Countries : New Estimates and Projection Disaggregated by Gender*, In World Bank Development Report - 1995, p. 132.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHIEF EDITOR
M.S.M. Anes

EXECUTIVE EDITOR
M. Alfred

ASSISTANT EDITOR
N.P. Saifudeen

ADVISORY BOARD

Prof. A. Sivarajah
Prof. M.S. Mookiah
Prof.M.Sinnathamby
Dr. M.A. Nuhman
J. Nigel

EDITORIAL BOARD

Prof. Kanagaratnam
M.I. Ameen
Dr. Thuraimanoharan
V. Ameerdeen
S. Sivarajasingham
V. Sivayogalingham

Journal of ***'Aivu'*** is an acadamic refereed Journal Published Two times a year (January/July).

Manuscripts should be clearly typed in double space. length should be 20 to 30 pages for articles and five or less for book reviews. Cite all bibliographical information in end notes. Every manuscript must include a 100 word long abstract.

All rights reserved. No part of the contents of this Journal may be reproduced in any form without the written Permission.

Articles for publication, Books for Review, Book Review, Subscriptions etc. May be sent to

CHIEF EDITOR
Aivu
Social Science Journal
C72, University Quarters
Meewathura
Peradeniya
Sri Lanka.

SUBSCRIPTION RATES

Domestic:	Institutions :	Rs. 700/-
	Individuals :	Rs. 350/-
Overseas :	Institutions :	US $ 25
	Individuals :	US $ 12
Single issue		Rs. 300/-

** Individual subscriptions will be accepted for either one year or for five years at a time*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

மா. செ. மூக்கையா

நவீன தகவல் — தொடர்பாடல் தொழில்நுட்பங்கள்

அபிவிருத்திச் செய்முறையில் அவை வகிக்கும் பங்கு பற்றிய பரிசீலனை

செ. யோகராசா

தமிழில் பிறமொழி நாவல்கள்

மராட்டிய நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

ரி. வி. தர்மதாஸன்

விளம்பரப்படுத்தலின் கட்டுப்பாடுகளும் ஒழுங்குவிதிகளும்

அம்பலவாணர் சிவராஜா

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை (1948 — 2000)

ஏ. நஸீர் அகமட், சஞ்சீவி சிவகுமார்.

ஆசியாவின் இயற்கை வளங்களும் சுற்றாடல் மாசாக்கமும் (மொழிபெயர்ப்பு)

எம். அல்பிறட்

கிரயக் கணக்கீட்டில் மேந்தலைப் பகுப்பாய்வு

எம். ஐ. எம். அமீன்

தப்ஸிர் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்

எம். எஸ். எம். அனஸ்

போட்ரன்ட் ரஸல் வரை 20ம் நூற்றாண்டின் ஐரோப்பிய மெய்யியல்

ஒரு சுருக்க விபரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org